உ

கடவுள் துணை,

ஸ்ரீதாராம தபோவன
வாசக சாலை.

———(௦)———

# அகஸ்தியமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# ஆயுள்வேதம்-௲௨௱,

———(0)———

இஃது,

களத்தூர் தமிழ்ப்புலவர்
வேதகிரிமுதலியார் குமாரர்களாகிய

**ஆறுமுகமுதலியாராலும்**

ஆயுள்வேதபாஸ்கரன்

**கந்தசாமிமுதலியாராலும்**

பரிசோதித்தப் பிரதிக்கிணங்க,
சிதம்பரம்

**கருணாநந்தசுவாமிகளால்**

பிழையறப் பரிசோதித்து,
சிந்தாத்திரிப்பேட்டை

**நாராயணசாமிமுதலியார்**

அண்டெஸன் அவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

———(*)———

4 (ரூ)

T004544
Sarasvati Mahal Library. Thanjavur

௨

சிவமயம்,

# அகஸ்தியமாமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய,

# ஆயுள்வேதம்-௲௨௱.

—(3*-ꞏ)—

காப்பு,

ஆதியாங்கணேசன்காப்பு ஆயுருவயித்தியந்தான்
சோதனையாகப்பாடத் துலங்குவாய்முன்னேதானும்
நீதிசேர்குருவின்பாத நெகிழாமலுட்கொண்டேற்றி
வாதியாம்வயித்தியர்க்கு வாகடநூலிதாமே, (௧)

நாலுமாமாயுள்வேதம் நுணுக்கங்கண்மெத்தவுண்டு
பாலெனவிரும்பிச்சூட்சம் பகர்கின்றநெய்யோல்யானும்
மேலதாங்கருக்களோடும் வினையமாம்விகற்பமாக
ஞாலமேயறியச்சொன்னேன் சற்குருபதங்காப்பாமே, (௨)

காப்பென்றவிந்தநூலை கண்டவர்விண்டிவாங்கன்
கோப்பென்றவாதியாகக் குருமுறையறியவேண்டுந்
தாப்பென்றநூல்கட்கெல்லாஞ் சகஸ்திரரூபயற்சியாகும்
முப்பென்றரிஷிகள்பாத முறையுடன்காப்பென்றேனே, (௩)

(அவையடக்கம்,)

முறைதெரிநூல்கட்கெல்லா முக்கியமிந்தநூல்தான்
நரைதிரையற்றுவாழும் நாதாக்கன்பாதம்போற்றி
திரைசெறிநூலதாகத் தெளிந்துநான்சொன்னநூற்குக்
சரஸ்பதியாயிபாதஞ் சந்ததங்காப்பதாமே, (௪)

என்னவேகருக்கலொல்லா மிதனிலேவெளியாய்ச்சொன்னேன்
அன்னதோர்வாகடந்தா னுயிரம்தீதமாகுஞ்
சொன்னதோர்நூல்கெட்கெல்லாஞ் சூட்சமாமிந்தநூல்தான்
பொன்னெனவைத்துப்போற்றிற் புகழுடன்னன்மையுண்டே. (௫)

நன்மையாங்கருக்கன்சொல்னே னாடியின்குறியின்சூட்சம்
னன்மையாஞ்சாத்தியங்க ளசாத்தியமானவாறுஞ்
சொன்னதோர்முகக்குறிகள் தோன்றிடுமேகக்குறிகள்
தன்மையாய்ச்சொல்லிவைத்தேன் தரணிபொற்றிந்துகொள்ளே (௬)

அறிந்திடுநோய்கள்செய்யு மதன்குணக்குறியின்யாகஞ்
செறிந்திடுமருந்தின்யாகஞ் சேரவேதயிலப்போக்கு
புரிந்திடுங்கிருதமெண்ணெய் புகழானசூரணங்கள்
பரிந்திடுங்கற்கத்தோடும் பகர்கின்றகிறாமமாயே, (௭)

கஷாயமமருந்தின்பாகங் கெடியானகலிக்கமாத்திரை
நிசமதாமொத்திடங்கள் நிகரில்லாப்புகையுமப்பா
நசையுடன்புரட்டுமெண்ணெய்த் தயிலங்கள் ரசாயனங்கள்
நிசையுடனறிந்துகொண்டு நமபுநீவயித்தியந்தானே, (௮)

வேதநான்முகத்தானாயுள் வேதத்தில்விரித்துச்சொன்ன
கோதிலாவினைவினாலே குறுமுனியருளிச்செய்த
ஆதலாற்றமிழினாலே யதனையேயுணர்ந்துரைத்த
மூதுரைவாகடத்தின் முறைநமையைமொழியலுற்றேன், (௯)

(உடல்கூறு.)

எலும்பினாற்கால்கணாட்டி யிசைந்ததோர்வளையேபோட்டு
நலம்பெறவாய்க்குப்பின்னே நரம்பினால்வலித்துக்கட்டித்
தலங்கிடச்சுவரைவைத்துத் தோலினால்மேய்ந்தவீட்டில்
வலம்பிணியுற்றுத்தேர்வன் வைத்தியனெனலாமே, (௰)

வைத்தியந்தானுநல்ல வங்கிஷபதியினுள்ளான்
குமித்தியபிறவிச்சேரக் குணமதுவுள்ளானாகில்
நயப்பொடுதீருநோய்க்கு முபாயமாய்த்தீர்க்கவல்லான்
வியத்தியவுலகுக்கெல்லா நேர்த்தியதந்தையாமே, (௰௧)

பூவுளோனருளின்மந்தப் புங்கவனருளைப்போற்றி
ஆயுருவேதந்தன்னிலடைவது முன்னோர்சொன்ன
மாயுருவெண்சாணளவதிலொருவெண்ணாங்கென்று
பாயுமெய்யதனுள்வியாதிபயத்தினைப்பகரக்கேளே. (௰௨)

வியாதித்தொகுப்புகணக்குலட்சணங்கூறுகின்றார்.

பகருவேனாலாயிரத்தினானூற்றுநாற்பத்தெட்டு
புகழுறுமெண்ணான்கோடு பொருந்தியபெண்ணேகேளாய்
சிகையுறுசிரசில்ரோகஞ் செப்பிலாயிரத்தொட்டாகும்
வகையுறுசாத்தியங்களசாத்தியம்வருகுங்காலம, (௰௩)

மேவியவுச்சிதன்னில் விரும்பிடும்வியாதிகேளாய்
காவியங்கண்ணினாளே கருதிடும்நாற்பத்தாறுஞ்
சீவியவமூர்தமீதிற் சேருநோய்பதினாறாகும்
காவலருரைத்தாற்காதிற் பற்றியவியாதிநூறே, (௰௪)

நாலவருரைத்தாராயுள் வேதத்தினுவலுமாறு
ஏலவார்குழலினாளே பிம்பியநாசிதன்னிற்
சாலநோயெண்பத்தாறுஞ் சாற்றியவிழியில்ரோக
மேலுமேதொண்ணூற்றாறு முண்டெனவிரித்துச்சொன்னார், (௰௫)

நாரியேயலகிரண்டில் நாதனாருரைத்தரோகஞ்
சீரிய முப்பத்தாறுஞ் சிறந்திடுங்கவுளிரண்டில்
வார்முலைமாதேநாற்பத் தொன்பதாம்வரிசேர்ந்த
சேருநோய்முப்பத்தேழா மென்றுதான்செப்பலாமே (௰௬)

ஆதுமெண்ணான்குதந்தமகனில்நோய்நாற்பத்தைந்தாந்
தோகையேபறுநாறுகுந் துரோகமுஞ் சொல்லுங்காலை
நாகமாமுனியுரைத்த முப்பத்துநாளாமென்க
பாகமாயறிந்துண்ணாக்கிற் பத்துநோயிருபதாமே. (௰௭)

தானமாயிதழிரண்டிற் சாற்றுநோய்பதினாறு
மானனாய்லாடந்தன்னில் வைக்குநோயிருபத்தாறும்
ஊனுறக்கண்டமீதி லுதித்தநோய்நாறதாகும்
பானலாங்குழலினாளே பகர்ந்துரைவேதந்தானே. (௰௮)

மெல்லினல்லாளேகேளா விரும்பியபிடரிதன்னிற்
புல்குநோயெண்பத்தெட்டு பொருந்திடும்புருவந்தன்னிற்
சொல்லுவ பதினாறுந் தேரகையேகருத்தின்மீதே
இல்லையூராடிச்சொனனார் தெளிந்துகொள்முப்பத்தாறே. (௰௯)

ஆதியாமிறைவன்கூறு மாயுறுவேதஞ்சொன்ன
நீதிசேர்சிரசில்ரோக நிகழ்த்திடாயிரத்தெட்டாகு
மோதுவெண்ணூற்றுநாற்பத் தேழுமேயுணர்ந்துநின்ற
நீதில்நூற்றறுபதென்று தேகமெண்சாணதாமே. (௰௨)

எண்ணரியசிரத்தின்மீது விப்படிபிரித்துச் சொன்ன
வண்மையாமுறுப்புபத்தொ டேழதாமதகீ லுச்சம்
நண்ணியவியாதிநாற்பத்தாறையும் நவிலக்கேளாய்
நுண்ணியபொருளையாய்ந்து நுவற்றியநூலிதாமே. (௨௧)

திரைகடலுலகிலுள்ள சனங்களுக்கிடரில்லாமல்
உரைமறைபுகலுமீச னுமைதனக்குபதேசித்து
விரைதமிழ்வடநூலுள்ள விருத்தியும்பலவுஞ்சேர்ந்து
வரகவிதனுற்செய்த வாகடமருளுவோமே. (௨௨)

அருளுவாருலகோர்க்கெல்லாமகிலமாமுனிவர்தாமும்
திருவுளமுற்றபோது தேவர்கள் பலநூலாய்ந்து
வருமறையாயன்சொன்னவ கடமருநூலாய்ந்து
பெருகிடவுரைத்தவாறின் பேர்க்குறிசொல்லுவோமே (௨௩)

சொன்னநல்லீசனெற்றித் துலங்கியசுரத்திநோடு
இன்னமுங்கேளாய்நீதா னிதுமுதல்நயனரோகம்
உன்னியவங்கங்தானு முயர்பிணிவசாத்தியங்கள்
முன்னுமோர்சர்ப்பசாஸ்திர முதலீதுமொழியக்கேகேளே. (௨௪)

(கலிவிருத்தம்.)

பாதிமாதுமையாளுக்குப் பகர்ந்ததுசொல்லக்கேளாய்
நீதிலாவடநூல்தன்னைச் செந்தமிழாகச்செய்த
நீதியாயெனக்கிந்நூலை நிறையவேயோதுவாய்நீ
ஆதியாம்பரமசற்குரு வாயுருவேதந்தானே, (௨௫)

மனிதரானவர்கட்கெல்ல மதியணிசடையன்சொன்ன
பணியதுபோலவந்தபாவமாம் வியாதிகளெல்லாம்
குணியதுகூறுங்காட்டி யில்லையாமென்றபோகம்
புனிதனேயறியவோதாய் பூண்டுநின்றாளைப்போற்றி. (௨௬)

அன்னநூலறியார்தேக மறிவினுலாகிலையா
என்னினூலறியப்பண்ணியெனக்கிதுதெரியவோதாய்
பொன்னின்மானது சூழ்வைகைபுனல்பரிமழலைமேவு
மன்னையாமுழையாளேவ வவரெனவீந்தாமம (௨௭)

(கர்ப்பவுற்பத்திவிபரம்.)

(கலிவிருத்தம்.)

தொல்லிமாந்தர்வினைபண்ணத்தொல்புவி
புல்லுவாருப்பொரும்பிலுன்னீள்பசுங்
கொல்லுநோயுங்குணமுமருந்துடன்
வல்லிகவலைவசனித்த நம்பனே. (௨௮)

நம்பானுமைக்குரைத்திடுநந்திகொண்
டிம்பனல்வாகடநூலியம்பவே
தம்பமாமுனிதான்செய்தசெந்தமிழ்
நம்பர்செம்பொனிறைபதம் போற்றுவாம். (௨௯)

மிக்கபாவலர்தன்னுடன் மெல்லிய
ரொக்கவோதியுணர்ந்தறியாததும்
பக்கமேவியிருந்தது பாற்கடல்
புக்கபூனையையொத்ததுபோலவாம். (௩௰)

(வேறு.)

பாயிரமுதலாயுள்ள பஞ்சபூததத்தினோடு
வாயுவும்பத்துநாளில் வருந்தியபடியேகூடில்
நோய்வருவேதுதானு நுவலுடகலைகள்மிக்க
வாயதுவுறைக்குஞான வளமதைதிறையக்கேளே. (௩௧)

சேனமாமணிகர்தாமுஞ் சென்மிக்கும்வாறுகேளாய்
இன்னமுஞ்சுக்கிலத்திற் பிராணவாய்வதுவுஞ்சென்று
தின்னமாய்ப்பிராணவாய்வு சென்றதுகோபமுற்றி
யுன்னுமாமிரத்தஞ்சூழ்ந்துவுதாரணவாய்வளர்க்கும் (௩௨)

சூழ்ந்ததுசுக்கிலத்திற் சுரோணிதங்கலைக்குமென்று
பூந்திடும்வியாதிமூன்றும்பொருந்திடுங்குமிழிபோல
ஏந்தியேதிரளுமேழிலிரேழுதன்னிலூர்க்கு
மாய்ந்தநாளிருபத்தைந்திலருக்குமுளைபோற்றோன்றும் (௩௩)

முந்தியதிங்கள்தன்னின் ருமுளைத்ததுகட்டியாகும்
பிந்தியதிங்கள்தன்னிற் பிடரிதோல்முதுகுமன்றி

யுந்திக்குமூன்றுந்திங்களுடல்விலாயபரையுங்கால்க
ளுந்திக்குநான்காந்திங்களுயர்ந்ததோர்மூக்குண்டாமே (௩௪)

(அங்காதிபாதம்.)

ஐஞ்செனுந்திங்கள்தன்னிலாகிடுஞ்செவியநாசி
புஞ்சிடுமாறுந்திங்கள்போந்திடுமாசமேழி
லுஞ்சியமலசலங்களூற்றதோர்துவாரமுண்டா
மிஞ்சியமூளையுடன்புழுகு மிக்கநலக்குமாமே. (௩௫)

நரம்புடனடிசைந்துநண்ணிடுங்குடல்கள்கொப்புள்
பரந்தகைகால்களுண்டாம்பற்றியவெட்டாந்திங்கள்
சிரந்தனின்மயிருமுண்டாஞ்சிக்கினபெலமுமுண்டாந்
துரந்திடுமன்னசாரந்தொப்புளின்சலம்பல்க்கும் (௩௬)

ஒன்பதாந்திங்கள்தன்னிலுரத்தியுமறிவுமுண்டாம்
வன்பெருங்கோபந்தன்னில்வருந்தநோய்பெலமுமுண்டாம்
தன்பிராணனைநினைத்துத்தவமுறுநிலையாய்நின்றே
அன்புதன்கையெடுத்தேயரும்பதமருள்வாயென்றும் (௩௭)

ஆரவேபத்துமாதமாதித்தனருளினாலே
சீர்பெரும்பானவாய்வுசிரமதுகீழதாகப்
பார்தனிற்கொணர்ந்துதள்ளும்பயின்றுமுன்னறிவதெல்லாஞ்
சேரவேமாதியாகித்திகைத்துநொந்தயருமென்றே, (௩௮)

கெற்பதானங்கள்பண்ணக்கிணர்தனிற்சரங்கணசி
வற்பணப்பிராணவாய்வுவலத்திலேயோடிலாணுஞ்
சிற்பனவிடத்திலோடிற்சிறந்ததுபெண்ணதாகும்
பிற்கரவுதயமாகிற்பிலமிலாக்குருடுவூமை (௩௯)

இப்படிசடலமானவிதில்விடுமன்னந்தன்னில்
முப்பதுகடிகைதன்னில்மூன்றுகூறாய்ச்சரியு
மெய்ப்படியிரண்டுகூறுமெய்மலசலங்களாகிச்
செப்புமோர்கூறிரத்தஞ்சேர்ந்துடல்தனைவளர்க்கும் (௪௰)

முயன்றதோர்தேகந்தன்னில்மூன்றரைகோடிரோமந்
துயன்றெழுந்துவாரந்தானுஞ்சொல்லியேமூன்றேதென்ன
உயன்றதோர்சடலந்தன்னிலுப்பிருபலமேதென்ன
தியன்றெழுபித்துழக்குச்சேத்துமமுறியதாமே. (௪௧)

(கலிவிருத்தம்,)

முன்னங்கைதன்னின் மோருமூன்றுழியாம்
பின்னம்பயித்தியம்போமூவுழக்கதா
மூன்றுமுதிரமொருநாழியாகிடி
முன்னியேயோதுமுமிநீர்நாவுழியே. (௪௨)

(வேறு.)

செய்யாதமறையுள்வேதஞ்செப்பியவிபாதிக்கெல்லாம்
பையவேபடுத்துமெய்யிற்பற்றியநரம்புசோதி
துய்யவணிறைச்சிமற்றுங்கொகுத்தனர்தெறிந்துமுன்னோர்
ஐயமற்றகலச்சொன்னாரங்காதிபாதமென்றே, (௪௩)

அங்குலந்தொண்ணூற்றாறுமவரவர்கையால்மெய்தா
மிங்கதிர்குறைவதாகுமிறைச்சிநூற்றிருபத்தைந்து
பங்குகள்பலமாமென்பாற்பார்வைசேர்ரண்டுகண்ணும்
கங்குல்போலழகுமாதேகழஞ்சிரண்டாகுங்கண்டாய் (௪௪)

கண்ணூறுநாசிமூன்றாகழஞ்சுகாரங்கள்நாக்கு
நண்ணூறுகன்னஞ்சேரநாற்கழஞ்சாகுமெய்யில்
துண்ணியவெலும்பெலாநூற்றிருபத்துபலமாமென்பா
ரெண்ணூறுமீறலானதென்பலமெண்ணலாமே, (௪௫)

என்னுமுப்பலமேமூளையினிச்சிறுகுடலினீள
முன்னுமுப்பத்திரண்டுமுழமெனச்சொல்லலாகும்
பன்னுமூந்தாமரைக்காய்பலமைந்துமெண்ணலாகும்
பன்னுநாற்கழஞ்சுபத்துவைப்புரம்பார்வைகண்டாய், (௪௬)

பாயங்கெழுசயமுன்றுழிபக்குழுவுழக்குச்சோரி
ஆய்ந்தனநாழியூறுமறிவினோடுயிராம்நாடி
எய்ந்ததோரெழுபத்திராயிரமவையெலும்பைப்பின்னித்
தேய்ந்தனவியாதிராகத்திறமுடனியங்குந்தானே (௪௭)

செந்தமிழ்நூலையாய்ந்துசெப்புவேன்புவியிலிந்த
மந்திரஞானந்தானுமகாமுனிமகிழ்ந்துவீசன்
தந்தனம்பதத்தைநாடித்தவாரமாமுனிவன்கூற
அந்தவாதிசர்போற்றயருளியவடநூலாமே. (௪௮)

(வேறு,)

வடநூலதனைமிகவாய்ந்துமகிழ்ந்தேமுனிவரிருடிகளுந்
திடமாயிதனைக்கலைபகிர்ந்துசெய்யும்புவிக்குளுலகோர்க்கும்
அடவாய்வந்தபிணிமுறையுமங்கக்குறிப்புசாஸ்திரமும்
அடவாய்விரித்தசரநூலையன்பாய்வகுத்தவாறிதுவே (௪௯)

(வேறு,)

வாறிதுவாரதென்றுவகையிதுதன்னையீந்து
பேருமெய்ஞ்ஞானநீதிபெருகியவுலகுள்ளோர்க்கு
கூறிடவாறிலொன்று குணவிதித்தானநூலை
வீறிடவிதனைநீயும்விரும்பிடவிருந்துகேளே. (௫௰)

(நாடிநிதானம்)

(வேறு,)

அறிந்துகொள்நாடிகாணு மரன்பால்முந்திவலபாகஞ்
செறிந்தேமாதரிடக்கையைச் செவ்வேநீவித்துவட்டினனங்
குறித்தேயுந்தனடக்கையாற் கூடமூன்றுவிரல்வைத்து
செறிந்தவாதமருள்பித்த சிலேத்துமகுணமும்பாரீரே, (௫௧)

பாரீர்நாடியறிந்துணர்ந்து பரமன்செயலும்பிணிமுறையும்
நீரோயோமலசலமும் நிறமுங் குணமுமுகக்குறியுங்
சாரோபிணங்குங்குழல்மடவீர் காலன்றேகம்வயதிளமை
நேரோயறியுமுகநாடி நெறியுங்குறியுஞ்செறியுஞ்சொல்வோமே, (௫௨)

(வேறு.)

சொல்லியுவந்திக்கீழே சுழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்திராயிரந்தான்
வல்லவர்வகுத்துச்சொன்ன வளம்பெறநாடிபத்தும்
நல்லதோர்நாடிமூன்று நயந்துகையறியலாமே (௫௩)

கைதனைப்பிடித்துநீயுங் கடவுளைக்கருத்திலுன்னி
உய்வதோரல்லவென்று வுற்றறிநாடிபார்க்க
பையவேதொட்டுதொட்டு பகைப்பதுகண்டபோதே
மெய்தனிற்குணங்கள்தன்னை மேவிநீவிளம்பிடாயே, (௫௪)

விளம்பியவாகடத்தில் விரித்தனவிதங்களெல்லாந்
தெளிந்தறிவாதபித்தஞ் சிலேட்டுமக்கொள்கையோடுஞ்
சுளம்பெறு சன்னிதோஷந் தானுறவார்கட்கெல்லாம்
வளம்பெறத்தெரிந்தறிந்து மனதினுங்கருதுவாயே (௫௫)

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனினாடிபார்க்கிற்
பெருவிரலிடையேவிட்டுப் பிடித்திடநடுவேதொட்டடல்
ஒருவிரலோடில்வாத மிருவிரல்பித்தமோடுந்
திருவிரன்மூன்றிலோடிற் சிலேட்டுமநாடிதானே. (௫௬)

அங்கையைமுறுக்கிநெட்டி யடவுடன்மேலாய்வாங்கி
செங்கையாற்பிடித்துநாடித் திடமுடன்பார்க்கக்கேளு
முன்கையிற்பருத்தநாடி மெள்ளவேயோடுமாகில்
மங்கையேவாதமென்று மனதினுலுணர்ந்திடாயே. (௫௭)

உத்தரிநாடிநொந்து வுயர்ந்ததுபதறியோடிற்
பித்தமாநாடியென்றே பிசகறவறிந்துகொள்மின்
மெத்தவேயிரண்டும்புக்கி விரைவுடன்றெறிக்குமாகிற்
சுத்தமாய்ச்சேத்மமென்றுசொல்லுமிஞ்ஞாலமீதே. (௫௮)

ஞாலமேலுடலந்தன்னில் நசற்பிணியில்லாதார்க்கு
காலமேவாதமோடுங் கடும்பகல்பித்தமோடும்

மாலையிலையமோடுமென்னவேமகிழ்ந்துநாளுந்
சாலவேவயித்தியோர்கள்தரமிதுதெளிவதாமே. (௧௯)

தெளிந்தவர்கைக்குள்நாடிச்செய்யவெள்ளரிக்காய்இன்ன
குளிர்ந்திடில்வாதமாகுங்குலவியவரையோடென்ன
விளங்கியமேனிதானுமெச்சல்நீர்பித்தமாகும்
வளம்பெறத்துவரையொன்றுவழுத்திடச்சேதமென்னே. (௨௰)

சேத்துமமெழுந்தபோதுதித்திப்புநாவிற்றோன்றும்
நேத்தியேகசப்புமீறிலிசைந்ததுபித்தமாகும்
ஏத்தியபுளிப்புமீறிலெழுந்ததுவாதமென்ன
பார்த்துநீயிதனையெல்லாம்பாங்காகவறிந்துசெய்யே, (௨௧)

ஆனதோர்வாதநாடியடர்ந்துறவலுவாய்நிற்கில்
ஊனமாமுடலில்நோய்களுலாவியேநிற்குமாகில்
தானமாய்ப்பித்தநாடித்தான்வலுவாகிநிற்கிற்
கானமாங்குழலினாளேகாய்ச்சலுங்கடினமையாமே, (௨௨)

(மரணநாடி)

வாதமுமையந்தானும்வலுவுறநிற்குமாகில்
மோதியவியாதிதீரமூன்றுநாட்சொல்லுமென்க
ஆதலாற்பித்தநாடியணிவதுபோலேயோடில்
வேதனையானகாய்ச்சல்மீளுமென்றறிந்துகொள்ளே. (௨௩)

பித்தமுமையந்தானும்புரண்டெழுந்தோடுமாகிற்
சித்தத்தில்வேப்புமீறுஞ்சிறுகுளிருளைந்திருமும்
பற்றிமெய்காந்திவேர்த்துப்பசிகெடுமலசலங்கள்
சற்றிலும்வழுவழுப்புச்சரீரமும்வெளிறுந்தானே. ௨௪

வாதமும்பித்தமையம்வன்பெழுந்தோடுமாகில்
வேதுக்கள்பலதுசிதமிரட்டித்தரோகங்காணுந்
தீதமறுவதைப்படுத்துந்திரிதோஷம்பலநோயுண்டாந்
தாதுக்கள்கைகால்மெய்யுஞ்சத்திகெட்டுளையுந்தானே. ௨௫

(கண்டறிமரணக்குறி.)

வாகினிலன்னங்கோழிமயிலெனநடக்கும்வாதம்
ஏகியேபாணையட்டையிவையெனநகிக்கும்பித்தம்
போகியதவளைபாம்புபோலதுசேதம்மாகும்
மாகியநாடிமூன்றுமமர்ந்திடிற்சன்னியாமே, (௨௬)

அந்தித்தநாடிதானுமரணைவால்துடியைப்போலே
சந்தித்துமாதரோடுதான்புக்குமீண்டுரென்ன
வெந்தித்துவிதரியோடில்வேதனைமிகவுண்டாகும்
வந்தித்துமதங்களாலேமதியுள்ளோரறிந்துகொள்ளே, (௨௭)

பித்தமும்வாதநாடிப்பேசியவையகாடி
யொத்ததோர்சரியாய்த்தன்னி லுலாவியேநிற்குமாகில்.
சுத்தமாயுடலந்தன்னிற்சொல்லவேவியாதியில்லை
முத்தணிமுலைநன்மாதே மொழிந்தனர்முனிவல்லோரை, (௬௮)

தேளொனதெரிந்துசற்றேதிரிகுணஞ்செய்யுமாகின்
மாளவேமரணவாய்வுவந்திடுஞ்சன்னியுண்டா
மீள்வதேயல்லமுன்னூல்விதிப்படிவந்ததீது
நாளதுதிங்கட்குள்ளேநாசமாய்ச்சொல்லுந்தானே, (௬௯)

ஏற்றியதீபம்போலு மெரிசுடர்நுனியைப்போலுந்
தோற்றியநாடிதானுந்துலங்காதச்சூடுமாகில்
மாற்றியவாணாள்தானும்வரைப்படுந்திங்களொன்றில்
நாற்றிசையுலகுள்ளோர்க்குநயம்படவுரைத்தாரீசன், (௭௰)

ஐயமாஞ்சிலேட்டுமத்திலாகியநாடிதானுந்
தொய்யவேதவளைபோலத்தொங்கியேகுதித்திட்டாலும்
பையவேநடந்திளைத்துப்பாம்பெனநடைகொண்டாலு
மைசெறிகுழலினாளேமரணமென்றறிந்துகொள்ளே, (௭௧)

(வேறு.)

கீடிதானநாடியதுதோள்மீதிலேறியே
கண்ணிலேநீரெடுக்கும்.
வடிவானமுகம்நீண்டுமூக்கதுமலர்ந்துநா
வழுவழுத்திடுமதல்லால்
அடிதானமூலமதுவுள்ளேவலித்திடி
லடிவயிறுதொப்புட்குள்ளே
நெடிதானமாமுனியுரைத்தநூலிதென்று
நிச்சயமறிந்துகொள்ளே. (௭௨)

(வேறு,)

நடுக்குநாடிமிகப்பதறிநாவும்பல்லும்வரண்டிருக்கு
மிடுக்குங்கெட்டுவிழியிருண்டு மேலேநோக்கும்வழிபார்க்கும்
தொடுக்குகின்றசேத்துமமுந்தொண்டைதனிலேநின்றலரும்
அடுக்குமிதுவேகுறியாலங்கேசெல்லவேண்டாமே, (௭௩)

(வேறு.)

வாதத்தில்வாதங்காணில்மந்தங்கள்புளிப்பருந்தல்
பேதித்துப்பித்தங்காணிற்பெருஞ்சூடுகசப்பருந்தல்
பேதித்துப்பித்தமையம்பிதறியேநிற்குமாகில்
மாதுற்றகுழலினாளேமாகசப்பிணியுண்டாமே, (௭௪)

குன்மமாம்வாதநாடிக்குரைகடற்றொனியைப்போலாஞ்
சன்னியாம்நாக்குபச்சைத்தனித்தனிபுழுகுபோலாங்

கன்னியேயிராணிக்கெல்லாங்கதிருபோல்நடப்பதாகும்
முன்னவருரைத்தவாறுமொழிந்திடக்கேட்டதாமே. (௭௫)

வீங்கிடுங்கையுங்காலும்விம்மிடும்வயிறுபொத்தத்
தாங்கிடுமலமுநீருந்தவறிடுஞ்செவிகேளாது
வாங்கிடுந்தண்ணீர்மெத்தவழுத்திடும்நாவும்பல்லும்
வீங்கிடுங்குணங்கள்கண்டால்விட்டுநீயகலப்போமே, (௭௬

(வேறு.)

கண்ணுமுகங்கள்வெளுப்பிட்டுக்காலேகரங்கள்வீக்கமதாய்த்
தண்ணீர்த்தாகமிகவுண்டாஞ்சாதமொறுத்துத்தானுமதாய்
விண்ணைச்சுழன்றுமிடுக்கற்றுமிகுந்துமலமுமடைபடுத்தல்
எண்ணலாதிலிதுவுண்டாகிலிதுவுமரணக்குறியாமே (௭௭)

மூக்குநீண்டுநிலம்புரண்டுமயங்கித்தலையுமிகநடுக்கும்
நாக்குங்குழறிப்பலபேசும்நலமாய்ப்படுக்குமெழுந்திருக்கும்
விக்கிலெடுக்குமிகப்பதரும்வெறிபோற்பல்துமமிதற்றிவிடுந்
தாக்குமரணமிதுவென்றுசாற்றியுரைத்தார்தவமுனியே.. (௭௮)

கண்ணைவிழித்துப்புரட்டிடுவன்கைகால்கற்றித்தலைநடுக்கும்
விண்ணைப்பார்த்துவிழிபுரட்டுமேனிவரண்டுவெளுப்பேறும்
நண்ணியொருவன்றனைப்பார்த்துநயமாய்நன்மைபகுந்துரைப்ப
ன்,என்ணிப்படுப்பனெழுந்திருப்பனிதுவேமரணநிலைகுறியே. (௭௯)

(அசாத்தியலட்சணம்,)

(வேறு,)

ஊசிபோன்மூக்குமுநீண்டுவுடம்பெலாநரம்புதோன்றி
பாசிபோற்கண்பசித்துப்பரிந்துநீர்போதவாங்குங்
கூசிடவேண்டாமிந்தக்குணங்களுண்டானபோதே
நாசமாய்ச்சாவிதென்றுநவின்றுநீவிட்டுப்போவே. (௮௰)

நெஞ்சுமேலுடலும்வற்றிநிலைபெறநரம்புதோன்றி
பஞ்சுபோல்நாவும்பல்லும்பாண்டமும்வெளுப்பதாகி
கொஞ்சியேயண்டம்வீங்குங்குறுகளேமலமுந்தீயுங்
அஞ்சுவதுண்மையென்றுசொல்லுவாய்ச்சுவாகந்தானே. (௮௧)

முதுகொடுவயிறுவீங்கி மூலமுந்தாதுகெட்டு
செவிவொடுகணுறும்வாயுஞ்செய்பநற்பதியுங்குன்றி
முதுகிலிவ்வாறுமூன்றுமுதிய ம்சிமேயாறல்
விதிவசமிதுவேயென்றுவிரைந்துநீகண்டிடீரோ. (௮௨)

(அவத்தைகுணம்.)

மூக்குழியுந்துக்காணில்முடிந்திடும்வாளன்றி
பூக்கமேசடம்புதேய்ந்துவுற்றிடுமோசகுன்றும்
நீக்கியவைக்தாநவில்நிகறந்துயிர்பிரிந்துபோகும்
வாக்குடன்மண்ணின்கூறாய்மறைந்ததுவகையிதாலே (௮௩)

நாக்கொடுபல்லும்வாயும் நகங்களுங்கறுத்துச்சற்றே
மூக்கொடுசெவியுந்தாழ்ந்து முகந்துடைப்புறங்கள்கைகால்
தூக்கமென்னுளுமீறிச் சொறித்தலைவயிறுநோவாம்
வாக்கொடுநாளையுந்தள்ளில் மரணமென்றறிந்துகொள்ளே. (௮௪)

கால்வளைத்துபருமூக்குங் கண்களுஞ்சிவக்குமாகில்
மேல்வெளுத்திருக்குமல்லால் விழிதணிந்தொழுகுங்கண்ணீர்
மால்வளைத்தனையுங்கூந்தல் வனிதையேசொல்லக்கேளாய்
நால்வகைக்குறியுஞ்சொன்னே னமனுயிர்கவருவாரே. (௮௫)

(தோஷஞ்சேரும்விதமறிய,

எண்ணியவவத்தைசொல்வே னினியகைமார்பில்மூக்கில்
நண்ணியேசெவியோடிந்தி நலம்பெறக்குளிர்ந்துகாட்டித்
திண்ணமாயுச்சியங்கி லாடியிற்சேத்துமமோடில்
மண்ணினிலேந்திலொன்றில் மரணமென்றறியலாமே. (௮௬)

அழிந்திடும்பித்தம்நின்று சிலேத்துமமயங்குமாகில்
நிறைந்ததோர்வாதங்காணு நேர்படவெடிப்பாய்பேசுஞ்
சிறந்ததோர்முகம்வெளுத்து மார்பதுகுடில்போற்செருல்
மறந்தநாளாக்கை தொணனூற்றளவிலே மரணமாமே. (௮௭)

எய்யதோர்பகல்வெதும்பி யிரவுதானுமூலேமேவிச்
செய்யதோர்நாவரண்டுச் சிலேத்துமநாடியோடி
துய்யதோர்நாவரண்டு மலங்கட்டித்தலைசுழன்று
வெய்யகண்பார்வைபாண்டு விழிக்குநாளிசண்டிற்சாவே (௮௮)

(வேறு.)

படுக்குமுடனேயெழுந்திருக்கும் பார்க்கவிளைத்தேமூச்சுண்டாம்
வடுக்கணேத்தவிழியிரண்டு மலரவிழிக்கும்வாய்நோக்குந்
தொடுக்குந்தொடுத்தசிலேட்டுமங்கள் தொண்டைதனிலேநின்றலறும்
அடுத்துவருவதினைவகண்டா லறிவாய்மரணநிச்சயமே. (௮௯)

(வேறு.)

தாகமும்பசியுமுண்டாஞ் சலமொடுமலமுந்தள்ளி
மேல்வயிறுப்பமிட்டு மெத்தெனக்குளிர்ந்திருந்தால்
கூவிடவேண்டாமிந்தக் குணங்களுண்டானபோதே
ஆவிதான்போவதின்னை மறிந்துநீமருந்துசெய்யே, (௯௰)

(கலி விருத்தம்)

சித்தமெய்யுறச் செங்கையைச்சென்னிமேல்
வைத்துநோக்கிட வாடிடி லுத்தமம்
பத்துமூவரிருப்பவர் பருத்திடில்
செத்துவீழ்வது திங்களிற்றிண்ணமே, (௯௧)

(வேறு.)

சரம்விழிமூன்றுநாளேந் தாதினிற்ரேஷம்வந்தால்
பறிந்தொருமருந்துசெய்து பார்க்கவும்வேண்டாஞ் சொன்னேம்

மான்றருவேழுநாளு மப்புறந்தோஷம்வந்தால்
நிரந்தரமாகத்தீரும் நிச்சயமென்றுகாணே, (௬௨)

(வேறு.)

வாதநீர்கொழுத்துவுடம்புபல வன்னமாகுமலமடைக்கும்
தானேசூழ்ந்துமிகுந்துமூந்தித் தரியாதிருமற்று முண்டாம்
தேனேநாவுதித்திக்குஞ் சிறந்தமூக்கில்நீர்பாயும்
மானேவிழியாய்ச்சேத்துமமாய் வந்தசுரத்தினவகைதானே (௬௩)

(தோஷஞ்சேரும்வகையறிய வேறு.)

வாசமிகும்பூப்புழுகுசாந்துசந்த
மருவும்பாக்கிலை சிவப்புகோடிச்சீலை
பாசமிகும்நெய்பாலோ டன்னமெண்ணெய்
பருகுநல்வெல்லமொடு பனையின்வெல்லம்
ஆசமிகும்பெண்மோகம் பட்டுசேலை
யகற்றுவாரித்தனையு மறிவுள்ளோர்கள்
தூசணியுமுலைமாதே சொல்லக்கேளாய்
சுரத்தின்மேல் தோஷம்வருஞ் சொன்னதாமே, (௬௪)

சிவந்தசீலைபுதுப்புடவை
செருக்கும்பாகுநெய்வெல்லஞ்
சுகந்தகாற்றுகோபித்தல்
துய்பதயிர்பால்பஞ்சுமெத்தை
உகந்தமின்னாளுருகில்வர
உற்றுநோக்கலடித்தழுதல்
கவிந்தசுரமுமுழுதுவதுங்
கடினசுரத்துக்காகாதே. (௬௫)

(வேறு.)

கனத்திடுஞ்சுமைகளாலுங் கடுவெயில்கருதலாலும்
நனைத்திடுமெண்ணெய்தன்னை நாட்படமுழுகையாலும்
புனற்கெரடிமடநல்லாளை விடாமலேபுல்கையாலும்
சினத்தடிபழுக்கையாலுஞ் சிரத்திநோய்சேருங்காணே. (௬௬)

இருசெவிநாசியூடே யிவண்டீயேறினாலு
முருக்குவிழ்குழலீர்கண்ட சுனையிடைமூழ்கினாலு
மருவியஸ்திரீபோகத்தால் மயலுறவருந்தலாலுஞ்
சிரமிசையனேகதோஷஞ் சேர்ந்திடுந்திருநன்மாதே, (௬௭)

நெறியுடன்குருபாதத்தை நினைந்துநேராகிக்
குறியடையாலநாடிக் குறித்ததையறியவேண்டும்
செறிவுடன்குணங்கடன்னைத் தேர்ந்தறிந்துணரவேண்டு
மறிவெட்டுக்குணத்தாலினமவர்நல்லவயித்தியராமே. (௬௮)

அட்டமாங்கிரிகடன்னை யறிந்துநீயுணரவேண்டில்
வட்டமாமுகங்கள்பல்லும் வாயதில்நாக்குங்காயம்

கட்டகுமலங்கள்கைதனில்நாடிதானுந்
திட்டமாயறிந்துசெய்யுந் திறமுள்ளவயித்தியராமே. (௯௯)

(சிரசில்வியாதி வரும்விபரம்.)

(கலி விருத்தம்)

வாதரோகிமேனிதர்கண்மாமுக
மீதிலோகருப்பாயிடுமுண்மையே
வேதநீதிவிளங்கியபித்தத்தோர்
மீதுவாய்முகவேல்மஞ்சளோதுமே. (௱)

எய்தசேத்துமமெழுந்தவர்தம்முக
மெய்யதாகக்கருகிவெளுத்திடும்
ஐயனுரைசெய்தவருமறை
செய்தவாறுவயித்தியராவரே. (௱௧)

(வேறு.)

வாதத்தோர்விழிகறுத்து மயங்கியேமங்கலாகுந்
தீதற்றபித்தத்தோர்க்குச் சேல்விழிமஞ்சளிக்கும்
கோதற்றசேத்மத்தோர்க்குக் கூர்விழிவெளுத்திருக்கும்
ஏதற்றதொந்தத்தோர்க்கு விழிபலநிறமாமின்னே. (௱௨)

விளங்கியவாதரோகி தந்தமேமிககறுப்பா
மளம்பியபித்தரோகி மஞ்சளித்திருக்கும்பல்க
ளுளங்குளிர்சேத்மரோகிப் பல்வெளுத்திருப்பதுண்மை
துளங்கிடவறிந்துகொண்டு சொல்லுவாய்குணங்கடானே. (௱௩)

(வேறு.)

வாதத்தோர்கருத்துநாவுவன்மிகத்துர்ணிதமாய்
மாத்துத்தோர்நாவுபித்த மஞ்சணித்திருக்கும்நல்ல
பேதமாம்கசந்திருக்கும் பெய்வளைசேத்மத்தோர்க்கு
ஓதுநாவெளுத்திருக்கு முற்றதோர்நாடியாமே. (௱௪)

(பயித்திய முறைமை)

(வாததேகக்குறிபித்ததேகக்குறி)

சேரும்வாதகுணங்தேகம் சிதமிருந்திருக்கும்
பாரும்பித்ததேகமதைப்பார்க்கில்வெச்சென்றேயிருக்குந்
கூறுஞ்சேத்மசடம்வேர்வைசொதிக்குணங்கள்காணமிரு
பாருங்குணத்தையாராய்ந்துபகருங்குறியிலறிவீரே. (௱௫)

(கலிவிருத்தம்)

மேவும்வாதமுடையவர்மெய்வலஞ்
சிவீதாகக்கருக்கிஙிஞ்செம்மியே
பாவைபித்தத்தோர்தன்வலம்மார்த்திடல்
ஆவியேயெழுமன்னிறமஞ்சளாம். (௱௬)

மன்னுஞ்சேத்துமத்தோர்மலம்வீழ்குறி
அன்னிலத்திறலாய்வெளுப்பொங்கியே

சொன்னதிக்குணமன்றிசேத்மகத்தோர்
என்னிபற்பலவாய் விழுமென்னவே. (௱௭)

(வேறு)

ஓங்கியவாதத்தோர்க்கு நீர்விழுங்குணமுரைக்கிற்
பூங்கொடிகடுத்துநொந்து பொருமையேசிறுத்துவிழும்
பாங்குறுபித்தத்தோர்க்குப் பசியநீர்விழுந்துகாட்டும்
ஏங்கவேசருக்குத்தாக்க வெதேத்துடன்கடுத்துவிழும் (௱௮)

விழுமேசேத்மத்தோர்க்கு விழுங்குநீர்குணமுறைக்கில்
நாளுமேவெளுத்துமிளர்ந்து நலம்பெறவிழுங்கண்டாய்
வாள்விழிமானேதொந்த ரோகமனிடர்குத்தானே
கோளிலப்பலவாய்விழுமென்றுதான்குறித்துச்சொல்லே, (௱௯)

(நாடிபார்க்கவிதானம்)

நாடிதான்பார்க்கும்போது நன்மனதுடனேவேணுந்
தேடிகுருபாதத்தை திடமதாயுன்னிப்பின்னி
மூடிமூவிரலணைத்து மூன்றுநாடியுமறிந்து
கூடியபிணியாதிசொல்லித் தீர்ப்பவன்வயித்தியனே. (௱௰)

ஓடிநாடிபார்க்கு முண்மைதானுரைக்கக்கேளாய்
ஆடவர்வலக்கைநாடி லரிவையரிடக்கைநாடிப்
பாடமாய்த்தேடிநாடிப் பரிவுடன் பார்க்கவேண்டும்
மூடரின்றுரைப்போநல்ல வுத்தமவயித்தியோரே, (௱௰௧)

சொல்லியவுந்திக்கீழே சுழித்தகோரெழுத்தைப்பற்றி
எல்லையிற்சிறந்தநாடி யெழுபத்திராயிரத்தில்
வல்லகேசாதிபாதமகிழ்ந்துதானோடிநிற்கும்
நல்லதாய்மூன்றுநாடி நயந்துநீயுணர்ந்துபாரே. (௱௰௨)

அன்னமேகோழிபோலுன் மயிலெனநடக்கும்வாதம்
பின்னையோராமையட்டை பெருத்ததிற்பித்தமாகுஞ்
சொன்னவாய்மொழிநல்லமனே சுற்றியதவளைபாம்பு
என்னவேயையமென்று வியம்பினவேதந்தானே. (௱௰௩)

நாடியிற்றெளிவினாலு நற்குறிகுணத்தினாலும்
நீடியவிழியினாலு நிலைபெறுதேகத்தாலுங்
கூடியவியாதிதன்னிற் கூடியகுணப்பாகத்தால்
கூடியகுணங்களாலே சுகம்பெறவறிந்துசொல்லே. (௱௰௪)

(நாடிபார்க்க-மாதமளவிபரம்.)

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கும்
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமாசிக்கும்
வித்தகன்கதிரோன்மேற்கு விழுகின்றநேரந்தானே. (௱௰௫)

தானதுபங்குனிக்குந்தனதுநல்லாவணிக்கு
மீனமாம்புரட்டாசிக்குமிற்றாத்திரியிற்பார்க்க
தேனொனமூன்றுநாடிதெளியவேகாணுமென்று
கானமாமுனிவன்சொன்னார்கருதியேகண்டிடாயே. (௱௰௬)

(கலிவிருத்தம்.)

செய்யமாதுக்கிறையவன்செப்பிய
துய்யவாயுள்மறையுந்துலங்கிட
மெப்பமார்தருக்கோதியமெய்ப்பொருள்
ஐயன்றன்னையமர்தருளாயினன் (௱௰௭)

ஓதுநாடிதொகையுமதித்துற
வாதபித்தசிலேத்துமவண்ணமும்
பேதமானவியாதியின்பேர்களும்
ஆதியானவருந்தவனோதினன். (௱௰௮)

(வேறு.)

திருமறைமுனிவன்கூறும்வாகடச்செய்கைதன்னில்
வரும்பவவியாதிமீட்கும்வகைப்படியாதோவென்னில்
உருமொருநாடியாலுமொண்முகமலநீராலுந்
தெருவுறநாவுநாசிதிக்கயக்குறிகளெட்டே. (௱௰௯)

உரைத்திடுந்தானமெட்டுஞ்செய்சுறியுரைக்குங்காலை
வருத்தியநாடிசெய்கைமங்கையேவழுத்தக்கேளாய்
உரைத்தெழுங்கருவின்மீதேயோமெனுமுந்தியாலே
பருத்தகுண்டலியேமூலம்பரந்தெழுநாடிபத்தே. (௱௨௰)

பத்துமேவிடையினோடுபின்கலைசுழினைபாரில்
அத்திசிங்குவைகாந்தாரியலம்புடைகுகுகன்கோதன்
உற்றெழுநாடிபத்துயுகப்பதாயுந்திக்கீழ்மேல்
துற்றியவெழுபத்தீராயிரமெனவகுத்துச்செப்பே. (௱௨௧)

(வாதநாடி,)

உந்தியேமூலமாகவுரியொன்றுகீழ்மேலாக
வந்திடுநாடிதானேயுடம்பினில்வகுக்கக்கேளாய்
முந்தியசென்னிமீதோளாயிரமாகுமுண்மை
பைந்தொடிசெவியிரண்டிம்பத்துமுன்னூறுதானே, (௰௨௨)

வருவிழியிரண்டுகோலாயிரந்தாமானேமூக்கில்
உரியமூவாயிரத்துமுன்னூற்றுமுப்பதாகு
முருமுறும்பிடரிதோண்மேலுரையாயிரமதென்ன
கருவினின்மூளைத்தநாடிகண்டதைக்கருதுவேனே. (௱௨௩)

கண்டதிலாயிரந்தான்கைரண்டில்மூவாயிரந்தான்
தொண்டைக்குங்கீழதாகத்தொப்புள்கீழ்மேலதாக

ஒண்டோடிகேளாயொன்பத்தாயிரத்தொருபத்தாறில்
அண்டத்தின்முனிவா கூறுமாயுறுவேதமாமே. (௱௨௪)

குறிக்கின்றபிடரிகீழேகூறெண்ணாயிரமதாகு
மறித்திடுவிலாவில்நாடிவளர்மூவாயிரமதாகும்
தெறிந்திடுங்கால்கள்சந்துதியங்கிமெண்ணாயிரமாம்
பறித்திட்டபீசத்தின்மேற்பன்னிராயிரநாடிகாணே, (௱௨௫)

காசினமூலையாசந்திலிரண்டாயிரங்கருதிக்கொள்நீ
வீசியபாதந்தன்னில்விளம்புமாயிரத்தினோடு
கூறியபிடரிபின்னாற்பிறக்குமூவாயிரந்தான்
பூசைசேர்ந்தறுநாற்றெண்பத்தாமெனவோதுநாலே. (௱௨௬)

மொய்குழல்மானேகேளாய் புடிச்சுளஸ்தலங்கள்கைகால்
எய்தியகோசமுற்றிலிதயமொண்டின்னங்கேளாய்
பையரவல்குன்மூலம்பகர்பிடர்முடிச்சோடேச்சி
வயிறுமேழுப்பத்தாறாயிரமதாய்வகுக்குங்காலே. (௱௨௭)

(பித்தநாடி.)

இப்படிஎழுபத்திராயிரநரம்பென்னக்கண்டு
ஒப்புடனாடிநிற்குமடவினையுரைக்கக்கேளாய்
மெய்ப்புறுவாதபித்தசிலேத்துமமென்னுமூன்றாந்
தப்பிலாதறிந்துகொள்ளுகுறிகுணஞ்சாற்றலாமே. (௱௨௮)

(சிலேத்துமநாடி,)

செந்திருவுமையேகேளாய்செறுதாரசனியுமுந்தி
வந்ததுநாபிமூன்றுமடவியில்வைத்தபோது
முந்தரிசனிக்கீழ்வாதமொழிந்தமத்திசைக்கீழ்பித்தம்
பைந்தொடிநாபிசேத்மமென்றுதான்பகரலாமே. (௱௨௯)

தந்திரிபோலேமூன்றுதானமுமறிந்துகொண்டா
லுந்தியவாதநாடிகுணங்குறியுரைக்கக்கேளாய்
கொந்துசேர்குழலாயன்னங்குக்குடமயிலேயோணை
மூந்தவேடடக்கக்கண்டால்வாதத்தின்முறையிதாமே, (௱௩௰)

தாக்கியபித்தநாடிதான்செயுங்குறிகுணங்கேள்
வீக்குவார்மூலையாயட்டையாமைபோல்நடக்குமின்னம்
ஊக்கமாஞ்சேத்மநாடியுகந்திடுந்தவளைபாம்பு
போக்குறுநடையிதாகுமென்முனிபுகன்றவாறே, (௱௩௧)

வாளிசேர்மானேரண்டுவாதமும்பித்தமொன்று
கோளுறநடக்கும்வண்மைகொடுஞ்சுமைதலைமேற்கொண்டு
நாளுறநடப்பனுகநாடுவேன்சலியாதோடு
மூளுறுபித்தம்ரண்டும்நடப்பதுகாணவேண்டி. (௱௩௨)

(வாதமிருப்பிடம்.)

அடவியில்வாதந்தானு மன்னமாங்கோழிபோல
படபடத்துடித்துநின்றார் பார்னிற்பிழைப்பதில்லை
மடவரவல்குளாலே மஞ்ஞைபாம்பென்னவோடில்
திடமுறப்பகுத்துச்சொல்லுந் தெளிவுறுமாயுள்வேதம். (௱௩௩)

வேகமேயுணாயேயுண்மை மெய்வாதவீடுதொப்புள்
ஓதியபித்தத்துக்கு ளோங்குசேத்துமமேயானால்
ஆதியாமிதய த்தின்மே லாகுமேயாகுமென்று
தீதிலார்முன்னோர்பேசும் வாகடச்செய்கையாமே, (௱௩௪)

(வெண்பா,

வாதந்தானெண்பதுவும் வண்பித்தநாற்பதுவுஞ்
சேதந்தான்செய்யுஞ் சிலேத்துமமும்-வேதந்தான்
கண்டுசொன்னசாஸ்திரங்கள் காரணத்திலுள்ளபடி
பண்டிதரேபார்த்து மிகக்கூர். (௱௩௫)

(பித்தசிலேத்துமமிருப்பு.)

(வாதகுண்ண மருந்து.)

(வேறு.)

மேவியவாதஞ்செய்யுங் குணந்தனைவிளம்பக்கேளாய்
தாவிபேவயிறுமந்தஞ் சந்துகள்பொருந்துநோவாஞ்
சீவியதாதுநாசஞ் செறுத்துடன்சிறுநீர்வீழுங்
காவியங்கண்ணினாளே மலமதுகருகிவீழும், (௱௩௬)

வாதத்தின்குணமேதென்னில் வயிறதுபொருமிக்கொள்ளுந்
தாதுகளுலர்ந்தகைகால் சந்துகள்கடுப்புத்தோன்றுந்
தீதுற்றுச்சிறுநீர்தானுஞ் சிறுத்துடன்கடுத்துவீழும்
போதுற்றவாதமென்று புகன்றனர்முனிவர்தாமே. (௱௩௭)

வேளைநீருழக்குதன்னில் வேர்க்கொம்புவெள்ளையுள்ளி
யாளவேகழஞ்சொவ்வொன்று யன்னீரிலரைத்துச்சேர்த்து
ஏளியேயெண்ணிலெண்ண யிருகழஞ்சதனிற்கூட்டி
தாழவேதிரிநாட்கொள்ளச் சமானமாம்வாதந்தானே. (௱௩௮)

ஏலவாய்க்குழலாய்பித்தஞ் செய்குறிவிளம்பக்கேளாய்
கோலவேல்விழிசுழன்று குளிர்ந்திருண்டிருக்குமல்லாற்
சீலநீர்கடுத்துநொந்து சிறுக்கெனவீழுந்துபின்னும்
ஞாலமேயறியச்சொன்னோ நவின்றிடுமுண்மைதானே, (௱௩௯)

மயங்கிடுமேல்தழன்று மஞ்சணித்திருக்குங்கண்கள்
தியங்கியேசிறுகிறுத்து செருக்குநெஞ்செறித்திடித்து.
கபந்திடுநாவும்பல்லுங் கருகிமெய்கணமயங்கும்
தயங்கிடும்பித்தரோகத் தன்குணமிதுவாமெண்ணே. (௱௪௰)

(பித்தகுண மருந்து.)

சுத்திநேர்வாளமொன்றுசுகமிளகதனிலுண்ண
பித்தநோய்குணமாமென்றுபேசினார்முனிவர்தாமு
முத்தக்காசுமுக்குசுக்குமுந்திரிப்பழம்பால்காய்ச்சி
பத்துநாள்சீனிகூட்டிப்பருகவேபித்தம்போமே. (௱௪௧)

(சேத்துமகுணம்.)

சேத்துமஞ்செய்குணங்கேள்சில்லெனவுடம்புவேர்க்கும்
ஏத்தமாயுமிநீரூறியினித்துநாவழுவழுக்கும்
நாற்றநீரழிந்துவீழும்மலம்பெறவெளுக்குமேனி
சீற்றமிக்குணங்கள்காண்டற்சிலேத்துமத்தொகுதியாமே. (௱௪௨)

இனிப்புடன்வெளுக்குநாவுமெடுக்கொணாக்கொணுது
பனித்தண்ணீர்சிறுநீர்பாயு பஞ்சுபோல்வெளுக்குமேனி
செனிப்புடன்குறைந்தொடிசெயல்பிலமில்லாதாலே
மூளைத்திடுஞ்சேத்துமத்தின்கூறென்றுமுனியுரைத்தார். (௱௪௩)

(இதற்குச்சூரணம்.)

சுக்குடன்கடுக்காய்தன்னைச்சுடுசாம்பற்குளளிட்டேத்து
தக்கவேசமனிடித்துசாரேவடித்துக்கொண்டு
சிக்கெனவைத்துக்கொண்டுதேனிற்குளந்தருந்த
துக்கஞ்செய்சேத்துமந்தான்றுலைபடுமென்றுசொல்லே. (௱௪௪)

ஆனதோராதிவாதமருண்டுவந்துரைத்தகாய்ச்சல்
தானமில்லாதிருக்குந்தன்னுடலுறையச்சேரும்
கானமாங்கால்கரங்கள்கரிந்துடல்கடுப்பாய்வந்தால்
வானகைமுன்னேசொன்னேன்வாதத்தின்குணமிதென்னே. ௱௪௫

(இதற்குச்சூரணம்.)

சீரகமிரண்டுகுப்பைதிரிகடுசமனாய்வாங்கி
வேரின்றோல்சமனாய்க்கொண்டுவிளங்கவேபொடித்துத்தேனில்
வீரமாயந்திசந்திமின்னாய்தின்றுவந்தால்
பாரதின்குணங்கடானும்பறந்துபோம்வாதந்தானே. ௱௪௬)

(சுரவாதத்தின்குணம்.)

(இதற்குச்சூரணம்.)

வாதத்துக்கெண்ணெய்தானுமகிழ்ந்துமுன்சொல்மருந்தை
ஆதியாங்காடிதன்னிலரைத்ததைக்கலக்கிக்காய்ச்சி
பாதமுந்தலையிற்தேய்க்கப்பறந்துபோம்வாதமென்று
மாதுநல்லாளேகேளாய்மாமுனியருளினாரே. (௱௪௭)

பித்தகுணம், இதற்குநசியம், சூரணம்.

எண்ணியபித்தமாலைப்படிசிரசுநொந்து
கண்ணுடன்சிவப்புகூடிகருணையிச்சைமயக்கூடும்

திண்ணமாய்த்தாகந்தோன்றுஞ் சிறுசுரவிஷமுமுண்ட
முண்ணுநாவுலர்ந்துபித்து முற்றதோர்நிறமுமாறும். (ருசஎ)

இஞ்சியைக்குத்திநன்று யிருகண்ணிற்பிழியவேண்டு
மிஞ்சியமிளகிந்துப்பு மேலமுங்கடுக்காய்சுக்கு
வஞ்சிமேசீனிமுந்திரி வகையுடனிடித்துசசேர்த்து
தஞ்சமாய்த்தின்னும்போது தகர்ந்திடும்பித்தந்தானே. (ருசஅ)

(சேத்துமசுரக்குணம்)

தலைகனத்துடல்வெதுமபி தன்செவிமூக்கடைக்கு
மிலகியவுதரமுற்றி விரைந்துமெய்சுளுக்குகுத்து
விலகியேயசனஞ்செல்லா வெதும்பியேசிலேஷ்டனத்தில்
நிலவியசுரங்கள்கண்டு நிச்சயமறிந்துசெய்யே. (ருரு0)

(இதற்குச் சூரணம்)

திரிபலையுடனேயேலந் திரிகடுவிடயர்தானு
மரிகடுரோணியோம மக்கராகொத்தமல்லி
தருசாதிபத்திரிசீரஞ் சமனிதுபொடித்ததெல்லா
மரிபடுரேகிதின்ன வளம்பெறமுடலந்தானே. (ருருக)

வாதமேகதித்தபோது வாயுமேலெழுந்துமீளுஞ்
சூதமாயிருமல்வந்து தொடர்ந்திடுஞ்சன்னிவாதம்
பேதமேசெய்கின்றய்நீ பெருவயிறுனதோஷம்
போதமேவருவதென்று பெருந்தவேமுனிசொன்னாரே. (ருருஉ)

(வேறு,)

நொச்சிச்சாறுமைஞ்ஞாழி நுவலுமெண்ணெயையுமக்கு
அச்சங்கயாஞ்சதகுப்பை யருகன்வேர்காயங்கோட்டங்
கசசிரகமாஞ்சுக்குடனே கருவாய்நாகங்கதிருள்ளி
இச்சையாகக்காய்ச்சியுண்ண வேகும்வாதகுணமாமே. (ருருந)

(வேறு,)

பித்தத்தில்வெதுப்புபற்றிப் பெருத்திடேசத்திகுன்மஞ்
சித்தத்தில்வலித்தெறிந்து தெளிவுறக்கழிச்சலாகும்
மெத்தவேயீரலோடேமிகுந்துதானெரித்தனத்துங்
கைத்ததுநாக்குத்தானுங் கதித்திடிற்பித்தமாமே, (ருருச)

(வாதசயித்தியகுணம்.)

(வேறு)

நெற்பொறியுஞ்சிறுபயருநா வில்வமுமல்லி
நெறியசீரேலமுடன் சுக்குநெல்லி
முற்படவேயிளநீர்வெந் தெட்டொன்றாக்கி
யூற்றியேபின்னெடுத்துவடித்திறுத்துக்கொள்ள
சொற்பெரியசத்திகுன்மஞ் சுரத்திற்சத்தி
துயரமுள்ளவிறுகிறட்புள்ளுமூலைமூச்சு

பற்றறுமென்றிமையவரும் ரிஷிகடாமும்
பகர்ந்தனர்முன்னருந் தமிழின்படியிதென்றே. (௨௫௫)

(பித்தக்கதிப்புக்கு எண்ணெய்.)

(சந்தவிருத்தம்.)

சந்தனத்தினிடையெண்பலத்தள
வுகந்துவெந்துவிளநீரிலே
தந்துவாவினதுபாலுமவ்வளவு
தணலில்வெந்தளவுகுறிகியே
தந்ததேவியரவிந்தகாணிதிருவ
ராகிநாகவல்லிமுத்தமுந்
தந்திலாதவிருவேலிமிச்சமொடு
தக்ககோலாதிபர்சிரமே (௨௫௬)

முந்தனித்தமொடு முப்பழத்தினொடு
மோதமேமொடுநாகமு
முந்திபச்சைகச்சோலை செண்பகமு
முதிருங்கோட்ட மிலவங்கமு
மிந்தசொற்படியிலென்னைவைத்திடுகி
லேறுதோஷ சுரபித்தமு
மின்றுவிட்டகலு மென்றுவானவரு
மிருடிமார்களுமியம்பினர், (௨௫௭)

(வேறு.)

இஞ்சிற்சார்நெல்லி யெலுமிச்சஞ்சாறு
மியல்பானநெய் தேனுஞ்சீனிமுந்திரி
தஞ்சமெனவகைக்குழக்கு மருந்துசேரு
சந்தனமுந்திரிகடுகுகிராம்புமேலம்
பந்தமுடன்மூக்குரட்டை சாதிசீரம்
பத்திரியுமதுரமிவை கழஞ்சிரண்டா
மிஞ்சவேயிடித்துத் தூள்தூவிக்காய்ச்சி
விதமாகநெல்லிக்கா யளவுகொள்ளே, (௨௫௮)

(வேறு.)

ஐயமேகதித்தபோதரிய யெய்ப்பிருமல்காசம்
நையுமாமாந்தயிளை களிர்குளிர்விக்கல்சத்தி
செய்யுமாமூச்சடைப்புப் தித்றுகாசகரோந்
தொய்புமாமிளைப்புகாசந் தோன்றுமென்றுரைசெய்தரரே, (௨௫௯)

(குணமருந்துவாதபித்ததொந்திப்பு இதற்குச்சூரணம்)

(வேறு.)

காட்டுகருணைகொடுவேலி
கிராம்புமேலந்திரிகடுகு

தீட்டுமசுவகெந்பொரியஞ்
சீரலவங்கந்திரிபலையுங்
கூட்டுநாசஞ்சர்க்கரைத்தன்
கோவினெய்யுங்கூட்டியுண்ணி
லோட்டித்துரத்துஞ் சேத்துமத்தி
லுள்ளவியாதியொழிந்திடுமே, (௱௬௰)

(வேறு.)

அந்தவாதங்கள்ரெண்டி மடித்திடும்பித்தமொன்றுந்
தொந்தித்துடக்குமாகிற்றோன்றிடுங்குணத்தைக்கேளாய்
வந்துவந்துதரவிம்மி மதித்கிடுமாதர்மோகஞ்
சிந்தனைமிகவுமுண்டாய்த் தின்றதுசெறியாதெண்ணே. (௱௬௧)

கொள்ளுகவாதம்ரண்டுங் கொடிற்பித்தமொருகாலோடிற்
கள்ளமாய்வயிறுவிம்மிக் கனக்கவேவாய்வுதோன்றிச்
தெள்ளியமாதர்மமலேசிந்தனைமிகவுண்டாகுந்
துள்ளியவாதபித்தந்தொந்திப்பென்றுரைக்கலாமே. (௱௬௨)

(வேறு.)

சந்தமொடுகோட்டமதி மதுரமஞ்சள்
சதகுப்பையரத்தை திரிகடுகிந்துப்பு
கெந்தமொடுசாதிக்காய் விடையமோமங்
கிராம்புடனேயிலவங்கஞ் சாதிபத்திரி

வெந்தயமுஞ்சமுத்திராப்பழமுங்காந்த
மேலமல்லிவிழுவரிசியிருசீரந்தா
ணிந்தத்தூள்வெருகடிகான் தேனிற்கொள்ள
வேகுமேவாதபித்தமிறங்கிததானே, (௱௬௩)

(வேறு.)

இசைந்திடுபித்தம்ரண்டு மீரவைவாதமோடிற்
பசிந்திடும்வயிறும்நெஞ்சும் பறந்தெரிந்தழன்றுமெய்யும்
வசந்தகடுந்தலைகிறுக்கு மயங்கிடுமேல்வெதும்பு
முசந்திடும்பித்தவாத முறைமையையறிந்துகொள்ளே. (௱௬௪)

சுக்குடன்கடுக்காயேதஞ் சுகமுறிமிளகுநெல்லி
திக்கிடைமதுரஞ்சந்தஞ் சீரகங்கொத்தமல்லி
தக்கதோர்சமுத்திராக்காய் சமன்பொடிமுந்திரிசீனி
பக்குவநெய்யிற்கொள்ளப் பறந்திடும்பித்தவாதம். (௱௬௫)

(பித்தவாதந் தொந்திப்புகுணம்)

உயர்ந்திடும்வாதம்ரண்டு மொருசிலேர்ப்பனமுமாகில்
அயர்ந்நகைகாநொந்து அடிவயிற்கனத்திடுப்பந்
தியங்கிடுந்தாதுகெட்டுச் செனிப்புடன்குறைந்துவாடு
மயங்கிடுமேவாதத்தோடுமருவுயசேத்மந்தானே. (௱௬௬)

(சூரணம்.)

(வேறு)

வசம்புகோட்டந்திரிகடுகு வடமோதகமுற்கொடுவேலு
திசைபெறுங்கடுக்காய்தானிரண்டுஞ் சீரகங்கொத்தமல்லியுடன்
கசைபடுங்கடுகுவோமமுடன் காயமிந்துப்போடுள்ளி
வசமுடனிடித்துத்தின்ன வாதசேத்மந்தான்போமே. (௫௬௭)

(வேறு.)

பாரித்தசேத்மம்ரண்டே பரிந்தொருவாதமோடிற்
கூரித்துகுளிர்ந்துகூசுங் கும்பியுங்குணமுங்கெட்டு
நோத்தநீருமுண்டாய்மெலித்தலைத்திரேகநோவுந்
சேர்ற்றசேத்மவாதந் தொந்திப்பாந்திருநல்மாதே, (௫௬௮)
ஒப்பியசேத்மம்ரெண்டும் வாதமுமொன்றதாகில்
செப்புறுகனன்மேலிட்டு வினிப்பையுமிகவும்வேண்டுந்
தப்பிலாப்பசியுமுண்டாந்தவனமேயதிகரிற்கும்
இப்படிகுணமேகண்டாற்சேத்துமவாதவெண்ணே (௫௬௯)

(வேறு.)

ஏலமொடுசக்தன மிலாமிச்சுபலேச்சி
யிருவேலி நாகவங்கம்
வால்மிலகுமல்லியுங் கடுகுடனேதிரிகடுகு
வசுவாசிதிரி பலையுமாம்
நீலமொடுசிரகமதுரங்கிராம்புடன்
நெற்பொரியுங்கோட்டமதுவாம்
வாலுழுவைதாரமதி மதுரமமுக்கரா
வசம்பரத்தையசுவம்விடைமாந்
சோமஞ்சகுப்பைகேளிற்குழைத்திடச்
சேத்மவாதந்தீருமே. (௫௭௰)

(வேறு.)

மாதேகேள்பித்தம்ரெண்டு
மறுத்தொரு சேத்மமோடில்
தீதுடனறலைவரண்டு
திமிர்த்திடும் பிடரிநோகும்
போதமாய் வயிறிரைக்கும்
புந்தியிற் குணங்கேடாகுந்
தீதுசெய்பித்தசேத்மந்
தொந்திப்பாந் திருவின்மாதே. (௫௭௧)
செய்யதோர்பித்தம்ரெண்டுஞ்
சிலேத்மமொன் றெழுந்ததாகி
லையமேன் பசியுமில்லை
யடிக்கடி யுதரம்விம்மும்

துய்யதோர் நயனநீருஞ்
சுத்தமேமஞ்சள்போலாம்
பொய்கள் பித்தூத்தைப்பேசில்
பிதற்றசேத்மங்களாமே. (நாஎஉ)

(வேறு)

சந்தனம்பச்சிலைகச்சோலஞ்
சாதிக்காய் கிராம்புபத்திரி
வந்தவசம்பு திரிகடுகு
வங்கங்கோஷ்டந்திரிபலையும்
இந்தபோமஞ் சதகுப்பை
யிருசீரகமு மேலமல்லி
அந்தத்தேன் நெய்சீனியிஞ்சி
யருந்தவலுஞ் சேத்துமமே. (நாஎங)

(வேறு.)

ஓங்கியசேமம்ரெண்டு மூயர்பித்தமொருகாலோடி
லேங்கிடுமிருமலீளை யிடர்செய்யும்வாயுசிறு
மோங்கிமூதரமெய்யு முறுதிகெட்டுளைவுமாகு
மாங்கெடுஞ்சேதமபித்த மவைதொந்தமென்பதாமே. (நாஎச)

தாங்கியசேத்மம்ரெண்டுந் தனிப்பித்தமொன்றேதாகில்
ஓங்கியசன்னியுண்டா முச்சிநோஞ்செவிகேளாது
பாங்குடனுவினித்துப் பத்தியஞ்செறியாதாகும்
பூங்கொடிசேத்மபித்த மென்றுதான்புகலுவீரே (நாஎரு)

அக்காரமிளகுநெல்லி யமுக்குராவரத்தைதிப்பிலி
சுக்கொடுகடுக்காய்தான்றி சொல்லதிவிடயமேலந்
தக்கதோர்மதுரஞ்சீரஞ்சரியிடைபொரிந்துநெய்யில்
சிக்கெனவருந்துமபோது சேத்துமபித்தம்போமே. (நாஎசா)

இழுத்திடுவாதபித்த சேத்மமீடருமாகிற்
பழுத்திடுமேனிநொந்து பதங்கொடும்பசியுமில்லை
கழுத்தொடுகையுங்காலுங் கடுத்துடன்கனத்துக்காணு
முழுத்திடுமூலரோக மூவருந்தொந்தித்தாலே. (நாஎஎ)

(வேறு.)

திரிபலையோமமக்கிரா
சிவதைமதுர மதிவிடையந்
திரிகடுகொத்தமலியிரண்டு
சீரகம்முன் குப்பையுடன்
யறிவசம்பரத்தைசயேல
மருக்குராகிராம்புபத்திரி
யறிவுசேர் காயம்பத்திரி
யதுசமன்கொள்ளுவீரே. (நாஎஅ)

4

## வாதரோக குணம்

(வேறு)

மெய்யேநடுக்குந் தலைவலிக்கு
   மேனிவேளுறுங் கண்டேங்கும்
பொய்யேதுயரங் கிறுகிறுக்கும்
   போதேநயனமெய்நெறியுங்
கைகாலதிமிர்ந்து வுலர்த்திவைத்துக்
   கண்ணுமூக்குஞ்சன்னிகட்டு
மையாமெய்யு மிகவுளவாம
   வாதரோகக்குணமிதுவே. (௱எகூ)

கண்டங்காரிசீற்றுமுள்ளி
   கனையாவரையா மணக்கம்வேர்
கண்டஞ்சுக்குகருகிரங்
   கடுகுப்பைசமனாக
வொன்றாய்க்கூட்டிக் கியாழம்வைத்து
   வுண்மையாகக் குடிப்பீராய்
தெண்டப்படுத்தும் வாதபிணி
   தீருமென்றார் திருமுனியே (௱அ௰)

(ரோகலட்சணக்குறிப்பு,)

(வேறு.)

பார்த்திடில்வாதபித்தம் பரிந்துசேத்துமங்களங்கே
ஆர்த்திடுமரணைவாய்போற் றுடித்திடுமகவைநோவாம்
வேர்த்துடல்பட்டுத்தானே மெய்யெலாங்குளிர்ந்ததாகில்
கோற்றொடிவளைக்கநல்தாம் மரண மாங்குறிபிதாமே. (௱அக)

மேவியபுறங்கையாலே மிக்கதோர்முகத்தைதீவி
ஆவலாய்மனிதரதம்பா லகவுறநேவங்கிகிற்கும்
பூவையேபெருமூச்செய்தும் போனகந்தேடுமோகின்
மாவடுகண்ணியேகேள் மரணமாங்காலந்தானே. (௱அஉ)

புயம்பெறுவிலாவிரண்டு பூருபூரெனவேகித்து
சயம்படுதொண்டைகுள்ளே சலமடைத்திரையுங்கண்டால்
வயங்கிளைதுன்னே கண்ணிலகந்தருநீருமூடிற்
றிபங்கியவேண்டாமிந்தச் செய்குறிமரணமாமே. (௱அ௩)

எடும்படிஎன்றுவீழு மெழுமுடல்மயங்கிக்காட்டும்
புடையதுமூகுநீரும் பொசித்திடுவேர்வையுண்டாம்
வடுவிழிமையமாகும் வாங்கிடுவிலாவிரண்டுங்
கடுகவேயிக்குணங்கள் கண்டிடுமரணந்தானே. (௱அ௪)

நன்மையாய்வாதபித்த நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாய்ச்சிலேத்துமந்தான் வளர்துடிபடியப்போலே

திண்ணமாயுடல்வெளுத்து மார்பதுகுளிர்ந்ததாகில்
வண்ணலா ரறியச்சொன்னோ மதன்குறிதொண ணூற்றாறே- (௱௮௫)

ஆடியமஞ்ஞைகோழி யன்னம்போல்நடக்கும்வாதம்
நீடியவெட்டைபோல நின்றதுதியங்கியோடில்
கூடியகிழமையேழிற் கொல்வதுதிண்ணமென்ன
நாடியேமுனிவர்தாமு நயம்படவறிந்துசொன்னார் . (௱௮௬)

சொன்னமுன்னாமையட்டை துலங்கியபித்தநாடி
வன்னமாமரவுபோலவளைந்தது பரந்தேயோடில்
அன்னநாளைந்துமூன்றி லறிந்துகொள்மரணமின்ன
இன்னமுமறிந்துசொன்னோமியம்பினகூர்ப்புள்ளோரே (௱௮௭)

கூறியதவளைபாம்பு குலவியநடைகள்போன்ற
தேறவேதெரிந்துசொன்ன சேத்துமக்கொடியநாடி
போற்றொழிலன்னம்போலப் புடைத்தது பிரியக்கண்டால்
ஊற்றறிந்தொழிவாயொன் றுவொருக்கியேமாதமென்றார். (௱௮௮)

(அசாத்தியக்குறிப்பு)

மேதினியுள்ளோர்க்கெல்லா மெய்யிதுவுரைக்கலுற்றேன்
ஓதியநூலைச்சார்ந்து வொண்டொடிநாவரண்டு
தீதிலாச்சேத்மநாடி செருமியேயெழுந்துவீழும்
ஆதியாயுரைத்தவுண்மை யடுத்தகாளிரண்டிற்சாவே. (௱௮௯)

மெய்யதோர்பித்தநீங்கி வாய்வதுமிகுந்துகாட்டில்
ஐயமேலிட்டுகண்ட மடைத்திடுமிளைப்புமாகும்
துய்யதோர்விழியுமந்தஞ் சொருகிநீரிடமேசுற்றில்
ஐயனாருரைத்தவுண்மையைந்து நாணமரணமாமே, (௱௯௰)

துன்னியவாதபித்தஞ் சேத்துமந்தொடர்ந்துசன்னி
இன்னமுங்குணங்கள்சொல்ல வியல்புடனிருந்துகேளாய்
பின்னதுபாம்புபோல பிரிந்துதானடந்தநாடி
தன்னையுந்தவளைதத்தி தயங்கிடிற்சாவுதானே. (௱௯௧)

என்னவேவார்த்தைதன்னை யியல்புடனின்னங்கேளாய்
மூன்முகமார்புபக்க மூக்குடன்செவிகள்கண்டஞ்
சொன்னகன்குளிர்ந்துசோர்ந்துசிலேற்பனஞ்சுருக்கைசெய்தாற்
சொன்னநாளொன்றிற்சாவர் தொகுத்தறிந்துரைத்துப்போமே (௱௯௨)

கண்டநொந்துநதிவீங்கி கண்சிவந்தளர்ச்சிதோன்றி
யண்டமும்பொருமிவீங்கி யதைத்துடலிருக்குமென்ன
முண்டகமுகமும்பொன்போல் மூன்றுமுன்செறிந்துவுச்சி
தண்டிளந்தந்தமேவிச் சாவதுதிண்ணந்தானே. (௱௯௪)

சில்லெனச்செவிடடைத்துச் சிலேத்துமமதுவேதோன்றிற்
சல்லெனச்சரீரம்வேர்த்துத் தானுடல்குளிர்ந்துதோன்றிற்

சொல்லதுகுழறிப்பேசித் தூக்கமுஞ்சுழன்றுவிழில்
சொல்லுந்தான்பித்தந்தானுந்தீர்ந்திடாரோகமெண்ணே. (௱௯௪)

மெய்பதோர்பகல்விரும்பி யிரவுதன்னுடலைமேவி
செய்பதோர்நாவுலர்ந்து சேத்துமநாடியோடிற்
செய்பவேசுவாசந்தானுந்தொடர்ந்ததுவாங்குமாகில்
வெய்பகண்பரந்துதாவிவிழிக்கின்றுவிரண்டிற்சாவே. (௱௯௫)

சாலவேவாதபித்தஞ் சிலேத்துமந்தனிற்றேடாகில்
சாலவேயோசனங்கள் சமித்திடாசாட்சிசெய்யுஞ்
சாலவேசன்னிகோர்த்துத் தலைநொந்துவாய்திறக்கில்
சாலவேசபைதி டஞ்சாற்றுதின்னினவெல்லாதெதன்றே, (௱௯௬)

புருவமேவட்டமாகிப்புபமெழுந்திருக்குஞ்சோனை
பருகியநீர்நாள்போதபஞ்சிடுங்கண்ணும்வாயு
மருவியகோபந்தானுமடைந்துதானிருக்குமாகில்
வருவதிக்குணங்களெல்லாமரணமென்றறிந்துகொள்ளே (௱௯௭)

போர்விழிபிருண்டுநாளும் புனல்விழுந்துயர்நாளுஞ்சில்
சார்விழிசெவியிலேயும் தரித்திடாதேழிநாளிற்
பார்விழிமொழியும்நாவிபயின்றது சுவையின்கூறுங்
கூர்விழிநாசிவாசங் குறையினுள்ளேழன்றிற்சாவே; (௱௯௮)

போசனம்வெர்ருத்தல்விக்கல்பொருமுதல் புடைத்தல்சேர்தல்
ஆசனங்குளிர்ந்துகால்கைகால்புறந்தனனில்வீங்கல்
கோசமுமேறவீங்கல் குழிந்திருயுறமும்வாங்கல்
நாசிவெண்கருவியென்றே நவின்றுநீவிட்டுப்போவே (௱௯௯)

வீட்டநீரடைத்துத்தானும் விழிநீர்ச்சிந்தல்
அட்டமுங்குளிர்ந்துகூடி லகய்கைகால்புறத்தேவீங்கல்
உட்டினம்பிரவேசித்த லுற்றுதல்பறப்புச்சேர்தல்
நட்டமாய்ச்சாவுதிண்ண நாடிநீகைதொடாதே. (௨௱)

கைதொடில்புளல்போல்நொந்தால் கறுத்துகில்பளபளத்தல்
மெய்தொடிலுதிரநீலம் விழிதனிற்சிவப்புமீள
செய்யொளிகமலம்புந்தி சி[illegible]கங்குருவேர்சிந்தல்
ஐவருமொடுங்கிநித்த மாவெராடாதென்னே. (௨௱௧)

சிரமதுகனத்துநோகுஞ் செவிபடைத்திருக்குமாகில்
சுரமதுவெகுவதாக சுரைபோலச்சிறுநீர்வீழ்ந்து
சரம்துசிதறிவீசி தாகமும்வெகுவதாகி
வீரவியேவிழிதிபங்கி விரைந்திடில்மரணமென்றே, (௨௱௨)

பருக்கநீபிறகேவீங்கி பார்வையுமதிகமானால்
மருந்திடவிரும்பிடாதே மறுபிறப்பிட்டுமேலுந்
தரந்தரநிசங்கள்வீங்கி தாடியுங்கீழேசட்டி
மருந்திடவேண்டாநீயுமரமென்றறிந்துகொள்ளே, (௨௱௩)

மீண்டிவாய்வழுவழுத்துமேனியும்வெளுக்குமாகில்
தாண்டியபேச்சுதானுந்தவர்ந்திடர கமட்டு
மீண்டியமரணமாகவிரண்டரைக்கடிகையென்ன
கூண்டபின்பிழைப்புகூடிகுறைந்திடுமுயிரதென்னே, (உ௱ச)

ஏய்ந்ததோர்குணமுள்ளோர்க்குமிணங்கவேவேர்வைதோன்றி
வாய்ந்ததோர்பெருமூச்சுண்டாய்வாடிநாடியுமேயானால்
தேய்ந்துபிராணனென்றுசெப்பெலாந்தெளிந்தோரெல்லாங்
காந்தளங்கையாற்காமன்கருப்புவில்புருவக்கண்ணீர். (உ௱ரு)

கன்னியேநாவுமெத்தகறுப்பதாய்நாக்குமூக்குந்
தன்னுடகுணமுமாறிதவ்வியகுணமுமிஞ்சி
என்னவேகுணமிதானலிதற்குநீரிகைமகுறைந்து
உன்னியேமருந்துசெய்யாயொழிந்ததுமரணமாமே. (உ௱சு)

வுண்டவூண்செறியாதாகிலூண்மிகச்செல்லாதாகிற்
கொண்டதோர்வாய்வுமெற்றிக்குடலதுவலிப்புண்டாகிற்
பண்டுசொல்மருந்துசெய்துபார்க்கவும்வேண்டாம்வேண்டாம்
வண்டுசேர்குழலினளேமரணமென்றறிந்துசாற்றே, (உ௱எ)

சாலவேசலத்திறேடேதான்வீழ்ந்துவிடுமேயாகில்
ஏலவார்குழலினளேயேழுநாளையிலேகொல்லுங்
காலமேகதிரோன்றன்னிற்கருதியதிங்கள்கானு
மாலையிலங்கவென்றுமாறிடில்மரணந்தானே (உ௱அ)

சானொருநாட்குநாள்தான்றன்பலங்குறையுமானல்
ஆனதோர்வதனந்தானுமறவெளுத்திருக்குமாகில்
ஈனமாய்ப்பெருமூச்சுண்டாயிருக்குமேமாதமொன்றில்
ஊனமாமரணமென்றுஉறுதியாயுரைக்கநன்றே, (உ௱கூ)

வற்றியமலசலங்கள்மற்றுளசெவிகளைஞ்சும்
உற்றதோர்க்கண்ணுநாக்குமுறுதிகள்பலதுவற்று
இத்தனைகுணமுங்கேடுவிருந்தனவியல்புகண்டே
வித்தகர்முன்றுசென்றுமீளுவதருமையாமே, (உ௱௰)

பொங்குறிபலத்தைத்தானேபுண்வெடிசந்துநோகும்
செங்குறிசிலேத்துமங்கானெய்தியமுடிச்சுவீழும்
ஓங்கருசுழிக்கத்தானேயுவன்றிடும்பலபேச்சாக
தங்கருந்துரியந்தானேதப்பிடுமயக்கந்தீர்ந்தே. (உ௱௰க)

தீதுறுமவற்றையைந்திற்றெளிவுறமுகடுபார்க்கும்
ஓதியவவவத்தையாறிலுடலதுகுளிர்ந்துகாட்டும்
நீதியாயவத்தையேழில்நினைவுற்றபொசிப்புவேண்டும்
ஆதியானுரைத்தவெட்டிலதுகண்பஞ்சடையுமென்றே. (உ௱௰உ)

கொண்டிடுமேவத்தைகேளாய்கூர்விழிமூக்குகாது
ஒண்டொடியுச்சியுந்தியுள்ளங்கால்கைகளெங்கும்

விண்டிடவெளுத்துக்காட்டி மிக்கவுஞ்சேத்மமென்று
அண்டருமறியச்சொன்னேனைந்துநாழிகையிற்சாவே, (௨௱௰௩)

தன்னுடசாயைகதானுந் தனக்கதுதோன்றாதாகில்
முன்னுரையறிதல்கேட்கல் முயன்றுரைப்பதற்குவந்து
என்னதென்றறிதற்சங்கை யிளைப்புடன்றிகைப்பத்தோன்றிற்
சொன்னம்போல்வதனைமெய்யுந் தோன்றிற்கேள்சாவுதானே (௨௱௰௩)

புரண்டதுமருண்டுமேலே பொருமிநீட்குமாகில்
இரண்டைநாள்கடன்னி லியம்பினமரணமென்றே
சுருண்டகணகுழலினாளே சுரத்தினலெட்டதாகுந்
திரண்டுநாள்வந்ததென்று சிக்கெனத்தெளிந்துகொள்ளே. (௨௱௰௪)

அறிந்திடாய்பித்தம்நின்று வாதசேத்துமமுமாங்கே
பிரிந்திடாதோடுமாகிற் பெய்வளைமாதேகேளாய்
நிறைந்தகோராகமத்தி னேர்படவெயர்ந்தேயோடில்
அருந்திடாய்கடிகைதொண்ணூற் றளவினின்மரணமென்றே (௨௱௰௫)

(வேறு.)

சேருமீளுங்கண்டேங்குஞ் சேரவுதைக்குங்கால்கைக்
ளுளுமுழன்றேநெஞ்சுழலு முள்ளேசேத்மங்கோதண்டம்
நீருமிகுந்தேகண்சிவக்கு நேராயிருக்கவொட்டாது
பாருங்கிரியைக்குணங்கண்டாற்பரமனடக்கமாட்டானே, (௨௱௰௬)

காலுங்கையும்புறம்வீங்கிக்கண்டன்சோர்ந்துநாவரண்டே
மேலுங்கனத்ததயிளைப்பெய்து மிகுந்ததாபமுண்டாகுந்
தோலுந்தசையும்படபடெனத் துய்யநெஞ்சுங்குளிர்ந்திட்டால்
மாலும்பிரமன்வந்தாலு மரிக்கும்பிள்ளைபதறித்தாமே, (௨௱௰௭)

(வேறு,)

தீதிலாவுடல்வெளுக்குந் திரவியம்பத்திற்சாவர்
ஓதியவேதஞ்சொன்ன வுரைவிதிப்படியேமுன்னோர்
பேதியர்கண்டநீதி பெருமைபாயமர்ந்துகொண்டு
மூதுவாகடமீதெல்லா முறைமைபெனவோதுநூலே, (௨௱௰௮)

ஓதியவேதன்சொன்னவுரைவிதிப்படியேயாய்ந்து
மூதுவாகடர்க்குமிந்த முனிவருமருளிச்செய்தார்
நீதிசேருலகுள்ளோர்க்கு நிறைசிந்தாமணிவிளங்க
ஆதிநான்முகனுமாலு மடிமுடியளவுநின்றே, (௨௨௱)

(வேறு.)

மெய்யேநடுக்குந்தலைவலிக்கு மேனிவெளுக்குங்கண்தூங்கும்
பொய்யேதுயரங்கிறுகிறுக்கும் போதநயனமெய்நெறியும்
கைகால்திமிர்ந்துவுலர்த்திவற்றும் கண்ணுமூக்குஞ்சன்னிகட்டும்
மைபாமெய்யுமிகவுளைவாம் வாதரோககுணமிதுவே, (௨௨௧)

(வேறு,)

ஊடியவாதமாகிலுடல்தலைநெஞ்சுபார்த்து
தேடியகரங்கள்கால்கள்திமதாய்ப்பிலக்கொட்டாது
வாடியேமேனிதானுங்வரண்டிடும்நாவும்பல்லும்
ஓடியேயுடல்கடோறுமுளையுடன்குத்துமென்றே. (௨௨௨)

மலையிஞ்சிகூவைமஞ்சள்வண்ணெச்சியாமணக்கு
சலங்கள்தானுழிநாழிதனித்தெங்கினெண்ணெய்நாழி
விலமதாங்கோட்டந்தாரம்வெந்தயஞ்சன்னிநாயம்
பிலமதாய்க்காய்ச்சிப்பூசியுட்கொள்ளவாதம்போமே. (௨௨௩)

(கலிவிருத்தம்.)

ஓடிந்துடிக்குமுடலேறைப்பார்க்குமே
நீடுஞ்சிறுத்துடல்நின்றேபடங்கிடும்
தேடுந்துடிப்புடைவாதமென்றேறுவீர்
நாடோறுமடக்கும்நல்லவாதமே. (௨௨௪)

(வேறு,)

வாதத்தையடக்கினொச்சிவளர்கொடுத்தான்மாவிலிங்கி
பாதத்தையாமணக்குதோடைபாலுள்ளகள்ளிச்சாறு
வேதிபாம்வேம்பினெண்ணெய்வெள்ளுள்ளிநாழிநாழி
ஓதவேகர்க்கந்தானுமுறைத்திடக்கேளாய்மானே. (௨௨௫)

சாதிக்காய்கிராம்புசிரஞ்சதகுப்பைகடுகுவோமம்
நீதியாந்திரிபலாதிநேர்கரிகடுகிந்துப்பு
வாதுற்றவலுவாய்மஞ்சள்மரமஞ்சள்வசம்புரோணி
மாதுற்றபெரியசீரமாங்கருஞ்சீரக்கூயம். (௨௨௬)

கேளின்னஞ்சன்னிநாயங்கிரிசக்கராவர்த்தை
பாழதுதீர்க்குந்தாரம்பழுத்ததோர்மதுரஞ்சந்தம்
வாழகில்பீதராறிவகையிருகழஞ்சுதாகக
கோழியினிரத்தங்கூட்டிக்காய்ச்சியுட்கொண்டுபூசே (௨௨௭)

(வேறு.)

உதிரமுஞ்சுரமுமங்கிவாந்தியுமூச்சுமுண்டாஞ்
சுரமுகங்கடுத்துமேலுமற்பமேகடுத்துநோகிற்
றிதமுறுமரணவாதந்திருமுனிபருளிச்செய்த
பதமுறுவேதநூலின்படியிதுபகருவீரே (௨௨௮)

(வேறு,)

உளையுமுடலந்தனிலெங்குமுளையாதிருக்கிலுடம்பிளைக்கும்
கலையபிருந்துவயிரளர்த்திகனக்கவாந்திவாய்நீராம்
விளையுமெப்புத்தூளுண்டாம்விடாதேமிதந்துதலைகனக்கும்
வளையும்புருவமுடையாளேமரணவாதக்குணமிதுவே, (௨௨௯)

வெண்காயுள்ளிபறு பலமுமிருக்கதிரிகடுகொருபலமும்
நண்பாயிந்துப்போர்பலமும்நான்குகழஞ்சுக்கொடிவேலி
மண்சேர்குமரிச்சராசரியாய்வலகயாயதுவுங்காணெடுத்து
பண்சேர்நறுநெய்தனிற்கூட்டிப்பதுநாளுமெரித்துண்ணே (௨௩௰)

(வேறு)

இரத்தமுங்காய்ந்துவாடியெலும்புக்குத்தசையுங்கெட்டு
நரம்பதுவலுவாய்விம்மிநடப்பதுகுன்றும்வாய்வு
உரமிகுஞ்சரீரந்தானுமுறுதிகட்டுளோயும்வெட்புஞ்
சராசரத்துடன்கற்போலத்தான்றிமிர்வாதமெண்ணே. (௨௩௧)

(வேறு.)

எண்ணெய்நாழிக்கியாழத்துக்
கிதமாய்ச்சொல்வோமினிகேளாய்
திண்ணம்நொச்சிமுடக்கொத்தான்
திறமாம்வேலிப்பருத்திகொன்றை
எண்ணெய்விழிபாவட்டை
யியன்றவாட்டாங்கொடியுடனே
வண்ணமுதிருந்திரிபுரத்தான்
மருவுங்கள்ளிசதுர்கள்ளி. (௨௩௨)

எருக்குமுறுக்குமாவிலிங்கு
வியன்றவாடாதொடைதீராய்
நருக்குமத்தங்கழற்கொடியும்
நலமாயிரண்டுசெருப்படையும்
பருக்கும்பலங்களாயெடுத்துப்
படிநீர்முப்பத்திரண்டதில்விட்
டெரிக்குங்கியாழமெட்டொன்றா
யெடுக்குமருந்தையினிகேளே. (௨௩௩)

அரத்தைகுப்பைமரமஞ்சளருகுங்கிலியந்திரிகடுகு
விரைத்தகம்பிப்பிசின்றகாமிருசிரகமும்வெட்பாலை
முரைத்தமுள்ளிசவர்க்காரமுசுறுமுட்டைகொத்தமல்லி
உரைத்தவிடையமிந்துப்புவுடனேதாரஞ்சாதிலிங்கம். (௨௩௪)

கோட்டமதுரங்கலைக்கொம்புகொடியமஞ்சள்விழாவரிசி
மீட்டும்வசம்புபெருங்காயமிகைமியோரென்றுமிருகழஞ்சு
கூட்டியொன்றாய்த்தான்காய்ச்சிக்கொண்டேவடித்துமிகப்பூச
மாட்டும்பெரியதிமிர்வாதமற்றும்வாதமாறிடுமே, (௨௩௫)

நாக்குவிழுந்துவருசாயநன்றாய்க்கைகால்விழுவதன்றி
வீக்கஞ்சாரமூர்ச்சிக்கும்விஷம்போல்மேனிதொடவொட்டா
யாக்கைமெறியுநாளதுதாணுகும்பத்துபதினைந்து
ஊக்கமுடனேதப்பினக்காலுண்மைபிழைப்பரென்றுணரே. (௨௩௬)

வெருகங்கிழங்கெண்பலந்தனிலேமேவுந்துணிநீர்விட்டு
உருகக்காய்ச்சிக்குறுணியதாயுகந்தகாடியவ்வளவாம்
பெருகக்கூட்டிக்கியாழத்திற்பேணிக்கலக்குமிதற்றக்கேள்
உருகநாழிநல்லெண்ணெயுயர்ந்தவரக்குப்பல நாலே, (௨௩௭)

கூட்டிக்கியாழங்கொதிக்கவைத்துக்கூறுமருநதுசதகுப்பை
நீட்டுமரத்தைதயிலவங்கம்நீடுமேலந்திப்பிலியு
மாட்டுகிராம்புமதிமதுரமஞ்சள்கஸ்தூரிமஞ்சள்
கூட்டுங்கோஷ்டம்விழாவரிசிகொண்டேகாயஞ்சீரகமே. (௨௩௮)

கர்ப்பூரந்தான்கடுகுரோணிகணக்கோரொன்றாக்கிருகழஞ்சு
நற்பாயெண்ணெயதுநாழிநற்க ளிப்பாலாழாக்கு
மெற்பாயுள்ளிவசம்புடனேமிகுந்ததொட்டிப்பாக்களவு
அற்புதவாதத்தெண்ணெயிதுவன்பாய்க்கழஞ்சதுமேல்பூசே. (௨௩௯)

(வேறு.)

தரித்திடும்வாதவாய்வுசற்வநீர்கோபித்தொன்றாய்
அரித்திடுந்தலைமேல்கைகாலங்கமோடுலைந்துவெம்பி
முரித்கதுவிறங்கிவந்துமுழங்காலில்வளைந்துகூடுங்
நரித்தலைவாதமென்றுநவின்றனர்முனிவர்தாமே (௨௪௰)

(வேறு.)

விடத்தலைப்பிரண்டையீவ்விரண்டுமிகுந்ததேசிக்காயளவு
திடைத்தோடறைத்துப்பனைவெல்லஞ்சேரக்கலந்துகலத்திட்டு
மடுத்தமருந்துகூடவிட்டுவதனிற்பிசைந்துநெருப்பில்வைத்து
மடுத்தேவாருநல்லெண்ணெமகிழ்ந்துசொல்லுநன்மருந்தே (௨௪௧)

வசனம்.

இந்தமருந்துநேரத்துக்கொருகழஞ்சு தின்று வென்னீர்குடிக்கநரித்தலைவாதந்தீரும்கைப்புளிப்பு.

(வேறு.)

தவீர்க்கவும்மங்கையைவருடிமெத்தவாதபித்தங்
களையநந்தங்களிற்சிதறிவாதந்தளர்ந்திடுங்கால்கள்கைகள்
அங்கமுந்தளர்ந்துபித்தமரைக்குமேலதுவுங்கெற்பந்
திங்கள்போல்முகத்தாயையஞ்சிரசிலேசினைப்பதாமே. (௨௪௨)

உடலதுவெதும்பிகைகாலுலைவுடன்கடுத்துநொந்து
கடவதாய்க்கால்கரங்கள்கனத்தபோலயர்ந்துகாணுஞ்
சடமதுவிழுந்ததாகுஞ்சலங்கட்டுந்தோஷமுண்டா
முடமதாங்கால்கள்கைகள்முடங்கினவாதமாமே. (௨௪௩)

(வேறு.)

நொச்சிச்சாறுநாழிதுசராசெருக்கம்பாலுடனே
இச்சையுடனேபொடுதலையுமியன்றகுப்பைமேனியுடன்

வைச்சவாயிலம்புன்குமிம்புமருவுமிலுப்பைசிறுகுறிஞ்சான்
ஆச்சமில்லாவேலிப்பருத்தி யரியமஞ்சள்தேங்காய்ப்பால், (௨௪௪)

ஓரொன்றொருபடியாய்க்கொண்டுவுயர்ந்தகடுகினெண்ணெயிரண்டு
நேராய்க்கலக்கிவசம்புள்ளி நீலியாடாதோடையின்வேர்
பாரோசீந்தில்வேர்முட்டிபருத்தபெருமரப்பட்டையின்வேர்
சீராயரைத்துக்கலக்கிவெந்துசேர்ந்தபதத்தில்வடித்திறக்கே. (௨௪௫)

பதத்தில்வடித்துநாளொன்றிற் பருகவிரண்டுகோசிடைதான்
விதத்திற்காயமேற்பூசமிகுந்த சந்துந்தடவிடவே
உதித்தகைகால்முடக்கினது முள்ளவிஷநீர்பலநீருங்
கதித்தவாதமிவையெல்லாங்காணுதோடிப்போய்விடுமே. (௨௪௬)

கைகால்விரல்கள்சுருண்டுவிடுங் கதித்தநாவுங்குழறிவிடும்
மெய்யேவடிவினழகுகெடு மிகவாய்மேனிவெதுப்புண்டாம்
ஐயாவிதுதன்குணஞ்சொன்னேனறிவீர்புத்தியிதுவல்லோர்
தொய்யதொய்யசொற்குழறுஞ் சுறுக்குவாதக்குணமிதுவே. (௨௪௭)

நத்தைப்பலாமபாலுழக்கு நல்லநொச்சிச்சாறுழக்கு
மெத்தவுழக்குப்புளியிலைச்சார் வெள்ளாட்டின்பால்தானுழக்கு
அத்தாமணக்கெண்ணெயுழுழக்கு வைந்துங்காய்ந்துவடித்தெண்ணெய்
நித்தம்பூசியுள்ளருந்த நில்லாதெண்பதுவாதமுமே. (௨௪௮)

கைகால்நெற்றித்தலைபிடரி கனத்துநொந்துவுளைவுண்டாம்
மெய்யின்ரூபந்தான்கெட்டுவெதும்பிவிதனமிகவுண்டாந்
தொய்யச்சுருட்டிமுடக்கிவிடுஞ் சுரோணிதவாதக்குணமிதுவென்
றையாமுனிவர்தாளிதனலறியச்சொன்னாரறிவாவே. (௨௪௯)

பாவுகளச்சிப்பதினாறு பதிவாய்மதுரம்பதின்கழஞ்சு
ஏவுந்திரிபலைநாற்கழஞ்சுவிருங்கச்சோலக்கிழங்குவங்கம்
மேவுந்தேவதாரமுடன் மிகுந்தவிடையந்திரிகடுகு
தூவுமரிசியாறுமிவைச்சுகமாய்பொடித்துத்தேனிலுண்ணே, (௨௫௰)

உண்டிடில்வாதமென்பது மூபர்ந்தசிலேத்மவாதசுரம்
திண்டபித்தங்காமாலை சீதக்கடுப்புசுடுவாதம்
இண்டசுரோணிதவொட்டியப்புண்ணிவையேபொருக்காதிருந்திடுகில்
வண்டேகுழலாய்நாம்சொன்னமருந்து பொய்யாதுண்மையிதே. ௨௫௧

(வேறு.)

சூரியவாதந்தோன்றுந் தும்மலுஞ்சளியும்வெப்பும்
பாரிசவுடல்கனத்துப் பரந்துடல்சிரசுநொந்து
மூரிகொட்டாவிவிட்டு முனிந்துமெய்தளர்ந்துசோர்ந்து
சீருருமயங்கிக்கண்ணுந் தியங்கிடுமென்றுசொல்லே. (௨௫௨)

நிம்பமுங்களச்சிநொச்சி நீரதுநாழிதானு
மம்பிசின்சுக்கரத்தைமதுரமுமைங்கழஞ்சு

தம்பமாமென்னைநாழி சாற்றியேகாய்ச்சிதேய்த்தார்
பம்பியசூரியவாதம் பறந்துபோமென்றார்முன்னோர் (௨௫௩)

(வேறு.)

தலையங்கனத்துவலித்துமிகச் சற்றேகாதுமந்தித்து
துலையுமங்கமுழுதுளைந்து துடங்கக்குத்திகிறுகிறுத்து
மலையுஞ்சரீரநோய்மிகுந்து வரளவுலர்த்திவாதமிகு
முலையும்வரச்சிவாதபித்தமுறுதியீதுகண்டுரையீரே (௨௫௪)

நன்னாரியின்வேர்குறுத்தொட்டி நல்லரோகணிசந்தனமு
மின்னார்சூடுமலர்மிச்ச மிகுந்தமூந்தந்திப்பிலியும்
அன்னநடையாய்சரிசரியா யாவினெய்யில்வெந்தகொள்ள
பன்னாள்வரச்சிவாதபித்தம் பாருமுடலம்பருக்குமிதே (௨௫௫)

கற்றாழைக்கையான்பிரமியுடல் கனக்கவிடித்துநீரெடுத்து
மற்றுமாகத்திரிபலையும் வகையாய்ப்பொடித்துச்சாற்றிலிட்டு
பத்திரிவங்கங்கச்சோலபச்சைமதுரங்கோட்டந்தாரம்[மாமே.
கொத்தான்சார்ல்லெண்ணெய்தனில்கொதித்துக்குளிக்கக்குண(௨௫௬)

(வேறு.)

அக்கினியுழலைசூலை யறவுலாந்திருக்குங்காய்ச்சல்
மிக்ககாதிரைச்சல்மந்த மிகுந்திடுமூகுநீர்கள்
தக்கதோர்மயங்கத்தோடு தலைவலிசந்துநோவாம்
கைக்கருணாவரட்சிபித்தமாங்கண்டுகொள்ளே. (௨௫௭)

(வேறு.)

காந்தங்கிட்டந்திரிகடுகு கையாந்தகரைச்சாறரைத்து
வாந்தகமாகப்பத்துதின மன்பாய்த்தானுமிகவிழுகிற்
சேர்ந்திடும்வரட்சிவாதபித்தஞ் செய்கைமாறிருந்தாக்கால்
சாந்தகமாகத்தீருமென்றுதமிழில்முனிவர்சாற்றினரே. (௨௫௮)

(வேறு.)

பூலானதாசிகையா னுமணக்கு
புளியிலைமுருக்கிலைநொச்சிகொத்தான்
ஏலானதிரிபலையீ லாமிச்சிறுவேல்
ஏற்றபொன்னாங் கண்ணிசந்தமரத்தைசீரம்
பாலரனகிராம்பேலமதுரங்கோஷ்டம்
பகர்லவங்கநன்னாரிசாதிகச்சொல்
ஏலானயெண்ணெயிலே காய்ச்சிமூழ்க
வேகுமடாவரட்சிபித்தந் தலைகண்ணோவே. (௨௫௯)

(வேறு,)

கையுங்காலமொருபக்கங் கனத்துத்திமிர்த்துச்சாவாகி
மெய்யுறவேவெதும்பிவிக்கு மிடுங்குகாவுந்தடுமாறுஞ்

செய்புமுதாரத்துளைவுண்டாஞ் செப்புஞ்சன்னிவாதமென்று
உய்யும்படிக்குவகைகாணு றுலகோர்க்கறியச்சொன்னோமே (௨௬௰)

(வேறு.)

முருங்கைவேர் பிரண்டைதண்டு
முதிர்ந்தவெருமை மூத்திரத்தில்
விரும்பியடித்துத் தான்பிழிந்து
வேம்பிலெண்ணெ யதிற்சேர்த்து
அரிதாரஞ்சாதி லிங்கமுட
னருகன்பால் விட்டுக்காய்ச்சி
திரமாய்சற்றே யுடகொள்ளத்
தீருஞ்சன்னிவாதமதே. (௨௬௧)

கண்ணும்வாரிஞ் சோபிக்குங்
காலுங்கையும்பிசவாகும்
நண்ணுநாவுஞ்சொற்றளர்ந்து
நடுங்கிருக்கு நாவுலரு
மெண்ணுஞ்செவியுஞ் சில்லென்னு
மிருகால்தன்னை நோவிக்கும்
வண்ணமிதுவே கண்டாக்கால்
மரணவாத சன்னியிதே. (௨௬௨)

வேலிப்பருத்திக் கழற்கொடியும்
வெருகுமெருக்க செருப்படையும்
ஆலின்பழுப்பு மாவிங்கு
வாடாதோடை திருதுகள்ளி
நீலிவேலை சமனிடித்து
நீரைவாங்கியதிர்க்கள்ளி
பாலினுடனே வேப்பெண்ணெய்
பரிவாய்மருந்து வகைகேளே. (௨௬௩)

சுக்குவசம்புவெள்ளுள்ளி சோமன்மோதம்ரோகணியுந்
தக்ககோஷ்டமதிமதுரந் தாரம்விடையஞ்சனிநாயம்
மிக்கவரத்தைவலம்புரிக்காய் வியன்பூநாகங்காய்ச்சியுண்ண
நிக்கப்பூசில்வாதசன்னி நெகிழ்ந்தமேதயோடிப்போய்விடுமே. (௨௬௪)

பேசும்பிரமியவாதத்துள் பெரியதயிலந்தனைகொளாய்
வாசமிகுந்தமஞ்சளுள்ளி வளருமெருக்காதண்டைசுக்கு
நேசமிகுந்தசந்தனமு நிசமாங்கோஷ்டமரமஞ்சள்
மீசங்கண்ணூர்வாலுழுவை மிகுந்தவேலந்தாரமுமே (௨௬௫)

மிக்கமஞ்சளிரண்டரத்தை விரும்புஞ்சன்னிநாயகமும்
ஒக்கமதுரஞ்செவ்வள்ளி யுயர்ந்தவசம்புதிப்பிலியுந்
தக்கதேக்குசண்பகப்பூ தருகச்சோலமிகவங்கஞ்
சிக்கென்றிருக்குஞ்சிறுமூலந திருக்கும்பால்கொத்தமல்லி. (௨௬௬)

(வேறு.)

கொந்தலருங்குழலாய்கேளிருசீரந்தான்
குளவிந்தவசுவாசிசாதிக்காயுங்
கந்தமூறுசடாமாஞ்சிகடலினுரைதானுங்
கடுகுரோகணியுடனேவெட்பாலைகுப்பை
புந்திமதிழ்விழாவரிசிநான்றிக்காயும்
புகழானவகையொன்றுகழஞ்சிவாங்கி
இந்தவகைசறக்கெல்லாம்நிறையாய்த்தூக்கி
பியல்பாகவேர்வகைகளின்னங்கேளே. (௨௬௭)

சொல்லுகிறேன்காற்றொட்டிகுறண்டைநொச்சி
துடிவாதமடக்கியாதண்டைமஞ்ஞை
கல்லரியகுடப்பாலைவேர்ப்பாவட்டை
கறைகண்டன்மூலிநீலக்குமிழினன்னாரி
சொல்லரியமல்லின்வேர்கருவேம்பினவேர்
தூளாகவிடித்தபின்புகூட்டியெல்லாஞ்
சொல்லரியபாலையின்றாளையீத
மாகவேபெடுத்துச் சுருட்டிக்கட்டே. (௨௬௮)

கட்டியபின்வேப்பெண்ணெபெள்ளினெண்ணெய்
கருத்துடனேயாமணக்கினெண்ணெய்வாங்கி
கட்டியதோராமணக்கெண்ணெய்தன்னைக்
கண்டளவுக்கோரொன்றுகருதியேற்றி
கெட்டெனவேயொன்றுபடிவிட்டெரித்து
கெல்லுவடித்தளவுதண்ணீர்மேலேவாங்கி
பொட்டெனவேவேர்தூவிசரக்குதூவி
பொடியானபாலைத்தூவிபோட்டிறக்கே, (௨௬௯)

இறக்கியசீர்முழுந்தாளும்புறந்தனுள்ளா
யியல்பாகப்பொருத்தியிருகடிகைமட்டுஞ்
சிறப்புடனேமூன்றுநாள்சென்றதானல்
சீருடனேபுண்ணுக்குவென்னீர்வார்த்து
உறப்புடனேமூன்றுநாள்சென்றதானு
லுடன்குடங்கையெண்ணெய்தனையுள்ளுங்கொண்டு
பிறப்புடனேபிடித்திட்டுச்சிலையூட்டிப்
போட்டிடப்போம்வாதமெண்பதுவுந்தானே. (௨௭௰)

உள்ளபடிபெண்ணெய்தனிலொழியுநோய்கே
ளூலவுகுத்துத்திமிர்விளைப்புவடலில்வாதங்
தள்ளவிழுஞ்சந்துளவும்பிடரிவாங்கல்
தலைநோவுகாகிளைச்சல்தனித்தவாதம்
விள்ளுமெனவாகமென்றதெல்லாந்தீரும்
விளாவுடனேசர்வாங்கவாதந்தீரும்

நள்ளிருந்தகிரணமேகடுங்கியோடில்
நாடினதுவனமபோகநாடினரே. (௨௭௧)

(வேறு,)

உடலிடையோடிமீண்டு வுற்றகாலுஞ்சந்துகைகள்
குடலிடைகூப்பிட்டோடி குமிரிடுங்குடலிற்றங்கு
முடலிடையோடிநிற்கு மொருக்காலன்றருணடுரத்து
திடமதாய்ப்பெருத்தமானம்சினைக்குங்குடல்மாதமாமே. (௨௭௨)

(வேறு.)

குடலில்வலிக்குங்காலுளையுங் குமுறுமிரைக்குமந்திக்கு
முடலிலடங்கியொடுங்கிநிற்கு மூருகாற்பிரண்டோடிநிற்குங்
கடலிறரங்ரகமதுபோலக் கதிக்குமூடேவாகைசெய்யுந்
திடலிற்பெருத்தவுடல்பாலச்சிதைக்குங்குடலில்வாதமிதே. (௨௭௩)
குடலிலேமுறுக்கிவயிறிரைந்து கூப்பிட்டொடுங்கிமந்தித்து
உடலிலடங்கியொடுங்கிநின்று வொக்கக்குடலில்வலிகொள்ளுங்
கடலின்முழக்கமதுபோலக் கருதிக்காலில்வலியெடுக்கு
மிடரோசெய்யுங்குடல்வாதமிதுவின்குணத்தையியம்பிடுவே. (௨௭௪)
வெண்பாஷாணமொருகழஞ்சு மிகுந்ததுக்கமிருகழஞ்சு
நணபாய்த்துருசுமனாக்கழஞ்சு நன்றாயூமத்திலைச்சாற்றிற்
பண்சேர்மொழியாபனாத்திதனைப்பருத்திக்கொட்டைப்பிரமாணம்
வண்சேர்மிளகிஞ்சியிற்கொள்ள மாய்ந்தேபோகுங்குடல்வாதம் (௨௭௫)
இயம்புங்குறிஞ்சாயிலையதனையேர்க்கத்தண்ணீர்தான்வார்த்து
நயஞ்சேருப்புத்தான்போட்டு நன்றாய்வித்துநீர்வடித்து
வயஞ்சேர்சுக்குமிளகுடனே வளர்வெங்காயவெந்தயமும்
உயர்ந்தகடுஞ்சீரகமொக்கவுகப்பாயனாத்துக்காய்ச்சியெடே, (௨௭௬)

(வேறு.)

கழ மணிவெள்ளையுள்ளி கடியதோர்முருங்கைப்பட்டை
அளவிடைசுக்குங்கூட்டியைந்திரண்டாகக்கொள்ள
குழல்படுமோசைபோலக் குமிரிடுங்குடல்வாதங்கள்
பழகியவுடலைவிட்டுப் பறந்திடுமென்றார்முன்னோர். (௨௭௭)
கழலேறுவாதஞ்செய்யுங் கருதியகுணத்தைக் கேளாய்
அழகியவிரைதானேறி யடங்காதநோவுகொள்ளும்
குடலதுவோசைபோலக் குமுறியேயுடலடங்கி
மழைமுகிற்குழலினுளே வந்திடுங்குணங்கடானே. (௨௭௮)

(வேறு.)

குணஞ்சேர்கழச்சிப்பருப்புடனே கூட்டுவசம்புவெள்ளுள்ளி
கணஞ்சேர்மிளகுசரிகூட்டி கடுகவனாத்துமிகக்காய்ச்சி
மனந்தான்சலிக்கவேண்டாங்காண் வகையாய்மருந்து எழுநேரம்
தினந்தான்கொடுத்துவருவீராய் திருமென்றார்திருமுனியே, (௨௭௯)

சேர்ந்தகளச்சிக்கொடியிலையுஞ்செய்யவசம்புவெள்ளுள்ளி
போந்தவிடித்துவழித்தெடுத்துபொருந்து'' விக்கந்தனிற்கட்ட.
சேர்ந்தகழலின்வாதமுடன்திராவாயவுந்தீர்ந்தகலும்
ஏந்தும்கும்பத்தனத்தாளேயிளேகியோடுங்கண்டீரே. (௨௮௰)

அண்டவாதம்விரைகீழேயரவேயிறங்கிமிகவூதி
கொண்டலிடிபோல்வயிறமுதுகொள்ளும்வாதமேற்பறந்து
உண்டுநடக்கவொட்டாதுவொக்கதொழுகல்சத்தியுமாய்த்
துண்டமதிசேர்நுதலாளேசொன்னேங்கேளுமின்னமுமே (௨௮௧)

வந்துபொருமுமண்டலத்தில்வலித்துமிகவேசுரந்தோன்றி
நொந்தேயுடலும்புன்போலநோவினுடனேதலைவலியும்
இந்தப்படிபேயிவைதோன்றிலிதுவேபக்கச்சூலையென்றுந்
தொந்திப்புடனேவருமென்றுசொல்லுங்குணங்களிதுவாமே. (௨௮௨)

(வேறு.)

அண்டமோர்புறத்தேவீங்கிபஃறயுடன்கனைத்துநொந்து
மண்டியேவயிறுநொந்துவானமேநோக்கித்தாக்கி
அண்டமுந்துடையுமிற்றுவற்றதுபோலேதோன்று
மண்டியவண்டவாதமாமெனவகுத்தவாறே. (௨௮௩)

கொண்டிடுங்குடலிறங்குறைந்தொருவிரையிற்றோன்றும்
மண்டியவிரையிற்றோன்றிவலித்திடும்வாதைசெய்யும்
பண்டுதானண்டவாதம்பற்றியகழலேரென்று
மண்டருமுனிவர்தாமுமவனியிலுரைசெய்தாரே. (௨௮௪)

பேய்க்குமட்டிமாவிலிங்கும்பெறியபுங்குநொச்சியுள்ளி
வாய்த்தவிஞ்சிகளச்சிதும்பைவன்னியெருக்குமுருக்குகள்ளி
சாய்த்தோரோரொன்றதுநாளிற்றூரம்லிங்கங்காந்தமிந்து
காயஞ்சுக்கோமங்கடுக்காய்வசம்புகள்ளியெருக்கம்பால்தானே. (௨௮௫)

இவைகள்வகைக்குக்கழஞ்சிரண்டுஇடித்தேயறைந்துவதிற்சேர்த்து
அவையல்லாமல்விளக்கெண்ணெயபத்தினீரும்வகைநாழி
இவையெல்லாங்கூட்டிக்காய்ச்சியேற்கையாகவடித்தருந்திற்
கவைபக்கஞ்சூலையண்டங்கழலேறுவாதம்போமே. (௨௮௬)

பெருத்தகாயம்வெள்ளுள்ளிபேணுமிருசுவேர்க்கொம்பு
விருத்தமானசாரணைவேர்வெட்டிநருக்கிக்காய்ச்சிகிலோ
திருத்தமாகக்கழஞ்சொன்றாய்ச்சலத்திற்காய்ந்துகொண்டுவிடி
லொருத்தர்தமக்குவாராமலொழியும்பக்கச்சூலையதே, (௨௮௭)

(வேறு,)

சீனப்பாகுங்கிலியமேலங்கிராம்பு
திரிகடுகுசாதிக்காய்மூலம்பத்திரி

சீனக்காரம்லிங்கமரத்தைமஞ்சள்
திரிபலைவெட்பாலைமஞ்சள்தேவதாரஞ்
சானக்கொடிவேலிபொரிகாரமிந்துப்பு
சமதாங்கழல்பருப்புவ ய்விளங்கம்
வாணமதுரம்விடையஞ்சிறுஃதக்கு
வால்மிளகுவெடியுப்புக்கருஞ்சிரகந்தான். (௨௮௮)

(வேறு,)

வேர்த்துவெதும்பிபற்கட்டிவிரையுங்குத்தித்தாகிச்சு
சீற்றமிகுந்துகஞ்சிதண்ணீர்தேடுங்கொள்ளவொட்டாது
பார்த்துமனுடறிருக்கினுமோபரியும்வாய்வுகீழ்நோக்கி
பேர்த்துப்பகராதுடன்குத்தும்பேணிச்சொன்னாபெரியோரே (௨௮௯)

தண்டுவாதத்தின்குணத்தைச்சாற்றக்கேளாய்மடமயிலே
பணடேதண்டுமிகவூதிபதரிப்பொருமிக்கொண்டிருக்கும்
நண்டாம்பிரண்டைக்கோவைதண்டுநெருக்கிப்பிழிந்துதண்ணீரில்
பண்டேவசம்புமிளகுள்ளிபையக்கரைந்துநீர்குடியே. (௨௯௰)

நறுக்கினகோதுதன்னைநன்றாயிடித்துத்தூளாக்கி
பொறத்திடும்வீக்கந்தன்னிற்பிசகாமல்வைத்துகட்ட
உரைத்திடுமருந்துதன்னையொக்கவேநாளேழுண்ணில்
உரைத்திடுந்தண்டவாதமுகந்துதானோடிப்போமே. (௨௯௧)

குதிதான்வீங்கிக்கடுத்துநொந்துகுத்துங்குடையுநடப்புமில்லை
சதிசிரந்தன்னில்நோவெடுத்துதக்கநரம்புதான்றிரைந்து
பதியிற்பலதுதுயரமிகும்பாரில்பருந்துபகரக்கேள்
கதுமைசெறியுந்திருகுகள்ளிகவராய்கொம்புவெதும்பியொத்தே (௨௯௨)

சித்தாமணக்கெண்ணெயைத்தடவிச்சோர்உவாதமடக்கிநொச்சி
பொத்தேயவிழ்த்துகட்டுவிராலோடுங்குறியில்வாதமிது
பற்றேகொட்டாங்கரந்தகனைபையத்துவைத்துவதுதன்னை
யொத்தோவைத்துகட்டுவிராலோடுங்குதியில்வாதமதே. (௨௯௩)

(வேறு.)

பிறவலியெடுத்துநொந்துபிடரியினரம்பைப்பற்றித்
திறமுள்ளசரீரந்தன்னிற்சிறந்ததோரநோவுகொள்ளும்·
உறமிகுந்திருகுகள்ளியுயர்வேர்வசம்புமிளகுகள்ளி
நிறையாயரைத்துவதைநன்றாய்நெருப்பிற்காய்ச்சியெடுப்பாயே (௨௯௪)

(வேறு.)

காய்ச்சும்பொழுதுவெள்ளெண்ணெகலந்துவிட்டுக்கொதித்திறக்கு
கூச்சமறவேயுடம்பெங்குங்கோலம்பெறவேநனைப்பிராய்
மூச்சுக்கொடியம்பலவாதமுகத்தில்வலிக்குஞ்சுரவாதம்
பேய்ச்சிமுலையேயமுதுண்ணும்பெருமாளாணைவலிபோமே (௨௯௫)

முழங்கால்வீங்கிக்கடுகடுத்துநொந்துமோதிததிரண்டுவேதனையாய்,வ
ழங்காதென்னநடைகட்டு வருத்தமிகவுந்தானுமுண்டாய்த், துளங்காவ
ணத்திற்காற்றெட்டித் தொல்லையிலையைத்து வைத்தெடுத்து, சளங்காதி
ருக்குஞ்செங்கல்லைக்காய்ச்சிக்கியாழந்தனிற்போடே (௨௯௬)

போட்டபிறகுவேச்சென்ன பூசினைத்துசென்றபின்பு
நாட்டம்பெறவேயக்கோது நன்றாய்வைத்துக்கட்டுவீரால்
தேட்டம்பெரியமூன்றுநாள் செய்யமருந்தைத்தான்விலக்கிற்
கூட்டம்பெரியமுழங்காலில்வாதங்குலைந்தேயோமேங்கண்டீரே. (௨௯௭)

கெண்டைகதித்துநோய்மிகுந்து கிழேமிதிக்கவொண்ணாமல்
பண்டேகுத்துவலியுமுண்டாம் பையத்திருகுகள்ளிகொம்பு
செண்டேவெதுப்பிச்சாறெடுத்து செய்யகெண்டைதனிற்பிடிக்க
கண்டேயோடுங்கெண்டைவாதங்கருதியுணர்த்தார்காதலித்தே (௨௯௮)

காலுங்கையும்வலியெடுத்து கைகால்சுருங்கக்கனக்கநொந்து
தோலுந்தளையும்படபடெனச் சுழியக்குளியவலியெடுத்து
ஞாலம்பெரியவலரியின்வேர் நல்லசங்கத்தாரியின்வேர்
கோலம்பெரியவசம்புள்ளிகொள்ளுஞ்சுக்குங்கூட்டீரே. (௨௯௯)

கூட்டியரைத்துநல்லெண்ணெய் குணமாமணக்கு யெண்ணெயுடன்
மீட்டுங்கலந்துவடித்தெடுத்து மேலும்பூசினைப்பீராய்த்
திட்டுமரணவாதமுடன் தீராநோய்கள்பலவாதங்
கோட்டுமூலையாயவிட்டோடுங் குணமாங்கண்டாய்கோதையரே (௩௱)

(வேறு.)

இடைதுடைகடுத்துநொந்து எழுந்துதானடக்கொண்ணாது
விடையிதுமிகுந்துகாட்டி மிக்ககால்திமிர்த்தேயேறும
திடமுடன்புற்றமண்ணுஞ் செய்யதோர்கறுப்புமண்ணும்
வடிவுறநண்டுதோண்டு மண்ணுஞ்சுண்ணம்புங்கூட்டே. (௩௱௧)

சொன்னதோர்கோழிமுட்டை வெள்ளையாய்கருக்கலந்து
உன்னுமாமெண்கசினெண்ணெயூற்றியேகொதிக்கவைத்து
முன்னமேதுடையிற்பூச முனைத்திடும்வாதமெல்லாந்
தின்னமாயுடலைவிட்டுத் திரும்பிடாதோடுந்தானே. (௩௱௨)

கொற்றான்கொழுந்துசிகுமட்டிவேர் கூறங்கழஞ்சுதில்லையிலை
சிற்றாமணக்குவிலையுடனே சேரவரைத்துக்காடியிலே
யுற்றபொழுதுவிடுவீரா லு - லில்வாதமெண்பதுமபோம்
மற்றேமருந்துவரவினை யறியமருந்துசொன்னேமே, (௨௱௨)

(வேறு-)

திப்பிலியுஞ்சிரகமுஞ்சமன்தாகச்
சிறந்தவெண்காயவுள்ளிவசம்புமஞ்சள்

சொர்ப்பமுள்ளிகடுக்காயுஞ் செல்லித்தான்றி
    தூலங்குமிவையொருநிறையாய்த்தூளதாக்கி
முற்புடலமுருங்கைநொச்சியாடாதோடை
    முடக்கொத்தான்மாவிலிங்குமுதிர்திராயும்
நற்புவேலிப்பருத்திதில்லைவேரெல்லாம
    நனைசகவோரளவாய்க் கொள்ளுவாயே. (௯௰௪)

(வேறு.)

கொள்ளுமுதற்பாதிதனைநெருப்பெனவேகாய்ச்சி
    கொண்டுவந்துமுன்வைத்து கூறியதூள்போட்டு
எள்ளளவுபுகையுட்போகாமல்மூடி
    யிரங்கவேவேப்பெண்ணெ யின்னங்கேளீர்
ஒள்ளியதோர்சரக்கெல்லாம்விட்டுவேது
    வுடம்பெல்லாம்வார்த்தபின்புவுணமையாக
உள்ளிருந்ததயிலமெல்லா முடம்பிற்பூச
    வுறுதியுள்ளகுளிர்வாதமொளிக்குங்காணே. (௯௰௫)

குப்பியுடன்சங்கிரண்டுவேளைமூன்று
    கொடியகாலவேலியுடன் வேதம்நாலு
ஒப்பரியவாகையிலையிலைகூட்டி
    யுதவியதோர்தும்பையுடன்கரந்தைகூட்டி
சொற்பெரியமட்டிகளுஞ் சூலமூன்றுந்
    தூக்குசலமிருதூணிநீரிற்காய்ச்சி
அப்பெரியபுகைதனிலேயிருக்கவாத
    மப்பாலுக்கப்பாலேயகன்றுபோமே. (௯௰௬)

(வாதத்துக்குவேது.)

(வேறு.)

வாதமடக்கிக்குறுந்தொட்டி மரவாதண்டைமாவிலிங்கு
சீதமடக்குஞ்சாரணையுஞ் சிறந்தமுருங்கையுயர்நொச்சி
போதலழற்றுங் கொடிவேலிபொருந்துநிம்பம்பொற்கொண்டை
சேதமடவாவொவ்வொன்று திரிகோபலமாய்க்கொள்ளுவதே. (௯௰௭)

கொண்டேயிடித்துக்கிடாமூமது
    கொதித்துவெந்தைந்திரண்டானல்
உண்டேயொன்றுவெண்ணெயுடன்
    நாதவிந்துநெய் நல்லெண்ணெய்
பண்டேயுள்ளவேப்பெண்ணெய்
    பருத்தபுங்கம்பலநூறு
தண்டாயோகவெண்ணெயுடன்
    சதிக்கவனாத்துகாய்ச்சிடவே. (௯௰௮)

(குளிர்வாதப்பிடிப்புக்குவேது.)

(வேறு.)

காச்சுக்கண்ணுய்சாதிலிங்கங்கனத்ததுருசுகெந்தகமும்
பேச்சாலுயர்ந்தவரிதாரம்பெரியகுரும்பைகுளவிந்தம்
மூச்சேயுற்றபெருங்காயமுதிர்ந்தவெளுத்தம்பிசுங்கார
மோச்சப்பெரியவுள்ளிசுக்குவுளுவாய்சமதகங்கூட்டே, (௯௱௯

கூட்டேகடுகுதிப்பிலியுங்கொடியவசம்பவாலுமுவை
ஆட்டங்காணுமுப்பிறெடுவரத்தைசாதிக்காய்சடிக்காய்
சாட்டில்பயில் ார்பாக்கரிசிகரியமிளகுஞ்சேங்கொட்டை
கூட்டியெரித்தவெண்ணெயுடகுறையும்வாதமாய்ந்திடுமே. (௯௱௰)

எண்ணியவாதத்துள்ளேயிதுவுங்குதிரைவலியெண்ணிற்
கண்ணிற்புருவங்கதிப்பதாங்கையங்காலுமொருபக்க
மெண்ணுதுரையுமிருந்துதள்ளுமிதுவேதிருசுவலியுண்டாம்
விண்ணைப்பார்த்துவிழிநிற்குமீளாதிதுவுந்திண்ணமிதே. (௯௱௰௧

(வாதத்திற்கெண்ணெய்.)

சுக்குமிளகுதிப்பிலியஞ்சோமனுப்புவெள்ளுள்ளி
தக்ககொந்தாளப்பருப்புசன்னவசம்புதான்கூட்டி
யொக்கத்தேசிப்பழச்சாற்றிலொன்றுயரைத்தஞ்சனவுண்டை
மிக்கக்குதிரைவலிதீரமீளுந்தேசிப்பழத்திலிடே, (௯௱௰௨)

(வேறு.)

கொள்ளுங்குதிரைவாலரிசிகொடியவாடாதோடைநோச்சி
முள்ளேயுள்ளக்குருவட்டுமுருங்கைமூலித்தூதுவளை
வெள்வேல்மிக்கசசாரணைவேர்மீறுதெனக்கொடுவேலி
யுள்ளேயெரித்துவேப்பெண்ணெயுதவக்குதிரைவலிபோமே. (௯௱௰௩)

(பிள்ளைபெற்றதாயார்க்கு.)

(வேறு,)

குத்துமேயடுத்தடுத்துக்குமுறியேங்கிடுநிமிர்ந்து
மெற்றவிரைத்துவுள்ளடங்கிவேறகும்விகற்பமிகவுண்டாம்
பற்றியின்றிவெளுர்தள்ளும்பசப்புடன்பல்லுமிகப்பூட்டும்
எற்றியபிறவீச்சென்றேயெண்ணலாமிதனைத்தானே, (௯௱௰௪)

(வேறு.)

அடுத்தடுத்துரைத்தாக்குத்தியதிகமாய்விரைத்துவேர்த்து
படுத்துநாக்கொதிங்கிப்பேசிப்பற்கள்தான்கூடிநெஞ்சு
அடிக்கடிசிறியங்கமழிவுடன்குவளைவீசித்
திடுக்கமாவுள்வீச்சென்றுதிறமுடன்செப்பலாமே. (௯௱௰௫)

மாலையிலுதரந்தனனில்மதிப்புடன்றிரண்டெழுந்து
ஆலையில்காபிதன்னிலப்படிகிடந்துநொந்து
நாலையடங்குமுதுகுதனில்நுகர்ந்தேபற்றிநோவுண்டால்
காலைப்பற்றியேயிருக்குங்கச்சூலைரவலியென்றறிவீரே. (௫௱௰௬

குதிரைவலியின்குணம்,)

(இதற்குஅஞ்சனம்)

(வேறு,)

இடித்தமஞ்சள்கடுகுள்ளிதேங்காயிந்துவேப்பெண்ணெய்காய்ச்சி
இடித்தகூந்தற்கிளிமொழிபெழுமுழுதுமிரண்டுகிளிகட்டி
கடித்தபல்லுந்தலைப்பிடரிகால்கைசந்துசடங்குத்த
பிடித்தசூரவலிசன்னிபிறவிச்சூழுவிதுபோமே. (௫௱௰௭)

மாடொடுதன்னைநன்றாய்வடியவேபொடித்துப்பின்னே
யோடதுதன்னிலிட்டுயுவட்புடன்வறுத்துக்கொண்டு
சூடுடன்கிளிகள்கட்டிசுளுசுளக்குத்துவீரா
யோடுமேவலிகழஞ்சுமோடுமென்றுரைத்தார்முன்னோர். (௫௱௰௮

(இதில்தயிலப்பிறவிச்சுகுணம்.)

(வேறு.)

பிள்ளைபெற்றதாயார்க்குப்பெருத்தசுரமுந்தலைவலியு
முள்ளுமுழலைதவனமுடனுதரமிரைப்புக்கழிச்சலுமாய்
மெள்ளத்தடுத்தகளைமூச்சும்விழியில்தெளிவுங்கேட்டிருக்குந்
துள்ளித்துடித்தேசுவாசகாசந்துலைக்குமுயிரைவதைத்திடுமே(௫௱௰௯)

அயமோசகமுமாதிரண்டுமரியசிரமதிற்பாதி
நயமாஞ்சுக்குமூக்கழஞ்சுநல்லகிராம்புமதிற்பாதி
செயமாம்பத்திரியதிற்பாதிசேர்த்துப்பொடித்துத்தேனிலுண்ண
பயமாஞ்சுவாசகாசம்போம்பாரில்முனிவர்பகர்ந்தாரே. (௫௱௨௰)

(உள்வீச்சுகுணம்.)

கச்சூரைவலிகுணம்,

(இதற்குகிளிகுத்தசுவாசகாசகுணம்,)

(வேறு.)

நத்தைச்சூரிபரிவாலிநாகப்பாம்புநாயுருவி
பத்துக்கோழிமுட்டைதனிற்பரிந்துதயிலந்தானெடுத்து
மற்றசன்னிமோகித்துவாக்குமறந்துகிடந்தவர்கள்
சத்தப்படவேயெழுந்திருப்பார்தப்பாதைந்துஞ்சத்தியமே, ௫௱௨௰௧

கருத்துறச்சன்னிதனைக்கசடறவறியவேண்டி
யுருத்திராட்சத்தைகோக்கியுரைத்துநாவதனிலூட்ட
திருத்தமாய்க்களுத்துண்டார்க்குத்திறமுள்ளசன்னியாகும்
பெருத்ததில்வெளும்பதாகிப்பின்னையதல்லவாமே, (௫௨௨)

குணங்குறிமிகுத்துத்தோன்றிக் குற்றமேகுறைந்துநின்றால்
இணங்குமந்திரமருந்தா லிவைகளாற்றீர்வதிண்ணம்
குணங்கொளாக்குற்றமேறிக் குணங்களேகுறைந்துநின்றால்
இணங்கிடாதகன்றுசீவனிறுதியாம்பேசலாமே. (௩௨௩)

குழியாமையிலின்பீலி குணமானவலம்புரிக்காய்
கழிவானபூனைகாட்டமுஞ் சிலந்திசாதிலிங்கமஞ்சள்
சுழிவானவசம்புவுள்ளி சுக்கேடெருமைக்கொம்புபொடி
பழுதாயிடித்துக்கம்பளியில்பரப்பித்திரியாய்ப்புகைபிடியே. (௩௨௪)

சமுத்திராப்பழமிலுப்பைக் கரும்புண்ணேக்குசுக்குடனே
அமர்ததியேபொடித்துநன்றாயதுகுழல்வைத்தேயூற்ற
இமுக்கென்வந்தசன்னித் தீருமேவலியாராய்ந்து
சமிக்கவேவந்தபேயுஞ் சாடியேயோடிப்போமே. (௩௨௫)

கண்ணீர்கலையிம்புருவத்திற் காதிற்செகிட்டிற்குத்துண்டாம்
பண்ணியப்பதிக்குமுகந்தன்னை பக்கம்பற்றியேதிருகும்
நண்ணிபப்பகருநீருதிர நாடுங்குணங்களிதுகண்டால்
எண்ணிச்சொல்லுமுகவாதமிட றுஞ்சன்னியிதுவாமே. (௩௨௬)

நத்தைச்சூரிநரிவிரட்டி நலமாத்துத்திவேப்பந்தோல்
தொத்துமுசுறுதுடைச்சாறு துலங்குநீலவேர்ப்பருத்தியுடன்
தத்தும்நல்லபாம்புகண்டந் தாக்குங்கோழிகுடலுடனே
வித்துமுதிர்ந்தவேப்பெண்ணெய் வேறேமருந்துவிளம்பக்கேள். ௩௨௭

கேளீரின்னம்வசம்புள்ளி இளருங்காயம்வாலுழுவை
கோழியிரத்தமரப்பொடி கொளளுஞ்சன்னிநாயகமுங்
காளிக்கம்பிபிசினுடனே கருஞ்சீரகமுந்தான் கூட்டி
தேனீரோரொன்றிருகழஞ்சு திறமாய்க்காச்சிவடிகொள்ளே. (௩௨௮)

தொட்டுப்பூசியுட்கொள்ளத் துலங்குந்தமலிர்றூபமிட
இட்டேயடையுங்காதுதனி லிசையக்குழிற்றுள்ளிவிட
மட்டுப்படாதமரணவலி மருவுஞ்செவிக்கண்வாய்க்கோணங்
முட்டுப்படவேமுறிந்தோடு மூண்டகபாலசன்னியமே. (௩௨௯)

காலோடுவயிற்றிலுற்றுக் கரமொடுகண்கள்தானுந்
சாலவேசிரசினின்று தானுடலெதிர்த்துக்காட்டு
மேலதுகுத்திநொந்து மின்மினிபெரியுங்கண்கள்
ஆலவேல்விழியினுளேயறிந்துகொள்பித்தந்தானே. (௩௩௰)

கிட்டகல்லுகாந்தமுடன் கேளுஞ்சுக்குமிளகுடனே
திட்டமானவமுக்குருவுந்திறமாய்ப்பொடித்துச்சர்க்கரையிற்
கொட்டித்தின்னபித்தமது குடிபோமென்றார்குறுமுனிவர்
திட்டமாகநலமென்று திடமாய்க்கொள்ளுமானிடரே. (௩௩௧)

பித்தமேசிரசிலுற்றாற்பின்வருங்குணங்கள்கேளீர்
உற்றதோர்நயனந்தானுமொழிபதுமாறிநிற்கும்
சுற்றிடுநாவும்பல்லுங்கருகிடுஞ்சரீரந்தானும்
நித்திரைதானும்வாராநெட்டிகொட்டாவியாமே. (௩௩௨

நெல்லிக்காய்மிளகுதானுநெற்றிகருமஞ்சள்கோட்டம்
நல்லசந்தம்புடல்மதுரமரு கையான்பாலிளநீரும்
நல்லவெண்ணெயதில்விட்டுநன்றாய்க்காய்ச்சிமுழுகிவரத்
தொல்லைபித்தமபோமென்றுசுகமாய்ச்சொன்னார்மெய்க்கால்முனியே. ௩௩௩

பித்தஞ்சுழற்றிகிறுகிறுத்துபெருக்கடக்கத்துயராகி
யொத்தவுணடையுடலூற்றுவுயர்ந்தபாக்கிற்களிச்சிட்டு
சிந்தத்தினீர்சிறுபயறுஞ்சீரமூடனேசீனியுமாய்
மற்றப்பசும்பால்நெற்பொரியுமளவாய்க்காய்ச்சிக்கொள்ளுவதே. (௩௩௪)

மிக்கமிளகுநேர்வாளம்மிகுவாமேழமுண்டாகப்
பக்கவளவேதேசிக்காய்பழத்தி சாறுதனில்வந்து
ஒக்கக்கூட்டியரைத்துண்டையுருட்டிச்சூரிக்காயளவு
நக்கத்தேசிப்பழச்சாற்றில்நன்றாய்ச்சுழற்றும்பித்தமதே (௩௩௫)

பித்தமுதலாஞ்சுரவீக்கம்பெருக்கவாய்வுசலமருப்பு
சுத்தமுறவேவிரோசனமாய்ச்சுகமாரமூட்டுக்களைதீர்க்கு
மெத்தச்சுடவேவென்னீர்கொள்விரோசிப்பாகுஞ்சத்திசெயு
மெத்தப்புரையெனுமிடத்தில்மிகுந்தபசும்பாற்கஞ்சிகொடே. (௩௩௬)

தலையும்வலித்துவுடலுலர்ந்துதாதுங்கெட்டுத்துயருண்டாய்
அலையுந்திரியவொட்டாதுவடுத்துமிகவேகிறுகிறுக்கு
மூலையுமிகவேமனமடிக்குமோடிடங்கும்வரட்சிபித்தங்
கலைகண்மிகவேகற்றுணர்ந்துகண்டமுனிவர்கழறினரே, (௩௩௭)

ஸ்ரீதேவிச்சாறதுகுறுணிசேர்பால்நாழிநெய்நாழி
மாதுமல்லிசதகுப்பைமதுரங்கோட்டஞ்செண்பகப்பூ
சாதிச்சக்கநற்சீரஞ்சாதிகடகமோர்கழஞ்சு
மாதேகாய்ச்சிகொடுத்தாக்கால்மாறும்வரட்சிபித்தமதே, (௩௩௮)

(வேறு,)

முகமும்வீங்கிக்கண்வெளுத்துமூச்சுநடக்கமுட்டதுவா
யகமுந்துடித்துநாவரண்டுவனுகுமுதிரந்தான்வெளுக்கு
மிகமேவபசனஞ்செல்லாதுவெளுப்பபேயேறுமேனியெல்லாஞ்
செகமேமர்சொன்னாற்காமாலைசெய்யுங்குணங்களிதுவாமே. (௩௩௯)

காந்தம்பலமாய்க்கொண்டுவந்து கையாந்தகரைச்சாற்றரைத்து
ஈந்தசற்றுழஞ்சாற்றிலியல்பாய்மூன்றுநாளரைத்து
வார்ந்துபொடிக்கத்திரிகடுகுவாய்ப்பாய்த்தின்னவல்லீராய்
சேர்ந்தபாண்டுகாமாலைசெறிபாக்குணமுந்திருமதே. (௩௪௰)

கைகாலெரிப்பக்கண்வெளுறல் காமந்தாதுகெட்டதுவு
மைபார்குழலாள்மாதவிடை மாறல்வயிறுபொருமல்வலி
பையவமர்ந்தேயேகிவிடும் பரிவாய்முனிவர்பகர்ந்தபடி
செப்புங்காந்தபற்பமெனத் தெளிந்துசெய்வீர்செகத்தோரே (௩௪௧)

கையாந்தகரையாமணக்குகற்றாழையும் பேய்புடல்கொப்பை
வெய்யசிந்திகடுந்தொட்டி வெட்பாலைநீர்முள்ளிவில்வம்
தையல்வளைபமால்விழுது தாழைபுளியிலைநெல்லிசமன்
பையவெண்ணெய்ப்பாலிளநீர் பருவாய்க்கூட்டுமருந்துகேள் (௩௪௨)

(வேறு)

நெல்லிக்காயிருசிரநிம்பத்தோலுந்திரிகடுகு
நல்லவேலமதுரமதுதான்றிகோஷ்டமிருவேலி
வல்லமுந்திரிவிலாமிச்சம் வெங்கமோதங்கழஞ்சிரண்டு
கல்லிவரைத்துப்பதங்கண்டேகாய்ச்சிமுழுகப்பாண்டதுபோம் (௩௪௩)

(வேறு)

இருமலெப்பிளைப்புநெஞ்சி லிடிப்புடன்றுடிப்புமுண்டாம்
பெருகவேநடக்கும்போது பேச்சுமுட்டதுவேயாகும்
வெருவரக்கிறுகிறுக்கு மேனியும்வெளிப்பேயாகும்
பெருகிடும்பித்தபாண்டு வென்னுமிப்பிணியதாமே. (௩௪௪)

(வேறு)

நெல்லிப்பூசனிசதாவேலி நெய்பாலிளநீர்சரிசரியாய்ச்
சொல்லுங்கோட்டந்திரிகடுகு தூய்யசிரய்கச்சோலம்
வல்லியேலந்திரிபலைய மதுரமோரொன்றிருகழஞ்சு
மெள்ளக்கய்ச்சிப்பதமுறல் மேமேலேபோடமருந்துகேள் (௩௪௫)

கேளிர்சர்க்கரைமுந்திரிகேகிளரும்பலமேயோரொன்று
தாழப்பாண்டந்தனிலிட்டுந் தயவாய்வடித்துக்கொடுத்தாக்கால்
வீழும்வீக்கம்பெரும்பாடுவிக்கலிரத்தபித்தம்போம்
மளாப்பாண்டுமாய்ந்துபோ வல்லீர்நல்லசெய்யிதுவே. (௩௪௬)

பிரமிகரிப்பான்கற்றாழை பின்தேசிக்காய்பாலிளநீர்
உரமாமெண்ணெயிருநாழியுகந்தசந்தமிருகையும்
அரத்தைகோட்டநன்னாரியசுவாமிலாமிச்சிறுவேலி
தரமாய்க்காச்சித்தேய்ப்பிரால்தலைநோய்ப்பாண்டுந்தங்காதே. (௩௪௭)

(வேறு.)

வெற்றிமேல்வெத்துப்பித்த மயங்கிடுஞ்சோபமாக்கும்
பற்றியேதலைநோயுண்டாம் பகலிலையிரவிற்காயு
முற்றதோர்தேகந்தானுமொள்ளிதாய்மிகவுமவற்று
முற்றியேயனலேயீது முழுதுமுக்காய்ச்சலாமே. (௩௪௮)

(கலிவிருத்தம்.)

ஆவின்பாலுடனஃபுறசீனியு
மேவுஞ்சமுத்திராவேதியுமாகவே
தாவுநாற்பதுநாளதுதான்குடி
பாவுமுட்சுரமோடிப்பறக்குமே. (௱௪௯)

(வேறு.)

பாலுடனிளநீரோடு பாசிசிரசெய்ம்பூ
ஆலுடன்றண்ணீர்விட்டானதினைப்பங்கூட்டிக்கொண்டு
ஆலுமூவேலிசந்தமச்சமுங் கோட்டம்பச்சை
சாலவேமதுரமரோணி சமன்கூட்டிகாய்ச்சிநக்கே. (௱௫௰)

எண்ணெய்ப்பாலும்பிளநீரு மிதமொருகூட்டிநன்றாய்
வண்ணமாஞ்சந்தங்கோஷ்டமதுரமுமரைத்துச்சேர்த்துத்
திண்ணமாய்முழுகிவந்தாற் றியங்கிடுமுட்சுரங்கள்
உண்மையாயவிட்டுப்போமென்றுரைத்தனர்முனிவர்தானே. (௱௫௧)

பரபரத்துடல்கனத்து பரந்துகடித்திரைத்து
கரகரத்துளைந்துநெஞ்சுகனப்புடனிளைப்புமூர்ச்சுந்
சரசரச்சொரிந்திமிற்றுந் தங்குநீர்ச்செறுப்புமேவோப்பும்
வரவரவிருமல்வந்து வளர்த்தம்பித்தமாமே. (௱௫௨)

(வேறு.)

வெற்றிலைச்சார்முடக்கொத்தான்கையான்சாரும்
வேளைச்சாரபேய்ப்புடலிநெல்லிதேசிக்
கற்றாழைபவிரிச்சார்காடியெண்ணெய்
கணக்காகவகைபொன்றுபடிதானென்று
முத்தமதுரங்கடுக்காய்ச்சமனதாக
முந்திரிச்சாரணைமிளகாத்தைசுக்கு
சித்திரப்பாலாடையிருசீரகந்தான்
சேர்த்திடுவாய்வகைக்கிரண்டுகழஞ்சுகூட்டே. (௱௫௩)

(வேறு.)

முற்படமருதுதன்னை முழுப்படவெடுத்திடித்து
தற்பரைவல்வாரைச்சார் தனிலரைத்ததிலேசேர்ந்து
செப்பமாய்க்காய்த்துத்தேய்த்தாற்சிரசில்நோயிரத்தம்பித்த
முற்படும்வியாதியெல்லா மொழிந்துபோமெனவுரைத்தார். (௱௫௪)

(வேறு.)

இந்தயெண்ணெயுரியிலெலுமிச்சநெல்லி
முசுமுசுக்கையிருநாழிநீரதனிற்சோத்து
வெந்தயஞ்சுக்கிந்துப்புகடுக்காயேலம்
வெண்காரமிளகிவைகழஞ்சோரொன்று

செங்கெங்கிலியநீரிலரைத்துக்கொண்டு
சேர்த்திதனைக்காய்ச்சியேகுடித்தாக்கால்
வந்தரத்தபித்தமொடுவாய்வுமூல
மற்றுமுள்ளவியாதிகளுமாறுந்தானே. (௧௫௫)

ஈதலாலுடலந்தண்ணீ ராமெனவிரைந்துகாட்டும்
வாதுறமுகம்பெருக்கு மலசலங்கழிந்தென்னாளும்
போதமும்விரும்பிடாது புந்தியில்வலியுந்தோன்றுந்
தூதனார்சொன்னரீது துலங்கியசேத்மந்தானே, (௧௫௬)

இவ்வகைக்கிணங்கிநிற்த மிருமியசேத்மமெட்டீங்
தவ்வியகாசத்தோடுதங்கியசேத்மமெட்டுங்
ஒவ்வியபித்தத்தோடு வுன்னியசேத்மமிரண்டுங்
கவ்வியவாதத்தோடு கலந்திடுமிரண்டதாமே, (௧௫௭)

இப்படிச்சேத்துமங்களிருப துநிலையிலானர்
தப்பிடுமுடலுயிர்க்குந் தவறிடாமருந்துசொல்வோ
மப்பிருகாரங்கிட்டமாக்கொடிகாந்தமொன்றுஞ்
செப்பிடுதேசநீற்றிற் சேர்த்தரைபுடந்தானென்றே. (௧௫௮)

தீப்புடமிட்டெடுத்துத்திரிகடுகுதிரிபலாதி
வாய்ப்புடன்சமனாய்ச்சேர்த்துவண்மையாயறிந்தெடுத்து
ஆர்ப்புடன்கையானீரிற் சாமமைந்தரைத்தருந்த
சீப்படுஞ்சேத்மரோகந் திரிதோஷந்தீருமென்றே. (௧௫௯)

ஆனதிலதிகமானலைந்ததுசுரங்களுண்டாந்
தானதுவிறுதிகண்டுதன்னுயிர்ப்பயங்களாலு
மேனியில்முரிவினாலு மினனார்மேய்மயிலினாலுங்
கானலோபீடையாலுங் கற்பிதம்பிழைக்கையாலும். (௧௬௦)

இதனுடன்மருந்துமேறவினைவயில்மூச்சுரங்கள்வந்தால்
சதுரமாய்நினைவுநாசி சங்கையாயக்கரிந்துகாட்டும்
பதித்தபார்வையுங்கலங்கிப் படைகள்போற்குத்திநோடு
முதித்தமூச்சுவாங்கவுண்டா மூபர்ந்தசரீரம்விளையலுண்டோ. (௧௬௧)

(வேறு.)

வாதசுரத்தின்குணங்கேளீர் மயிருஞ்சிலிர்த்துத்தலைநொந்து
போதநடுக்கல்கீழ்முழுதும் பொருத்துங்காலுங்கையுளைவாங்
காதல்பெருத்துத்தண்ணீரிற் கருதுந்தலையோடுடன்வலிக்கும்
வீதிபெருத்தமலசலமு மிகவுங்கடுக்குஞ்செருக்குமதே, (௧௬௨)

நடுக்கித்தியக்கிமயிர்கூச்சாம் நடுவுந்தலையுமிகநொந்து
கடுக்குங்கைகால்முரிநிமிர்ந்துகண்ணுந்தோளுமிகக்கருகித்

திடுக்கிட்டுச்சுடுவாய்நீர்வற்றிசெப்பவரியமேற்சுவாசந்
துடுக்கெனவந்தவாதசுரஞ்சொன்னார்முனிவரிதுதானே.

வாதசுரத்தின்குணங்கேளீர்வந்துகுளிர்தல்பயப்படுத்தல்
சிதமிகுந்துதுரைக்கறித்தல் செறிந்தரோமஞ்சிலிர்ப்பெறிதல்
சேதங்கண்டுதலைநோவுந்திருந்துகொப்புள்சலங்கடுத்தல்
பாதமூளைத்துநீர்குடிப்பாம்பலகால்வெதும்பிவிடாதிதுவே, (௫௪)

விடாதேகைகால்கீழ்முதுகுமிக்கவிரண்டுவிலாப்புறமுந்
தொடாதேநோவாய்குடலதுவுந் தொடுகிற்புண்போல்நோவுண்டாங்
கொடாதேகஞ்சியேழுதினங் கொடுத்தாலதிகசுரமுண்டாய்
அடாதேமிகவுமருண்டலி லடுக்கும்வாதசுரமாமே, (௫௫)

ஆமேயேழுநாளளவுமசனந்தொடாதேபட்டிணியராய்
தோமேயந்தகஞ்சிதண்ணீர் சொன்னபடியேதானதுவும்
ஆமேயேழுநாட்கழித்தா லடர்ந்தேவாதசுரந்தானும்
போமேயேழுநாட்கழித்தாற் பொருந்துமசனங் கொடுப்பதுவே

ஆமேவாதசுரந்தனக்கு மமுதுசிறுகாஞ்சோரிமுத்த
மாமேசுக்கோடொவ்வொன்று மருளாய்மூன்றுகழஞ்சாக
ஆமேதண்ணீர்நால்நாழி யதனைக்குறுக்கியுழக்காக்கி
போமேயருந்தவாதசுரம் போகுமென்றார்முனிவல்லோர். (௫௭)

(வேறு,)

ஒருவிடங்குருங்காரி மொருவிடமுடலந்தன்னில்
வருமொருபுறத்திலிப்பேற்தமதிகமாய்க்காய்ந்திருக்கும்
பெருகுமிப்படிபல்லாதுபின்னையுமொன்றுசொல்வேன்
வெருவியோர்புறமேயேறுமவிஷசுரமென்னலாமே. (௫௮)

(வேறு.)

மெய்யில்விஷமாஞ்சுரம்வந்தால் வீட்குவெதும்புமிகவுங்கால்
கையும்வெதுப்புமுடலெல்லாங்கனத்தேயிருக்குமுழலையுமாம்
பையவந்தேபார்ப்பவரைப் பயந்தேகட்டிக்கொள்ளெண்ணு
மையோபிழையோநானென்றுமதிகமாகுஞ்சுரந்தானே. (௫௯)

கலிவிருத்தம்

ஒன்றுமூன்றிலிநாலுமாறிலு
மென்றுமேழிலுமெட்டிலும்பத்திலும
நின்றுநிலவரமாகவேதானவர்
வென்றுசெய்யும்விஷசுரமென்னவே. (௬௰)

(வேறு,)

சுடங்கவேம்புபடக்முத்தஞ் சந்தமிலாமிச்சிறுவேலி
யிடுமேகடுக்காய்வேர்க்கொம்பு விரண்டுநாழிநீருழக்காய்
அடங்குஞ்சுரமுநீர்தாகமிரணம்போகுமுமையானே
தடங்கண்மாதேதயங்காதே தானேசுரம்போமென்றனரே. (௬௧)

(பித்தசுரத் தின்குணம்.)

பித்தசுரத்தின்குணங்கேளீர் பிதற்றும்வெதுப்புமுடலழத்து
மெத்தத்தண்ணீர்தாகிக்கு மிச்கவாய்க்கைநாவுலரு
மூதிரச்சிறுநீர்மலந்தானு மொளிசேர்நயனஞ்சிவந்திருக்குஞ்
சுத்தியடங்குமுகங்கறுக்குஞ் சொல்வால்மிடறுபுண்ணாமே. (௧௭௨)

பித்தசுரத்தின்குணங்கேளீர் பெருகத்தண்ணீரதுவாங்கு
மூத்துக்காசுவாசின்ரே லுமக்காய்காய்ச்சியதுவற்றி
மெத்தப்பருகுமிதுதானும்வேண்டும்போதுகொள்வீரால்
பித்தசுரமும்வயிற்றழிவுபின்னிட்டோடுங்கண்டீரே (௧௭௩)

பித்தசுரமும்பிலஞ்செய்யும் பெருக்கவயிறுமிளகிப்போ
மெத்தநூறுமலந்தானு மேவிக்குளிரும்படவேண்டு
மொத்தவன்னதான்வேண்டமுகந்துதண்ணீர் மிகப்பெருகுஞ்
சுத்தமாகவிதுதானுஞ் சொல்லும்பித்தசுரமெண்ணே. (௧௭௪)

அறியோமென்றார்சிந்திசுக்கு வானசேவகனிருவேலி
யுறுதியானவிலலாமிச்சு போரோன்லதுவுமுக்கழஞ்சு
அறியோநாமென்றெண்ணுதேயறிவாய்த்தகர்த்தொட்டொன்றாக்கி
பொறியாய்த்தூவுதிப்பிலியைப் பொடித்திட்டருந்தச்சுரம் போமே

(வேறு.)

வஞ்சமிக்கண்ணும்பல்லும் வாயுடன்சலமுமெய்யுங்
கஞ்சணித்திருக்கும்வாயுங் கசக்குநீர்வாங்கும்போது
அஞ்சவெரித்தேயுடல்வெதும்பு மப்பால்மயிர்கூச்சமுமாய்
மிஞ்சமலமுமிகக்கருகு மேவும்பித்தகரந்தானே. (௧௭௬)

போமேகடுக்காய்தான்றிநெல்லி புகலுந்தாமரையிலவங்கம்
ஆமேகொன்றைத்தோலார்கழஞ்சு வரியமற்றத்திருசழஞ்சு
நாமேதகர்த்திட்டிருநாழி நன்னீர்வெந்திட்டுமுக்காய்ச்சி
தாமேதிப்பிலிதூவியுண்ணத் தங்கசுரமுந்தங்காதே. (௧௭௭)

கையைக்கொட்டிப்பாடுவதுங் கண்ணிமையாலொளிப்பதுவும்
மெய்யைமுழுதும்வலிப்பதுவும் வேண்டாதெல்லாமுரைப்பதுவும்
பையச்சிறுத்துநொடிப்பதுவும்பகர்ந்தேவாக்குப்பகருவது
மையப்பொருந்துங்கண்மடவாய் வாதபித்தசுரந்தானே. (௧௭௮)

(வேறு.)

திரிகடுகுதிரிபலாதி செண்பகமேலவங்கம்
மறுபடிநாகப்பூவு வதரமுங்கோஷ்டம்வில்வம்
நரியாஎன்னுரிசிந்தி நாவிரணமொன்றாய்க்காய்ச்சி
அரிவெட்டுப்பொழுதருந்த வாதபித்தசுரம்போமே. (௧௭௯)

ஏலப்பொடி-சுக்கு-சீரகம்-ஏலம்-நெல்லிப்பருப்பு
இதுசரிவறுத்துப்பொடித்துக்கொஞ்சஞ்சீனி
மேற்பொடியிட்டுக் கொடுக்கவும்.

(வேறு.)

ஆகாதவுண்டியெல்லா மாசரித்தடைத்துவிம்மி
போகாதவெறுப்புத்தோன்றும் புத்தியைமயக்கும்போத
பாகாருங்மொழியினளே பகர்ந்திடப்பரிந்துகேளாய்
சோகமேமீறுஞ்சேத்ம சுரமெனச்சொல்லலாமே, (௩௱௮௰)

மூக்குநீர்வெள்ளோகூறப் மோடுமேசிலிர்ப்புண்டாகும்
தேக்கிடும்வாய்நீர்தானுந் தித்திப்புகுளிருமுண்டாம்
பார்க்கிறபோதுகண்ணும் பருந்துடல்காய்ச்சலுண்டாம் (௩௱௮௧)
தீக்குணப்போலெரிக்குஞ் சேத்துமசுரமிதெண்ணே.

(வேறு.)

அன்னமேசிலேத்துமத்துக் கடையாளமுடம்புவேர்க்கு
முன்னியசிறுநீர்தானு முண்மையாயுடந்துவீழு
மன்னியதேகந்தானு மயக்கமாயிடுக்குமென்க
பன்னியசேத்துமத்தின் பயனிதுவறிந்துகொள்ளே. (௩௱௮௨)

(வேறு.)

மங்கைதாமரையுமல்லி மதூரங்கழுநீர்மஞ்சிட்கு
நங்கேபனையநன்னாரி நாறுமிலுப்பைப்பூவுடனே
சிங்காதோரொன்றிருகழஞ்சு சேரக்காய்ச்சியெட்டொன்று
யங்கேதிப்பிலிதூள்தூவி யருந்தச்சுரமும்பாழாமே. (௩௱௮௩)

ஆமேசுரத்தின்குணங்கேளீ ரதிகமாகவெதும்பாமல்
சாமந்தோறும்வெதும்பிக்கூந் தனியேயுறக்கந்தானுண்டான்
சேமமாகவுடம்புடன்று சிறியிருக்கும்பசியில்லை
நாமந்தளருமுடலோயு நடுங்கியிருக்குமதுவாமே. (௩௱௮௪)

ஆமேநெல்லிக்கடுக்காயு மரியவீழியிருவேலி
தாமேநல்லவிலாமிச்சஞ் சாற்றுந்தாமரையின்கிழங்கு
ஆமோரொன்றறுகழஞ்சு மானநீரையெட்டொன்றாய்
வேமெவெந்துகுடிப்பீரால் விளையும்வாராவிதிப்படியே. (௩௱௮௫)

(வேறு,)

பெருகியசேத்மத்தோடே பிணங்கியவாதம்வந்தால்
கருதியசென்னிவாதச் சுரமெனக்காணலாகும்
நிருதியேனையுங்காலு நெஞ்சுநோகுமென்க
மருவியவயிறுதானும் வகைபடக்கழியுமென்றே. (௩௱௮௬)

(வேறு.)

பங்கம்பாளைவேர்சுக்கு பருத்தமுத்தக்காசுடனே
வங்கஞ்செறியுமகில்வெட்டி வளவாய்க்காய்ச்சியதுபருகில்
பொங்கிக்கழியுஞ்சுரமெல்லாம் பொல்லாநாற்றமதுவிட்டு
சங்கைபட்டாமலதுமீளுஞ் தப்பாதிதுவுஞ்சத்தியமே (௩௱௮௭)

(வேறு,)

பிந்தமுஞ்சேத்மந்தானும் பிணங்கியேகூடுமாகிற்
சித்தமாயுடல்குளிர்ந்து சேர்ந்திடுமிருமல்வந்து
மெத்தனவிரும்பும்பின்னே வேர்த்திடுமுழங்கால்கண்ணும்
நித்தலும்வெளுத்திருக்கும் நெறியிதுகூறினோமே (௩௮௮)

(வேறு.)

அத்திப்பட்டைதானெட்டு வடுத்தவரமைப்பழங்கூட்டி
பொத்திப்பிடித்துத்தான்பிழிந்து புகழுஞ்சாறுவதுகொண்டு
பித்தசேத்மவயிறழிவுஞ் சுரமும்பேணிமிகநன்றாகும்
அத்தனுண்ணையுண்மையிது வன்பாய்ப்பாருங்கண்டீரே. (௩௮௯)

அக்கிசுரத்தின்குணங்கேளீ ரழலும்வெதும்புங்கண்சிதறுஞ்
சத்தியெடுக்குந்தலைநோவாஞ் சந்துதோறுநோவுண்டாம்
வற்றியிருக்கும்வயிறெரியு மரணமிவர்க்குத்தப்பாதென்
றுத்தமாகப்பொதியைமலைமுனிவருரைத்தாருண்மையிதே, (௩௯௦)

இந்தவஸ்திசுரந்தனக்கு வியல்பாய்க்குடிநீர்தனைக்கேளாய்
ஆந்தத்திரிவேலந்தோலா ஞணசந்தமிருவேலி
வந்தப்பயறுகடுக்காயு மதுரங்கொத்தமல்லிசுக்கு
முந்தக்காய்ச்சிக்கொள்வீரால் முதிர்ந்தவஸ்திசுரம்போமே. (௩௯௧)

எந்தசுரத்தில்வலமடைத்தா லிதுமாய்மலம்போம்வகைகேளீர்
அந்தப்பயறுங்கடுக்காயு மதுரங்கொத்தமல்லிசுக்கு
முந்தக்காய்ச்சியெட்டொன்றாய்முடுக்காய்க்கொடுக்கவல்லீரால்
வந்தசுரம்போய்வலமடைப்பு மறுக்காதென்றார்மாமுனியே. (௩௯௨)

கலிவிருத்தம்.

வேப்பமீர்க்குடன் வெந்துநீர்குடி
நாப்பதேறிக்குளிரது நாசமாந்
தேப்பெறிச்சுரந்தீரவது திண்ணமே
யாப்பரனுற்ற வாணையதாகுமே. (௩௯௩)

(வேறு,)

ஒன்பதின்மேற் சுரந்தீகச்சீச்திமுத்த
முயர்ந்தசிறுதேக்குகாஞ்சோரிசுக்கு
முன்புநிலவேம்புபற்படகந்திபபிலி
மூங்கில்சிறுவழுதலைசெங்கருநீர்கோஷ்ட
மின்பமிதுநுண்ணிடையாய் கியாழமிட்டு
விதிலேதிப்பிலிதூள்மேலிட்டருந்தி
அன்புபெறுஞ்சுரமென்னப்பட்டதெல்லா
மாறல்பழசுரங்கெட்டுமாறிப்போமே. (௩௯௪)

(வேறு.)

காந்தக்கல்லுவரிதாரங் கனத்தவெள்ளைப்பாஷாணம்
நாந்தநாரிகெந்தகமும் நவச்சாரத்தோடொவ்வொன்று
ஆய்ந்துசுத்தியதுசெய் தவளவேகொள்ளுநேர்வாளஞ்
சார்ந்தநொச்சிச்சாறரைத்து தயவாயுண்டைமிளகளவாய்க்
காய்ந்தசுரங்களனைவதீருங்கருணைமுனிவர்கருதியதே, (௩௬௫)

மஞ்சள்கவுரியெலிமருந்துமனோசிலைதுத்தமரிதாரம்
பஞ்சநீலிச்சாறரைத்துப் பயர்போலுண்டைதனைச்சேர்த்து
இஞ்சிமிளகுதனிற்கொள்ள எல்லாச்சுரமும்பாழாகு
மிஞ்சியேறுங்குடகரியு மூன்றுஞ்சூலமாய்ந்திடுமே. (௩௬௬)

துத்தங்கவுரியோரொன்று துய்யசந்திரண்டதுவாம்
வெற்றிலையின்சார்தனிலரைத்து மிகுந்தகுன்றிப்பிரமாணம்
பற்றியேறுஞ்சுரந்தனக்குப்பருகவென்னீர்தனிற்றீம்
சத்திகட்டுசுரங்களெல்லாந்தணியுமென்றார்தவமுனியே (௩௬௭)

(கலிவெண்பா,)

ஓரெண்ணெய்க்குநன்னாரியுற்றமுத்தக்காசும்
நேருங்குருந்தொட்டிலாமிச்சு-யாரும்
அரத்தைசந்தனஞ்சுக்கு வதிமதுரங்கோஷ்ட
முரத்தைகோரோசினையமிந்துப்பு-பெத்த
பெருங்குரும்பைபொன்மெழுகுபேராங்கடுகு
தருந்தேவதாரங்கடல்நுரையு நெருங்கு
மரமஞ்கள்திப்பிலியும் வாள்முசுறுமுட்டை
தரம்பெறவேநல்லெண்ணெய்நாழி-நலங்கழஞ்சு
சேரமுக்கழஞ்சு சேர்த்தரையாவினுட
மோர்நாழிகூட்டிமுதிராமல்-நேர்பதத்தில்
வடித்திறக்கிப்பாங்குடனே வாகாய்க்கியாழமதை
விடுவிடுத்ததிலெழுந்தவிஷசுரம்போய்க்-கடுத்தெழுந்த
தீதரசுமுள்ளே தீயவிஷசுரமு
மோதிவருமூளவெக்கையுட்டிணமுமோதியே
யத்தியிலேயாப்த்தசுரமத்தனையும்விட்டேகு
முற்றதிவைசொன்னாருகந்து. (௩௬௮)

விருவியவேர்சமூலம் விஷ்ணுகிராந்தி
வெருமதோர்சிற்றமுட்டிபேராமுட்டி-தருவான
கூவிளஞ்சாரணைவேருங் கூட்டியிவைபொன்றாய்
மேவுந்தண்ணீர்பதக்பதக்கு விட்டதனைத்-தீவிட்டு

எட்டொன்றாய்க்காய்ச்சியிருநாழிவெண்ணெய்தனை
விட்டதிலேகர்க்கம்விரைந்துரைக்கில் மட்டறவே

நன்றாரிலாமிச்சநாவலிருவேலி
முன்னேயமுக்கரு,முத்தகாசு-பின்னையுமுன்

காயத்தினோடுகடுசரத்தைப்பேரரத்தை
காரமிலவங்கங்கச்சோலம்-வீரமுள்ள

நாகட்பூநெல்லிநல்லேலந்தான்றிக்காய்
வேகம்வசவாசிவிடையமுடன்-வாகாகாய்ப்

பச்சிலையுமோமம்பருவசம்புதிரிகடுகு
பச்சைமரமஞ்சள்பருங்கோஷ்ட-மிச்சையுடன்

சாதிக்காய்தேவதாரமதிமதுரம்
வாதிக்குங்கல்மதமுவஞ்சிட்டி ஈதொக்க

சந்தமகிலுந்தானிவைகளோரொன்று
முந்தவிருகழஞ்சுமுதன்மையாய்ச்-சிந்தையுறக்

கூட்டியரைத்துக்குலாவியேயைந்துநாள்
நாட்டமுறவடித்துநன்றாக-வீட்டமுடன்

பூசிவிடுமற்றும்புதைந்தசுரஞ்சீதசுரம்
வீசியேவிட்டுப்போம்விஷசுரமும்-பேசியதோர்

ஒண்டிநின்றநாள்மாறலுயர்ந்தமூன்றும்மாறல்
கண்டிதத்திற்சுரங்காணாது-ஒண்டொடியே

எல்லாச்சுரமும்போமிதயங்குளிர்ந்தேறும்
நல்லோர்க்கிதுசொன்னோநாம், (௩௱௩)

(வேறு.)

திரிபலைமல்லுவங்கந்தேர்தான்வித்தேயுலர்ந்து
திரிகடுகுசிவதைநாகமிருசீரங்கிரியரத்தை
மரிதானகடுகுரோணியமுக்குறாமதுரந்தாரங்
குறியுடன்விடையங்கூட்டிக்கொண்டிடச்சுரங்கள்போமே, (௩௱௪)

(வேறு.)

மெய்யேநடுக்குந்தலைவலிக்குமேனிதளருங்கண்வெளுக்கும்
பொய்யேயுரைக்குங்கிறுகிறுக்கும்புள்ளிகனற்போற்பொரிபறக்குங்
கைகாலயர்ந்துதள்ளிவிடுங்கண்ணிமுக்குஞ்சன்னிகட்டு
மையாமிகவும்வாய்வெருவுமறிவீர்பித்தரோகமிதே. (சா௧)

கண்ணுமுகம்பல்மலநீருங்கைகாலுங்கறுத்திருக்கு
மெண்ணுந்துடிபோல்நெஞ்சிடிக்குமீரற்குலைமேற்படபடக்கு
மெண்ணில்நடக்கில்கிறுகிறுக்கும்வலைபோல்விழியுந்தெரியாதா
மெண்ணிச்சொல்லுமிக்குணங்களிதுவும்பித்தமென்றறியே. (சா௨)

(வேறு)

விளைந்திடும்பித்ததோஷம்வெதும்பிகாவரண்டுகொள்ளுந்
தளர்ந்துகணசுருணடிருண்டுதலைபதுகிறுகிறென்னுஞ்
சுழன்றிடும்நீர்சிவந்துசுறுக்கெனக்கடுத்துவீழும்
வளர்ந்திடுமுடலுமங்கிமஞ்சணித்திருக்குமென்றே. (௨௱௩)

(வேறு,)

வாய்நீர்சுழற்றும்வெயில்கண்டால்வளருமுடலிலெரிப்பெடுக்குந்
தானேசிலகால்தலைசுழற்றுந்தரையில்நடந்தால்கிறுகிறுக்குந்
தேனேமஞ்சள்குளித்தவர்போற்றேசமுழுதுமண்ணிறமா
மானேசெங்கமாரியிதுமஞ்சட்பித்தநிறமாமே, (௨௱௪)

(வேறு.)

கையொடுங்காலுநீருஞ்சுடுத்துடன்சிவந்துவீழு
மெய்யெலாம்பசுமையன்றிவெதுப்புடன்கிறுகிறென்னுந்
துய்யசோறதுவுங்கொள்ளாத்துயருறுசடம்வேறாகு
மையிடும்விழியாய்செங்கமாரிநோயென்றுகூறே. (௨௱௫)

(வேறு.)

சோறுசெறித்துச்செல்லாதுதூக்கமுடனேதலைகனக்கும்
நீறும்வெதும்புங்கணகளெல்லாநீட்டில்மேமேலகால்கடுக்குஞ்
சீறுங்கொடியவிழிமடவீர்செங்கமாரிநோவிதெனக்
கூறும்பெரியோர்தானுரைத்தார்கொடியரோகமீதெண்ணே. (௨௱௬)

உரைத்தவிரும்பி கிட்டமதையுன்னிபிடித்துக்கோர்சலத்திற்
சரித்தகாந்தமரப்பொடியுஞ்சாக்கிப்பாதிவெண்காரம்
அரைத்துமூன்றுபுடமிட்டுவடைவாபெடுத்துவதனோடே
பெருத்தபிரண்டைபொடிசமனுய்ப்பேணிக்கொள்ளிர்போம்பிணியே

கையாந்தகரைமுசுக்கைக்கடுக்கற்றாழைப்பாலுடனே
மெய்யாய்நாழிநாழியதுவிளங்குமெண்ணெய்நாவுழக்கு
ஐபமதுறஞ்சந்தங்கோஷ்டமமுக்கிருநெல்லிமையிங்கழஞ்சு
நெய்யவரைத்துக்கலக்கியதில்நெருப்பாய்க்காய்ச்சிவடித்துண்ணே

(சத்திகுன்மத்தின்குணம்,)

(வேறு,)

மயங்கிடும்வெளுக்குமெண்ணெய்வாயுவுமிகுந்துணற்றுஞ்
செயங்கெடச்சத்திசெய்துசெறித்திடாதெறித்துநெஞ்சு
பயங்கெடவுண்ணவொட்டாப்பயித்தியமிகுந்துநின்று
தயங்கிடச்செய்யுஞ்சத்திகுன்மமாந்தடங்கண்மாதே. (௨௱௭)

(வேறு.)

நெஞ்சுமெதித்துப்புளித்தேப்பாய்நின்றேயுதரம்பொருமலுமாய்த்
தஞ்சமறவேசத்தியமாய்த்தருகாதளவாய்மலந்தீயு

மஞ்சப்பிதற்றும்வா தமிதுவதியப்படவேகசப்பானுர்
தஞ்சமேதுமில்லாதேசத்தினுன்மத்தன்மையிதே. (சாய)

(இதற்குளண்ணெய்.)

தேங்காய்ப்பாதிலிந்துப்புசிறக்சப்பலமேயொன்றுகொள்ள
வாங்குவெள்ளையுள்ளியதுவாமேயிரண்டுபலங்கொண்டு
தாங்காச்சாரமிருகழஞ்சுதானேயளவாய்க்கள்ளிப்பால்
ஏங்காதெரித்துமெண்ணெய்கொள்ளவெங்குங்குன்மமில்லைபெண்ணே

(வேறு,)

பண்டுமுன்வயிற்றைப்பற்றிப்பலப்படவலிக்கையாலு
மண்டியேகாயம்வற்றிமயங்கிடவுலர்ந்ததாலுங்
கொண்டுநின்னுகாரத்தைக்குமட்டியேயெடுக்கையாலும்
வண்டுசேர்குழலினுளேவலிகுன்மவாய்வுதானே. (சாஉ)

மறந்திடுமென்னந்தன்னைவயிற்றினில்வலியுந்தோன்றுஞ்
சிறந்திடுக்கஞ்சித்தண்ணீர்தேடிடுங்கொள்ளவொட்டா
திறந்திடத்துயராய்த்தோன்றுமிருகுழற்கழலுநாவும்
வரண்டிடல்மிகுத்துத்தோன்றும்வலிகுன்மவாய்வுதானே. (சாய௩)

(இதற்குமருந்து.)

உன்னியுஞ்சோமனுப்புமுதிர்ந்தகோரிணங்கன்சூதம்
வெள்ளைவெண்காரஞ்சுக்குமிளகுதிப்பிலியுங்காந்தங்
கள்ளியின்பாலுநொச்சிகலக்கியேயிலைச்சாறுண்ண
கொள்ளவேகுன்மவாய்வுகொண்டிடிலகலப்போமே, (சாய௪)

(பித்தகுன்மத்தின்குணம்,)

(வேறு.)

தலையுங்கனத்துமோக்காளந்தானேறுகவும்வாயூறல்
நிலையுங்கெட வேகிறுகிறுத்துநின்றேபொங்கிநெஞ்செலித்துக்
கொலையுஞ்செய்யும்பித்தகுன்மங்கொள்ளுங்குணங்களிதுவெனவே
கலையில்வல்லதமிழ்முனிவர்கணடுயெடுத்துவுரைத்தாரே. (சாய௫)

(வேறு.)

உண்டியைமறிக்கையாலுமுற்றனஞ்செரிக்கையாலு
மண்டியேகாயம்வற்றிவயிற்றையேவலிக்கையாலும்
பண்டுள்ளபழமலத்தைப்பற்றியேசெய்கையாலும்
விண்டிடும்பித்தகுன்மமிதுவெனவிளம்பினுரே. (சாய௬)

(இதற்குச்சூரணம்.)

சீனிக்காரம்பொரிக்காரஞ்சிறந்தவெடியுப்புவிந்துப்பு
ஆனகாந்தமாகில்காந்தமன்பாயுள்ளிபெருங்காயம்
தானமோதந்திரிகடுகுதக்கசீரங்கறுஞ்சீரங்
கோனேகடுக்காய்ச்சிவதையுடன்கூட்டக்குன்மங்குடிப்போரே.

(எரிகுன்மத்தின்குணம்.)

வயிற்றையெரித்திட்டுக்குடல்வாய்நீர்சுழற்றித்தலைகனத்து
உயிர்ப்பையறியக்கிறுகிறுக்குமோக்காளித்துவேப்பமுண்டா
மயிர்க்காலளவேவேர்வைவரும்வயிறுபொருமியகன்றிடுத
லியற்றுடனெல்லாமெரிக்குமெரிகுன்மத்தினகுணமிதுவே. (சாயஅ)

(வேறு,)

உள்ளியோடுசிவதைசீரகமிந்துப்பு
மோமங்திப்பிலியுடனேவசம்புகூட்டு
கொள்ளுவாய்ப்பெருங்காயங்கிரிமிசத்துரு
கோஷ்டம்தென்காரந்திரிகடுகுதானுங்
தள்ளறியகருஞ்சீரங்கழற்பருப்பு
சதகுப்பைகொடுவேலிகுக்கிற்றுனும்
வெள்ளையாங்காரமொடுசாதிலிங்கம்
வேண்டியேவகைக்குமுக்கழஞ்சுசேரே. (சாயகூ)

(வேறு.)

காட்டுநொச்சிப்பிரண்டைநிம்புகடியவேசிப்பழங்கொன்றை
ஊட்டுமுருங்கைபாமணக்குவுயர்ந்தவீழியிஞ்சியுடன்
நாட்டியிடித்துநீரெடுத்தாமணக்கினெண்ணெயுடன்சேர்த்துக்
கூட்டிக்காய்ச்சிவடித்துண்ணக்குடிபோமெரிக்குன்மந்தானே (சஉ0)

வலிமகாகுன்மக்குணம்.)

வந்தேயுகரந்தனைவலித்துவயிறுகழியும்வாந்திசெய்யும்
நொந்தேமேனிவரண்டுலர்ந்துநோவுமிகுந்துவலுமைசெய்யுந்
தந்தமருந்துதனைமீறுந்தருகாலுடலும்வேர்வாகும்
வெந்தேவிழும்போமளவும்விடாதுமகரவலிகுன்மமிதே. (சஉக)

(இதற்குநெய்விபரம்.

(வேறு,)

வெள்ளுள்ளியிஞ்சிசீரகம்விரவியசாஸ்திரபேதி
தெள்ளியவிளநீர்பாலுஞ்சேரவேநாழிநாழி
கொள்ளிவைகியாழம்வெந்துகுறைந்தொருநாழியானல்
விள்ளுவேன்றுநெய்நாழிவிடவதுமிகவுநன்றே. (சஉஉ)

நன்றதாங்கோஷ்டமேலநல்கூவெண்காரமிந்து
சென்றுமணத்தக்காளிதிப்பிலிசீரமல்லி
வென்றிடுங்கிராம்புசுக்கமிக்கசேங்கொட்டைகூட்டி
யொன்றவேவெந்தநெய்தானுட்கொள்ளக்குன்மம்போமே. (சஉங)

போமதேவெய்யமாந்தம்பொருமியபித்தகுன்மம்
தாமிகவெரிக்குங்குன்மங்தரிகிடாசத்திகுன்மம்
வாமமாமரணவாதமருகிடவலிக்குங்குன்மங்
தாமதப்படாதேமீளுந்தப்பாதுநெய்யிதாமே, (சஉச)

(வாதகுன்மக் குணம்.)

(வேறு)

மேல்வயிறுவலிதளர்த்தியிளைப்புமுண்டா
மிக்கானபாதங்களுளைந்துபின்னுஞ்
சாலவேகீழ்வயிறுதனிலடங்கிச்
சத்தியேதோன்றிடுதல்.தானுமுண்டா
மாவிட்டுக்குத்துபோலக்கண்வெளுத்தே
யதிகதுயருண்டாகுமதனைத்தானே
சீலமுடன்மனதிலேதெளிந்துகொண்டு
தெளிவாதகுன்மமெனச் செப்பலாமே. (சஉ௫)

(வேறு.)

காலுடநெஞ்சுவற்றிக் கனன்றெளித்துளையும்பக்கஞ்
சாலவேசெறிகபாலஞ் சற்றுடல்பிரட்டிக்குத்தும்
நேலவேகிறுகிறுக்கும் நிரைகுடல்மிகவலிக்கும்
வாலகோகிலமேமானே வாதகுன்மங்களாமே. (சஉசு)

சந்துகாலுளைந்துபற்றித் தண்ணெனவயிற்றில்மற்று
மந்தகாரங்களாகவதிகமாஞ்சரீரவாதை
வந்துதான்ருேன்றுநாளில் வகைப்படவாதகுன்ம
மந்தாமுனிவன்சொன்ன வாயுள்வேதந்தானீதே. (சஉஎ)

(இதற்குஎண்ணெய்.)

(வேறு.)

கோட்டுமுள்ளியறுபலமுங் கொடுவேலியின்வேர்நிலவாகை
மாட்டும்வீழிச்சாரணையு மஞ்சளோரொன்றெருபலமாஞ்
சேட்டமானதிரிகடுகு தெளியுஞ்சோமனும்பதுவும்
காட்டிற்கள்ளிப்பாலுடனே கலந்தொன்ருக வெண்ணெகொள்ளே

(வேறு.)

திரிபிரமெரித்தான்சாரந் திருட்டிவுஞ்சாறுஞ்சற்றே
கிரியுரைகன்னிச்சாறுங் கேடிலாமுருங்கைச்சாறுஞ்
சரிசரிசாற்றைவாரித் தன்னுடன்கூட்டிக்காய்ச்சி
யுரியொறிநாழியாயுற் ருமணக்கெண்ணெய்கொள்ளே. (சஉகூ)

(கபால நோய்க்குணம்.)

(வேறு.)

வயிற்றுறசுழற்றிமேல்நோக்கிவாய்நீர்பெருத்துத்தலைகனத்து
உயிர்ப்பைபகுந்துவாந்திமிகவுண்டாமடங்குமுடல்தன்னில்
அயர்க்குமயக்கமுடல்வெளுக்கு மதிகப்படவேவீழ்விக்குங்
குயிற்குநிகராமொழிமடவீர் கொதிக்குங்கபாலக்குன்மமிதே. (சஙூ)

தலையுங்கனத்துவலித்துயருந் தருகாதழற்றுமுசரமுட
னுலையுநடுங்குங்கிறுகிறுக்கு முயர்ச்சியாகக்கணடியீலு

முலையும்பிடரிதன்னில் நரம்புளையுமனமுமிகப்பதருங்
கலையுபத்தியுடலடங்கிக் கதிக்குக்பாலக்குன்மமிதே. (௪௱௧)

கபாலகுன்மத்திற்குச்செய் )

(வேறு.)

சாரணைசித்திரமூலம் சவ்வீரவீழிசற்றே
வீருலகொன்றைக்காயில் விரையுடன்முருங்கைபட்டை
பேருடனுகக்கூட்டி பெருக்கவொன்றாகவைத்து
ஊரியநாழிதண்ணீருடனதுதிடமாய்க்காய்ச்சே. (௪௱௨)

காய்ச்சியேகோதைதள்ளிக் கலந்திடுநறுநெய்நாழி
மூச்சுள்ளவுள்ளிசுக்கு முதிர்ந்ததிப்பிலிவெண்காரம்
வாய்சிறுமிளகிந்துப்பு வண்மைசேர்சிகைதககாயம்
காய்ச்சியேதன்னிலொக்கக் கள்ளிப்பாற்கலந்துகொள்ளே. (௪௱௩)

(சூலை சூலைக்குன்மம்.)

நாபிக்கீழ்க்கடிதாயுற்று நடுவிரலூடேயோடித்
தாவிக்கைக்குழியிற்குத்திச் சுயங்குனகசிப்பிற்குத்தி
கோபித்தேயுயிரைவாங்குங் கொடுங்குலைசூலையென்று
தாபத்தால்முனிவன்றானுந் தமிழினூலருளினரே. (௪௱௪)

ஆனவனடியைப்பற்றி யழன்றகீழ்முதுசப்பற்றி
பானகடைக்குடலைச்சுற்றிப் பரவியேவலிக்கும்போது
நான்படுநாபிதன்னை நடுவுறங்சுழித்துவாங்கு
மேன்படுமிதனைநீயு மெரிமுகச்சூலையென்னே. (௪௱௫)

(இதற்கு மருந்து.)

(கலிவிருத்தம்.)

கோழிமுட்டையை யுப்பிற்குழித்திடு
வாழிராத்திரியைத் தெடுத்திடு
வேழியாகவிடியும் போதெட்டுநாள்
பூழியாக்கொள்ளப்பொடுங்குலைசூலையே. (௪௱௬)

(வேறு.)

பிரண்டைக்கிழங்குவெடியுப்புக் காயம்உள்ளியிந்துப்பு
கருப்பஞ்சக்கரைதனிலரைத்துக்கடுகத்தினவல்லீரா
லெரிக்குஞ்சூலையெனுநோவு மேழுநாளிலேகிவிடும்
உரைக்குளடங்காக்கும்பமுனி யுண்மையாகவுரைத்தனரே. (௪௱௭)

(கர்ப்பசூலைக்குணம்)

(வேறு.)

நாபுக்கீழிருபுறந்தா னற்மாதங்பாதந்தனையும்பற்றிச்
சோபமேமிகவுமுற்றுச் சோருறவலிப்புமுண்டாம்
தாவியிப்படியதாகித் தான்கர்ப்பசூலையென்று
தேவர்க்குந்தேவனான தென்மலைமுனிவன்சொன்னான், (௪௱௮)

(இதற்குமருந்து.)

வேப்பந்துளிரும்பிரண்டையின்வேர்வெள்ளையாட்டின் பால்தனிலே· கூர்ப்பாயரைத்தெட்டுநாள்குடிக்கக்குறிப்பாய்ச் சூலைக்குன்மம்போம்.தீர்ப்பாய்வாதகரப்பானுந்தெறி பட்டோடுமென்றேதான். நாற்ப்பாய்முனிவரிதுதன்னைநலமாயுலகிலருளினரே. (௬௩௯)

(ஆன்மசூலைகுணம்.)

(வேறு)

தானதேயுதரமெல்லாந்தாங்கவேவலிக்குமாகில்
ஆனதோராணமசூலையாகுமென்றறிந்துகொள்க
மூனுறவுதரியோடுமூளைந்தெளுநாடிதன்மேல்
வானுறவலிக்குமாலில்மந்திரகேசியாமே, (௬௪௰)

(இதற்குமருந்து.)

காயம்வசம்புகொடுவேலிகடுக்காயோமந்திரிகடுகு
ஆயகருஞ்சீரகமுடனேயரியசிவதைக்சமூற்பருப்பும்
ஆயமிந்துப்பிவைசமனுயரைத்தேபொடித்துவெள்ளுள்ளிப்
பாயச்சேர்த்துப்பண்ணிருக்கள்பருகிராமைகெசிபோமே. (௬௪௧)

(கோபிப்பேய்ச்சூலைக்குணம்,)

(வேறு.)

நாபியையுமூலச்சுற்றிநடுவுறவலிக்குமாகிற்
கோபிபேய்ச்சூலையென்றுகும்பமாமுனிவர்கண்டு
ஓபமேயுற்றுப்பின்னையுடலதுபுரளவோங்கித்
தாபமேமிகுந்துநோக்கித்தானதுகிருமியெண்ணே- (௬௪௨)

(இதற்குமருந்து,)

(வேறு.)

சுண்டவோவேப்பீர்க்குச்சுக்குகிருமிசத்தூருவும்
பண்டேபகருமபெருங்காயம்பருவாயுள்ளிமோதகமுந்
கண்டேநொச்சிச்சாறரைத்துக்கவளமாகவேயருந்தில்
முண்டப்படுங்கோவிக்கிருமிமூடுகப்பார்க்குங்கண்டீரே, (௬௪௩)

(குடகரிவாதகுணம்,)

(வேறு.)

கடைக்குடல்முதுவுந்தண்டுங்கையடிதன்னிற்பற்றி
விடைப்படப்பற்றிப்பின்னைமிகவுளநரம்புமேலாய்ப்
புடைத்தெரித்தழன்றுநொந்துபுரண்டுடல்மருண்டுநோக்கிற்
குடப்புறமுண்டிநோக்கிற்குடகரிவாதமெண்ணே, (௬௪௪)

(ஆமணக்கெண்ணெய்,)

ஆமணக்கெண்ணெய்நெய்தானமூகியகானத்தண்ணீர்
தாமதுநொச்சிச்சாறுந்தக்கதோர்முடக்கொன்றானும்

காமிலிங்கமுள்ளி கடுகொடுவேலிசுக்கு
நேமமாய்வெந்துகொள்ள நிற்குங்குடகரிவாதமுமே, (௪௪௫)

கண்டிக்குமுதரந்தன்னிற் கதித்திங்கூப்பிட்டோடும்
விண்டிசேயவிரைப்பன்றன்னில் விம்மிடுமுருண்டுகைப்போற்
றெண்டித்துச்சிதறியோடிச் சினத்துடன்பாயந்தாங்கிக்
கொண்டிப்போதுடலிறகுக்குங் குடகரிவாய்வுதானே. (௪௪௬)

(கோவிப்பேய்சூலைக்குன்மமருந்து.)

திரிபலைமோதகங்காந்தந் திரிகடுகுலிங்கந்தார
பரிபசிவதைக்காரமிந்துப்பு பதங்கிராம்பு த்திரியும்
குறிபுடன்பொடித்துத்தேனிற் கொள்ளவேயுதரநோய்கள்
வெறிபடுங்குண்டலவாய்வு விட்டேகுமுண்மைதானே. (௪௪௭)

நித்தியமமுதுகொண்டால் நின்றிடுவதாகப்
பத்தியமின்றித்தானே பற்படமலமுந்தள்ளி
தத்தியுந்தளர்ந்துகாட்டித் தருகிட தவனமாகி
யத்தனைக்குணங்கள்கண்டலாற்றுமைவாய்வுமாமே. (௪௪௮)

மீண்டியேயுதரந்தன்னில் விரைத்திடுமூலமக்கினி
கொண்டதோராகாரத்தைக் குமட்டிலாற்றுமையாகும்
உண்டிடிற்புளித்தெறித்து வுடலுடன்வலமுந்தள்ளி
விண்டிலாற்றுமைவாய்வு விதுவெனவிளம்பினாரே, (௪௪௯)

(சத்திகுன்மத்தின்குணம்.)

காந்தமிரதமரப்பொடியுங் காரீயந்தான்கெந்தகமு
மேந்துங்கஞ்சாவறுகழஞ்சி மிந்தமருந்துவோரொன்று
சாந்துபோலேபொடிசெய்து தானேதேனிற்கொள்வீரால்
வாந்திசெய்யுங்குன்மமது வாங்கிப்போகுங் கண்டீரே. (௪௫௰)

போமேபலவாங்குன்மமது புகன்றகழிச்சல்நீரடைப்பு
நாமேசொன்னேம்பிரமேக நவைசேரிருமலீளையுடன்
நாமேயிதனையிருபதுநா ளருந்தவா தகடுப்பகன்று
போமேபூபதியெட்டுமோரன் புகன்றார்புகன்றார்முனியோரே, (௪௫௧)

மலத்தையருக்கிமந்தித்து வலுவாயுதரந்தனிற்புரளும்
பிலத்தைக்குறைக்குமீரலொடு பெருக்கக்கனத்துத் திரண்டேறு
முலர்த்துமஞ்சனங்குறைந்து வருமோக்காளித்தேப்பமிடும்
வலைக்கும்புளிக்கும்பீலிகைதான் வாசமாகப்பேசினதே. (௪௫௨)

(பீலிகைவாய்வின்குணம்.)

(இதற்குச்சூரணம்.)

(வேறு.)

தோடவேதிரிகடுகுகடுக்காய்மஞ்சள்
சிவதையிதுசீரகஞ்சுரோசாளியோமம்

Dr. S. Venkatarajan, L.I.M.
தபோவன வாசக சாலை

பாடானவிந்துப்பு வக்கிராகாரம்
பத்திரியும்சாதிக்காய் விடையங்கிராம்பு
வாடாதேகாரமரியாருங்காந்தம்
வங்காளபச்சையிதை சமனாய்க்கொண்டு
தேடியேபொடித்திதனைத் தேனிலுண்ணத்
திருமடாவாயுவுடன் பிலிகையுந்தானே. (௨௫௩)

(எகுத்துவாயுவின்குணம்.)

(வேறு.)

இன்புறுமுதரந்தன்னிலெழுகின்ற மெகுத்கனுக்குத்
துன்பமேமிகவிளைக்குஞ் சேரவேயிளைப்புவாங்கு
மன்பிலாமெகுத்தைப்போலே யறமிக்ககொடியதில்லை
இன்பமாய்முனியெல்லார்க்கு மிப்படியியம்பினாரே. (௨௫௪)

உற்றருண்முகதலையின்கீழே யுயர்நாலங்குலந்தான்விட்டு
மற்றுமோர்பழுவுண்டோடி
பற்றுறவலித்துப்பின்னே பையவான்கெடுத்துச்சோறு
முற்றுமேயிதனையீயு முண்டேகிற்றென்றுகூறே. (௨௫௫)

இப்படிமூன்றெடுத்து விருமலுஞ்சேருமாகின்
மெய்ப்படுமுயிருங்குன்றி மேனியுமெலிந்துசெல்லு
மைப்படும்பின்னைவந்து மரணமேயாகுமென்று
முற்படமுனிவன்றானு முறையாகவகுத்துச்சொன்னார். (௨௫௬)

(எகுத்துவாய்வுக்குமருந்து.)

கொடிகழற்பருப்போடுள்ளி கொடியகாயமிந்துப்பு
கொடிக்கள்ளிகுப்பைமேனி கொற்றவனிலிச்சாறு
இடிச்சிலைச்சாறுநொச்சி யியல்பெறக்காய்ச்சிக்கொண்டு
குடித்திடிற்சூலைகுன்மங் குடகரியோடிப்போமே (௨௫௭)

உள்ளிச்சாறதுவுநாழி யுறவண்டத்தயிலநாழி
கள்ளிப்பாலதுவுழக்கு கடுதிரிபொடியுழக்கு
தெள்ளியஇந்துபந்து ராவடமைங்கழஞ்சு
கொள்ளுவாய்குமரிச்சாறுங் கூட்டியேயவிரவிக்கொள்ளே. (௨௫௮)

ஒத்தவிப்பதத்திலிங்கு வுறவதாயவடித்துப்பின்னே
சுத்தமாமுனியைநோக்கிச் சுகம்பெற்றுக்காந்தமோது
குத்துவன்சூலைகுன்மங் குடகரிவாதந்தானுஞ்
சத்திகெட்டெடுத்துமாயுஞ் சாந்தமாயிதனைப்பாரே. (௨௫௯)

உற்றருட்செய்தவிந்த வுறுபலகிரிகையெல்லாஞ்
சற்றுமேசாகர்வண்ணந் தவமுனிசாற்றுகைக்கு
நற்றுணையாகுமிகுந்த நாயகனருளினாலே
குற்றமொன்றின்றித்தெய்வ குறுமுனியருளினாரே. (௨௬௰)

(நீர்ப்பாட்டின் குணம்)

அரிந்திடும்பதார்த்தத்தாலு மானந்தவாயுவாலுந்
திருந்தியநாவினாலுந் தேள்விஷமேறினாலும்
வெருணடெழுவெபபினாலு மேமாந்தக்குளிர்ச்சியாலு
மருண்டிருகுடலினாலும் வந்திடுநீர்ப்பாடெண்ணே. (சகூக)
வெப்புநீர்ப்பாடுவிம்மி யிளைச்சலோடெரித்துநொந்து
தப்புறுகழிச்சற்சத்தி சந்துகாலமெய்யுழன்று
அப்புறநாவுலர்ந்து வடிக்கடிதண்ணீர்தாகம்
வெப்புறுசன்னியானன் மீளுவதில்லையெண்ணே. (சஅஉ)

(இதற்குமருந்து.)

கரியுப்புகழஞ்சரைத்துக் கலந்துநல்லெண்ணெய்கொஞ்ச
மறியவேயுழக்காய்க்கொள்ள வமர்ந்திடுநீர்ப்பாடென்ன
கரிமஞ்சளரைத்துசுண்ணங் கலக்கியேகுடிக்கநிற்கு
மலகலங்கொம்புதிராட்சமருந்தெநீர்ப்பாடுமே. (சகூங)

(கர்ப்பநோய்க்குணம்.)

(வேறு.)

பொருமித்திரண்டுகீழ்வயிற்றிற் புரண்டேயெழுந்தசெயல்கண்டு
மருகிப்பழகிநின்றாக்கான் மயக்கமதுவேமாறாது
உருவிப்பிடித்தான்மெய்மேனி யுலர்ந்துநின்றேயுழலையுண்டாங்
கருவையழிக்குங்கோவடையீர்கருதங்சர்ப்பரோகமிதே. (சகூச)

(கலிவிருத்தம்.)

கூறுமாவாரைகுறிக்குமிளகுடன்
நீறுமாதினைநேர்ந்தபுளியரண்
வாறுமோரினில்வாகாயருந்திட
நூறும்ரோகந்துலைந்தோடிப்போகுமே. (சகூரு)

(வேறு,)

பொருமிரத்தந்தனைமறித்துப் போதமிகவும்வலியுண்டாங்
குருதிசேராவயிறுவலிபோங் சொள்ளுங்கர்ப்பந்தனையழிக்கும்
வருடியிடுப்புக்குடைந்துளைக்கும் வலத்தைமிகவுமிறுக்கிறுக்கி
பெருகப்பணைக்குமெனப்பெரியோர்பேசுங்கர்ப்பவாயுவிதே. (சகூகூ)
கடுக்காய்மஞ்சளிந்துப்பு கடுகோடுள்ளிவெண்கார
மந்த்தவிழியர்னமணக்கு மதுவுநிலவாகையின்வேருந்
தொடுத்து மூன்றுபலந்தூக்குத் துலங்கவெரித்தாமணக் கெண்ணெய்
கொடுத்தாற்கர்ப்பவாயுவிடுங் கூட்டுகள்ளிப்பாற்கழஞ்சே, (சகூஎ)
திரண்டபுழுக்களுருண்டுவிழுஞ் சிறியபுழுகும்பறந்தோடும்
வரண்டேயுடலும்வற்றிவரு மபமுங்கெட்டுத்தாதுவிழும்
திரண்டவாதைமிகுததுவருந்திராக்கர்ப்பவிப்புருதி
உருண்டுபுகையுமுள்மூல முளைக்குங்கர்ப்பவிப்புருதி, (சகூஅ)

...A REMEDIES,
1959, SAKA NAICK ST.,
TANJORE.

(வேறு,)

ஆவாரைவேப்பஞ்சாறுவாவிநெய்நாழிநாழி
தேவதாரமோதகமுஞ்சீரங்கரிசிரகமும்
பாகத்துடனிட்டுக்காய்ச்சிப்பதத்தில்வடித்துக்கொள்ளுவீரால்
காவலனாரானைகர்ப்பங்கருவுமுண்டாமென்றாரே. ௪௬௯

(வேறு.)

சுரமுடனுதிரங்காணிற்சேரன்றிசேந்திரட்சியாக
வுரமிகப்புரண்டுவாய்நீருமிநெஞ்செரித்துவாந்தி
திரமுடனிதுதான்செம்யுஞ்செய்கையையறிந்துகொண்டு
சுரமுறுங்கர்ப்பசூலைக்குணமெனச்சொல்லுவாயே. ௪௭௰

நல்லெண்ணெய்கொன்றன்சாறுநலமுறுகோழிரத்தம்
பல்லுள்ளிக்காரமிந்துபலைதிரிகடுகுமோதகஞ்
சில்லெனக்கடுக்காய்காயந்திருகள்ளிப்பாலிலிங்கம்
இல்லெனக்காச்சிக்கொண்டாற்கர்ப்பசூலையும்விட்டோடும். ௪௭௧

(மலட்டுப்புழுகு.)

மலட்டுப்புழுவின்குணமதனைவகுக்கக்கேளாய்மடமானே
தலம்பப்பயிலுமடிவயிற்றிற்றாக்கியுட்குத்துமல்லால்
இலம்பப்பயின்மாதம்வந்தாற்றினந்தினம்வருத்தம்பாராய்
குலம்பப்பயிர்பலநிறங்கள்கொள்கையாசக்காணுமிதே, ௪௭௨

(வேறு,)

விடியும்போதெழுந்துநல்லவேப்பிலைகொண்டுவந்து
இடித்துடன்பிழிந்துநன்றாயெட்டுநாட்குடிப்பீராகிற்
கடிப்புழுகெட்டுமாய்ந்துகருவுமுண்டாகுமென்று
சடுதியாய்முனிவன்றானுந்தமிழினாற்சாற்றினாரே. ௪௭௩

கருவினுக்காலன்பேயின்காரணமுரைக்கக்கேளாய்
அரிவையேமாதவிடையிலடுத்ததுதிண்ணமாகுஞ்
சருவியேகனவுகாட்டிச்சரீரமும்வரண்டுகாய்ந்து
இருமலுமயக்கம்வாந்தியிடர்மிகக்காட்டுந்தானே. ௪௭௪

இந்தப்பேய்தனக்குவேப்பினிலைச்சாறுநாழிநாழி
யந்தநீர்தண்டப்பினாரிபரைத்துநாற்பலம்பூநாகம்
வெந்தமாய்நறுநெய்நாழிவிட்டிதமாகக்காய்ச்சி
சந்தமாய்வடித்தருந்தத்தானிந்தநோயும்போமே, ௪௭௫

(ஒருயந்திரமெழுதிக்கட்டவும்,)

கனத்திடுஞ்சாணைபோலேகவழ்ந்தடிவயிற்றைப்பற்றி
சினைத்திடுமயக்கமாவிச்செருமியேபற்றிநொந்து
அனத்திடும்வராளும்பின்னையாசையுமோகமற்றால்
வினைசெயுங்கீழ்க்கவுசிவிதமெனக்கூறலாமே. ௪௭௬

கூறுமேற்கவுசிநோய்தான்குண்டலம்போல்வளைந்து
மாறிருபுறமும்பற்றிவலித்திரைத்தேறிவிம்மி
மீறிடும்வாதைமெத்தவிகர்ப்பமுமயக்கமுண்டா
மாறிடும்பின்னைவந்துவமளியாயதமஞ்செய்யும், ௪௭௭

(சந்தவிருத்தம்.)

வெண்காரமுஞ்சிறுதிப்பிலிமிளகானதுசுக்கு
பண்பாயினநேர்வாளமும்படையுப்புடன்காந்தம்
நண்பாவருபெருங்காயமுநண்ணீர்கழற்பருப்புந்
தண்பாயினமொன்பானதுசரியாயெடுவிடையே, ௪௭௮

இடையாயதுசரியாகவேயெடுத்தேயிதுமருந்தை
யடவாகவேயெருக்கம்பழுபன்னீர்தனிலரைத்து
தடதான்றவெருக்கம்பழுப்பதனுலதைமுடிப்
புடமானதவ்வெருவுள்ளிடுபொதிந்தபுடமிடவே. ௪௭௯

இடுவாய்வளர்சாவற்புடமியல்பாகவேசமைந்தா
லடுசெந்தழல்விழுவெந்தபின்னமரும்பதமறிந்தே
யுடுவேமெனநீறுபெருவுளவைத்தனமருந்தை
கடிதாயெடுவரைகல்லினிற்கடுக்காய்வெந்தநீரால், ௪௮௰

நீராலரைநன்றாகவேநிகழுமுண்டைத்தோறுன்
சீராய்விளக்கெண்ணெயிஞ்சிச்சாற்றிற்கொளத்தீருந்
தாராளமாய்க்கனிந்தாலமுரித்தண்ணீருடனன்னம்
போரால்ரோகம்பிணிபீசவு பெண்ணேவகைகேளாய், ௪௮௧

(வேறு,)

கேளாய்க்குணமெடுத்துடன்கிளறும்வெப்புபாவை
கோளேசெயங்கீழ்கவுசியுங்கோளாமேற்கவுசியுடன்
நாளேகுடககரிபோகுமேநல்லணடவாய்வதுந்
தாழாதவிப்புருதிகுலைமுட்டியுடன்வீக்கம். ௪௮௨

(வேறு.)

குலைமுட்டிசூலைகுன்மங்கொடுமலம்பித்தஞ்சோகை
மலைபாண்டுசெவிநோய்நாசிமருவயிர்சலமுமுட்டி
சிலைவிடப்பத்தியங்கேசிறுசுண்டைக்கோழியாடு
முயல்வெள்ளாடுடும்புருமச்சட்சுருவிராலுநன்றே, ௪௮௩

உரத்திடுங்குமிறுங்காந்துமுதரமும்விம்மிநொந்து
சுரத்திடும்வயிறுநெஞ்சுஞ்சொரியுடன்றினைவுமுண்டாஞ்
சிரத்திலுங்காலுமேலுந்திமிருடன்குத்திநோவா
மிரைத்துகண்சுழற்றும்வாயாலிரத்தமாகுன்மமாமே. ௪௮௪

(தலைபாரச்சொரி-நீராம்பற்போகஎண்ணெய்,

(வேறு.)

கற்றாழைமுசுமூசுக்கைபூரம்வெள்ளி
கரிப்பானுநொச்சியொடுகடுக்காய்நெல்லி
வெற்றிலையுமிளநீர்பால்வெள்ளையுள்ளி
வீழனவாவினெய்விபரங்கேளு
இத்தனைக்கும்வகைவகைக்குநாழிநாழி
யிருசீரங்கோஷ்டமிலவங்கந்தாரம்
பத்திரியுங்கிராம்புபலங்கடுகுமஞ்சட்
பசசிலைகச்சோலமிடணுமாமே. ௪௮௫

(வேறு,)

கஞ்சாவுடனேகொத்தமல்லி கார்கோலரிசிதிரிகடுகு
வஞ்சம்பழுக்காய்வாலுமூவைமதுரம்வசம்புவெடியுப்பு
தஞ்சமுடன்கற்பூரமொடு சாதிக்காயும்பெருஞ்சீரங்
கெஞ்சுவெப்பாலரிசிசிவதை கொடியவேலிக்கள்ளிப்பால், ௪௮௬

இந்துப்புடனேவெண்கார மிலங்குஞ்சாதிலிங்கமுடன்
கெந்தியிவையோரோர்கழஞ்சு கிளறவிடித்துவதிற்சேர்த்து
சந்தமாகக்காய்ச்சிவடித் தருகாதுள்ளேகொள்வீரால்
உந்தியெழுந்தரத்தபித்தகுன்மமோடியொளிக்குக்குன்மமிதே. ௪௮௭

(வேறு.)

தனிவழிநீருமாகித் தன்றலைசெவியடக்கு
மூனியொடுபேசிவாதை மூண்டமைசுரமுமுண்டா
மனமிடிமிகவுண்டாகு மலமதுசிறுகிவீழ்ந்து
தனிவகையறிந்துபாரு தலைசொரிநீராம்பலாமே. ௪௮௮

(வேறு.)

தக்கதொன்றுமிளகிரண்டு மூன்றுதிப்பிலிநாற்கடுக்காய்
தக்ககருஞ்சீரகமைந்துதானே பொடித்துவென்னீரிலுண்ண
வைக்குமெண்ணைக்கிதுதன்னை வகையாய்நெல்லிநீர்கூட்டி
தக் க்காய்ச்சித்தான்முழுகத்தலையிற்சொரிநீராம்பற்போம். ௪௮௯

(வேறு.)

உடலுமுணர்ந்துள் ளிரும்பலுண்டா
முதரம்வீங்கிநாவரண்டு
தடங்கண்வெளுத்துப்புறங்காலுந்
தடித்துவீங்கித்தாகமுடன்
அடர்ந்தேமூச்சுத்தான்றேன்று
மலர்ந்தல்மிகவும்வாடாது
மடந்தாய்சொன்னேநீராம்பல்
வருத்துங்குணங்களிதுவாமே. ௯௰

(வேறு.)

மார்புகீழ்வயிறுதாழும்வகைபட..வீக்கமாகி
நேரொத்தகாயம்பற்றிநிறமதுவெளுத்துநாவு
நீர்வற்றித்தண்ணீர்தேடுநினைவுற்றுப்பலவுங்கேட்கும்
வாரொத்தமுலையாய்சொன்னேன்வயிற்றுநீராம்பற்றானே. ௪௬௧

வீங்குஞ்சலமுமிகக்கோத்துமிகுந்தேபொருமுமுடம்பெங்கும்
வாங்குமுதகந்தனைத்தேடுமருகாத்துயாமிகுந்திருக்குந்
தூங்குங்கண்ணுமேன்மூச்சுஞ்சுவையாய்ப்புளித்துமிகத்தேடு
மேங்குஞ்செங்கைமிகச்செய்யுமிகுநீராம்பற்குணமிதுவே. ௪௬௨

காந்தக்கல்லுமாப்பொடியுங்கருதியோர்பலமாய்க்கொண்டு
தீர்ந்தலிங்கம்வெண்காரந்தேர்ந்தமுள்ளிக்கொடிவேலி
பேர்ந்தகடுகுமோதமுடன்புகலுங்காயங்காற்கழஞ்சு
ஊர்ந்துமொனருய்த்தானருந்தவுழலுங்காசமோடிடுமே. ௪௬௩

தாரமஞ்சட்கழற்பருப்புரசமுங்கெந்தங்கிரியரத்தை
யாரம்ரோகணிக்கிருமிசக்கரமரைக்காற்பலமாம்வகைவகைக்கு
வீரங்கடுக்காய்க்குமரிநீரில்விளங்கவரைத்துநன்றாக
நீர்நெல்லிக்காயளவுகொள்ளநீராம்பற்றீர்ந்திடுமே, ௪௬௪

(வேறு.)

கடுகியேமந்தம்பற்றிகாயமூசிகவேபற்றி
பெருகிறவுதரந்தானும்பிணங்கியேபொருமிவீம்மி
மருவியவுண்டிவற்றிமலத்தையும்பறிப்பதென்னிற்
பெருகியவுதரதோஷமென்றிவைபேசலாமே, ௪௬௫

(வேறு,)

காயம்வசம்புகொடிவேலிகருஞ்சீரகமுமயமோதஞ்
சேயுங்கொட்டைக்கழற்பருப்புசிவதைகடுக்காயுள்ளியிந்து
மாயுங்காந்தவெந்தயமுமஞ்சளுடனேதிரிகடுகு
வேயுஞ்சீரம்பொடித்துண்ணவில்லையுதரதோஷமென்னே. ௪௬௬

(வேறு.)

வெப்பதில்வீக்கந்தோன்றிவிபரமாய்முன்னோர்சொன்ன
ஒப்புறுகோழிமுட்டையுப்பிலிச்சாற்றில்வெந்து
செப்பரியேழுநாளுந்தின்பதுசொல்லக்கேளு
தப்பிலாதருந்துவீராய் தகர்ந்திடுவீக்கமென்னே. ௪௬௭

(வேறு.)

இந்தக்கடுக்காய்மிளகுசுக்கு விதுவுங்கடுகுரோகணியு
முந்தநிரையேகழஞ்சுகொண்டு முதிருங்கிரியாநேர்வாளம்
அந்தப்படியேபிருகழஞ்சு வரியதேசிப்பழச்சாற்றில்
இந்தப்படியேயரைத்துருண்டையிடவேமூரிக்காயளவே, ௭௬௮

(வேறு,)

அங்கமுமடைக்கவீங்கி யனைமெலிந்தாகநொந்து
மங்கியவுதிரந்தன்னில் வாயுவுஞ்சலமுங்கோர்த்து
கங்குல்சேர்நேரமானுற்கடியதோர்வாதைசெய்யு
மங்கையர்க்கரசேயீதுமகோதரமென்னலாமே. ௪௯௯

(வேறு.)

காந்தமரப்பொடியுடனேகெந்திசூதங்
கருஞ்சிர மதிகாரமுடனேதுத்தஞ்
சேர்ந்திடவேவெண்காரந்துருசிந்துப்பு
சீனக்காரங்காயஞ் சவர்க்காரந்தான்
கூர்ந்தவெடியுப்புகரியுப்புவோமங்
கொடிவேலிவெட்தயந்திரிகடுகுதானுஞ்
சேர்ந்திடவேசிவதைதிரிபலையுந்தூளாய்த்
தின்றுவிடின்மகோதரமுந்தீருந்தானே. ௫௱

(வேறு.)

நாலுசூதஞ்சிலைரண்டு நல்லகேந்திநாலிரண்டு
தாலக்காந்தம்பதினாறு தகரும்லோகமதிலிரட்டி
ஏலங்குழலாயம்மிதனி லியல்பாய்க்குமறிச்சாறனைத்து
தாலமதில்வைத்தேமூடத் தனலாயெரியுங்கண்டீரோ, ௫௱௧

கண்டீர்குன்மம்பெருவயிறு கனத்தபித்தங்காமாலை
குண்டலவாய்வுட.குல்வாதங் குடகரியேப்பமிளைப்பிரும
லண்டவாய்வுயருச்செரிப்பு வக்கினிமந்தம்பீலிகையுங்
கண்டுசொன்னேமிவையெல்லாங் கருகிச்செய்யும்பேரியோரே. ௫௱௨

(வேறு.)

மண்டலந்தன்னிலுள்ளமனிதராண் பெண்ணுள்ளோர்க்கு
கொண்டதோர்பிரமேகந்தான் கொள்ளுமுன்றேடுநோய்கள்
கண்டிடுமுடல்கைகால்கள் கண்களுமெரித்துகாந்தி
யுண்டநாச்சுவற்றிகாட்டா துடையுநீர்ப்பாயுமெண்ணே ௫௱௩

(வேறு.)

கேளாய்போகமனுதினமுங்கேணுமகிழ்ச்சிப்பதமதனைக்
கேளாய்குத்தும்பலதோஷங் கோடிகுருக்கள்பிதாமாதா
வாளாகன்னிகற்பழித்து வரம்பிகடந்துவாறுமல்
மாளாமாறுவியாதியினல் வலியசயமுமாய்விடுமே, ௫௱௪

(வெண்பா.)

மாதருடன்மாமயிலின் மாமிகுதிதெண்டிப்பாய்
சேதமுறவேவருநோய் தேடியே யாதரவாய்
எப்போதுமும்பரனை யெழிலடிபதம்பணியு
தப்பாதுநோயின் சார்பு ௫௱௫

(பிரமேகத்துக்கெல்லாமருந்து.

(வேறு)

கோதையர்சலவிகோதை கொழுத்தமீனிறைச்சிபோத்
பாதுவாய்நெய்யும்பாலும் பரிவுடனுண்பீராகில்
சோதபாண்டுருவமிக்க சுக்கிலபிறமேகந்தான்
ஓதுநீரழிவுசேர வுண்டெனவறிந்துகொள்ளே. ௫௱௬

உட்டிஷரோகத்தாலு முருபெறுப்பசியினாலும்
கட்டவிழ்கோதைமாதர் கலவிமட்டிலாமையாலு
ஈட்டருனலுமாறு முமமூன்றுமூன்றுமெ று
தி டமாய்வருவதென்று திருமுனியருளிச்செய்தார், ௫௱௭

இ்தவிந்திரியநீர்போலிலிங்கத்தி மூக்குபோலு
நந்தலைமூளைபோலு நலியாதேபுறப்பட்டாலு
மந்தலைவாதநாலு மடுத்திடும் பித்தமாறும்
வந்திடுஞ்சேத்மமொன்பாரு வறுமெனவகுத்தவாறே. ௫௱௮

வாதந்தானுமெப்போதும் ஒருத்துங்குணங்கேள்மங்கையரே
நீதியிடுப்புக்கடுப்பென்று நிலையுநடையுமொண்ணாது
போதவசனமேழுது புளைமேனீரும்விளக்கெரியு
மாதேமற்றிடங்கோமயமு மருந்துநாறுமெண்ணீரே, ௫௱௯

(வேறு.)

பவத்தாலெடுக்குமின்வநாலும் பயன்றேயிருமலிரத்தமூறும்
கவத்தாலெடுக்குமீளைமுதல சுருதும்ரோகஞ்சயரோகம்
நிவக்கோமூத்திரமிரைச்சிநீர் நினைநீர்பிக்கும்பலகுணமும்
இவர்க்கும்பனத்தையறியாது விட்டமருந்துமேறுதே. ௫௱௰

பித்தால்வெருகுமாதினுக்கும் பிலத்தயானைமதம்போலாம்
சுற்றுழைநாற்றநாறுங் கைகாலதுவுமிகவெதிக்கு
முற்றேநீர்தான்பட்டவிட முனிந்தேயெரித்துநாறுவது
மற்றவுடலமபோலமூன்று வாகக்கடுத்துக்கழியுமெண்ணே. ௫௱௰௧

நீலநிறமஞ்சணிற நீத்தப்புளியநிறஞ்சால
சாலநிறஞ்சாம்பனிறஞ் சதுராயங்களைத்தநிறங்
கோலமிகுமாட்டிறைச்சி கொழுநிணத்தின்மஞ்சணிற
மாலனயமரிதவளை வடிவுபித்தநீரிதுவே. ௫௱௰௨

(வேறு.)

உற்றேரிளநீர்தான்போலு முகந்தவிந்திரியமெனுப்பேறும்
வைத்தபச்சைநிற புமுண்டா மண்ணுமிவனுங்குகைபோலா
மெத்தவிரத்தமாம்போலுமின்னும் பழுப்புபூவையர்க்கு
முற்றநீர்பாற்றயிர்வாசமுண்டா மெறும்பியும்விழுமே, ௫௱௰௩

அடிக்கடி பருகிநீருமதிகாசத்துடன்வழுவழுக்கு
மிடிக்குநீருளையும்வேர்வை மெய்யுளேவற்றப்பார்வை
திடுக்கெனவிருமிதொந்தாற் றென்மலைமுனிவன்சொன்னு
ரொடுக்கமாஞ்சேத்துமத்தி லொன்பதின்கூறதாமே ருகச

(வெண் பா,)

மாதம்பனைநாள் வருமேமிகச்சடைக்குஞ்
சேதமிகுதியாய்ச் செய்விக்கும்-வாதம்
வருமேபவுந்திரம் வளர்பேதஞ்சூலை
தருமேசலப்பிர மியந்தான். ருகரு

வந்துமிகுந்து வளரும்பிரமிபத்தின்
முந்தவரும்வாதமுளைக்குமே-பிந்தவே
யண்டமெனுசூலை யதுவும்வுத்திரமு
முண்டதெனவேயுரை. ருகசா

நீரைபொறுக்கு நிறுத்துமடைபடுத்தும்
ஈரமிகுந்தோஷத்தை யத்துவிக்குஞ் சேரவே
கூடும்புணர்ச்சிமிகக்கூடாதுதாது
கேடும்பிர மேகந்தான். ருகஎ

(வேறு.)

நீறுங்கடுத்துச்சலமடைந்துநின்றேயிற்றுச்சலம் வீழ்ந்து
சேருமிரத்தங்காணுடனே தினவாய்வரவில்விழுந்துநிற்கும்
பாருங்காயமாளொன்றிற் பாழாமுடங்கிப்படுபடுத்து
வாரஞ்சென்றுன்மரணந்தான்மபங்குஞ்சலப்பிரமேகமெண்ணே ருகஅ

(வேறு.)

சீனக்காரம்பொரிகாரஞ் சேரிந்துப்புசவர்க்காரந்
தானத்தொடுத்தும்பொடிபாக்கித்தனியாபருவிபனங்கதிரும்
பானங்கதலித்தண்டுடனேபரிவாய்ச்சுட்டுச்சரிசமனுய்த்
தேனிற்குழைத்துவிழுங்கிடவேறி தெறிக்குஞ்சதைகல்லடைப்பாமே

கலிவிருத்தம்

குண்டைகட்குருவை நெல்லரிசிகள்
பெண்டைக்காளெனும் பேசிடுநாமெ ாறு
நன்றதாய்ப்பொடி நகதையினுட்சதை
யுண்டக்காலவருழியிருப்பரே. ருஉய

(வேறு,)

பொன்னுங்கண்ணிசிறுகீரை புளியாம்வேம்புதன்னுடனே
மன்னிவளர்கீழ்க்காய்நெல்லி மருவுந்தாழிதயிலுடனே
முன்னேரேத்துநெருஞ்சிநெய்தன் முழுநீர்ப் பூலாமுசுமுசுக்கை
இன்னவாருழிப்பதுவு மினியசிற்றாமல்லியுமே. ருஉக

(வேறு.)

முல்லைநிலக்குமிழ் பேராமல்லிதானு
மூற்றநன்னாரிபாலாமிச்சம்வேருங
நல்லவிருவேலிபிராமுட்டிதானு
நரிப்பருதண்ணீமிட்டானரிச்சாருக
யல்லாமலாவின்பாலிை நீர்நாழி
யானசயிர்தண்ணீருமதுபோற்கூட்டி
செல்லரியகோஷ்டமதி மதுரஞ்சந்தஞ்
சீரகந்தக்கோலமிலவங்கஞ்சேரே. ௫௨௨

(வேறு,)

கோலமாஞ்சாத்திரபேதி கிளியூரன்மாஞ்சிகுட்பை
ஏலங்கச்சோலங்கிரும்புமிருவேலிசாதிக்காயும்
வாலநாகம்வாசி வகைபாலேரொன்றிருகழஞ்சு
மாலாய்க்கூட்டுநெய்நாழி வகையாய்க்குடிக்கநல்லதிதே. ௫௨௩

நல்லசீனிநெய்சரியாய் நக்கசலமுஞ்சிக்கல்விடும்
வெல்லும்வங்கசெந்தூரம்விதமாய்க்கூட்டுமண்டலங்கொள்ள
வெல்லாங்கெடுத்துவுள்ளுலேந்துவெப்புங்கடுப்பு மேனுளைப்புங்
கோல்லவந்தபிரமேகங் குணமாமென்றுகூறினரே. ௫௨௪

(பிரமேகத்தின் குணம்.)

மூகமேகாந்திநெஞ்சுலர்ந்து மூறுத்துமு...லுநடுநடுங்கி
நகமேபுரிந்துசீர்நெகிழ்ந்து நஞ்சுண்டலர்போன்மிகச்சேர்ந்து
பகலுமிரவுமுருகியுடன் பகருமேனியுந்தளர்ந்து
மிகவேதவனமுண்டாகும் வேண்டாதன்னம்வேண்டாதே. ௫௨௫

மெய்யேவேர்த்துடனறிவிழியேபலகான்மிகமூடி
கைகாலெரித்துநாவுலர்ந்துகமலமுகமும்வெளுவெளுத்து
ஐயோவுடல்தானேவுதெனவயர்ந்து கிடக்குங்களுக்காணும்
பொய்பாதவனமுண்டாகும் பொருந்தாதன்னம்பொருந்தாதே. ௫௨௬

(வேறு.)

விட்டதோர்சலமலங்கள் விமுரிகம்வீசுமாகில்
மட்டவிழ்க்குழலினளே மாங்கிஷதோஷமென்க
தொட்டதோர்தோளின்மீதே சோரையுமுடையேநாறுங்
திட்டெனமாம்சஞ்சேரா தீர்ந்திடரோகமென்னே. ௫௨௭

(வெண் பா.)

காயுங்குளிருங்கனத்துந்தலைவலிக்குந்
தோயமிகவுள்ளெரித்துத்தோன்றுமே-காயம்
வரளச்செயற்கெய்யுமாச்கிஷமும்வற்றும்
விரளப்பிரமியமாமே, ௫௨௮

(வேறு,)

ஏதொருரோகத்தாலு மெடுத்தகோசலத்திலங்கக்
கேதருவறுகம்புல்லாற் கேசாதிநல்லெண்ணெய்விட்டால்
மோதுபோர்தனத்தினுளே முகிர்ந்திடாதவர்ந்ததாகில்
மாதுசேரிறைவன்சொன்னர் மரணமுந்திண்ணந்தானே. ௫௨௯

(வேறு.)

இரதமீயஞ்சேங்கொட்டை யிலகுஞ்சங்குவெண்ணீறு
உரமேசெய்யுமஞ்சளோ டொக்கவோரொன்பதுவுந்தான்
றரவேநாலுகழஞ்சாக்கிச் சமனேசெய்துபொடிகூட்டி
விரவாயிடவேவேர்ப்புண்ணு மீளும்வாதபிரமியமே. ௫௩௰

(வேறு.)

வெட்பாலையகிலாவாரை வேர்கொம்புசந்தமுத்தம்
பற்படாகநிலவேம்பு படலநந்திபூவில்வ
முற்பனங்கியாழம்வெந்து வுண்டிடிற்பிரமேகங்கள்
விற்பனமுடனேதீரும் விஷதிரிதோஷம்போமே. ௫௩௧

(வேறு.)

முள்ளிவேர்நாவல்வரட் பூலாரண்
முற்தமொடுநன்னாரிமுல்லைசீந்தி
தெள்ளியசெந்தாமரையுஞ்சிற்றுமுட்டி
சீதேவிநிலவாகைசிறியகீரை
கொள்ளுவதுபருவேலிபொன்னாங்கண்ணி
குலாவுமிலாமிச்சமொடுகுளரியாம்பல்
மெள்ளவதிலாவின்பால்விட்டுக்காய்ந்து
மீளவேமுன்னென்றுய்வெந்தவாறே. ௫௩௨

என்றதறபின்னெய்காழிதானுங்கூட்டு
வினிச்சினிமுந்திரிகைபெருஞ்சீரந்தான்
குன்றவிடுமேலம்பச்சிலைநாகப்பூ
கோஷ்டமுடன்கச்சோலங்கிரியசீர
மணடலங்கேளிதைவேதிசந்தந்தானும்
வங்கமொடுகிளியூரற்பட்டிகூட்டி
நன்றதுசெண்பகமொட்டுமேதுரநெல்லி
நாடவின்றேற்பன்னகாப்பழம்பத்தோலே. ௫௩௩

(வேறு.)

இன்னநல்லசீரகமுமியல்பாயதுவெந்தேவடித்து
மின்னுமனைமண்டலமிதனை மேவியிதனைவிரும்பியுண்ண
சொன்னபடியேபிரமேகந்தொடர்ந்தேயோடுமென்றுசொல்லி
அன்ஙியமில்லாமல்முனியருளியவாறிதுதானே. ௫௩௪

(பத்தியக்கறிவகைகளறிய.)

மானேவிழியார்க்கதிகேளீர்மலநீர்கழிந்தமானிடர்க்குக்
கானல்வாழைமுயலுடும்புகாடைசேவல்கவுதாரி
யூனம்வெள்ளாடுப்புகண்டமுள்ளாகுமிதுவல்லால்
மீனல்சுறாவாம்வீரலாமைவிதமாங்கறிகள்விளம்பக்கேளே, ௫௰௫

பூமொய்த்திருக்குமுருங்கையிலைப்பூவும்பிஞ்சும்புடலங்காய்
தீமையில்லாமுசுட்டைவிலைசிறந்தகாணித்தூதுவளைத்
தாமேயிதனைத்தான்கூட்டுதப்பாமொழியும்பிரமேகம்
நாமாம்வியாதியடங்கலுக்குநவின்றகவிகளிதுவாமே, ௫௰௬

கொள்ளுங்காடிமட்டிக்காய்கோழிபன்றிபூசினிக்காய்
முள்ளுபெரியபாவற்காய்முருகிநல்லசுரக்காயும்
கிள்ளுங்கீரையரைக்கீரைகிளருஞ்சேம்பப்பயறுடனே
எள்ளத்தனையுந்தின்பீராலிட்டமருந்துமிழந்திடுமே. ௫௰௭

மாங்காயிளநீர்வழுதலங்காய்மாப்பண்டங்கள்புளிகடுகு
தேங்காய்புற்றும்பெருங்காயந்திருவுக்கிணையாம்ஸ்திரியுடனே
நீங்காதிருநதமைதுனங்கணேசம்பயிலுஞ்சுரபானம்
வாங்காதிருக்கிலுண்டமருந்தெல்லாமபலிக்கும்வாய்மையிதே ௫௰௮

விடையங்கன்மதமஞ்சனக்கல்வேர்க்கொம்புடனேமுத்தக்காசு
அடவாய்வெள்ளிலோத்திரமுமரியகூகமதிமதுர
முடனேபொடித்துமுக்கழஞ்சு பழக்குக்கழுநீருடனுண்ணில்
திடமாமற்றமதிசாரந்திர்தோஷத்தோடெலும்புருக்கி. ௫௰௯

(வேறு)

கிஞ்சுகம்புரண்டைவேளைகீழ்க்காய்நெல்லிபொரிதலையும்
வஞ்சக்கருப்பானுடனெருக்குவனத்திஞெச்சிமேனிகள்ளி
துஞ்சவேதுவைத்துச்சாறுபிழிந்ததிற்பொடியுமிட்டு
அஞ்சவேவெந்துதின்றூலதிசாரமோடிப்போமே. ௬௰

முத்தக்காசுசுக்குஏலமுந்திரிவங்கம்பேரகில்வேர்
மெத்தகூதம்பாவட்டைவிடையநாபிவெட்பாலை
கொத்தான்சுண்ணடகிலுப்பைதுத்துங்குரும்பைவில்வைபிசின்கடுக்கா
யொத்துக்கூட்டியரைத்துண்ணவோடுந்திரிதோஷந்தானே, ௬௰௧

(வேறு.)

ஆவாரைமுல்லைமின்னையநங்காந்தஞ்சிறுவேர்சுக்கு
மாவடங்குகுருந்துவத்திவசம்புபூலாங்கடுக்காய்
நீவிழியிவைகியாழநீர்க்காய்ச்சிக்கொள்ளும்போது
பாவிந்திரிதோஷங்கள்பறந்திடுமேகந்தானே. ௬௰௨

(வேறு.)

புகைந்தேயிருமல்வரட்சியுண்டாம் பொருந்தியதுவுமிடுக்காகத்
தகர்ந்தேகண்டித்தெலும்பதனைத்தகரப்பொடிக்குந்தண்மையென
வகைந்தேமூச்சுமிளைப்பாகும்வந்தவிருமலின்னதென்று
மிகுந்தோர்பேசும்வாகடத்தைவினவியறிந்துவிளம்பீரே, ௫௪௩

(வேறு.)

இருமலேப்பிளைப்புமுண்டாமீளையுமிகுந்துவாங்கு
மருவியேவயிறுந்தானுமந்தமேபற்றிநிற்கு
உருவழுன்றுடலும்வற்றியுறுதியேகெடுமேயாகில்
அருவியேயிருமனிற்குமதுகாசசேத்மமாமே. ௫௪௪

(வேறு,)

விண்ணைச்சுழலுந்துயரமிகும்வெளுத்துவற்றித்திமிர்ந்தேங்குங்
கண்ணைப்பார்த்துமஞ்சணித்துமுகங்கால்கைகல்தான்வெளுக்கு
மெண்ணிக்கருமமொன்றுசெய்யிலீளைமிகுந்துதுயருண்டாம்
நண்ணுங்காசசேத்மமிதுநன்றாயறிந்துகொள்வீரே· ௫௪௫

கையாந்தகரைபீலியிலைகடியவாடாதோடைநொச்சி
செய்யவளருமாமணக்குசிறக்கவந்தவிலைச்சாறு
பொய்யாதிருவுநாழியதுபோதக்கிட்டம்பொடிசெய்து
மெய்யாய்நாழிப்பொடிபோட்டுமீளச்சுவறவெயிலில்வையே, ௫௪௬

வைத்தேயெடுத்துவகையுடனேமணக்குங்கிராம்புதிரிகடுகு
மெத்தவிலவுப்புடன்கூடடிமேவுமயத்தூட்களுஞ்சீரம்
நைத்தவுள்ளிசரஞ்சாலைநலமாயொன்றுமுக்கழஞ்சு
கைத்தகரைபிரமியிலைகசக்கிச்சாற்றாலரைத்துலர்த்தே. ௫௪௭

உலர்த்திப்பொடிசெய்தேவைத்துவொருநாளொன்றில்வெருகடிகொள்
பிலத்தபித்தபாண்டுவெனிற்பேணியிதனைநெய்யிற்கொள்
நலத்தவெப்புபாவையெனில்வெண்ணெயுஞ்சீனியிற்கொள்ள
கலக்குங்காசசேத்மமெனிற்காய்ந்தபசும்பாற்றனிற்கொள்ள. ௫௪௮

மாதர்மயக்கின்மருந்தூட்டில்லுளருமிருமற்புலானுறுஞ்
சேதமிகவேபயித்தியமுஞ்செறியாதெரித்தேயேப்பமிட்டு
வாதமிகவேவான்படுத்திவருத்துமீளையிருமலுண்டா
நீதியில்லாதேவளர்சிரத்தினின்றேமயக்கிக்கொன்றிடுமே. ௫௪௯

(வேறு.)

பொக்கனம்பிச்சிமூலம்போதவேதாணிடித்து
தக்கதோராவினெய்யிற்றான்றுகுழைத்தருந்தில்
துக்கமேயெழுப்பிமெய்யிற்றயருள்ளரோகமெல்லா
மிக்கனைகமபக்கந்தீருமிகுந்தவஞ்சனையும்போமே ௫௫௰

(புத்தியங்கார்க்கவும்.)

(ஆசிரியவிருத்தம்.)

திரிபலைதிரிகடுகுதேற்றாவின்மணியுடன்
சீரகமுமிரண்டுமுடனே
செய்துமதுரமிந்துப்புமோதகஞ்சன்னிவிதை
சேருமுத்தக்காசுடன்
கரிவட்டுநன்னாரிநாதுவளைவெள்ளுள்ளி
கழஞ்சிவைகளொன்றாகவே
கனலிட்டுவோடிட்டுவரிதானதூள்செய்து
கனிதேனெய்தன்னிலிடவே
தெமிபட்டுபின்புடன்சேர்த்துக்குழப்பிடத்
தீருமவ்வியாதிகேளாய்
சேத்மங்கிரந்தியுடனீளையிருமல்வளர்
சிக்கென்றநெஞ்செரிப்பும்
கருவிட்டமேலூர்ப்புமென்றுமேசொல்கின்ற
காயாசுவாசமேழும்
கைகண்டவித்தையிதுமெய்புண்மையென்றுசெறி
கலைமுனியியம்பினாரே, ௫௫௧

(வேறு)

வீங்கும்வற்றுமொருபக்கமேனிவாண்டுவெளுப்பேறுந்
தூங்குங்கண்கள்தலைகனக்குந்துயரமிகுந்தாதிக்கும்
வாங்கும்பொசிக்கவொட்டாதுவாயுவுடலில்விஷம்போலே
ஓங்கிக்கொல்லும்விஷபாகமுற்றுச்சொல்லுங்குணமிதுவே. ௫௫௨
கிட்டங்காந்தமிந்துப்புக்கிரியான்சீரந்திரிகடுகு
வட்டகையாஞ்சாறதனில்வடிவாயரைத்துவுலர்த்தியபின்
திட்டமாகத்தேனிலுண்ணத்திரும்பித்தப்பாண்டுவுடன்
விட்டுக்கொல்லுமவிஷபாகம்விரைந்தேயோடிப்போய்விடுமே. ௫௫௩

(வேறு)

இருமியேகாரலுண்டாமிடையிடைசுரமுந்தோன்றில்
அருவியேபமிடறுங்கம்முமற்பமேவாங்கியாகு
மருவியவசனந்தாலுமறுத்திடுநாளும்வற்றுங்
கருகியேகுறைந்துவாடுங்கயரோகமென்னலாமே. ௫௫௪
இந்தநோய்வந்தநாளிலிதுகாயரோகமாகு
முந்தவேவெப்பும்பித்தமுடுக்கிடக்குளிருமேலும்
வந்தநோய்குணங்கட்கண்டால்மயங்கிடுமெந்தநாளுங்
கெந்தொகையாவின்பாலுங்கீரையும்பருகலாமே, ௫௫௫

(வேறு.)

சிறுசுண்டைவேறுமலம்பன்னிரண்டு
சேர்த்துவிடுபதினைந்துபடிநீராக

மருகநாளொன்முக்கிவளர்பூநாக
மாதளங்காய் சிரகமும்பலமோரொன்று
நறுநெயுமாவின்பால்படியுமூன்று
நற்புழுகு மிட்டுவடிதிதனையுணண
அருங்கசரோயிளைபிணியனைத்தும்போமென்
றருளினார்பொதியைமுனியருளினாரே. ருருசு

(வேறு)

திரிகடுகக்கிருகார மிருசிரநெல்லிக்காயுங்
குறையாமதுரஞ்சரிகொண்டு கொடியாங்குன்றியிலையுலர்த்தி
அரிகாயுடனேசமன்பொடித்து வதனிலுள்ளேகலந்துகொள்ள
வெறியாங்கசரோகந்தானும் வெருண்டேயோடிப்போய்விடுமே. ருருஎ

(மாந்த குணம்.)

(வேறு.)

இருமுச்சுரமுந்தலைவலியுமிரங்காதென்னவிஷம்போலே
பெருங்கருத்திக்குடலுளைத்து பிசுற்றும்மபரில்வாய்வெருவு
முருகிச்செல்லுங்கெடிபுலர்த்து முறக்கமறவேவிழுந்திருக்கு
மொருமைப்படவேவருத்த முண்மாந்தைசெய்யுங்குணமிதுவே. ருருஅ

(வேறு.)

நெஞ்சுடன்பழுதுப்பக்க நினைவழித்திருமிநொந்து
பஞ்சுபோற்சுரமுந்தோன்றும் பழுத்துள்ளேசலமுங்கட்டு
மஞ்சவேயையபித்தமசனமுமொருத்தவந்தா
லுஞ்சிடாதுண்மைசொன்னே முன்மாந்தைக்குணமிதுவென்றே. ()

(வேறு.)

ஆடாதோடைபுளிநரம்பு வரியமலாவின்விறைவெட்டுக்
கூடாய்ச்சுக்குதேவசாரங்கொமயாய்ப்படருமுடக்கொத்தான்
வாடாமஞ்சள்சிறுசுண்டவருக்குங்கழஞ்சுவேர்நிறுத்து
தோடார்துத்தித்திருவாதித்ச் சொல்லுமூன்றுபலங்கொள்ளே. ருசுய

தமரைமூலம்மொன்றுதக்ககோஷ்டங்காற்பலமுங்
தாமஞ்சிரநாற்கழஞ்சு தானெற்பொறியுமிருகழஞ்சு
ஏமந்தண்ணீர்படியெட்டு விதனிலிடித்திட்டேகாய்ச்சி
ஓமந்திப்பிலிப்புழுகுபொடித் துண்ணுள்மாந்தைசுரம்போமே. ருசுக

பூவரசஞ்சார்நெய்நாழிபொன்னரிதாரமரைக்கழஞ்சு
மேவிக்காய்ச்சிநன்றாகவிதமாய்வடித்துக்கொணடதன்பின்
னீவார்விழியாயெட்டுநாளிதனையருந்துவீராகி
லோவாருளமாந்தையுமோடி யொளித்தேபோகுங்கண்டீரே. ருசுஉ
குன்றிமுட்டைக்கொடுவேலி குறையாதிதுவும்பருத்தியிலை
நின்றேறிலந்திங்கு ழிவேரு நீதிமலும்பீபிபில

சென்றோர்பிடிகொள்சிற்றமல்லி சேரவரைத்தாவின்பாலில்
அரைத்தேகுடிக்கிலுன்மாந்தையலுஞ்சில்புண்ணுறிடுமே. ௫௬௩

(வேறு.)

வெந்தயமுஞ்சீரகமுஞ் சினக்காரம்
விடையமொடுகொத்தமல்லிகல்நார்சாறுஞ்
சந்தனமுந்திரிகடுகுதிரிகடுகுதிரிபலாதி
தாஞ்சிவதைச்சமனுகக்களிஞ்சுவைவந்து
முந்தவேபொடித்தாவினெய்யிற்சேர்த்து
முயர்ச்சியாய் வெந்துவடித்துள்ளேகொள்ள
உத்திமேலயிருமுகின்றகயரோகம்போ
முண்மாந்தைசயநோயுமொழிந்துபோமே. ௫௬௪

(வேறு.)

நிலக்குமிழ்சூடரிபூலாநிலத்துறுநிம்பற்சம்பு
பலப்படவைத்துங்கொள்ளப் லசரக்கதனைக்கேளாய்
நலப்படக்கோஷ்டமுள்ளி நாக்கடுதான்றிநெல்லி
குலப்படுமதுரம்பாடற் கூட்டியேயெண்ணெய்வையே. ௫௬௫

(வெண் பா.)

குறுஞ்சியிலையைக் குருவைநெல்மாவில்
சிறந்தகளியெண்ணெயுடன்றின்ன-வருத்த
உளமாந்தையுண்டூமச்சுடலேயுள்ள
களவுமற்றரோயேகுங்காண் ௫௬௬

வேங்கைமாத்தோலுடனேவெண்குருவைநெல்மா
வாங்கதனையேபிட்டதாசியே-பாங்குடனே
யெண்ணெய்தனிற்றேல்த்தரூந்திலெண்ணுமுண்மாந்தை
புண்ணதுவுஞ்சீயோடிப்போம். ௫௬௭

உப்பிலின்வேருமுயர்ந்தவிடத்தலையுஞ்
செப்புமுசுமுசுகைச்சோக்குமிழு-மிப்படியே
கோவின்பாற்றண்ணீர்குடிக்கவிழுந்தேடுந்
தாவுமுண்மாந்தையதுதான். ௫௬௮

(வேறு.)

சித்தரந்துஞ்சிவன்வேம்புந்திருந்துநிலத்திருத்தின்குமிழம்வோ
கொத்தங்கோஷ்ட்டமவெம்பாடற் குலவுங்கருஞ்சீரகமதுர
மெத்தமிளகுசிரசங்கருப்புவெந் பெண்ணெயருந்தினபின்
பத்தேயெட்டுநாளதனிற்பறந்தேயோடுமுண்மாந்தை. ௫௬௯

(வேறு.)

இடுப்புடன்முதுகுந்தண்டு மிருபுறருலாவுநெஞ்சு
நடுக்கியகுளிரும்வெப்புநையவேகொதித்துக்குத்தி
கடுத்திடுமுதரநோகுங்கணமயங்கிருமிச்சியுங்
கொடிகொள்ளவிழுந்ததனற் கோழைவிப்புருதியாமே. ௫௭௰

(கோழைவிப்புருதியின்குணம்.)

இந்தநோய்கின்றுநாளு மிருமியேசயமுமுண்டாம்
வந்துதாநாவும்வற்று மறுச்திடுஞ்சோபமாகு
முந்தவேயையபித்த முடுகிடுங்குளிர்ச்சிவெப்பும்
வந்துமூச்சிளைப்புரத்தம் வந்திடில்மரணமென்றே. ௫௭௧

(இதற்குச்சூரணம்)

காரீயமிரதங்காரங்கஞ்சாதிரிகடுகிந்துப்பு
யாரீயதிரிபலாதி யமுக்கிருசித்ரமூலி
கூரியகுமரிகையான் சாற்றினிலரைத்துலர்த்தி
கோறியேதேனிற்கொள்ள கோழைவிப்புருதிபோமே. ௫௭௨

(வேறு.)

இலுப்பைபுண்ணாக்குகன்னையெடுத்திருகழஞ்சதாக
வலுப்புடன்வெந்நீர்விட்டு வகையுடனரைத்துநன்றாய்ச்
சலிப்பிலாதருந்துவார்க்குச் சதிசெய்யுமிருமலிளை
குலுக்கவேசெய்யும்பொல்லாக் கோழைவிட்புருதிபோமே. ௫௭௩

(மந்தாரகாசகுணம்)

அண்டியேயிருமல்குத்து மடிக்கடிரத்தம்வீழ்ந்து
மண்டியேயுடலும்வற்றி வழுவழுத்துலர்த்தும்வாயும்
பண்டியுஞ்சுருங்கிநாளும் பதங்கெடவருமேயாகி
லுண்டில்லையெண்ணரத்த ரோகமென்றுரைக்கலாமே. ௫௭௪

கோவையேமுசுமுசுக்கை குன்றியுங்கொடுப்பைநெல்லி
யாவரைக்குமரிக்கொற்றா னும்பல்வளையுஞ்சவ்வீர
மாவின்பாலிளநீர்செய்த லக்கிருகோட்டஞ்சத்தம்
பாவித்துப்பழங்கள்சேர்த்துப் பகரமாய்ச்சரத்தம்போமே. ௫௭௫

(மந்தாரகாசகுணம்.)

தூயதோர்நாசிதன்னிற் றம்மலுமிகவுண்டாகி
நோயுநீர்விழுந்துநெஞ்சு நேர்ந்தடைந்துளையவாங்கு
மாயமந்தாரகாசத் தடையிதுவாகுமென்று
மாயமாமுனிவன்சொன்ன வண்மையைக்கண்டுபாரே. ௫௭௬

கண்டமுமுகமுங்காதுங் காயமும்பொருமுமாகிற்
கொண்டமந்தாரகாச குறிகளின்குணங்கண்டாயே
மூண்டகமுகமுங்காது மோசரித்தாலதாகின்
மண்டியேயிருமற்றானும் வந்திடிற்காசமாமே. ௫௭௭

இக்குணந்தன்னிலொக்க விருமலுமிளைப்புண்டாகுஞ்
சிக்ககனநெஞ்சைக்கட்டிச் சிறிடுமிறுகப்பற்றி
மிக்கதோர்வயிறுதானு மிகுந்துதான்பொருமுமாகிற்
பக்கமந்தாரந்தன்னிற் பற்றியகாசந்தானே. ௫௭௮

சாரணைக்கிழங்குமற்ற சதாவேரிகிழங்குகூட்டி
வீருள்ளசிந்தி வெட்டு விரும்பியேயாடாதோடை
மாரியபிரமிமஞ்சண் மாதளைத்தூதுளைச்சாற்
றுரியவமுக்கிறுவு மதுவைதுபலமாய்க்கொள்ளே. ௫௭௯

கொள்ளுநூறுநாழிதண்ணீர் குமுறவேசேரவிட்டு
மெள்ளவேகாய்ந்ததூரி வெந்ததுநாழியானல்
எள்ளதிலெண்ணெய்தானு மிருநாழிகூட்டியொக்க
துள்ளவேகிண்டிகாய்ச்சிச் சொல்லியசரக்குகூட்டே. ௫௮௰

சொல்லியசரக்குக்கு திப்பிலிமிளகிந்துப்பு
நல்லசீரகமுதோத நல்லகர்க்கடகசிங்கி
வெல்லிடுஞ்சிராம்புமேலாம் வெள்ளுள்ளிகடுகுரோகணி
செல்லுமுக்கழஞ்சுகொண்டு தின்னமந்தாரம்போமே ௫௮௧

மந்தாரகாசம்போகும் வாதைசெய்வாதப்போகும்
பிந்தவேபித்தம்போகும் பெரியதோரையம்போகு
முந்துவல்லிருமலீளை முடிகியேயொழிந்துபோகுஞ்
சந்தமாமுனிவன்றனுந் தமிழுனலுரைசெய்தாரே. ௫௮௨

இரத்தரோகத்தின் குணம்.

(வேறு.)

தலையும்வலித்தோர்நாசிதனிற்சளியும்விழுந்துவோடுபட்டு
வலியுநாளேமிகச்சென்றால் வாணடேயிளகித்திரண்டுவிழு
முளையுழிகவேநாற்றமதா யூடேதண்ணீர்விழுந்திடுமே
பிலமுநாசிதனையடக்கிற் பெரியோரீதுபீனிசமென்பார் ௫௮௩

தலையங்கனத்துவலுத்திருக்கிற் றுழுப்புண்ணுமுக்கழுகி
யலையுமோடுபோலுண்ணக் கிலதிகப்படவேமாறுது
நிலையுங்கெடவேபரிகார நித்தஞ்செய்துவருவிரார்
றலையுஞ் சொன்னோம்பீனிசமுஞ் சொல்லுங்கையில்வரட்சியும் போம்

(வேறு.)

முகமதுகனத்துவிம்மல் முந்தியேவிளைவேயென்று
லகமதுமழைநீர்போல நாசியில்விழுந்து தும்மல்
தகமதுநெருளார்தானே தாங்கியேதலையிற்குத்து
மகமுடன்குளுமைவந்து வடுத்தபோதுடற்கனக்கும், ௫௮௫

(வேறு.)

கடுத்துமுதுகுமெலும்புடனே கடியபிடறிகனத்துநொந்து
மெடுத்தகரப்பீனிசமு மென்றுகவுனமாமுனியுந்
தொடுத்தேயுரைற்தார்குணமிதென்று தோன்றும்புவியின்மனிதருக்கு
அடுத்தோரிதனைவாகடத்தி லன்பாயிதனையறிவீரோ, ௫௮௬

காலுங்கடுக்குமுடற்குத்துங்கண்ணுமூக்குஞ்சளியெடுக்கு
மேலுமிகவேவிளிறிவிடுமிகுந்தேமண்டைசீவிழுகுஞ்
சேலாயிரத்தந்தான்விழுந்துசிணுங்கிமுகமுங்குணுகுணுக்கு
மேலுநஞ்சமதுபோலமிகவுமூர்க்கமில்லையதே. ௫௮௭

இதற்குநெய்யெண்ணெய்,

கொந்தார்குழலாயாமணக்குங்கூறுமாவினெய்யுடனே
சிந்தைமகிழுமெள்ளெண்ணெய் சேர்ப்பாய்முன்னுமொருசீரையாய்
சந்தாங்முலைப்பாலாவின்பாற்றக்ககடுக்காரோகணியம்
வந்துமிருந்தவரிதாரம்வளருங்கடுகுமிளகுடனே. ௫௮௮

உடனேசுக்குதான்றிக்காயற்றமதுரமிலவங்கள்
கடியமல்லிசிரகமுங்கனத்தநெல்லிப்பருப்புடனே
துடிசேர்கரியசிரகமுஞ்சொல்லுங்கார்சோலரிசியுடன்
படிகொள்வேலிச்சந்தனமும்பகர்ந்தகாரமிலாமிச்சம். ௫௮௯

பகர்ந்தசரக்குகழஞ்சதொன்றுபருத்ததும்பைதவேளை
தகர்ந்தகுமரிகாய்வேளைத்தாழைபுழுதுபொன்காணி
மகிழ்ந்தகணுக்குள்ளானுமாவல்லாரைப்பொடுதலையும்
புகழ்ந்தசெருப்புச்சிறுசீரைப்பின்னுந்தாயைக்கொன்றனே ௫௯௰

கொன்றன்கிழங்குமிலைமிகுந்துகூட்டியிடித்துத்தனித்தனியே
தன்றுச்சாறுதானுடனேதயவாய்ரண்டுமொன்றாக்கி
நன்றாய்வெயிலிற்காயவைத்துநலமாயெண்ணெய்த்தான்கலந்து
பண்டேதீயில்வேகவைத்துப்பதமாய்மெழுகுபோலிறக்கே, ௫௯௧

பதமாயெண்ணெய்சிரசில்வைத்துப்பண்பாய் முழுகிவந்தக்கால்
விதமாய்முன்சொல்பீனிசமுமெட்டுக்குத்துமண்டைதனில்
இதமாய்ச்சிரத்திநோவுகளுமேவும்பித்தமுதலாக
மதமாயோடுஞ்சிவனாணைமாறுங்கண்டாய்மடமயிலே. ௫௯௨

சிந்தில்வட்டுத்தூதுவளைசிவனார்வேம்புநிலவேம்பு
போந்தபன்றிக்குறும்பணையும்பொன்னாங்காணிநிலக்குமிழ்வேர்
சேர்ந்ததேவியார்நிம்பஞ்சிற்றாமல்லிபேர்மல்லி
ஆய்ந்தமுத்தக்காசுமுக்குவதன்மேற்பால்விட்டூறுவதே. ௫௯௩

ஊறிக்காய்ந்துவைந்திரண்டாயுறவேவெந்துபிழிந்துவடி
ஆறிப்போவதினமுன்னேயளந்துநெய்யுநாழியுரி
கூறிட்டிடவேநல்லெண்ணெய்குறையாதளவாயொக்கவிடு
வேறிட்டிடித்துவேப்பந்தோல்மிகவாய்ச்சாறுதான்கூட்டே ௫௯௪

கூட்டுமிளகுதிப்பிலியுங்கோஷ்டமேலமதிமதூரம்
ஊட்டுவசம்புவெள்ளுள்ளியுயர்ந்தகடுகசிங்கிநெல்லி
வாட்டமில்லாத்திருவேலிமற்றக்கிரும்புவசுவாசி
காட்டியிற்பயிலுங்கிளியூமல்கண்டிவெண்ணெயதுகொள்ளே, ௫௯௫

கொள்ளேகொத்தமோதகமுங்கூறும்பச்சைகச்சோல
றள்ளேகரியுசீரகமுநச்சீரகமுங்கொத்தமல்லி
தள்ளாதொக்ககுக்கிலொடுசெடையாமாஞ்சிரோகணியும்
உள்ளேகொன்றுவருவீராதோடிப்போகும்பீனிசமே. ருகசு

இரதஞ்சங்குமுடிகாரம்லிங்கங்கெந்தியரிதாரம்
வருகுந்துருக்கம்பாஷாணம்வகையாம்நாறுபட்டிலிட்டு
சரதமுறவேதிரியாக்கித்தருநெய்யதுவைத்துத்திக்கொளுத்தி
விரதமாகாசிபுகைவிடவேபீனிசம்வேரறுமே. ருகஎ

(கலிவிருத்தம்.)

பத்தியங்கோழிமுட்டைப்பசுவின்பால்
மற்றநெய்யாமுருங்கையுமாசிலா
வற்றிக்காயுமடவுடனேகொள்ள
நித்தநித்தநினேவுடனுகுமே ருகஅ

(வேறு.)

கண்டமுகமுமூரந்தோடிக்கரகரத்தூர்வதேபோலத்
துண்டமுமுளெந்துபற்றித்தும்மலிற்றண்ணீர்வீழ்ந்து
மண்டையுங்கனத்துநொந்துவாதமும்பசைக்குமாகின்
முண்டகமுகத்துமாதேமூக்குநீர்பாய்ச்சலாமே. ருகக

கணடமேன்முகங்கள்காதுகரகரத்தூர்வதேபோல்
துண்டதிற்றும்மலுண்டாய்ச்சொரிந்துதான்மூலம்வீழ்ந்து
இண்டுமேயெரித்துநொந்துவிருநாசிகனத்தடைத்தாற்
பண்டுசேர்மூக்குநீரின்பாய்ச்சலாமென்னலாமே. சுா

(பீனிசநெய்,)

சாரணைக்கிழங்கிந்துப்புசாந்தமாமிளகுசீனி
கூறியநறுநெய்தன்னிற்கொண்டிடுமுலைப்பால்விட்டு
வீரதாய்நையத்தட்டிவிடுவதுநசியமூக்கிற்
சீறியமுகத்தின்றேன்றந்தினவுடனடைப்பும்போமே. சுாக

(வேறு,)

சித்தாமுட்டிசிறுகிரைசிந்திற்றண்டுநிலவேம்பு
முத்தமுடனேதூதுவளேமோதமரியவமுக்கிருவு
முத்தந்தாழிக்கொடியுடனுமோரிலேத்தாமரைசமூலம்
பத்திரியுடனேநன்னுரிபார்த்துப்பலங்கொள்ளோரொன்றே.

(வேறு.)

பத்தாகவிவையெல்லாஞ்சேர்த்திடித்துப்
பாங்குடனேயாறுபடிநீரிற்காய்ச்சி
யுற்றபால்நாழிவிடுசெமனதாக
வுரியாம்பல்நெய்யுள்ளிநல்லெண்ணெய்கூட்டி

யுற்றகோட்டமதிமதுரமிலவங்கந்தானு
முதிர்ந்தகருஞ்சீரகமிந்துப்பு
முத்தந்திரிகடுகுவனசக்கிருகழஞ்சு
மூட்டிவடித்தருந்தமுன்னீர்நோய்போமே. சூஈ௩.

(வேறு.)

நிலப்பனைகிழங்குநல்ல நீர்வள்ளிக்கிழங்குதானு
நலக்கொணுநெருஞ்சிநல்ல நரண்டைத்தூதுளைமுருங்கை
யுலக்கமுத்தம்வெள்ளரிக்கா யுறமுறுஞ்சித்தாமுட்டி
பலிக்குநெல்விசிறுகீரைப்பண்பாய்க்குமிழம்புடல்கரிப்பான், சூஈச

சுட்டுமெலரின்குழலாளே சொல்வேனினியுமினிதுபெற
காட்டுமல்லிகையுநொச்சிக் கடியபூனைக்காலியுடன்
வாட்டமறவேயோரொன்று வகைக்குநாலுபலமாக
கூட்டிபின்பதக்குத்தண்ணீர் கொள்ளுவதாகத்தானே. சூஈ௫

(வேறு.)

கரிப்பான்சார்பால்நாலுபடி கனத்தவிஞ்சிமூந்திரிகை
இருத்தாமிச்சிறுவேலி யிஞ்சிமிளகுசுக்குடனே
மூருத்தமுத்தநன்னாரி முத்தவகிலுந்தாரமுடன்
விரித்தமேலமிலவங்கமிகுத்தமதுரங்கோஷ்டமுமே, சூஈ௬

(வேறு.)

கற்கடகசிங்கிவெந்தயமிந்துப்பு
கனத்தகருஞ்சீரகமுமோமந்தானுந்
திப்பிலியுஞ்சீரகமுஞ்சாதிக்காயுஞ்
செஞ்சந்தங்கிரும்புவசுவாசிதானுந்
தக்கோலஞ்சதகுப்பைசிறுநாகப்பூ
சமுத்திராப்பழமுடனேதிரிபலாதி
வர்க்கமகிழ்வாலுழுவைசெண்பகப்பூ
மஞ்சண்மரமஞ்சள்பச்சிலையுங்கூட்டே. சூஈ௭

(வேறு,)

மஞ்சிட்டிகச்சோலந்தான்மருகவோரொன்றதுகழஞ்சு
மிஞ்சம்பசுவின்பால்விட்டு விளையவனைத்துக்கலக்கியது
துஞ்சாவடித்துக்குடித்துவரத் துலையுக்கோடிப்பித்தமுதல்
முஞ்சிப்பாண்டுகாமாலை மூக்குநீர்ப்பாய்ச்சல்போமே, சூஈ௮

(கபாலத்தின்குணம்,)

(வேறு·)

புருவஞ்சுழியினின்றுகுத்தும் போதப்புதியகல்லாம
லுருவக்குத்துமுச்சிதனிலோடியடங்குஞ்சரீரத்தின்
மருவீசிபபோற்குழல்மடவீர் மறுசொற்படிக்குவகையில்லை
பெருகுங்கபாலக்குத்தென்று பேசினார்கள்பெரியோரே. சூஈ௯

புளியின்றோலுங்குளியானை
பொருந்துங்காஞ்சிரம்பொருக்குகோட்ட
முலுத்தகுமஞ்சான்றன்னுடனே
மோரிறகாடிதனிலரைத்து
செலுத்தநெல்லிமோர்காடி
செல்லுமெண்ணெய்குனிற்காய்ச்சி
கலித்தமூக்கினைசியமும்
கபாலநோயக்குத்தலைமுழுகே. சூ௱௰

(மண்டைவரட்சிகுணம்.)

கண்டந்தன்னின்மேன்மூன்று கதித்தமண்டைவரட்சிதன்னாற்
றுண்டம்புருவங்கூடுகிலுஞ் சுழியிற்கண்ணிற்குத்துண்டார்
மண்டுந்துயரமிகவுண்டாம் வலைபோற்கண்ணுந்தெரிவரிதாய்
மண்டைமுற்றும்பரந்துகுத்தும் வருத்துங்கபாலவரட்சியிதே சூ௱௰௧

(இதற்குநசியம்)

பூவன்பழமும்பழையனைப்பும் புசியமிளகோடிந்துப்பு
ஆவதடங்கும்புகழ்சரிப்பா னதுவேபொடிகளதுகொண்டு
தாவுமுலைப்பாற்றனிற்கலக்கித் தயவாய்நாசிதனிலூற்ற
பாவுங்கபாலவரட்சியுடன் பசாசுமகன்றுபோய்விடுமே. சூ௱௰௨

(வேறு.)

தான்றிகடுபத்திரிநெல்லியுமாழாக்குத்
தன்னுடனேவெட்டிவோவிலாமிச்சம்வேர்
மூன்றுபலங்குறுந்தொட்டிபடி புன்னுண்கு
மூதிரநீரைவிட்டுநாலொன்றாய்க்காய்ச்சி
ஈண்டுபசுவின்பாலுமிளநீரொண்ணெய்
இலவங்கள்கோஷ்டம்வாழலுவைதார
மாண்டதளிசஞ்சாதிக்காய்கிரும்பு
வழுக்கிறுவுங்கருஞ்சீரஞ்சன்னிநாயகமே. சூ௱௰௩

ஆதிமதுரமுக்கழஞ்சு மாவாய்க்கூட்டு
வானமற்றமருந்துமோர்கழஞ்சுசேரு
சதிராகக்கிபாழும்விட்டரைத்துச்சேர்த்துத்
தான்மூன்றுநாளிலேகாய்ச்சும்போது
விதமாகமுல்லைப்பூபூரங்கூட்டு
மெழுகுபதம்பார்த்து வென்னீரில்மூழ்கு
நிதமாகத்தலைவரக்ஷிமண்டைசூலை
நேத்திரநோய்போகும்பாலன்னமுண்ணே, சூ௱௰௪

முள்ளிலவுமொதியமுப்பூலாநாவன்
முல்லையொடுவெட்பூலாமுத்தஞ்சீந்தி
தெள்ளியசெந்தாமரையாள்சித்தாமுட்டி
சீதேவிசிறுகீரைதிருவராகி

கொள்ளுவதுவிருகோலிபொன்னாங்காணி
குளாவுமிலாமிச்சம்வேர்குளரியாம்பல்
மெள்ளவேயிளநீர்பால்விட்டுக்காய்ச்சி
மீள்வதுமூன்றொன்றாய்க்கியாழம்வாங்கே ௲௱௰௫

(வேறு.)

ஆக்குயகியாழதன்னி லற்புதநறுநெய்நாழி
தாக்கிடுநல்லசீனி தான்முந்திரிபேரீச்சங்காய்
னாக்கியநிரையோரொன்று தூய்மையாய்ச்சமனதாக்கி
மார்க்கமாய்க்கூட்டுநன்றாய் வலைகமருந்ததனைக்கேளாய் ௲௱௰௬

கூட்டுவெண்கோட்டமேலங் குலவுந்தக்கோலமாஞ்சி
நாட்டினிற்சந்தம்ரண்டு நாகங்கச்சோலம்பச்சை
கேட்டதோர்கெணிகபேதிகிளிபூரல்பட்டைவங்கம்
கூட்டுசெண்பகத்தினமொட்டுகொடியடணகிலுமாமே, ௲௱௰௭

ஆமதிமதுரநெல்லி யடடவிகச்சோலங்குப்பை
ஆமதுதேவதார மரத்தைசிரசமிரண்டு
வேமதுபதத்திறக்கி விடுவதுகழஞ்சுநெய்கொ
ளாமதேதலைநோய்மேக மனேகநோயகன்றுபோமே. ௲௱௰௮

(கலிவிருத்தம்.)

தும்மைப்பூவுடன் சொல்லிருசீரகந்
தம்பகோஷ்டஞ் சமுத்திராவேதியும்
அன்பிலாத மணக் கொண்ணெய்வார்த்திடு
அன்புகெட்டவலிக் குத்தகலுமே. ௲௱௰௯

(வேறு.)

முட்டையுந்தினையுநத்தைமுருங்கைப்பூவயினுங்கூட்டி
இட்டமாங்கோஷ்டஞ்சீர மெலுமிச்சம்பழத்தரைத்து
சட்டமாய்த்தலைபிற்றப்பித் தயவுடனிடுவீராகில்
திட்டமாய்ச்சிரசிற்குத்துஞ் சிதறியேயோடுங்காணே. ௲௱௨௰

(வேறு.)

முதலாமொன்றுவாதமா முனிந்தவிரண்டுபித்தமா
மிதமாமூன்றுசேர்த்துமத்தி னிதுவுமன்றிநாலாகும
பதமாம்வாதசேத்துமத்திற் பண்ணுமைந்துவிரத்தத்தில்
பிதமாம்வாய்விலுண்டாகும்பெருத்தமூலமறுவகையே. ௲௱௨௰௧

எல்லாவுயிர்க்குத்தானுண்டு விதுவேதென்னிலூர்க்குருவி
வல்லாதண்டிகைதான்சுமக்கு மாத்திரமன்றிப்புவிமீதி
லல்லால்மற்றவுயிர்க்கெல்லா மாறுமூலமதுவுண்டு
சொல்வேன்மூலமுவகையாய்த்துலங்கக்கேளீர்சூழ்ந்திருத்தே. ௲௱௨௰௨

(வேறு,)

ஒன்றாற்றெச்சயிற்குடல்குடியிருக்குமுண்ணம
ரண்டாவதெச்சவாயுக்குள் மூன்றெச்சவாய்ப்புறம்பே

யுண்டாங்காணுண்மூல மிதுவுங்குழிந்திருக்கும்பொரு
ளுண்டாங்காணுமூலத்தா லுந்திமாறுநால்வகையே. ௯௨௫

(வேறு.)

உண்மூலம்வகைரண்டாகு முயர்ந்தவாணில்வலப்புறந்தி
லுண்மூலம்பெண்ணதாகி லுகந்தவிடதுபுறத்ததுதா
னுண்மூலத்திற்காய நன்றாகிலுரியநன்றவுறுதிகெடு
முண்மூலமொன்றுவாதத்தா லுகந்தவிரணடுபித்தத்தால் ௯௨௪

இந்தப்படியேயறுமூல மிதுவேநாலுவகைபுறத்தி
லந்தப்படியேகாண்பிக்கு மதுவுமிரண்டுவகையாகு
மிந்தப்படிபோர்வாதத்தா லிரண்டாவதும்பித்தத்தா
லந்தப்படியேமூலவகை யறியுங்குணங்களறிவோமே. ௯௨௫

தண்ணுற்றண்ணீர்தானெழுகுந்தாதுங்கனத்துக்கோடாகும்
நன்றாயச்சத்திதானெடுக்கு நயந்தகாயநொந்திருக்கும
எணணேசரீரந்தான்றடவி லிதுவுமிதமாப்க்கால்கையும்
நன்றாய்வெதும்பியிருப்பிடத்தி னுடுஞ்சிரங்காய்வாய்நாறும். ௯௨௬

முக்குநோகுமலமுந்திரீ முதிர்ந்தபழமபோற்கறுத்திருக்க
மிக்கசிவந்துவிழுந்தொப்புள் மிடுந்தவிடுப்புநொந்திருக்கும்
தக்கபசியுண்டாகாது தன்வயிற்சுருங்கத்தான்பிடிக்கு
மொக்கவிரண்டுகிறுக்கினுமோ யுயர்ந்தமிகுதிநோவாமே ௯௨௭

பித்தமதனாலுண்டாகிற் பெருத்தவலமுமுந்திரிகை
உற்றபழமபோற்றான்விழுமே யுண்ணுமலமுஞ்சலங்கணித்து
மற்றபசுவின்முலைபோலே வருமேகணணுஞ்சிறுநீரு
மெத்தவெளுக்கும்வாய்நீறு மிகுதிசெய்யுமபித்தமதே. ௯௨௮

வாதபித்தஞ்சேத்துமத்தால் வருத்துங்குறிகள்மலங்கருகும்
போதச்சிறுநீர்மஞ்சணித்துப் பொருந்திவிழுமேகுடலோடே
மாதஞ்சேருமதுகுத்தல் மருவுமுதரத்துண்டாகு
லீதமலநீர்சிவந்திருக்கு மெலிந்தேவாயினேவாமே. ௯௨௯

இதுவேரண்டிலொன்றாகு மெச்சவாய்க்குமேலாகு
மதுவாமலந்தான்விழும்போது வானவிரத்தமலங்கூடம்
பதமாய்ப்பித்தந்தான்வடியும் பறிந்தகுறியுமிதுவென்று
இதமாய்முனிவர்தான்சொன்னவிரண்டாவதற்குமுரைப்போமே.

மூளைமுளைகரைந்துபோகமருந்துகாரம்வைக்க.

எச்சவாய்க்குள்தானரிக்கு மிதற்குமுரித்தான்மலமிரத்தம்
வச்சக்கூட்டில்வீழா மகிழ்ந்தேநரம்புதான்சிறந்து
அச்சமறவேரத்தம்விழு மதுவாங்குறிகளடவன்றி
நிச்சமுனிவர்மானிடர்க்கு நிகழ்த்துங்குறிகளிதுவாமே. ௯௩௧

வங்கிஷத்தில்வருகிறதுவருக்கமூன்றுவகையுண்டு
இங்குவொன்றுபருத்திவிரையிதமாய்ச்சதைபோற்றானிருக்கு
மங்கிலிரண்டுமாதளம்பூவானமொட்டுப்போலிருக்கு
மிங்குமூன்றுவட்டைமிகவிருக்குஞ்சதையினிறம்போலாம். ௫௩௨

காற்றுப்பிறந்தவயிற்றினிலேகதித்தநெருப்புப்பிலங்கொடுக்கு
மாற்றுமிதுவேதொடர்கொணடுவாய்வு குந்துபத்தியமுந்
தோற்றுமருந்துகுறியளவுஞ்சொல்லக்கேளுந்தோன்றுமன்
மாற்றுசொன்னேமூலவகைமாறுமருந்துபகர்வோமே ௫௩௩

மருந்துவிராலிவேர்புங்கம்பூமஞ்சள்மிளகுசெந்துருக்கம்பூ
வருந்தவோரொன்றிருகழஞ்சுவரும்பாண்டத்திற்கோணிகட்டி
திரும்பக்குழம்புகாய்ச்சிவிடு சேருங்கோணிமேன்மூடி
மருவிக்காய்ச்சிவாய்திறந்துமகிழ்ந்தனற்காட்ட மூலம்போமே. ௫௩௪

வெண்பாளான்மறைபாகுமிகுந்தகாந்தந்தானரையாய்
உண்பாயெருக்கங்கொழுந்தரைத்துவுரைத்தமானகுகைபிடித்து
வண்பாய்துத்தந்துரியுடனேவகைபாயிரண்டுகாற்கழஞ்சு
கொங்காய்நாலும்பொடிசெய்துகுகையிலிட்டுத்தான்மூடே. ௫௩௫

சட்டியிட்டுத்தான்மூடிதானேயிறக்கமேற்சட்டி
இட்டகருகினுலிறக்கியிசைவாய்மீளப்பொடிசெய்து
திட்டமூலங்கற்கடகஞ்சேராங்கொட்டைத்தயிலமிட்டு
மட்டாய்ச்சீலைதனைதிரித்துமருத்துஞ்சீலைத்துணிநருக்கே, ௫௩௬

தண்ணீர்தோய்த்துப்பொடிதொட்டுத்தடவியதுபோன் மூன்றுநாள்
தண்ணீர்க்காயமூசனமாய்த்தயிருஞ்சோறுமறுநாள்கட்ட
அண்ணிமூலங்கரைந்துவிழுமதற்குப்பின்புபருத்தியிலை
தன்னினல்லெண்ணெயிற்பொரித்துத்தான்கட்டப்புண்மாறுமே

குக்கிற்கௌரிபாஷாணங்கோலச்சுன்னஞ்சரிகூட்டி
ஒக்கவரைத்துமூலமுளையுகந்துதடவவிடியோரு
மிக்கபகலுமந்திக்குமீறுமுளையிற்றான்றடவ
தக்கமுளைதான்கரைந்துவிழுந்தான்செய்யுமருந்ததுகேளே. ௫௩௭

ஆமணக்கெண்ணெய்சீலையிற்றோய்த்தந்தப்புண்மேற்றன்னிலிட
நாமேயாலதியம்பட்டைநயந்தெண்ணெயிலேவெந்தபின்பு
போமேயெண்ணெய்தனைத்தடவிபொருந்தச்சீலைபுண்ணிலிட
ஆமைமூலவகையிரண்டுமேதுவுங்கரைந்துவிடும்புண்ணே. ௫௯௮

முன்னமரைத்தமருந்துடனேமுதிர்நாயுருவிநாய்வேளை
பின்னுமரைத்துக்கூட்டிக்கொள்பொருந்தமூலந்தானோடும்
வன்னக்குழம்புவிதுவென்றுவாடுமுனிவர்சொற்படிக்கு
இன்னின்மீதிற்செய்தாலேயேகும்பணிகளானதுவே. ௫௪௰

திப்பிலிகோதுமைமாவஞ் சேரவிரண்டிபொடிசெய்து
ஒப்பிலாத்திருகள்ளி யுயர்ந்தகொம்பைத்தான்றகர்த்து
இப்படிச்சட்டிகாயவைத்து விருசிர்விட்டுவேடுகட்டி
செப்புமாவைமேல்வைவத்துச் சேரப்பிட்டாய்த்தானெரியே ௬௪௧

அந்தப்பிட்டுநல்லெண்ணெயாக்கிவெல்லந்தானிட்டு
இந்தப்படியேயொன்பதுநா ளிருந்துதின்னவுண்மூலம்
வந்துகூட்டோடேவிழுங்காண் வருத்துங்கிரியையினிச் சொல்வேன்
அந்தப்படியேகுறுமுனிவ ரருளிச்செய்ததிதுவாமே. ௬௪௨

வேப்புவிரைகாண்தேசிக்கா யளவுவெள்ளைப்பாஷாணம்
கூர்ப்பாய்ந்துரிசுவிளைவரண்டுங் கொள்ளமூன்றுகழஞ்சதுவாய்
மார்ப்பில்நிம்பப்பழச்சாறு மதுவேவிட்டுவரைத்திடவே
ஆப்புமூளையிற்படவைந்து வதுபோன்மூன்றுநாள்கட்டே. ௬௪௩

வசனம்.

இட்படிச்செய்யபுழுக்கள் விழும் மூளைகரைந்துபோம்பிரமூலந்தீரும்பின்புகாரெள்ளு-சுக்கு- கடுகு- திப்பிலி சமனாய்ப்பொடித்துத்தின்னவும்.

(வேறு.)

பேயின்பீர்க்ககம்விரைபருப்பு பெருகவெதுப்பிப்பணம்பாதி
கூர்ப்பாய்பணவிடைகொடிவேலிகொண்டேதேசிப்பழச்சாற்றி
லாப்பால்வெண்ணெய்தனிற்சேர்த்து வதனுட்டடவவிப்படியே
கோப்பாய்மூன்றுநாள்தடவிக் கோதிவெந்நீர்குளித்திடவே ௬௪௪

வசனம்.

சாமைத்தவுடாகிலுந்தினைவைக்கோலாகிலும்புகைகாட்டவும்.

(வேறு,)

கொடிவேலித்தயிலத்தைக் கூறுங்குழிப்புண்ணிற்றூன்கட்டே. ௬௪௫
ஆடுமேமூலமுளைக்கொளக்க வதுபோல்மூன்றுநாளில்விழு
மூடனேகரைந்துவிழுந்தபின்புவுயர்ந்தாமணக்கெண்ணெயைதடவ
அடவாய்விழுமேதயிர்வார்த்து வசனம்புண்ணிற்றூன்கட்டே. ௬௪௬

திரிகடுகுள்ளியிருசீரஞ்சேரவெளுச்சிப்பிசினுடனே
குறியவயத்தூள்புளிநரளை கொண்டபிரண்டைவேளையின்வேர்
அறிவாங்காட்டுக்களைடன்வே ரானவிடைகட்சமனாக
உறவேபுழுங்கலரிசிதனை யூரலெண்ணெய்தனிலரைத்தே. ௬௪௭

எண்ணெய்தடவிமகிழ்ந்தடையா யிதமாய்ச்சுட்டுநல்லெண்ணெய்
நண்ணித்தோய்த்துவெட்டுநாள்நயந்துதின்னபத்தியங்கே
ளெண்ணெய்தனிற்பிரண்டைகுருந் திட்டுப்பொரித்துத்தின்றிடவே
வண்ணச்சுறுநெத்தலியாகுமானைகைப்புளிப்புவிடே ௬௪௮

அத்திநாவலாமணக்குவானகிளுவைபெருமரமாம்
வைத்தவெள்வேர்மாம்பட்டைவடக்குபுறத்தில்வெட்டிவந்து
உற்றநீரிற்கொட்டிப்போட்டுண்ணமபாகவூறியபின்
அற்றக்கற்றுழைத்தட்டியன்னீர்தன்னிலூறவிடே, ௬௪௮

மற்றுநாளன்னீர்வடித்துமகிழுங்கடுக்காயொன்றரைத்து
உற்றதாகவிம்மருந்துவுகந்தசாற்றிற்கூட்டிக்கொள்
பற்றியிந்தப்படியேதான்பருவக்கொள்ளுமூன்றுநாள்
சிற்றுண்டாகப்புளியுப்புதிருந்தத்தவிர்க்கச்சொல்லியதே. ௬௪௯

தேனுங்கள்ளிப்பாலுடனேசிறியவழுதலைப்பழமார்தம்
மானேகருணைமிளகுமஞ்சள்வளமாயோரொன்றிருகழஞ்சு
ஏனெள்ளெண்ணெய்தனிற்கலந்துயிடவேமூலவகையெல்லாம்
போனவிடமேகாணுமற்போகுமெனவேமுனிபுகன்றார், ௬௫௰

பேயின்பீர்க்கங்கூடதனைப்பேணிப்பொடித்துப்புளியுப்பு
மாயப்பிசைந்துவுண்டைசெய்துமருவும்பவனவாயிலிட்டு
தேயசாற்றுப்படாவிடததினிகழாதிருக்கவண்டுடனே
போயேயோடுமூலமுடன்பொருந்தியின்மைசெய்திடுமே, ௬௫௧

வெண்காரம்வெண்பாஷாணமிருசந்தனமுஞ்சுண்ணம்பும்
பண்பாய்வகைக்குப்பணம்பாதிபல்கரைவகையிலிரண்டிலொன்று
நண்பாய்ச்சுட்டசாம்பல்துநாடுங்கழஞ்சுவொன்றாக
பண்பாய்ச்சுட்டுபொடியாக்கிபகர்தானுமணக்கெண்ணெயுந்தேனே

ஆற்றைக்கற்றைத்தா குழைத்துவானவிரலிற்றுனிட்டு
சுற்றக்கரைந்துபோமிதுதான்சொல்லுங்காரமெனலாகும்
அத்தர்சொன்னசொற்படிக்குவருளிச்செய்தாரன்றமுதம்
சுத்தக்காரக்குழம்பென்றுசொல்லுநல்லவல்லோரே. ௬௫௩

(பீர்க்கங்காரம்-மூலரோகத்திற்குக் காட்டுக்கரணைசூரணம்,)

காஞ்சுரைவேரின்வேறுலுங்கதித்தகிம்பெண்ணெயிற் குழைத்து
ஆஞ்சுவிரவில்பானத்திலாகச்சுற்றிசுழற்றிடவே
மாஞ்சுபோகும்வெந்தோன்றிமருவுங்கிழங்கைச்சீவித்தான்
மாஞ்சுபொருக்குங்கரைந்தேகுமபானவாயிலேற்றிடவே. ௬௫௪

பேயின்பீர்க்கங்கூட்டுத்தூள்பேசும்வெண்ணெய்தனிற்குழைத்து
ஆயவிரலிற்றுனிட்டுவபானவாயிலேற்றிடவே
தீயக்கரையுமூன்றுநாள்திருந்தவிரலிட்டேற்றிவிடில்
ஆயும்வேதம்புகன்றபடியப்பாற்போகுமூலமாதே ௬௫௫

காட்டுக்கரணைக்கிழங்கதுவுங்கருப்பதிறற்பலமிடித்து
மீட்டுமெண்பலஞ்சேங்கொட்டைவேர்க்கொம்பதுவும்பலநாலு
மீட்டுஞ்சீரந்திப்பிலியுமிளகோரொன்றுபலமாக
மாட்டுஞ்செவியம்பலமைந்துவளர்கொடிவேலிபலநான்கே ௬௫௬

எல்லாமிடித்துச்சூரணமா மியல்பாய்ச்சீலைவடிகொண்டு
நல்லதான்றிக்காயளவு நலமதாகவிருபோதும்
வல்லசூரணமேகொள்ள வருந்துமூலவகையாய்ந்தும்
எல்லாமாந்தர்க்கிராணியது யேகுஞ்செறியாமையும்போமே ௬௫௭

இதற்குமூத்திரத்தோஷம் பலவியாதியுந்தீரும்மூலத்துக்குக்குளிகை

திரிகடுகிரதமதுகெந்தி சேரவெண்காரமிவைசமனா
யுறுதியுடனேநேர்வாள முயர்ந்தகற்றாழஞ்சாற்றரைத்து
அறிவாய்குன்றிப்பிரமாண மாவினெய்தேன்பழந்தனிலே
நெறியாய்க்கொடுக்கவயிறிளகி நெகிழுமூலமிவையைந்தும். ௬௫௮

சுக்குகெந்தகமிந்துப்பு சொல்லும்பிரதவெண்கார
மிக்கவிவைகளைங்கழஞ்சு மிகுந்தவாளமைங்கழஞ்சு
தக்ககுமரிச்சாறரைத்துத்தானே குன்றிப்பிரமாணம்
வைக்கப்பழநெய்தேனிலிட வயிறுகழிந்துமூலம்போமே. ௬௫௯

வயிறுபொருமிவீங்கிவற்றும் வளருமிரைச்சல்மிகவுண்டா
முயிரேகுழையத்தானிருக்கு முந்தநீரும்வேதனையாம்
உயிர்சேர்ந்திடுப்புக்கைகாலு மிகவுமுறுதிகெட்டுவிடும்
வயிறேவீங்கியிரைச்சலுண்டாம் வாதசீதக்கிராணியிதே. ௬௬௰

தேவதாரமாதளையுஞ் சிறியதேக்குசுக்குடனே
மேவும்புடலம்பாவட்டை வெள்ளையுள்ளிசிலவேம்பு
ஆவுஞ்சிறுகாஞ்சோரி யடர்முட்காவேளைவேர்நொச்சி
பாவுமாவாளைபத்திரியும் பன்னிருகழஞ்சுதானுண்ணே. ௬௬௧

கொண்டேயாட்டின்மோர்தானுங் குறுணிபுளித்தகாடியது
உண்டேயாட்டினெய்நாழி யுரியமருந்துநாழியது
ஒன்றாய்க்கூட்டிமண்கலத்தி லுகக்தமருந்துநீயறிய
இன்றேநார்த்தம்பழந்தா னிடுபன்னிரண்டேயெட்டொன்றாய் ௬௬௨

எட்டாய்ப்பிளந்துதோற்சீவி யிதக்குச்சுக்குப்பொடிபோட்டு
வட்டக்கடுக்காய்நூறது.தாள் வளருங்கனலிற்றீயாமல்
இட்டுக்குழம்புதானிறங்கி யியல்பாய்க்காற்றுபுகுதாமல்
கட்டுங்கோணிப்பட்டதனுற் கனத்தவண்டுதான்கட்டே. ௬௬௩

நெல்லிலெட்டுநாள்புதைத்து நீபின்சிறுகாலத்தெடுத்து
நல்லகாலத்தொருகீத்து நாடுமுச்சியொடுகடுக்காய்
வல்லகுழம்புவந்திக்கு மகிழ்ந்தேகொள்ளேமாறுதல்கேள்
கொள்ளுக்கிருணிகுன்மமுதல் குமிருமிரத்தக்கிராணியுமே, ௬௬௪

மலத்தையிறுக்கிமந்தித்து வளருமிரத்தமலத்தில்விழு
முலர்த்திவருவதுண்மையென வுணடேவயிறுவலிநிற்குந்
தலத்திற்கானுமுண்மூலச் சதையிலுளையுமபானத்துள்
பிலத்தைக்குறைக்கும் வியாதியெனட் பேசினார்கள்பெரியோரே,

(வேறு,)

திரிபலைகஞ்சாமஞ்சள் திப்பிலிகடுக்காய்சுக்கு
வெறிதருங்கடுகுசீர மிகுந்தசாதிக்காய்கிரும்பு
முறிவின்றிப்பத்தியமாக முயர்ச்சியாய்க்கொண்டபோது
செறியுமுண்மூலக்கிருணி சிதறிப்போகுமெனவுரைத்தார். ௬௬௬

(வேறு,)

இடுப்புகனத்துவயிறுளைந்து விதமாய்ச்சீதமிகக்கழிந்து
முடுக்குந்துயரமதிகமுமா மூலந்தன்னிற்கழிந்திடிக்கும்
தடுத்தேயன்னந்தனைத்தேடா தரவேயங்கமிகமெலியுந்
தொடுக்கும்வயிற்றுக்கடுப்பென்று சொன்னார்துயரஞ்செய்யுமன்றே ()

பனைச்சைதுத்திமலைதாங்கப்பகரும்பூலாமுத்தமுடன்
முனைத்துக்கொள்ளுமதிவிடையமுதிர்ந்தமோகஞ்சிராமுந்
தனைத்தகைப்புரிகாணுந்தானேகழஞ்சுகொண்டுநெய்யில்
நனைத்தேவேகவைத்துண்ணநாடுவயிற்றுக்கடுப்பறுமே. ௬௬௮

நற்சீர ‧ த்தைப்புத்தோட்டினயமாயதனைப்புடமிட்டு
தச்சேயிடித்துத்தூள்செய்துதனித்தசினிதனிற்சேர்த்து
சிற்றுமணக்குநறுநெய்யில்சிறக்கவருந்திற்றீர்வதுகேள்
பச்சைவயிற்றிற்கடுப்புளதுபறந்தேயோடுந்திண்ணமிதே. ௬௬௯

(வேறு.)

வெப்புகள்தங்கிதங்கிமேலெலாம்பரந்துலாவி
முப்பத்திரண்டுஞ்சூடிமூலத்தோடுலாவிச்சுற்றி
அப்பியேபிரமூலைத்தலச்சியேகுடலைப்பற்றி
பிற்படுரத்தஞ்சூடிப்பின்வருங்குணங்கள்கேளே. ௬௭௰

கீழடிவயிற்றினின்றுகிறுகிறென்றிசையும்வாயும்
வீழ்வுறுதிரியேபோலவிதனஞ்செய்துளைந்துசெய்யும்
வீழுமேநாள்கடோறுமிறைந்திடுமிடைவிடாமல்
நீழமேபேர்காவண்ணநினைவுடன்மருந்துசெய்யே. ௬௭௧

செய்குவாய்சமர்த்தோடேநற்சீரகஞ்சாதியொன்று
நையும்பூத்திலையதன்னிலைந்துகடுக்காய்சுத்தி
கொய்திடுங்குருத்தினோலைகூட்டியேவருந்திக்கட்டி
பையவேயிதற்குப்பின்னேபதஞ்சொல்லக்கேளுமின்னே, ௬௭௨

கட்டியேமித்திதன்னிற்கடுகவேபுதைத்தெடுத்து
தட்டியேயுரலிலிட்டுத்தகரவேயிடித்தபின்பு
கொட்டியேயம்மிதன்னிற்குழவியாகனைத்துக்கொண்டு
வெட்டெனவிடியும்போது வெருகடிமருந்துகொள்ளே. ௬௭௩

வெருகடிவிடுவதன்னிற்கொண்டபின்வெந்நீர்தன்னைப்
படுகிடுபத்துநாளும்பதலமாயிருந்துகொண்டால்

எரிகொண்டவெப்பினுலேயெழுமூலக்கடுப்பிதெல்லாம்
முருதிவிட்டோடுமென்றேயுயர் புனியுரைத்ததாமே. ௯௭௪

அத்தியோடொதியம்பட்டையடுத்தசாரணையின்வேறு
முத்தியவிளாங்காய்போலேமூன்றையுமரைத்தெடுத்து
வத்தியபாகுதன்னில்வடிவறவெந்தடோது
சுத்தியேயெண்ணெய்காலுஞ்சுவறவேவிட்டுக்காய்ச்சே, ௯௭௫

திப்பிலியோமந்தானுஞ்சிறந்ததோர்மிளகுசுக்கு
நற்புறுகிராம்பிந்துப்புநலமுறுகழஞ்சிரண்டு
தப்பிலாதபின்கழஞ்சுசாதிக்காய்குரோசாணிபத்திரி
செப்பமாய்வறுத்தரைத்துச்சேரவேபதத்தில்வாங்கே. ௯௭௬

உண்டிடுவெந்திசந்தியொருசுண்டைக்காயைப்போலக்
கெண்டிடப்பத்துநாளுங்குறித்ததோர்புளிதவிர்த்தால்
விண்டெழுங்கிருணி யெல்லாம் விரைந்துபோமென்றுசொல்லி
அண்டர்கள்முனிவர்சொன்னவாயுள்வேதந்தானிதே. ௯௭௭

(வேறு,)

தாளிசபத்திரியுடனேசிவதைசுக்குச்
சாதிபத்திரிமத்தம்விரைகிராம்புதானும்
மீளாதகுரோசாணிதேத்தாவித்து
விடையமொடுதிப்புலியுமேலந்தானும்
தாழாதவபினிகஞ்சாசாத்திரபேதி
சமுத்திராப்பழஞ்சிரஞ்சாதிக்காயும்
வாழவேவகையொன்றுகழஞ்சதொன்று
மாதனையின்பழமொன்றுவரைதிடாயே ௯௭௮

அரைத்திடவேபெருமரத்தோலுதியமுத்த
மத்தியுடனேகோவைச்சாரணையிஞேடு
உரைத்தகிழங்கோர்பலமாய்நிறுத்துக்கொண்டு
வுற்றநீர்விட்டொன்ருய்க்காச்சியேதான்
எரித்தநீரதனையேயிறுத்துவாங்கி
யியல்பாகவிட்டரைத்துவிளம்பக்கேளே
திருத்தமாய்க்குன்றியளவுண்டைசெய்து
திறமாகநிழலுலர்த்திவைத்துக்கொள்ளே, ௯௭௯

(வேறு.)

செய்திடக்கிருணியெட்டுந் திரும்வயிற்றுக்கடுப்புளேயும்
ஐதாம்வெப்புச்சுரங்களதிசாரம வாய்வுமிருமல்விக்கல்
மெய்பாஞ்சத்தியோக்காளம் விடுஞ்சிரகதீரிற்ருகந்
துய்யமுனிவனிந்தவிதஞ் சூத்ரந்தெளிந்துசொன்ஞரோ. ௯௮௰

அப்புங்காற்றுமிகவுண்டா மழகாமுடலமிகவருந்தும்
கைப்பும்புளிப்புமிகத்தேடிகனல் போல்மேனிவெதும்பவிடு

முப்பும்வயிறுமிகப்புறளு மொருசார்பக்கத்தேகிடக்கும்
வெப்புப்பார்வையிதுவென்று மிருந்தமுனிவர்விளம்பினரே ௯௮௧

நோயுமிகுத்துச்சடந்தன்னி னைந்தேயுடலந்தான்வருந்துந்
தூயவாளமிந்துப்பு சுக்கோ மிருசுங்கூட்டி
காயாமெலுமிச்சம்பழத்தாற் கலந்தேமருந்துதனையரைத்து
மாயாமாந்தர்தனையருந்த மலமுஞ்சலமுமடையாதே. ௯௮௨

(அக்கினிமந்தகுணம்.)

(வேறு.)

உண்டியிற்பொருமலாலு முடல்விளைசிற்றத்தாலும்
கொண்டுதான்கழிந்துதண்ணீர் கொதிப்புடன்வெப்பினாலும்
மண்டியேவெளுத்துக்காய மயங்கிட வுலர்ந்ததாலு
மண்டர்களறியச்சொன்னே மக்கினிமந்தந்தானே. ௯௮௩

(வேறு.)

வந்துமிகுத்துவயிறலர்த்தி மந்திக்கும்வாய்வதுநின்று
சிந்தைதனிலேநினைத்ததெல்லாந்தேடுங்கொள்ளவொட்டாது
இந்தக்குணமேயிருந்ததெனி லிதுவேயக்கினிமந்தமென்று
மந்தப்படியேமுனிவோரு மருளிச்செய்தவிதமாமே. ௯௮௪

(வெண்பா.)

நீண்டுபசிமிகுந்து நின்றுவயிறளர்த்தி
வேண்டியதுதின்ன விரும்புமே-மீண்டுமது
சந்தோஷமாகியது தாணவேண்டாவாந்திசெயு
மந்தாக்கினியென்னும் வாய்வு. ௯௮௫

(வேறு.)

மலமுங்கழியுங்கிறுகிறுக்கு முண்டால்வயிறுவழித்துளையுஞ்
சிலமுமிகுந்துகளித்துறுக்குஞ் சிறுகரத்தமலத்தில்விழும்
பிலமுங்குரைந்துதன்றிமுகம் பெறும்பேறாகவெளுத்துவரு
மலையுங்குணங்களிதுகண்டா லக்கினிமந்தமிதுவாமே. ௯௮௬

(வேறு)

சுக்குமுந்திரிகைதானுந் தூக்கிபேபலமொன்றாக
வக்குநீர்படிபுமெட்டு வகையதாயொன்றதாக்கி
நீர்க்குநீர்தன்னைவழித்து நித்தமுங்கொள்வீராகில்
அக்கினிமந்தம்போமென் றறியவேயுரைசெய்தாரே

(வேறு.)

திரிபலைபு மதுரந்தேவதாரந்
திரிகடுகுவேலமொடு காயமோமம்
அரிதானவமுக்கிரா பத்திரிகிராம்பு
மதிவிடையஞ் சீரமுகங்காந்தந்தானு

மரியானசாதிக்காய் தாளிசபத்திரி
யக்கராகாரம் பச்சிலைநாகம்பூ
அரியவேபசுவினெய் தேன்கரண்டி
லருந்திடவேயக்கினியின் மந்தம்போமே. ௬௮௮

(வேறு.)

குறிஞ்சான்சாறுநாழி கூகைநீருநல்லெண்ணெய்
நறுநெய்நாழிகொடுவேலி நல்லகறணைகுருந்தைபமுத்தங்
சிறியதேக்குகச்சோலஞ் சிரங்காயங்கருஞ்சீர
முழுவால்மிலருபெருஞ்சீர மிலுவாய்வங்கங்குப்பைமைதிட்டம், ௬௮௯

(வாதகரப்பானுக்கு ஆமணக்கெண்ணெய்.)

உடம்பெலாம்வெதும்பிநொந்து வூளைத்துகால்கைகள்தானு
மிடங்கொண்டுசுரந்துவீங்கி யெழும்பினுந்தாகையாலே
முடங்கியேவரண்டுதானு முற்றியேவெடித்துபண்ணு
மிடங்கொடாகரப்பன்வாதமென்றுதானியம்பலாமே. ௬௯௦

இருந்தெழுந்திருக்கும்போது விற்றுக்காலயர்ந்தயர்ந்து
வருந்திடத்திமிர்ந்துவீங்கி வரண்டுடல்வெடித்துப்புண்ணாந்
திருந்தியவங்கந்தானுஞ் செயமறப்பொருமுமாகில்-
வருந்திமிக்குணங்கள்கண்டால் வாதமாங்கரப்பனாமே. ௬௯௧

நொந்துபின்கண்ணில்மிக்க நோவுடைகணங்கடன்னில்
வந்துவல்லாயுதங்கள் வடுப்புரத்தையற்போது
சந்துதான்மொளிபருத்து தசைவுதானங்களாகில்
வந்துதான்கெடுக்கும்வாதகரப்பனென்றறியலாமே. ௬௯௨

(வேறு.)

வீங்குங்குத்துமிகச்சிரமும் விடாமற்றிமிர்த்துவிதனிக்கு
மாங்கதிர்சலம்விழுந்தாலதுவுந்திணவாய்ச்சொரிசெய்யில்
நீங்கிச்செல்லத்தீராது நெடுநாட்படவேவிஷமிக்குந்
தேங்கப்புதைத்துச்சுட்டுவி - த்தீரும்வாதக்கரப்பனிதே. ௬௯௩

(வேறு.)

சந்தகால்மொளிபொருத்துத் தானங்களுளைந்துவீங்கி
வந்துதான்புண்போற்காயும்வருந்தியேயிருந்துவாடும்
நொந்துதானிற்கவொட்டா நோய்வுடன்வெப்புத்தோன்று
மிந்தநோய்வருகில்வாதசரப்பனென்றறியலாமே. ௬௯௪

(வேறு.)

கொன்றைத்தூதுநிலவேம்பு குழிவேர்கடுக்காநிலவாகை
சென்றுவணங்குஞ்சூரியது சிவனார்வேம்புசலமிஞ்சி
பொன்றுமுத்தந்தாளியுட னுயர்நாயுருவியுடனாகும்
நன்றேகொள்ளுஞ்சூரைவேர் நன்னாரிதுடர்தான்கூட்டே ௬௯௫

கூட்டுவுள்ளிமாமஞ்சள் குலாவுமதுரம்வெம்பாடல்
நாட்டிற்பயிலும்வெண்கோட்டநல்லசென்னகரப்பழமு
மாட்டாற்காணுஞ்சாதிக்காய்மருவுங்கடுக்காய்த்தான்றிநெல்லிக்
கூட்டிச்செய்தலவைவயிட்டுக்கொண்டேயெண்ணெகொதித்திடுமே,

குருஞ்சாவிலையும்புங்கிலையுங்கொடிசெங்களச்சியிலைதானும்
அருஞ்சேசெப்வாய்கடலாஞ்சியதுவுமுழக்தேக்கிலைதானுஞ்
செரிங்கதான்றிபாவட்டைச்சேரும்பூளைசிறுபூளை
பரந்தபருத்தியிலைதானும்பகர்தோம்வாதம்வெதுப்படைக்கி, ௬௬௭

அள்ளிவேப்பினிலையாகுமதனோடின்னமறையகேள்
உள்ளிமிளகுசீரகமுமுயர்ந்தகடுக்காய்திப்பிலியுந்
தள்ளுஞ்சுக்குமோதகமுஞ்சசியினுப்புகிறும்புடனே
கொள்ளும்ரோகணிகற்கண்டுகூட்டுபிந்தூதுகடுநாழி. ௬௬௮

விள்ளுங்கிரியச்சீரகமும்விளம்புங்கழஞ்சுவோரொனறு
எள்ளும்பொடியாய்ச்சூரணித்து வெழிலாய்த்தெள்ளியொவ்வொன்றாய்
பள்ளுங்கடிகையிருவேளைபகருஞ்சினிதனிலருந்த
தெள்ளுமண்டலநோய்போகுந்தீரும்வாதகரப்பனுமே. ௬௬௯

எருக்கம்பாலோடரிதாரமெலியின்மருந்துகெடுவேலி
திருத்தமானவெள்ளுள்ளித்தெளியும்வசம்புசென்னகரம்
பெருக்கவோரொன்றைங்கழஞ்சுபேணியரைக்கிலிதுகள்ளி
பருக்கவாட்டியிலைச்சாற்றூற்பதருதரைத்துக்கொள்வாயே. ௭௰

கொள்வாய்நறுநெய்நல்லெண்ணெய்கூட்டுசித்தாமணக்கெண்ணெய்
ஒள்ளிதானவேப்பெண்ணெயுப்தவெஞ்சோடுமஞ்சள்
துள்ளாதொக்கப்பொடிசெய்துதூவிக்காச்சியெண்ணெயுடன்
உள்ளேகொண்டுமேலுவிட்டாலுளைக்கும்வாதகரப்பன்போம். ௭௰௧

தலையுஞ்சனத்துக்குரல்நெரிந்துகருகாதுடம்புதிமிருமுண்டா
முலையுங்காலும்வீக்கமுமாயுளையாதிருக்குமுயர்பற்றுங்
கொலையுஞ்செய்யுந்திமிர்வாதங்கொடியகரப்பனிதுவென்று
கலையில்வல்லதமிழ்முனிவர்கணடேயதனையுரைத்தாரே. ௭௰௨

கண்ணுந்தூங்கிடுகுந்திகனத்துசுரந்துவெதுப்புமுடல்
அண்ணாந்ததுவேநடைகனக்குமயர்ந்தேயுடலுங்கிறுகிறென்னு
மண்ணிற்பிறந்தோர்தங்களிடம்வராதேவருந்திமயங்கிடுதல்
எண்ணித்திமிர்வாதக்கரப்பனிதுவேசெய்யுங்குணமாமே. ௭௰௩

(வேறு.)

சாரணையுத்தர்தாளிதான்கொற்றான்சிறுகிளாவேர்
சேருமுருங்கைப்புங்கம்வேர்சிறியவழுதலையெருக்கம்வேர்
ஏழுங்கழற்கொடிமிளகுள்ளியிபன்றகரப்பன்றானுங்
கூறும்வசம்பாமணக்கெண்ணெய்கூட்டிக்காய்ச்சியெரித்திடவே,

உள்ளுக்குங்கொடுத்து-மேலுக்கும்பூச,

(வேறு.)

தூதுளைநீயோரிதழ்வேர் துய்யவெருக்குக்கொடிவேலி
மோதங்கடுக்காயிருசீர மேலஞ்சுக்குவமுக்கிருவம்
நீதிபெறவேசமனிடித்துநிசமாய்வெல்லந்தனைக்கூட்டில்
தாதுவிளக்குங்கரப்பன்போந்தருகாதிதுவுஞ்சத்தியமே. ௭௱௫

(வேறு,)

முள்ளிவேர்சின்னிவேர்பிரண்டைவேரு
முன்னைவேலிப்பருத்தியழிஞ்சிவேரும்,
வள்ளைதலைச்சுருளியொடுகுமிழம்வேரும்
வகையான்கொழிஞ்சிசெப்புநெரிஞ்சிவேருங்
கொள்ளுவாய்த்தண்ணீரிட்டான்செங்கத்தாற்
கொள்வசம்புவெள்ளுள்ளிமிளகும்நேராய்
வள்ளலேயா மணக்கி எண்ணெய்தன்னை
மயமாகவெந்தெடுத்துமேலேபூசே, ௭௱௬

(வேறு,)

போதச்சிரமேவரண்டுமிகப்பொருமமூர்ச்சைசவீடுவதெனிற்
சேதப்படுத்தும்பித்தமிகச்செய்யுங்குணங்களீரெட்டு
காதுங்குத்துமிடர்சொரிவாங்கண்டகரப்பனிதுவென்று
போதஞ்சிறந்ததமிழமுனிவர்புவியின்மீதுபுகன்றனரே. ௭௱௭

தூதுளையோரிதழ்த்தாமரையுந்துய்யமுத்தநன்னாரி
ஓதுஞ்சாரணைதிரிகடுகுவுகந்தசீரம்வசம்புள்ளி
காதுகையாந்தகரையுடன்கசக்கும்வேம்பின்னீற்றண்ணீர்
போதுமெண்ணைதனிற்கூட்டிப்பொருந்தவெரித்துவருந்திடவே.

வரட்சிவாதகரப்பன்குணம். இதற்குஎண்ணெய்.

வாதஞ்செறிந்துமபக்காதேவரட்சிகரப்பன்வகைசேரீர்
ஊதஞ்சொரியும்மயிரிற்றுவடலுமிகவேவேதைபண்ணுந்
தீதேயமர்ந்துபரந்தேறந்திசமாய்ச்சருமம்பொருக்கொழும்பு
சாதுமொருவர்க்குண்டெனவேசடையாய்ப்புலால்தானாறுமிதே.

தண்ணீ மிட்டான்கிழங்கதனிற்சாறுநாழிதான்கொண்டு
வண்ணத்தூரியவரிக்குமரிமடலின்ச றுநாழியது
அண்ணற்கரியதூதுளையதனின்வேரும்பலம்நாலு
நண்ணும்படியேசாரித்துநலமாயூறப்போட்டிடவே. ௭௱௮

ஊறிப்பிழிந்துவடித்தெடுத்துவுகந்துநன்றாய்க்காய்ந்தநீர்
ஆறிப்போகுமதிலெண்ணெயதிலேநாழியுரிவிட்டுக்
கூறுயச்சிவந்தகொடிவேலிகூட்டுஞ்சீரம்வெம்பாடல்
மீறக்கூட்டவேண்டாங்காண்விதமாய்க்கழஞ்சுவிரைக்கூட்டே.

கூட்டிக்காய்ச்சிவடித்ததனைக்குணமாய்க்கொண்டுமேற்பூச
வாட்டஞ்செய்யும்வரட்சியொடுவாதகரப்பன்வாங்கிப்போங்
கோட்டிக்கொள்ளும்வியாதியதுகுணமாமென்றார்குறுமுனிவர்
சேட்டமுடனேயிம்மருந்தைதெளிந்துசெய்வீர்செகத்தோரே, ௭௰௨

காலக்கரப்பான்குணம்.

காதுந்தினவாங்கண்தினவாங்கண்டந்தினவாங்கரகரத்து
ஓதுங்கண்ணீரூற்றொழுகியுயர்ந்தமைக்கிஃகீர்பாயு
பாதுமுழுகநாற்பதுநாள்பகரும்பிணியும்விட்டகலும்
சேதப்படுத்துமிடரதனைச்சேருங்கபாலகரப்பனிதே. ௭௰௩

(இதற்குஎண்ணெய்.

நன்னாரிமுத்தந்தூதுவளைநலமாம்பொன்னாங்கண்ணிசீதேவி
சொன்னேரிதழின்றுமனைமையுந்துய்யசிவனார்நிலவேம்பு
மன்னிவளரும்பெருங்குரும்பைவட்டிச்சாரணையின்வேருந்
தன்னைவகைக்கோர்பலங்கொண்டுதண்ணீர்கண்டுகியாழமிடே. ௭௰௪

சுக்குமிளகுதிப்பிலியுஞ்சோமமுப்புக்கருஞ்சீரந்
தக்ககடுக்காய்வசம்புள்ளிச்சரிசென்னகரங்கச்சோல
மிக்ககடுகுரோகணியும்வெளுத்தபிசினுமதிமதுரம்
ஒக்கமுஞ்சியெள்ளெண்ணெயோதுங்கரப்பன்றான்போமே. ௭௰௫

(வரட்சிகரப்பான்குணம்.)

(வேறு.)

கால்தலையுடலெடுத்தேகனக்கவேபங்கமாகிச்
சேலதுகெட்டுவற்றித்தினவுடன்சொரியுமுண்டாஞ்
காலவேகாதுமிஞ்சிமிடறுதான்கரகரத்து ௭௰௬
மால்தருமானேயீதுவரட்சிசேர்கரப்பனாமே.

(இதற்குஎண்ணெய்)

(வேறு.)

புங்கெண்ணெய்நல்லமஞ்சள்புதியவெள்ளைபாஷாணம்
வங்குகிசறியம்வெம்பாடல்வல்லாரைச்சார்நல்லெண்ணெய்
பங்கப்படாமலேசேர்த்துப்பதத்தில்வடித்துமேற்பூச ௭௰௭
தங்கரணைவென்னீரில்தானேமுழுதுந்தரியாதே.

(கண்டமாலை.)

தலையுன்பிடரிகண்டந்தன்னையுங்கனத்துநொந்து
உலையுடன்கழுத்தைச்சுற்றுமுருண்டதுவுடைந்துபுண்ணா
மலையுடன்சுரமுமாறுக்குணங்களுங்கண்டபோதே ௭௰௮
கலைபெறுமுனிவன்சொன்னான்கண்டமாலையுமிதாமே.

(இதற்குஎண்ணெய்,)

புள்ளிவசம்புகோஷ்டம்உள்ளிபுகலுமதூரம்வெம்பாடம்
வெள்ளையெருக்குகருஞ்சீரம்வேலிபருத்திதிர்கடுகு
கொள்ளுங்கடுக்காய்சேங்கொட்டை-கொடிவேலியாவரைவேர்
தெள்ளுஞ்சினப்பரதேவதாரம்வகைக்கும்பலமொன்றே, ௭௰௯

(வேறு)

குக்கில்வெள்ளைப்பிசின்லிங்கந்துரிதுத்தஞ்
குங்கிலியம்வேம்பிணிடபிசினுந்தாரம்
தக்கவகைக்கழஞ்சொன்றுவாட்டின்பாலுந்
தனியெண்ணெய்வேளைநீர்நாழிநாழி
வைக்குமுமருந்திடித்துக்கரைத்துக்காய்ச்சி
வடித்துள்ளேகொண்டுமேற்பூசும்போது
மிக்கதோர்கண்டத்தின்மாலைநோயும்
விப்புருதிகரப்பன்வகைவிட்டுப்போமே. ௭௨௰

(அரையாப்பு)

(வேறு,)

சூடதுநீரினாலுந்துணுக்கறையுறுக்கினாலு
மாடற்செய்புணர்ச்சியாலுமருபெருநடையினாலுங்
கேடுள்ளஎண்ணெய்நீராற்கெணித்திடுமரையாப்புத்தான்
பாடினார்முனிவன்றானும்பரிவுடன்பழமையோர்க்கே, ௭௨௧

(இதற்குமருந்து.)

(வேறு)

வசம்புவுள்ளியாதண்டைவளருந்தும்பைத்தைவேளை
இசங்குநத்தைச்சூரியிலையிவைகள்சரியாயரைத்தபின்பு
அசங்கமன்றியிதைவெதுப்பியானமருந்தைகாண்மூன்று
இசங்கமாகவரையாப்பிலியல்பாய்க்கட்டநெகிழ்த்திடுமே. ௭௨௨

கோழிமுட்டைகற்சுண்ணங்குன்றுபனைவெட்டுவேர்மண்ணுஞ்,
சூழக்கூட்டிச்சாரிடித்துச்சுகமாய்பூசவகையன்றி
நீருமுள்ளிப்பசுமஞ்சள்நிகர்வெந்தயமும்பனைவெட்டு
மூருஞ்சுண்ணம்புவர்மணணுமுட்டைநீரிலரைத்திடவே. ௭௨௩

நீர்மேல்நெருப்புத்தானரைத்துநிசமாய்ச்சாமமட்டாகப்
பாராய்மூன்றுநாள்கட்டப்பகர்ந்தோங்கட்டிமருந்தாக
ஊசின்முருங்கைவசம்புள்ளியொட்டிக்கட்டிருண்மையிது
மாறுமுள்ளிக்கொடிவேலிவசம்பாதண்டைமாவிலிங்கே. ௭௨௪

இரதம்பணமாம்வெள்ளையரையோர்க்கக்கௌரிதானரையாந்
துரிசதரையாக்காரீயந்துலங்கவுருகுமுகந்தனிலே
இரதம்விட்டுத்தானுருக்கியெல்லாங்கூட்டிப்பொடிசெய்து
பரிசாயொருநாளிவ்வளமாம்பருக்கச்சிலையும்புகைகாட்டே, ௭௨௫

மஞ்சாடிப்பிரமாணஞ்சிலேயைக்கட்டிப் புகைகாட்டவும்.

(வேறு.)

பரிந்துறுகிகிரந்திநோய்கள் பரந்திடும்வெப்பினலு
மரும்புனற்றீகையாலு மடிப்புண்களடுக்கையாலுங்
கருங்குழன்மாதர்தோஷங் கண்டிடவுண்டாமென்று
வருந்திருமுனிவன்சொன்ன வாகடமறிந்துகொள்ளே. ௭௨௬

(வேறு.)

கல்நாரிரதங்களிப்பாக்குக் காசுகட்டிக்கல்மதமும்
நல்லதுரிசுநலமாக நாட்டியிவையெல்லாஞ்சமனாய்
நல்லாயிரதஞ்சுத்திசெய்ய நல்லப்பருத்தியிலேச்சாற்றி
லல்லாற்பசுவின்வெண்ணெயிலுமதனையறுத்துச்சிமிழில்வையே. ()

(வேறு.)

உருகையிற்றயிருந்தண்ணீரு மத்துநீருந்தானும்
ஒருதுளிவிட்டுலாவி யுண்டிடுமூன்றுநாளும்
கருகிடுகிரந்திதானுங் களைத்ததோர்வீக்கம்போகுங்
கருதியமுனிவன்சொன்ன காரணமறிந்துகொள்ளே, ௭௨௮

(வேறு.)

துரிச்சுட்டுநீறாக்கித் துய்யாமணக்கின்முத்துடனே
பருகவோட்டில்வினைவறுத்துப் பருப்பையெடுத்துத்துரிசுடனே
மருவமரைத்துச்சிலேதனில் மகிழப்புரட்டியிருநோ
மருகும்புண்ணிற்றூன்போட்டு வதனில்விடுவாய்க்குளுந்தண்ணீர். ௭௨௯

ஒருநாளைக்கு-ஆறு ஏழுதரங்குவிர்ந்ததண்ணீர்தாரைவிடவும்.

இரதமதுவுமஞ்சாடி பியன்றதுரிசுமூன்றுகு
மரிதாரந்தான்குன்றியள வாகுமிரதம்பருத்தியிலே
சரியாய்ச்சாற்றில்முறித்தரைத்துத் தானேநீருபோலாக்கி
துரியதுத்தம் பொடியாக்கித் துய்யபசுவின் வெண்ணெய் கொள்ளே.

மருந்துவெண்ணெயதனுடனே மத்தித்ததுவும்பயறளவாய்
மருந்துபோடவெற்றிலேயை மகிழவாட்டிப்பத்திட்டு
மருந்துபடவேகிரந்தியின்மேல் வகையாய்ப்பொடுவொருசாம
மருந்துகழுவிமறுநாளு மாறும்படியேபோட்டிடவே. ௭௩௧

வென்னீர்விட்டுக்கழுவவும்.

கடுக்காயிடித்துத்தூளாக்கி கனத்ததுரிசுமுவர்மண்ணு
மிடிக்கக்காய்ச்சித்தண்ணீரில் வேதுபிடிக்கவாதண்டை
அடுக்காமணக்கங்கொத்துடனே யானவெண்ணெய்செய்திடவே.
மிடுக்காய்வீங்குமாமாகின் மேவுந்திரிபலேதானரைத்து
திடுக்காய் புருஷர்கிரந்திக்குச் சேரும்வீக்கமதிற்பூசே. ௭௩௨

இந்தமருந்துபூசிவேதுபிடிக்கவும்.

துத்தமிரதங்குங்கிலியந் துய்யவெண்கமலப்பொடியுடனே
வைத்தவங்காளப்பச்சை மன்னுங்காளாஞ்சதைப்பொடிய்
முத்தவாவின்வெண்ணெயுட னுகந்ததேசிப்பழச்சாறும்
வைத்தேயரைக்கச் செம்புகொண்டு மகிழ்ந்தேயாட்டிச் சிமிழில்வையே

வென்னீரிற்கழுவி மாதளையிலையிற் றடவிப்போடவும்.

வேதுபிடிக்கச்சாதிலிங்கக்குழம்புவெள்ளைக்குழம்பு.

வெள்ளைக்குழம்பின்வகைகேளீர் மிகுந்தவெள்ளைக்குங்கிலியந்
துள்ளவரைத்துவடிகொண்டு துய்யவெள்ளியெண்ணெய்விட்டு
மெள்ளக்கிண்டிகொதிக்கரைத்து வேண்டுந்தண்ணீர்தான்விட்டு
அள்ளிப்பிசைந்துசீலைதனி லடவாய்த்தடவிப்புண்ணிலிடே. ௭௩௪

சாதிலிங்கமொருகழஞ்சு தனிபேதுத்தமிருகழஞ்சு
சோதித்துருசுமொருகழஞ்சு சொல்லுமத்தையிலைச்சாற்றில்
நீதியரைத்துவெண்ணெய்தனில் நெகிழக்கலந்துகலப்புறத்தில்
சேதியிளைத்துச்செம்புகொண்டு சீலையூட்டிப்புண்ணிலிடே ௭௩௫

சொன்னார்செங்கன்கொடிவேலி சிரங்கைகாணந்தானிடித்து
கன்னரம்பிற்றனேற்றிக் கருதுஞ்சரக்கைத்தானவித்து
முன்னார்புண்ணிற்றனிடவே முயன்றேநீங்கிப்போமெனவே
அன்னையுமைக்குவும்பர்பிரா னறைந்தவாயுள்வேதமிதே. ௭௩௬

(ஐந்துநாள்தின்று பத்தியங்காக்கவும்.)

(வேறு.)

உட்டினமெத்தமீறி யுற்றதோர்நீருமேறிற்
கட்டிமேலங்கள்தீயிற் கரப்பானுங்குடிகளாகிற்
றிட்டமாய்விஷங்களேறிச் சிரங்குபுண்சிலந்திகாணு
முட்டறுவருமேயென்று மொழிந்தனர்முனிவர்தானே. ௭௩௭

கோழியின்முட்டைதன்னிற் குறித்ததோர்கழஞ்சுகெந்தந்
தேழிதாய்ப்பொடித்துக்கூட்டித் தேங்காய்நெய்தனிற்பொரித்து
வாழவேமூன்றுபோது வண்மையாய்நெய்யைத்தேய்க்க
தேழமாஞ்சிரங்குபுண்கள் சிலந்தியுந்தீர்ந்துபோமே. ௭௩௮

(வேறு.)

ஆறாதபுண்சிலந்தியானகடுக்காய்தனைவெதுப்பி
கூறாய்க்கொட்டைதனைப்போக்கி குணமாய்ப்பொடித்துப்புண்ணிலிட
மாறாப்புண்ணுமாறிவிடு மதுவேவகைகண்டதுவாகுங்
கூறுமுனிவருரைத்தபடி குணமாயிதனைக்கருதுவதே. ௭௩௯

மூன்றுகழஞ்சுரசம்வாங்கி முகியாதோமமணிவறுத்து
ஈன்றுபொடித்துக்கொடிவேலி யியல்பாய்ப்புன்னைக்காயளவு

மூன்றுவெற்றிலையின்சாற்றில் முறித்துயசமதாகமது
மீன்றும்பிசரியுலரவிட்டுமிகுத்தகொடிவேலியின்வேரே. ௭௬௰

கொடியவேரும்பனைவெல்லங்கூட்டிவிரவியிளகாமல்
அடுகவிடித்துப்பதத்தில்வைத்துவானகளச்சிக்காப்போலத்
திடமாயுண்ணிலெப்புண்ணுந்தீரும்பத்தியமுருங்கைக்கா
யிடுமேமுருங்கையிலையாகுமிபல்பாய்கைப்புப்புளிப்புவிடே. ௭௬௧

(புகைமருந்து இன்னம்புகை,)

இரகம்பணமாம்வெள்ளையரையிடுவாய்கௌரிதானரையாந்
துரிசதரையுங்காரீயந்துலங்கவுருகுமுகந்தனிலே
யிரகம்விட்டுத்தானுருக்கியெல்லாங்கூட்டிப்பொடிசெய்து
பரிசாயொருநாளிவ்வளவாய்ப்பருகச்சிலையும்புகைகாட்டே. ௭௬௨

மிளகுப்பிரமாணம்விழுங்கவும்.

சிலைகட்டிபுகைக்கவும்,

குளிர்ந்ததண்ணீர்பரிமாறவும்.

இரதமூன்றுகாரீயமிதுவுமூன்றுமிவைதானும
பரிசாயீயமுருகையிலேபண்பாயிரதம்விட்டெடுத்து
உரமரங்கெந்தம்பெருங்காயமுயர்ந்தவெள்ளைபாஷாணஞ்
சரியாயோரொன்றொருகழஞ்சுதானேபொடித்துபுகைகாடடே. ௭௬௩

இந்த ஆறுவகைப்புகைக்குந் தயிருஞ்சோறுண்ணவும்,

கெந்தந்துரிசுவெள்ளையதுகௌரியொன்றுவரையாக
வந்தயிரத மதுவொன்றுமகத்தாயீயம்பணவிடையா
முந்தவீயமுருகவிட்டுமுனிந்தசிரதமதில்விட்டு
அந்தப்படியேயொன்பதுந்தாருகப்புகைக்கும்வகைகேளே, ௭௬௪

குளுந்ததண்ணீர்பரிமாறவும்.

(கழலைவீக்கமுடையமருந்து. )

அரிதாரஞ்சங்குத்தூளாயானவெருக்கஞ்சாயரைத்து
பரிவாய்க்கழலைத்தனிற்பூசப்பறந்துவெதும்பிமிகப்பிதுங்கி
யொருசார்புறத்தாற்புறப்படுமேயுயர்ந்தகழலைதான்றீரும்
வருமையீயத்தகட்டின்மேல்வளவாயெருக்கம்பாற்பூசே. ௭௬௫

ஈயத்தகட்டிலெருக்கம்பாற் பூசிகழலையுடைந்தபுண்ணிற்
போட்டுககட்டவும்.

பேயின்வாழைப்பூமடலைப்பிட்டுவுலர்த்திச்சாம்பல்செய்து
கூறுஞ்சுன்னம்விளக்கெண்ணெய்தன்னிற்குழைத்துப்பூசிடவே
வாய்தான்கழலைதான்மாறும்வகுத்தநாலுநாளமூன்றில்
தீயப்பூசுமுக்குழம்பிற்றீரவெடித்துச்சீழ்விழுமே. ௭௬௬

கல்லுப்புத்தானொருசேரைகலந்தேபாலில்வேகவைத்து
நல்லத்துரிசுபொடிசெய்துநன்றாய்வெந்தவுப்புடனே

எல்லாந்தேசிப்பழமதனைப் பிழிந்கசாற்றிற்றுனரைத்து
வல்லகாரமதனிலிட வருந்துமின்னம்வகைகேளே, ௭௪௭

(ஆணிப்பரிகாரம் புண்களுக்குயெண்ணெய்.)

(வேறு.)

கெவுரியைப்பொடித்துநன்றாய்க் கேளின்னமாமணக்கு
அவினெண்ணெய்தன்னிலிட்டு வானலதக்குழைந்துக்கொண்டு
குவிந்திடுமாணிதன்னிற் குணமுடனிட்டபோது
அவிந்திடவாணிதானுமலறியேயெழுந்துபோமே. ௭௪௮

(வேறு,)

கள்ளிவேர்த்தோல்நுணுமரத்தின் கதித்தபட்டைசிறுகிளாவும்
உள்ளச்சாரணைநன்னாரி யுபர்சிற்றவரைபுளிநரணை
வெள்ளைவேலங்குருந்துடனே வெற்றிலைக்கிரும்புச்சாறுகும்
விள்ளுமதுரம்வெட்பாலை மிளகுகாசுக்கட்டியதே. ௭௪௯

கருங்குங்கிலியங்களிப்பாக்குக்கடுக்காய்க்கூட்டி நாழியெண்ணெய்
ஒருங்கக்காய்ச்சியேவடித்துவுள் ளுங் கழஞ்சுதான்கொடுத்து
இருக்குங்கழலைப்புரைபூச விரங்கியோடும்புண்களெல்லா
மருங்காய்க்குறிதான்வேதமுனி வரைந்தார்செய்தபடியிதுவே. ௭௫௰

(சொரிகுட்டத்தின்குணம்)

(வேறு.)

சொரியதுகாய்ந்துமங்கிச் சுடுகநீர்வெதும்பிமெய்யு
மருங்கைப்போற்சரசரத்து வனலதுவெதும்பியங்கங்
குரடுபோற்றெலிகனத்துக் குருதியுந்திவைரய்முற்றி
துரடிபோற்சொரிந்திருக்குஞ் சொரிகுட்டமென்னலாமே. ௭௫௧

(இதற்குமருந்து.)

(வேறு.)

மஞ்சட்கிழங்குபட்டகனின் மருவுஞ்சுண்ணம்பதுகூட்டி
மிஞ்சுகொடிவேலிச்சாறுவிட்டுக்குழைத்துத்தான்வைத்து
விஞ்செனக்கெனவேசெங்கல்கொண்டுமிகவுந்தேய்த்துக்கழுவியபின்
திஞ்சமாகந்தாடனுக்கிமகிழ்ந்துபின்புசொலக்கேளே. ௭௫௨

முந்துமஞசட்கிழங்கதுதான் முசியக்காய்ச்சிதானெடுத்து
தந்தவூசியிலுப்பையுடத் தரும்புண்ணுக்குத்தானரைத்து
அந்தப்புறகேதான்றேய்த்து வதற்குவென்னீர்தான்விட்டு
முந்திக்குளிக்கச்சொரிகுடட முதிராதோடிப்போமிதற்கே, ௭௫௩

(வேறு,)

கழற்கொடியிலைமரீசங்கருதிநன்னூறுபவமுங்கொண்டு
இளசவேயிடித்தரைத்து யெணணெயுநாழிவிட்டு
வளம்பெறக்காய்ச்சிக்கொண்டு வடித்ததைக்குடிக்கத்தேய்க்க
குளக்கியசொரியுங்குட்டங்குடியோடுமென்னவாமே, ௭௫௪

(பிளவைக் குணம்

ஆயுருவேதமுன்னே ரடவுடன் பேசிவைத்த
நோயமிகும்பிளவைதன்னை நொய்தினிற்றீர்க்கவேண்டி
மாய்மையாய்மருந்துகார மற்றிள்ளபரிகாரங்கள்
தூய்மையாய்த்தெளியக்கண்டு சுகப்படமருந்துசெய்யே ௭௫௫

(இதற்கு மருந்து.)

(வேறு,)

பெரியபிளவைமுள்ளெலும்பு பெருகப்பளக்குருடுமுதுகில்
அருமையதுவுமாருது வடங்காவுபலையுறக்கம்வரும்
பெரியபொன்னுவைரயல்லிப் புகலும்புன்னைக்காயளவு
உரியபழசோமரிற்குடிக்கவோடுந்தவனமுழலையுமே. ௭௫௬

(வேறு.)

முதுகிடையனடந்துகானு முள்ளமுந்தண்டிற்பற்றி
யதுவுங்காய்போல்பரப்பா யவைதன்னிற்கண்ணுமுண்டா
மதிமருந்ததுதன்னு லானதோர்கருவினுலும்
விதியதுதப்பிமீள மருந்துகண்டிருந்துசெய்யே. ௭௫௭

(வேறு.)

வெப்புடன்குத்துமூச்சு விடாதேதுள்ளுப் பல்கோபந்
தப்பிடாநாவரட்சி தருகிடாசந்தின்வாதை
மூற்படாத்தகனமொன்று முறைமையில்வியாதிதானு
மிப்படிக்குணங்களாலு மிருவரைப்பிளவையாமே. ௭௫௮

(பக்கப்பிளவை குணம் )

பக்கமும்பிளவைமார்பும் பருங்கெங்குதென்றல்போல
நெக்கிடச்செம்மையாக நேற்படுநெஞ்சுதன்னிற்
கக்கருங்குழலினுளே கருவியாற்கீறிக்காரம்
புக்கிடச்சத்தம்பக்கப் பிளவையும்விட்டுப்போமே. ௭௫௯

(காரம்.)

(வேறு.)

முதுகிற்பற்றியுரைபோலே முள்ளந்தண்டிற்றழைத்தபடி
யிதுவேபருகினுறவில்லை யேங்கிச்கண்ணேபதிலுண்டாந்
ததிலேமேனிகுளிராகுந் தவனமுழலைகழிச்சலுடன்
இதுதான்பக்கப்பிளவையிதுவினிதாங்காரங்கிறியிடே. ௭௬௰
காரந்தந்துரிசுபாஷணங் கதியாதளவிற்குறையாமற்
சேரப்பொடித்துவெண்ணெயுடன் றிருப்பவரைத்துச்சீலையுட
னுரைத்தடவியிடச்சீலை யதனைபுண்ணிற்றுனிடவே
பாரப்பிலவைப்பிரிந்துருகிப் பறக்குமென்றூர்பரமுனியே- ௭௬௧

(வேறு.)

பறந்திடும்பின்னிற்சாரம் பக்கத்துமிராணைதிரப்
பிறந்திடுந்தயிறுஞ்சோறும் பிலசந்திவைமூன் றுநாளில்

அறைத்துபுகட்டிவைத்து வறிவித்துவேகவைத்து
சிரந்திடுமெண்ணெய்புண்ணிற் றெளியநீமருந்துசெய்யே. ௭௬௨

(எண்ணெய்.)

செப்புமாமெண்ணெய்வைக்கச் சிறக்கவேரிதழ்வேர்காழி
யுப்புடன்றுடரிபூலா வொன்றுப்பூப்பெருஞ்சரக்கு
இப்புடனிடைதானிரண்டு விசையவேதானெடுத்து
தப்பவேயாலுகூட்டித் தனிவிளக்கெண்ணெய்வையே. ௭௬௩

(கட்டு மருந்து.)

எண்ணெயுஞ்சிலதானு மிடைவிடாப்பகலதாக்கு
கண்ணுமாவரையின்பத்திரி நலமானவேறுகூட்டி
புண்ணின்மேல்வைத்துக்கட்டப் பிளவையுமுண்டோசொல்லு
முண்மையாயுரைக்க முனனேருறுதியாயுரைத்ததாமே. ௭௬௪

(பத்தியவகை சாத்தியம்.)

கண்டதோர்கரியுநெய்யிற் கருத்தினினுற்றதெல்லாங்
கொண்டிடக்குற்றமாகுங் கூறினர்முனுவர்முன்னோர்
விண்டிட்டாரவ்வரைக்காயும் விருமபியேமுருங்கைப்பிஞ்சாங்
கொண்டிடக்குணங்களாகுங் குணமிதுகூறினரே. ௭௬௫

பிளவையுமூலையுண்மூச்சு பேசுந்தவனம்வரட்சிசுரம்
குளகும்வேர்வைகுரைக்கண்ணும் கூறுமனந்தல் தான்குறையும்
அளகுஞ்செறியுந்தான்மீறி யழகுவேனிதான்மாறும்
பளகும்பாரிற்பிழைப் ரிதுபகர்ந்தார் முனிவர்பகர்ந்தாரே. ௭௬௬

(வேறு.)

மற்றுள்ளசலங்கள்தானு மற்றுள்ளவிழிகள்நாசி
யுற்றமஞ்செவிகளுசிக் குருதியிலாய்ந்துபார்க்க
இத்தனைகுணமுமுற்று விருவிழியுமுறக்குமாகில்
வித்தகர்முன்னேசென்று மீள்வதுவருமையாமே. ௭௬௭

ஆவரைநெல்லிவில்வ மதனுடநீர்ப்பூலாவேர்
மோவுடவெண்ணெய்தன்னிற் குழைத்துவிக்கத்திற்பூச
பேவியேதந்தவீக்க மிகப்படதணியந்தானும்
தாவியேகுழைத்துபூசத் தயிர்கூட்டிக்கொள்ளநன்றே. ௭௬௮

(வேறு.)

வஞ்சிக்கொடியேநீகேளாய் மருவுமூலைபால்தன்னேடே
மிஞ்சிவராகிக்கிழங்கதுவு மிகுந்தவாவின்வெண்ணெயுடன்
தஞ்சப்படவேயரைத்தொன்றாய் தன்னைப்புண்ணின்மிகப்போட
பஞ்சுபோலேவெளுத்தேகிப் பறந்தேயோடும்பிளவையிதே. ௭௬௯

(வேறு.)

மலைசுமந்தவெண்கொடியும் வைகுங்குருவைநெல்லரிசி
யலர்சிறந்தயாவரையுமதனின்றுதுமதுவன்றி

துலைவிலாதநீர்பெருத்துத்துவருநீலனு மிடத்து
கலைசிறந்தவிம்மருந்துகருதியுள்ளேகொள்ளுவீதே. ௭௭௰

ஆரையிலைபறித்துயத்திவறுத்துயாவாரை
வேரதனைத்தானரைத்துமிருத்தேசிவக்கப்பொடிசெய்து
பாரப்பிளவைசிலநீர்தான்பறந்துபுண்ணில்செய்பூசி
சேரவிதனைத்தடவிடவேசிவருநீர்தான்றீர்ந்திடுமே. ௭௭௧

(துவர் எண்ணெய்)

(வேறு)

ஏலம்லவங்கஞ்செங்கழுநீரென்றுங்கோட்டமதிமதுர
மேலுங்கிராம்புசிற்றரத்தைமேவுங்கருஞ்சீரகஞ்சுக்கு
சாலமிளகுகடுக்காயுந்தான்றிக்காயுநெல்லிக்காய்
கோலையெட்டிவிரையுடனேகூட்டிவெருகுங்கிழங்காமே, ௭௭௨
சந்தனந்தேவதாரமுடன்றனிவிலாமிச்சமிருவேலி
வெங்கமுனிமண்சிறுமூட்டிவளர்காஞ்சோரிவழுதலைவேர்
கங்கஞ்சிந்திற்றாதுவலைகண்டங்காரிநெருஞ்சிவேர்
சிந்துஞ்செப்புநெருஞ்சியுடன்செங்கத்தாரிவேராமே, ௭௭௩

மூடக்கொத்தான்விஷ்ணுகிராந்திமுதிர்செங்கழுநீர்நெய்ச்சட்டி
அடுத்தகையானன்னாரியதனோடிளநீர்வெற்றிலையங்
தொடுத்துத்துளசிதன்னோடுதோன்றுங்கமழ்ப்புல்லாகும்
அடுத்தமூக்கரட்டிபிச்சியாலம்பட்டையரசத்தி, ௭௭௪

(இதுவும்எண்ணெய்)

ஆத்திப்பட்டைத்தென்னம்வேரல்லாநிம்பப்பட்டையுடன்
பூத்தபுளியினுக்கதுவும்பொருந்தவகைக்குப்பொடியொன்றாய்
வார்த்தெள்ளெண்ணெய்படியிரண்டுமருவுமாவினெய்யுரியாற்
கோர்த்தபசும்பாற்படியிரண்டுகொண்டேமருந்தைக்கியாழமிடே
குறுணிக்கியாழமபாலெண்ணெய்குணமாய்நெய்யுந்தான்கட்டி
மருவிலாதயெண்ணெய்தனைமகிழ்ந்துகாய்ச்சிவடிகொண்டு
உறுநெய்க்கழஞ்சுவுட்கொள்ளவுகந்துமேனுந்தால்பூசில்
அறுமேபிளவைவிப்புருதியகலும்வியாதிசகலமுமே. ௭௭௬

வெட்பாலைகோடகசலைமிகுந்தகுமிழ்வேர்வன்னெற்று
வெப்பாய்மஞ்சண்மிளகுடனேயொக்கச்சமனாய்ப்பொறிசெய்து
தப்பாதெண்ணெய்படியொன்றுதன்னைவிட்டுவெந்தபின்பு
அப்பாபூசியுட்கொள்ளவாறும்பிளவைசகலமுமே. ௭௭௭

(சீனக்காரக்குழம்பு.

சீனக்காரநேர்வாளம்சேரவரைத்துவெண்ணெயினாற்
பானற்பிளவைதனிலிட்டாற்பழுத்துவருத்தந்தான்மாறுந்
தானமாகவுடையுமதுசலமுஞ்சீருமாணியும்போஞ்
சீனக்காரவெண்ணெயினாற்றீரும்பிளவைபண்ணிதற்கே ௭௭௮

(சன்னிகுணமறிய.)

(வேறு.)

அனுபோகவிதியாலு மடிவயிறடியினாலு
நினைவுறுகுடியினாலு நின்றிடுந்தன்மையாலு
மனமுதல மருகையாலு நாசிநீரோடாதாலுந்
தனிமுதலாகவந்து சன்னிதான்றோன்றும்பாரே. ௭௭௯

(வேறு.)

ஜன்னியென்னுமந்தஜன்னி மயக்கஜன்னி
தன்னுடனேசிதரசஜன்னிசாப
ஜன்னிவுன்னிஜன்னிவிளைஜன்னிதீர்க்க
ஜன்னியுள்விலங்குஜன்னிதானுந்
தன்னுடனேசிரஜன்னிக்குளையாஞ்ஜன்னி
நிலைஜன்னிகிளையாஞ்சன்னி
இன்னிவைகள்ஜன்னிவகைபதின்மூன்றுக்கு
மிணங்கியபேரீதென்றுவிளம்பினாரே. ௭௮௰

(இதற்குப்போவாதத்தின்ஜன்னி.)

(வேறு,)

மந்தமாஞ்ஜன்னிதானு மயக்கமாஞ்ஜன்னிதானுந்
தந்த[illegible]தார்சிதஜன்னி தலைப்படுஞ்சாபஜன்னி
முந்தவேவாதத்தாலே முடுகியேவந்ததென்க
சந்தமாமுனிவன்றானுஞ் சாற்றினானுலகுள்ளோர்க்கே. ௭௮௧

விளைபலாஞ்ஜன்னிதானு மேவியதீர்க்கஜன்னி
அளையெலாமவிலங்குஜன்னியதிமகாஜன்னிதானு
நகைகமழ்குழலினாளே நாலிவைதானுங்கேளாய்
பிறைநுதலணிந்தபோதே பித்தத்தில்வந்ததாமே. ௭௮௨

(பித்தத்தின்ஜன்னி-௪)

(கலிவிருத்தம்.)

சிறையஜன்னியுஞ்சேகுணாஜன்னியு
நிறையதாரணிநின்றநிலைஜன்னி
பறிவதாகப்பகந்தநிலைஜன்னித்
திறமதாகுஞ்சிலேத்துமத்தாலிதே, ௭௮௩

(சிலேத்துமஜன்னி.)

(வேறு,)

இவ்வகைப்பதின்மூன்றுந்தானிலங்கியேமுன்றினிற்கும்
நவ்வைநன்மொழியினாளே நவின்றிடக்கேளாய்மானே
ஒவ்வாகசாபசன்னியுயர்பித்தமாகஜன்னி
மெவ்விதாய்ச்சிலேத்துமத்திற்சேர்நிறைஜன்னியாமே, ௭௮௪

(மந்தஜன்னிகுணம்.

மந்தமாய்மயங்கிக்கைகால் வருத்தமாய்வாய்நீரோடி
அந்தமாய்த்திறமுங்கெட்டு வகமிகக்குழைந்துகாட்டு
முந்தவேதந்தங்கூடு முறைமிகுநாவுவற்றுஞ்
சுந்தவார்குழலினளேதான்மந்தஜன்னியாமே. எஅரு

(வேறு.)

பற்பாடகங்கடுகுமல்லிபருத்தகண்டங்காரிசுக்கு
பற்பேய்ப்படலும்ரோசினியு மிவையோரொன்றுவிருகழஞ்சு
மெற்பாய்நீர்தானிருநாழிவிட்டுக்காய்ச்சியுழக்காக்கி
அப்பாற்கிரும்புமேற்பொடியாயருந்தில்மந்தசன்னியும்போம். எஅசு

(மயக்கஜன்னிகுணம்.)

(வேறு.)

எடுத்தெடுத்தெறியுங்கைகா லிருகண்ணுந்தண்ணீரோடி
அடுத்திடவிழியுருட்டு யழகுபல்கறுகறுத்து
எடுத்திடுஞ்செவிபுதைந்துபாக்கியமுண்டென்றுதோன்றி
மடுத்திடுங்குழலினளே மயக்கமாஞ்ஜன்னியாமே. எஅஎ

(கியாழம்)

சுக்குப்புடலந்திப்பிலிதூதுளையுமிலுப்பைப்பூமல்லி
கைக்குமாடாதோடைமூத்தங் கனகூவிளம்வேர்வழுதலம்வேர்
பக்கஞ்சிரஞ்சித்தாமுட்டி பற்படாகமுநன்னாரி
வைவகநீர்விட்டெட்டொன்றாய் மதுசேர்த்துண்ணமயக்கறுமே, ()

(சீதாங்கஜன்னிகுணம்.)

(வேறு.)

குழைந்துழைந்துளைந்துநொந்துகுத்திடுஞ்சரீரமெங்கு
மலர்ந்தலந்தங்கம்வேர்த்து வடிபிடிநடுவேநெத்து
வளைந்துளைந்தலர்ந்துநாவும் வறநீர்வற்றுமாகில்
இளந்திளக்கேகுஞ்ஜன்னியிதுவேசீதகங்கமாமே. எஅகூ

(கியாழம்.)

பெருவாகைகண்டங்காரிபேராமல்லிசிற்றாமல்லி
நறுநன்னாரிகுமிழ்வில்வநற்பாதிரியுநெரிஞ்சிசுக்கு
திறமாய்க்கியாழஞ்செய்திஞ்சிதேனுஞ்சேர்த்துக்கொடுத்துவிடு
அரண்மேலரணேசீதஜன்னியரண்டேயோடுமுண்மையிதே. எகூo

(வேறு.)

வில்லதுபோல்வளைந்துமெய்யுமேவேர்த்துநொந்து
சொல்லதுவயங்கொள்ளாதுதுணுக்கெனநடுக்கமுற்று

நல்லகண்சிமிட்டுக்காட்டிநயக்கமுஞ்சுரமுந்தோன்றும்
பல்லதுகோர்த்துநிற்கும்பருஞ்சாயஜன்னியாமே. எசுக

(கியாழம்.)

(வேறு)

வெங்காயுள்ளிரோகணியும்வேளைநொச்சிவேராகத்
தங்காய்சுக்குஞ்சான்றேவதாரம்வகைபொன்றிருகழஞ்சு
செங்கைநீர்விட்டெட்டொன்றாய்க்கிளறுமிஞ்சிநீர்சேர்த்துப்
பங்காயருந்துசாபஜன்னிபதறியோடிப்போய்விடுமே, எசுஉ

(விரைஜன்னிகுணம்,)

(வேறு.)

விரையலுநடுக்கந்தானுமேனியும்வேர்த்துவெம்பி
யரையலுங்கோபமாகுமப்புறம்புறத்தேயோடி
விரையிறைபெடுக்கொண்ணாதுவென்கருத்தென்றுசொல்லி
கரையதுபேசுமாகிற்சார்த்திடும்விரையலாமே. எசுங

(கியாழம்.)

(கலிவிருத்தம்,)

வேளைநொச்சியின்வேருடனேசுக்கு
ஆளமாகவரைத்துவிடித்துநீர்
தாழவிட்டிதைக்காய்ச்சிக்குடித்திடில்
ஆழங்கெட்டதுளவவிரைஜன்னியே. எசுச

(தீர்க்சஜன்னி.)

குறுகுறுப்பொடுகொட்டாவிபின்னையு
மறுமறுப்பொடுவாங்கிப்புறத்தலு
முறுமுறுப்பொடுமோக்காளஞ்சத்தியுஞ்
செறுசெறுகிற்றிவைவந்துயேற்குமே. எசுரு

(கியாழம்.)

(வேறு.)

சிந்திப்புடலம்விலாமிச்சஞ்சிற்றாமல்லிப்பேர்மல்லி
சேர்ந்ததேக்குவசம்புடன்திப்பிலிரோகணிகழஞ்சுரண்டாய்
வாய்ந்தநீரைபெட்டொன்றாய்வற்றக்குடிப்பிராமாகில்
பாய்க்தேயோடுந்தீர்க்கசன்னிபயனையறிந்துசொன்னேமே. எசுசு

விலங்குஜன்னிகுணம்.)

(கலிவிருத்தம்.

நெஞ்சுமெல்லநெரித்துவிலங்கிடும்
கச்சிசோறுங்கலங்கியிழுந்திடும்
மஞ்சுமேனிமரந்துநடுங்கிடும்
விஞ்சுமேவிவிலங்கியஜன்னியே, எசுஎ

(ஔஷதம்.)

(வேறு,)

அரைத்துசிக்ருத்தூ துவலையான மல்லிபற்படகம்
உரைத்தபூசினிக்கோரையேங்கு மூலந்திராயுடனே
கரைகிட்டிநீட்டொன்றாய்க்கருதிக்காய்ச்சிக்கொண்டிவிடில்
உரத்தவிலங்குஜன்னியது வோகுப்போடிங்கண்டீரே. எகூஅ

(மகாஜன்னி குணம்.)

(வேறு)

முகங்குருவேர்வைகொள்ளு முனிந்திடுங்கிடக்கொண்ணாது
அகங்கள்மிகவேகாந்தலுண்டாயன்னம்வெறுத்துவடைகொள்ளும்
பகங்களெரியுங்காலுச்சி பரந்துமிகவேயெரிப்பண்டாகும்
செகங்கடன்னின்மகாஜன்னி சேர்ந்தாலிதனைத்தேர்ந்தறியே. எகூகூ

(இதற்கு ஔஷதம்.)

(வேறு)

சிறுதேக்குநிலவேம்பு சிற்றரத்தைரோகணியு
நெறிதாரம்வமுசலைவேர்நீர்வெட்டொன்றாய்த்
தருகாதேபன்னிருநாள் தாதானருந்தவல்லீராய்த்
தருகாமன்மகாஜன்னித்தரியாமலோடிடுமே, அா

(சிறைஜன்னி குணம்.)

(வேறு)

கைகாலெடுத்தேயெரியுங் கண்ணும்விழியும்பிரட்டிவிடும்
பொய்காலுதநோய்போலே போந்தச்சூலைத்துட்பொறுக்காது
மெய்காலுமிநீர்கொள்ளாது மேனிவளருமலறந்திருக்கும்
செய்காலுஞ்சிறைஜன்னி சேர்ந்தாற்கிழாழுந்தனைக்கேளே. அாக

(இதற்கௌஷதம்,)

(வேறு.)

சுக்குதிப்பிலியிலவங்கஞ் சுரைபூசினியினிருதண்டும்
தக்கதூதுளையிலாமிச்சு சந்தமோரொன்றிருகழஞ்சு
மிக்கநீருமிருநாழியுழக்காய் காய்ச்சிக்கொடுத்திடிலி
னிக்காதோடுஞ்சிறைஜன்னி நிசமாய்த்தீருங்கண்டீரே, அாஉ

(சூறைஜன்னிகுணம்,)

(கலிவிருத்தம்.)

நாவுலர்ந்திடு நாசிசிணுங்கிடும்
பாவுலர்ந்திடும் பார்த்துக்குழைந்திடு
மெவறைந்திடும் வேதனையாய்விடுங்
கோவுலர்ந்து குறையென்றன்னிபே, அாங

(இதற்குக்கியாழம் )

(வேறு.)

கடுக்காய்சிறுதேக்கிருவேலி கனத்தமுத்தமிலாமிச்ச
மெடிப்பாய்சுகுபற்படகமிவைகள்வகைக்குக்கழஞ்சிரண்டே
அடுக்காய்த்தண்ணீரிருநாழி யளவாயுழக்காயருந்துவிடில்
முடுக்குங்கெட்டுமுறைகன்னி முறிந்தேயோடுங்கண்டீரே. ௮௱௪

(தாணிகஜன்னிகுணம்,)

(வேறு,)

எங்குமோடுமே வடகிடந்திடும்
பங்குபேசிடும் பார்வைமுழுத்திடும்
பொங்கிநடந்திடும் பே தன்கிடந்திடும்
தங்குகின்றதோர் தாணிகஜன்னியே. ௮௱௫

(இதற்குக்கியாழம்.)

(வேறு.)

நொச்சிப்பூனையின்றண்டு நுவலப்பற்படகமிலவேம்பு
மிச்சம்பேராமுட்டிசுக்கு வேலற்திப்பிலியிருகழஞ்சு
பச்சைநீர்தாணுழிரண்டு பரிவாய்க்காய்ச்சியுழக்கருந்த
கொச்சப்படுத்துந்தாணிகமுங் குணமாங்கண்டீர்ஜன்னியிதே. ௮௱௬

(நிலைஜன்னி குணம்.)

(கலிவிருத்தம்.)

பேசிப்பேசிப் பெருகமயங்கிடு
மூசிப்பல்லு மொருமையுங்குன்றிடும்
வாசியென்று மறியமயங்கிடு
நீசனுகிநிலை ஜன்னிகெட்டதே. ௮௱௭

(இதற்குக்கியாழம் )

(வேறு.)

மஞ்சிட்டிக்கடுற்ரோணி வசுவாசிமாஞ்சிசுக்கு
கொஞ்சுபற்படகமல்லி கோட்டஞ்செண்பகஞ்சிதேவி
வஞ்சியேநீரொட்டொன்றாய் மருவுமிஞ்சிநீர்விட்டு
மிஞ்சுதிப்பிலிமேன்றாவி விரும்பிடவொழிந்துபோகுமதே. ௮௱௮

(நிரைஜன்னிகுணம்-)

(வேறு.)

சுரமதுபெருத்துத்தோன்றற் தொண்டையுந்துடிப்புங்கெட்டு
அரையதுமேலேகாந்துமங்கையாற்றண்ணீர்மோற்ந்து
உறையதுசிறுமிமாழ்கி யுயர்தலைவலியுமாகி
நிரைநிரையறியக்கெட்டு நிரைஜன்னியென்னலாமே, ௮௱௯

(இதற்குக்கியாழம்.)

தாமரைவளையஞ்சிந்திற்றன்சிறுதேக்குசுக்கு
பூங்குறுந்தொட்டி திப்பிலிபுடலமதுரமிலுப்பைப்பூ
தாமிருகழஞ்சுவாங்கிச்சலம்விட்டுவெட்டொன்றாய்க்கி
நாழுலைப்பான்மேலிட்டுநெல்கிடிற்சன்னிபோமே. ௨௱௰

(ஜன்னியின்குணம்.)

தலையதுசிறுத்துநொந்துதான்சிறுசுரமுந்தோன்றி
யுலையு-னுவுலர்ந்துவுறுதிமீர்வலியுமாகில்
நிலைபடநின்றமுன்றுநேரொடுபடுக்கையாலுந்
துலைபநேரம்பினுலந்தோன்றியஜன்னியென்றே. ௨௱௰௧

இப்படிவந்தஜன்னியேழுநாள்மூன்றுநாளுந்
தப்பிலாநாளிலாறுந்தனிலதிற்பிரட்டிநாளு
மெப்புடனவதியாளுமுடன்மருந்ததுவேசெய்தார்
தப்பியேகிடந்தபேர்கடப்பிலாநடப்பாரென்றே, ௨௱௰௨

(ஜன்னிக்குக்கியாழம்.

இன்னமுங்கொத்தமல்லியிருவேலிபற்படாகஞ்
சொன்னசந்தனமுஞ்சுக்குத்தொடர்ந்தெழுமுன்னைவேரு
முன்னமேகியாழமிட்டுமுலைப்பால்மேற்றாவிக்கொள்ள
தன்னேதான்வந்தஜன்னிதரியாமலோடிப்போமே ௨௱௰௩

முந்திரிப்பழம்பேரீந்துமுதிர்ந்தபற்படகஞ்சுக்கு
தந்ததோர்மிலாமிச்சம்வேர்தானிருவேலிதானும்
வந்திதைக்கியாழமிட்டுவகையுடன்கொடுப்பீராகி
லிந்திரனைசன்னியில்லையிக்கியாழத்தாலே. ௨௱௰௪

(ஜன்னிக்குமருந்து,")

(வேறு.)

உள்ளுநன்னமருந்துதானுமுயர்ந்தநசியம்புகைதானுந்
தெள்ளுமஞ்சனங்குழம்புதிறமானதயிலந்தானு
மெள்ளவேசெய்தாலுள்ளமேவியேதெளிந்தாராகிற்
கள்ளமுந்திறந்துஜன்னிகருத்துறம்பிழைப்பதாமே. ௨௱௰௫

முத்துமுந்திரிகைதானுமுதிர்ந்தவிலுப்பையதன்பூவும்
ரத்தந்தெளியுஞ்சந்தனமுநல்லதண்ணிமிட்டாறு
முத்தக்காசுவித்தனையுமுலைப்பால்விட்டுவரைத்ததிலே
நைத்ததேன்சர்க்கரைகலந்துநல்லஜன்னிபோமிதற்கே. ௨௱௰௬

(ஜ ன்னிக்குஅஞ்சனம்.)

மிளகுநெல்லிவாகைவிரைமுதிர்ந்தசுக்குதிப்பிலியும்
பழமாந்தேசிச்சாற்றிலரைபணபாயுளத்திக்கண்ணிலிட

வளமாய்வந்தவுன்மத்தம்வந்தஜன்னிவிஸ்லாது
விஷமாஞ்சன்னிபதி -மூன்றும்விரைந்தேயோடிபோமிதற்கே.

(ஜன்னிக்குகுளிகையாத்தமருந்து,)

(வேறு,)

அழிஞ்சிவிரைசநல்விரைகாரெள்ளுகாண
வாமணக்குவுளுந்துபுன்னைபுங்கைவித்து
பழந்தேங்காய்கழற்பருப்புமூருங்கைவித்து
பருத்திவிரையுள்ளிவாலுமுளைவசுக்கு
வளந்தெருக்கம்பழுப்புகருஞ்சீரகந்தான்
வசம்புகுப்பைவிழாவரிசிசமனிடித்து
இளிகட்டிநிம்பெண்ணைக்காய்ச்சிக்குத்த
கெடிகலங்கி சன்னிடதினமூன்றும்போமே. ௮௱௰௮

(நசியம் கலிவெண்பா.)

எந்தெந்தஜன்னிக்குமேற்குமேபுங்கம்பூ
மூந்துதண்ணீர்கலக்கிமூக்கில்விடசந்தயமாய்
பூசினிப்பூச்சாற்றிற் புகழ்வெல்லந்திரிகடுகு
நாசிவிடுஜன்னிகிதுநாசமாம்-பேசரிய
தும்பையிலைச்சாற்றிற்றுய்யதிரிகடுகு
தெம்பமெனவேநசியந் தான்செய்ய வெம்பவே
பற்கட்டூச்சடைப்பும் பாழான தோஷமதுநஞ்
சோரகெட்டுப்போமென்றேசொல். ௮௱௰௯

(ஜன்னிவலிக்குக்கிபாழம்,)

(வேறு,)

வேப்பந்தோல்வசம்புசுக்கு விதவிதம் பலமாய்வாங்கி
தாப்புடனெட்டுநாழி தண்ணீரிலிடித்துப்போட்டு
கூர்ப்புடனெட்டொன்றாக்கிக் குலவியேகுடிக்கில்வாதங்
கோப்புவிட்டோடுஞ்சன்னி குளைவலியைந்தும்போமே. ௮௱௨௰

(ஜன்னிவலிக்கு ஆமணக்கெண்ணெய்.)

(வேறு.)

உளைத்தவில்வங்கொடிவேலி யுயர்சாரணைதிப்பிலிசுக்கு
அளைத்தகடுக்காயீந்துப்பு வரியவிடையங்கருஞ்சீர
முளைத்தசன்னிநாயகமு முள்ளிக்குன்றிவீரோகணியுந்
தடுத்தாமணக்கெண்ணெயில் வெந்துதாக்கில்வலிசன்னியும்போமே

(லோகித்தாண்டத்தயிலம்.)

நிம்பத்தோலாலம்பட்டைவீசமாந்தோடைபிரமிதுராய்
நிம்புர்துளசிகுறுந்தொட்டி நல்லவேலிப்பருத்திநொச்சி
நிம்புமானபெருங்குறும்பை தனிச்சார்வளைக்குவுரியாகும்
பின்புநாழிநல்லெண்ணெய் பிறகுகற்கந்தனைக்கேளே. ௮௱௨௰௧

(ஜன்னிவகைவாதம்வலிக்குத்தயிலம்)

(வேறு.)

சிறுதேக்குமுசுறுமுட்டைகிலுகிலுப்பை
சிவன்வேம்புவிலுப்பைப்பூசர்ப்பங்கண்டங்
திரிகடுகுகருஞ்சீரங்கடகசிங்கி
செவியமரமஞ்சள்நன்னாரிமஞ்சள்
திறமானகடுக்காயுங்கடுகுரோணி
தேவதாரம்வகைககுக்கழுஞ்சுசேர்த்து
பரமாகக்காச்சியுண்டுகசியஞ்செய்ய
பலஜன்னிவிஷபாகம்பறந்துபோமே. ௮௨௩

அரைததமரமஞ்சள்சந்தனநன்னாரி
யானசுக்குமலையிஞ்சிமுசுறுமுட்டை
உரைத்தகோஷ்டங்கிலுப்பைதிப்பிலியிந்துப்பு
வுயர்கருஞ்சீரகம்வசம்போர்பலமாய்வாங்கி
வறுத்திடித்துநல்லெண்ணெய்நாழிசேர்த்து
வகையாவக்காய்ச்சிவடித்தருந்திப்புசு
தரித்தசன்னிவகைவாதம்வலியந்தும்போந்
தயிலமதுலேகித்தாண்டவமென்பாரே. ௮௨௪

(பயித்தியத்திற்குக்கியாழம்.)

(வேறு,)

ஏலஞ்சுக்குமுந்திரிகையிஞ்சிமிளகுசந்தனமு
மாலமொட்டுக்கடுக்காயுமதியமதுரநெல்லிமுக்க
மேலாஞ்சாத்திரபேதியடன்மிகுந்தபச்சிலையிதெல்லாஞ்
சாலச்சமனுல்குடிநீராய்த்தாக்கப்பயித்தியந்தீரியாதே, ௮௨௫

(மரணஜன்னிக்குஎண்ணெய்.)

சகலஜன்னிவாதத்துக்குமாம்.

(கலிவெண்பா.)

மரணஜன்னிக்கீசன்வகுத்தயெண்ணெயுங்கிலுப்பைத்
தருணநல்லெண்ணெய்நிம்புதனியெண்ணெய். திறமாய்

வகைவகைக்குநாழிவகையாம்விளக்கெண்ணெய்
திகையாமலிருநாழிசேர்த்தியே மிகவான

சிறுதைவேருப்பிலிவேர்சிற்றமல்லிநாயுருவி
யாதண்டைவேளைவேராவிதிரிதராய்ச் சாதகமாய்

எட்டிவேர்குன்றிவேரிலுப்பைப்பூவாகைவேர்
சட்டமுள்ளசந்தனமுஞ்சாரணைவேர் நட்டமிலா

கடுகுரோகணிமஞ்சள்கடுக்காய்கருஞ்சீரங்
கடுகுமரமஞ்சள்கணக்கா யிடுவகைகேள்

நறும்பிசினும்பூநாகநற்சர்ப்பக்கண்ட
முருநத்தைச்சூரிவேர்கிலுகிலுப்பைத் திறமான
குதிரைக்கிளம்பிரண்டுகுரட்டைவேராமணக்கு
பதிமுசுறுமுட்டைப்பரிவா யிதமாக
தேவதாரத்துடனேசேர்ந்தவுத்தந்தாளிப்
பரவகமாய்ச்சரிகூட்டிப்பார்த்தெடுத்துத் தீவிதமாய்க்
காய்ச்சிவடித்துக்கனதலங்களேயறிந்து
பூசிவிடுகோசிடைதான்போதருந்தில் வாய்ச்சதொரு
சுரசன்னிபதின்மூன்றுந்தோன்றுமரஞ்சன்னி
சருவவாதங்களெல்லாந்தருமே பிரியாமல்
வருந்துவிஷபாகவாதகரப்பானு
மிருந்தவிடங்காணுதேகும். ௮௨௬

(வேறு.)

தேவதைவிரோதத்தாலுஞ்சேர்ந்திடும்விசாரத்தாலும்
தாவிடுஞ்சுரங்களாலுந்தங்கியவிதங்களாலு
மேவியவாதத்தாலும்விளம்பிடும்பித்தமையம்
காவலமுனிவன்றானுங்கருதியேயுரைத்ததாமே. ௮௨௭

(வாதத்தில்ஆறுவகைகுணம்.)

கூறும்வாதமுதலாகுங்குறிக்குங்கிரிமியரண்டாகும்
தூறுங்கிரியமூன்றாகுந்தோன்றும்போதங்கிரிநாலாம்
காறுமெழுந்தகிரியாறும்நவின்றார்மாந்தர்க்குறிதியுடன்
ஆறும்வாதப்பிறவிதனையறைந்தார்முனிவரிஷிதாமே, ௮௨௮

(பித்தத்தில்ஆறுவகை.)

பிச்செழுந்தகிரியமுடன்பிசாசுகிரியமிவையாறு
மச்சமற்றபிரமனுடனைபிரமராட்சதனுங்
கிச்சகெந்தரூபனுமேகெந்தரூபராக்கிசனுங்
தச்செழுந்தபித்தமதாற்றுனிவைகளாறுமென்றே, ௮௨௯

(சேத்துகித்திற்சன்னிக்கிரியைகுணம்.)

குமரமாங்கிரியத்தோடுகுமரருக்கிளனும்ரண்டாங்
நமரணுநாரசந்தான்றகைராசர்க்கிள்ளுநாலா
மமரிலாமத்தியதானம்நத்தியாக்கிளனுமாறுந்
திமிரனுஞ்சேத்துமத்திற்சேர்ந்ததென்றுரைக்கலாமே. ௮௩௰

(வேறு,)

கள்ளுளமறந்ததாகுந்தருகிடாதழுதுநிற்குங்
கெள்ளெனமுகமுந்துஞ்சுஞ்சிரங்குமேசொரியுமுண்டாம்
வள்ளுளவாய்நீரோடிமற்றுமேபலவுங்காணு
மெள்ளத்தோன்றுஞ்சளக்கிரியமென்றிவைவிளம்பலாமே ௮௩௧

(போதக்கிரியைகுணம்)

தன்னிலைமுறையேயிட்டேதன்னைத்தானுள்ளும்பின்னை
தன்னையேயுடுத்தசீலை தகரவேகிறுங்கண்டா
யுன்னியுன்னுதிருக்கு முயர்ச்சியால்தன்னைக்கண்டாற்
பின்னேகேள்போதத்தோடு மேவியகிரியமென்றே. ௮௩௨

(உத்தமக்கிரியைகுணம்.)

வெற்றிலைபிருந்தருந்தும் வெகுண்டுதான்சிரிக்கும்பின்னை
நித்தியங்குளிக்குங்கண்டாய் நினைவற்றுப்பற்றிப்பேசும்
வைத்துமேற்சிவக்கணுள்ளுரு மனிதனைப்பிரிந்திருக்கும்
இத்தனையுத்தமத்தி ணிணங்கியகிரியமாமே. ௮௩௩

(பிசாசுக்கிரியைகுணம்.)

வந்தவர்தன்னைத்துப்பு மதிமறந்தன்மேற்றுப்பும்
பிந்தவேபித்துபேசும் பிசாசுபேற்கரைவதாகு
மிந்திரவிளங்குப்பாரா திருஷ்டியேயுன்னுந்தாமே
பிந்துதான்கழுவமாட்டான் பிசாசென்னுங்கிரியமாமே. ௮௩௪

(பிரமக்கிரியைகுணம்.)

அவையமேசத்தமாகு மடுத்தாளையடிக்கும்பின்னை
கவையுடன்பிரட்டுப்பேசுங் கண்டதையெல்லாந்தின்னு
நவையெனச்சிரிப்புண்டாகு நடப்பிலேபேசுக்கண்டாய்
சவைகெடபிரமத்தோடு தங்கிய கிரியமாமே. ௮௩௫

(கெந்தரூபகிரியைகுணம்.)

தலையதுகவிழ்ந்திருக்குந் தயவுடன்வேலைகேளான்
குலையுடன்கஞ்சுகொள்ளுங் கொடுத்ததையெல்லாந்தின்னு
நிலைமனட்பற்கடிக்கு நினைவறவயிறுபோகு
முலைப்படுங்கெந்தரூப முடனதுகிரியந்தானே. ௮௩௬

(குமரக்கிரியை குணம்.)

திரையிட்டுவழுமேகண்டாய் சிலநேரஞ்சிரிக்கும்பின்னை
துரைசிறுநீர்குடிக்குஞ் சுவர்தனைக்குத்திதின்னும்
பீறசிறமஞ்சள்போலாம் மெருகுமேமோகந்தானும்
குறைவரக்குமரத்தோடு கூடியகிரியமென்றே. ௮௩௭

(குமரக்கிரியை குணம்.)

கல்லதுபொறுக்கிக்கூட்டுங் கண்டனவெல்லாம்பேசுஞ்
சொல்லதுதட்டிப்பேசுந் துரிசறவபயமிட்டு
மல்லுடன்பற்கடிக்கு மாய்ந்தொருபாவொதுக்குஞ்
சில்லுடன்ராசத்தோடு சேர்ந்தொருகிரியந்தானே, ௮௩௮

(அத்திபைக்கிரியைகுணம்.)

(கலிவிருத்தம்.)

ஓடிடுங்கூப்பிடி மோங்கியுளாத்திடு
மீடிசங்கட்டிடு மித்துமுளித்திடுங்
கூடியபேரை குளாக்கவேகண்டிடு
மாடிடுமேத்திய மணுகுங்கிரியமே. ௮௩௯

(இதற்குக் கலிக்கம்.)

பேயின்பீர்க்கம்வித்ததனைப் பிளந்துபருப்பைத்தானெடுத்து
மாயக்குழலாள்முலைப்பாலில் வடியவரைத்துவிழியெழுத
காய்வாய்கண்ணுங் கலங்கிமிகக் கறுத்துவிமையுந்தான் வீங்குந்
சாய்வாய்மூன்றுநாள்தெளியுந் தணியும்பயித்தியம்பதினெட்டே ()

(நாசிக்குத்தூள்.)

(வேறு,)

திப்பிலியுஞ் சமுத்திராப்பழமோரென்று
    திறமானவரைப்புகட்டியதினிரட்டி
நற்பாகம்பொடித்தூளாக்கிவாங்கி
    நாசிதனிலேற்றிவிட்டானயமாய்க்கேளு
இப்படியேவங்கதொரு பேய்பூதங்க
    ளேகுமேபயித்தியங்க ளெல்லாந்தானுஞ்
சொற்படிகேளாத தோஷமெல்லாந்
    துலையுமென்றுதமிழ்முனிவர் சொன்னதாமே ௮௪௧

(விரோசனத்துக்கு வுள்ளூற மருந்து.)

(வேறு,)

பேய்பின்பீர்க்கம்பருப்புவாளம் பேசுமிந்துவோர்கழஞ்சு
வாயுமிளகுரண்டிடையாம் வாகைப்பழச்சார்தானரைத்து
மேயுந்தேத்தான்காயளவு மேவுங்கோரோசினைகூட்டிக்
காயுமுடலுக்குள்ளீயக் காணுதோடும்விரோசனமே. ௯௪௨

(குடோரியிடமருந்து.)

ஊமத்தம்வித்தனைகழஞ்சு வொன்றுஞ்சிரங்கையரிசியுடன்
நாமதைவறுத்துப்பின்னை யதைநன்றுயப்பொடிக்கொண்டு
ஏமதைஇளநீர்தன்னி லிட்டதைக்குடிப்பீராகிற்
றீமதப்பயித்தியங்கட் டீருமென்றறிந்துகொள்ளே. ௮௪௩

மிளகுபிடியும்தான்வறுத்தரைத்து
    வெண்ணெய்விரும்புமதான்கூட்டிப்
பழமாமெலுமிச்சஞ்சாற்றிற்
    பதமதாய்க்குழம்பாய்த்தான்சேர்த்து
வளமாமுச்சிரோமந்தலை
    வடிவாயுடனுந்தான்றேய்க்க

குளமாம்பித்தநாற்பதுவுங்
குடிபோம்பயித்தியம்பாரே. அ௪௪

(வேறு.)

ஐயுடன்கிலியுஞ்சொல்லி யடித்திடும்பிரமாணூறு
தையலேநூறுதோண்டி தண்ணீர்தான்றலைக்குவாறு
கையுடன் கால்விலங்கு கட்டிக்கொண்டேகும்பின்னை
பையவேபயித்தியங்கட் பறந்துபோமென்றார்முன்னோர். அ௪௫

(இதற்குக் குடிநீர்.)

(வேறு.)

பேயான்பீர்க்கஞ்சமூலமதுபிடிங்கியாறுபலங்கொண்டு
ஏயமதுரமுந்திரிகையேலந்திரிபலைதானென்று
சாயத்தண்ணீர்பதினாறுகருகக்காசசுநாலொன்றாய்
வாயத்தண்ணீரொருசிரங்கை வார்க்கப்பயித்தியமாறிடுமே. அ௪௬

(பயித்தியத்திற்குயெண்ணெய்.)

(வேறு)

நெல்லிகையானெலுமிச்சம்புடல்முசுக்கை
நீர்படியாநல்லெண்ணெயிளநீர்பாலு
நல்லசந்தனமதுரமஞ்சனக்கல்
நல்லமுந்திரியிளகுவகைவகைக்கு
நல்லாகப்பலமொன்றுபாலிலாட்ட
நலமாகக்காய்ச்சியிதைமூழுகும்போது
தொல்லையென்றபயித்தியமுட்காச்சல்தானுஞ்
சொரிசிரங்குவிவைவயெல்லாந்துலைந்துபோமே. அ௪எ

(வேறு.)

ஏலமிளகுமுந்திரிகை யிஞ்சிசுக்குசந்தனமு
மாலமொட்டுக்கடுக்காயு மதியமதுரநெல்லிமுத்த
மேலாஞ்சாத்திரசேதியுடன் மிகுந்தபச்சிலையிதெல்லாஞ்
சாலச்சமனுக்குடிநீராய் தக்கபயித்தியந்தரியாதே. அ௪அ

(பயித்தியத்திற்குச் சூரணம்.)

(கட்டளைக் கலிப்பா.)

இஞ்சிமுந்திரிசந்தனந் திரிபலையுஞ்சீரகமேலமும்
தஞ்சமாமதிமதுரமுக்கடுதன்னுடன்சரிசீனியு
மஞ்சளொன்றிகைதானருந்திடிலறும்பயித்தியமேகுமே
தஞ்சமாமுனிசாற்றினரிது தண்மையோர்கடமக்குமே, அ௪௯

(சகலநோய்வுக்கு நெய்.)

(வேறு.)

தாமரையின்சிறுபூளைவில்வமுத்தஞ்
சாரணையுஞ்செங்கழுநீர்சீந்திக்கோவை

மாமதூரமாலரசுவத்திஇத்தி
　வாகைக்கோற்பனங்கிழங்குகுமரிநாவ
லேசமமாய்விழிகிம்பம்பலமோரொன்று
　நிசமாகக்கியாழமிட்டுநாலொன்றாக்கி
பாவிநெய்யாலுமஞ்ஞானியாகு
　மதிலிளநீர்பனைநீருங்கருப்புநீரே. அ௫௰

சாரதுகேள்நாமதாளிகொடிப்பைக்கோவை
　தன்னுடனேநெல்லியுடற்பிரமிவேலி
சாரதுகேளளுமிச்சநாழிநாழி
　தன்னிடனேகட்கங்கரோமமேலஞ்
சீரகசந்தனமிளகுவுளுந்துகோட்டந்
　திறமாகமுந்திரிமதுரம்பலமோரொன்று
நேராகவரைத்திட்டு நெய்யைக்காய்ச்சி
　நீவடித்துவுண்டுவிடிற்பித்தம்போமே- அ௫௧

பித்தம்போம்வாயிலேப்புத்காதுநஷ்டம்
　பெருமேகமூலத்தின்கடுப்புந்தீருஞ்
சத்திவிக்கலிளையுடன்க்ஷயங்கடீருஞ்
　சரீரத்திற்கைகால்களெரிச்சற்றீரு
மற்றுமுள்ளதலைநோய்கள் விழிநோயெல்லா
　மாறுமேசொரிசிரங்குசிலந்திதேம
லற்றநீர்க்கிப்பெரிப்புரத்தம்விழ்த
　லறுநரம்புவெலும்புமிவ்வூறுந்தானே. அ௫௨

(நிதம்சூலைக் குணம்.)

(வேறு.)

கோப்புரைவலியதாகிற்குரித்ததாய்க்கலைத்துத்தோன்றி
நீர்ப்புகவானீர்கோர்த்து நிரப்பியேமுத்தத்தேங்காய்போலே
ஏர்க்கவேசவ்வுமுற்றி யிரங்கியேயுதிரநாளி
னீர்ப்போசிந்திருப்பதென்னினிதம்பமாஞ்சூலையென்னே, அ௫௩

(வேறு.)

பிள்ளைபெற்றவிடந்தன்னிற் பெருக்கயோனிதனில்வாய்வு
உள்ளேயடங்கிச்சலமிரத்தமொதுங்கிப்புறப்பட்டிருப்பதென்னுற்
றள்ளிச்சலமேபேசாமற் றடைப்பட்டுள்ளேயடைப்பட்டு
மெள்ளக்கனத்துப்பிரமோடுமிகுத்தநிதம்பச்சூலையிதே. அ௫௪

(இதற்குப்புகைமருந்து.)

கொல்லங்கோவைகிழங்குடனேகொடிக்குருங்கிலியமுக்சமுஞ்சு
வெள்ளியிடித்துப்பொடித்திதனைச்சிரட்டைத்தணலைக்குழியுளிட்டு
புல்லவேபொடியைத்துவிப்பொருந்திடப்புகையைக்காட்ட
மெல்லவெட்டுநோட்புகைக்கமிகுந்தநிதம்பச்சூலைபோம். அ௫௫

நல்லகொத்தானெள் ளெண்ணெய் நாட்டுவகைகளுரியாக
வெள்ளையுள்ளிபெருங்காய மிகுந்தசெம்புகடுகுடனே
நல்லசாலைசதகுப்பை நல்குந்தாரஞ்சீதாரி
நலமாய்வகைக்குக் கழஞ்சொன்றுநாட்டியணைத்துத்தான்காச்சி
யுள்ளேபத்துநாட்கொண்டுவுடனேகைப்புபுளிப்புவிடே ௮௫௬

பித்தத்தின் குணம்.

(வேறு,)

தக்கநெறியாடன்னைத்ததும்பியபித்தந்தோன்றின்
மிக்கெணக்கெண்ணிணளே விடப்பமிஞ்சுரங்கடானு
மொக்கவேவந்துகூடியொன்றாகிநிற்கும்வெப்பு
சிக்கெனவிளைவதன்னாலே தெளிந்துகொள்பித்தமாமே. ௮௫௭

(வேறு.)

பேசும்வகைகேள்பித்தத்திற்பெருக்கவிழியுந்தான்சுழன்று
பூசுகுளிர்ந்துவிருணடுவருங் கொடியநீருங்கடுத்துள்ளந்து
வீசுஞ்சோணையதுபோல விணைந்துவீழுமிகவேதான்
வாசநகமழுமுலகோர்க்காய்மகிழ்ந்துமொழிந்தார்மாமுனியே ௮௫௮

(வேறு.)

பித்தமேமிகுந்தபோதுபெருகியமயக்கமுண்டாங்
கொத்தலர்குழலினாளேகுலைப்பொடுபேய்போலாகும்;
மெத்தவுமீறித்தானேவெறிகொள்ளுமேதியங்கி
நித்தமுவெதுப்புத்தோன்றிநிறையமேல்வீசுமென்றே. ௮௫௯

வெய்யலில்நடக்கையாலும்வெம்பசிமிகுக்கலாலுந்
துய்யநெய்பால்துய்த்தலாலுந்தூய்மொழியோகத்தாலு
நைவருங்கோபத்தாலுநற்கசப்பருந்தினாலும்
பையரவல்குற்றோஷம்பற்றினாற்பித்தமாமே, ௮௬௰

(வேறு.)

தலையுமுடம்புந்தினவுண்டாந்தன்கைகொட்டிந்தான்சிரிக்கு
மலையவெதுப்புநீர்த்தேடுமடங்கிவாதையேயுழற்றும்
பலகாற்பித்தம்படிமீதிற்பாரிலுள்ளோர்தமையிணங்குஞ்
சிலையார்கமழுங்குழலாளேதேர்ந்தேயறியபித்தமதே, ௮௬௧

பித்தம் சமிஇஎண்ணெய்.

கையாந்தகரைசிறுகீரைகதித்தபொன்னாங்காணியுடன்
மையார்குழலாய்நல்லெண்ணெய்வகையாயோரொன்றொருநாழி
நையாவெலுமிச்சம்பழந்தானளந்தேசாறுவிருநாழி
துய்யக்கலந்துகடைமருந்துதுலங்குங்கோட்டஞ்சீரகமே. ௮௬௨

சிறுசந்தனமிலாமிச்சஞ்சிறந்தமதுரமிருவேலி
வாரேகழஞ்சுரண்டாகவடித்துப்பதத்தில்முழுகிவிராய்

பேராப்பித்தங்கிறகிறுப்பும்பிணிகாமாலைசோகையுடன்
நாரிசங்கமாரிபித்தநணுகாவகைநாற்பதும்போமே. ௮௬௩

(கட்டளைக்கலிப்பா.)

பித்தமீறித்தலையைச்சுழற்றிடிற்
பெரியல மிச்சிறுவேலிதன்னுடன்
சித்தமெய்திடுஞ்செண்பகசந்தனஞ்
சீரகஞ்சரிநூளாகச்செய்தது
அத்தர்வாக்கிதுவாவினிற்பாலுட
னரைத்துமேலுந்தலையுமழுத்திடிற்
சத்திகெட்டுப்பிலன்கெட்டுப்பித்தமும்
தப்பியோடித்தனிவழிதேடுமே, ௮௬௪

(வேறு,)

பித்தமாம்வெதுப்புதன்னாற்பெருத்திடுமேல்வரட்சி
மெத்தவேவிக்கந்தோன்றிமேவுமூலத்திற்சூலை
யொத்ததாரெரிந்தகுன்மமோடிடிற்குடல்வாதங்கள்
மெத்தவேதோர்தலைநடுக்கல்விட்டிடாதுண்மைதானே. ௮௬௫

(வேறு.)

காயம்வற்றிக்கடுப்புண்டாங்கைகாலுளைந்துகண்டிரைந்து
நோயுமிகுந்துநொந்துடம்புநோக்கிற்றுதுதான்கெட்டுத்
தேயும்வடிவுந்தானுமொக்கத்தியங்கிநரம்பெல்லாந்தோன்றி
மாயாவரட்சிசூலையெனவகுத்துரைப்பேசவல்லீரே. ௮௬௬

(பிரவீச்சுக்குணம்,)

(வேறு.)

அடுத்தெடுத்தெடுத்துக்குத்தியதிகமாய்வேர்த்து
படுத்துநாவடக்கிப்பேசிபல்லதுகட்டிநெஞ்சு
மடுக்கவேதிஷ்டிசிறியங்கழும்பிறகேவீழிம்
திடுக்கெனபிறவீச்சென்றுசெப்பலாமிதனைத்தானே. ௮௬௭

(வேறு.)

குத்தலெடுத்தமூன்றுநாட்கொல்லாதிருந்தாலேகளித்துத்
துப்க்தார்தள்ளியொன்பதனிலறிவித்தெடுத்தமருந்துசெய்ய
ஒத்தேகுத்துமுரக்காதுமுண்மூச்சதுவேமேல்நோக்கிச்
செத்தாரிவரேதிண்ணமென்றுதெளிந்துவுரைத்துக்கொள்வீரே,

(இதற்குமருந்து.)

முசுறுமுட்டைபூநாகமுந்திரியேரிந்துதானும்
பசித்தோர்கொம்புமிளகுள்ளிபழகுஞ்சந்துபூசனிப்பூ
முசித்தோர்பூணுமூக்குவித்துமுதிர்ந்தகலைபின்கொம்பதுவு
நசுக்கிக்குடிக்கமுலைப்பாலினன்றாய்த்தீருமுட்குத்தே ௮௬௮

(வேறு.)

புண்ணுக்குகிழங்குதண்ணீர் புத்தூத்தேன்முலைப்பாற்சுக்கு
கண்ணெழுஞ்சந்துசோட்டங் கனத்தவெள்ளுள்ளிகாந்தம்
திண்ணெழுதிப்பலுப்புத் திரமுடன்முத்தூகூட்டி
மண்கெடக்குத்துக்கெல்லா மதிக்கவேகொடுக்கனன்றே. ௮௭௰

(இதற்குத்தயிலம்.)

(வேறு)

இரதங்கெந்திவெள்ளுள்ளி யியல்பாமிருசுசேங்கொட்டை
சரகமறவேயாவெண்ணெய் நன்றேயொக்கவரைத்தெடுத்து
உரமேகுத்துப்பிறவிச்சு வுடனேகுத்தியுரம்பண்ணிற்
சுரைவாதுடனேகலைசுருட்டிக் கலையைக்கொளுத்தித்தயிலமிடே.
இடவேதயிலங்காசிடைகெளிஞ்சிச்சாறுமுலைப்பாற்றே
னுடனேயுள்ளேகொண்டுவிடுவுரைத்தால்வேம்பினெண்ணெயுட
னடவாயிட்டுக்கலந்துகானதுவும்பொருக்குமாமென்றார்
சடமேபோடாதிருப்பதென்ன தருகாதிதுவுந்தான்காணே ௮௭௨

(பிறவிச்சுக்குணம்.)

குத்தேமிகவுந்தானெடுத்துக் கெண்டேகியேகித்தானுமிவு
மெத்தேநிமிர்த்திவினை விளைத்துமேவும்வியாதியுள்ளடக்கி
சத்தேமிகவுந்தான்வேர்க்குந் தருகாச்சிறுநீரெதிர்தள்ளுஞ்
சித்தமுடனேபலகூட்டுக் குறமாய்ச்சொன்னார்பிறவிச்சே ௮௭௩

(பிறவிச்சுக்குமுள்வீச்சுக்கு மருந்து.)

(வேறு.)

வாய்த்தகொடிகழலெருக்கு குப்பைமேனி
மாவிலிங்குநொச்சியு மலர்கொன்றையுஞ்
சிற்றமிகுஞ் சாரணையோ டீசன்மூலி
சிறந்தவேராமுரியுஞ்சமூலமாக
ஆய்த்தசுக்குதிப்பிலியோடுலுவாய்க்கண்டு
வானவுள்ளிபாக்கிடையுங்கடுகுங்கூட்டி
நாற்றிசையும் புகழ்ந்தேற்றுங்கருஞ்சீரந்தா
னலமானவாடாதோடைச்சாறுமே. ௮௭௪

(வேறு.)

ஆடாதோடைச்சாற்றுமேலே யடவாயரைத்துவழித்தெடுத்து
தேடாயங்கச்சாறதனிற் சேரக்கரைத்துக்காய்ச்சிடுகி
லேடாற்குழலியும்மருந்தையெடுத்தேயிக்கனைக்குடிப்பீரால்
பாடால்விழுந்தவும்குத்துபதறியோடும்பிறவிச்சே. ௮௭௫

(வேறு.)

கொன்றையுடன் மாவிலிங்குநொச்சிதானுங்
கோதற்றயரமுரியும்வீழிதானு

மௌ

மொன்றியதோரிம்மருந்து சமூலமாக்கி
யுயர்ந்ததொருசாரணை வேர்கிளையொன்றாக
கண்டதிலேபெருங்காயஞ்சுக்குவுள்ளி
கடுகுகருஞ் சீரகம்போரத்தையோடு
என்னுமுள்ளதிப்பிலியுமிடையொன்றாக
வியல்பாகவிம்மருந்துமின்னங்கேளே. ௮௭௬

இன்னமுங்கே ளூத்தமதாளிச்சாற்றி
லிளகவேயரைத்தெடுத்துமேலிற்பூசி
சொன்னதோருடகுத் தங்கோழைக்குத்துந்
துலக்குமதிற் பிறவிச்சுபலதுமாறுந்
கன்னமொழிவேல்விழியே வென்னீர்தேங்
காலனுமேவாராதுகருதிக்கேளு
அன்னமதுவுண்ணவேதண்ணீர் சொன்னே
னருமருந்துவின்ன தென்றுவறிவிப்பேனே. ௮௭௭

(முகவாதஜன்னிகுணம்.)

(வேறு.)

வட்டமாமுகமுங்கோணும் வாய்பல்லுந்தானுங்கோணுங்
கட்டவர்சேத்துமங்கள் காரியேயுமிழொண்ணாது
எட்டாமாமுட்டநீர்களொடுத்துக் கொப்பொளிக்கொண்ணாது
முட்டியேமுயன்றுசீறு முகவாதஜன்னியாமே, ௮௭௮

இதற்கு மருந்து முன்சொன்னதாம்

(நயனநோய் குணம்.)

(வேறு.)

வனைதங்குமாதிமூன்றுள் மன்னுயிர்படைத்தபோதே
பனைதங்குநாலுவேதம் படர்ந்தொளிர்கொழுந்துவீசி
யுரைதங்கும்விழியுநோய்க்குவுண்மைபாய்மருந்திதென்ன
கனைதங்குநாற்குகாம் பறவைகண்ணேறைக்குஞ்சொல்வோம், ௮௭௯

சொன்வவ்வுனையைக்கொண்டு தொழுமுகத்தானேமாலே
அன்னவாகனஞ்செவ்வேலனருமுனியோனைப்போற்றி
யின்னவமணியிலங்கு னிற்சொல்வேன்மாதேமுன்ன
மன்னவனிலங்கைசிங்கம் வளர்கீர்த்திமருந்துசொல்வோம். ௮௮௦

(நயனநோய்க்குக்குளிகை.)

முத்துப்போற்கண்ணேகைகான் மூடியேகசக்கிப்பார்த்தால்
குத்திரக்காசமன்னூற் கூடியேவிரிந்துகாணு
மற்றதுதாகத்துக்கு மருந்துடணெண்ணெய்பாலே
சித்தியாய்க்கேளுநல்ல திரிபலேகியாழங்கோள்ளே. ௮௮௧

(கண்ணிற்சகலநோய்க்குளிகை.)

கொள்ளவேபிடரிதன்னிற் கூடியநரம்பைவிட்டு
துள்ளவேயிருபைக்காச்சிசுட்டபின்கயிறுகோர்த்துத்
தள்ளியேயிறுத்துக்காரந்தடவியேகண்ணீர்காய
உள்ளகாசங்கள்கண்ணி லொளித்தெளிவாய்ப்பாயோடும். ௮௮௨

(வேறு.)

துத்தந்துரிசுவஞ்சனக்கல்தூயபச்சைகற்பூர
முத்துபவழம்பொன்வெள்ளி மோதுஞ்செம்புவெண்கலமுங்
கொத்தமல்லிகருங்கொள்ளு கூட்டும்பிசகேருகணியுஞ்
சத்தம்வேதிகுருந்தக்கல் சந்தமிரண்டுஞ்சரிபிடையே ௮௮௩

நிரைய நீயுங்காடியுட னெருங்கவரைத்துஉண்டைபண்ணி
மறையும்விழுக்கிமுலைபாலில் மானே தீரும்வகைகேளாய்
இறையாயிரங்கைசிங்கமன்ன னெதிர்த்துமன்னர் பெரும்படைகள்
திரையேயேற்றிவணங்குபெறத் திருந்தவிழிகள்சீராமே. ௮௮௪

(வேறு-)

அரிதாரமனோசிலை நற்பவழந்தானும்
மானசங்குநாபிநெல்லி பருப்புதானுஞ்
சரியாகவோரொன்றுகழஞ்சுகூட்டித்
தானரைத்து வீஞ்சிச்சாற்றிற்
றரியாதுகாசமெல்லா முலைபால்தன்னிற்
றுன்றீரும் பொன்னிலங்கைச்சிங்கமுன்னே
யெரியுற்றமன்னர் புறங்கொடுத்தேயோடு
மேருமேநயனவொளிகாணுந்தானே, ௮௮௫

மஞ்சள்சிலைவாரிதுரையேலஞ்செம்பு
மரமஞ்சட்பொற்காலி முட்டையோடும்
அஞ்சாமற்றிரிபலையுங்கலங்கொம்புத்தா
னுனதிரிகடுகிந்துப் 'யொன்றாய்க்கூட்டி
மிஞ்சாமலன்னீரிலரைத்துவுண்டை
வெருளுமே பலகாசந்தன்னிலிட்டால்
பஞ்சாகும்பற்படலந்தேனீர்த்தீரும்
பலமானபிச்சுப்பச்சாற்றிற்றீத்தே. ௮௮௬

ஆகுமேபுளிச்சக்கண் ணொலுமிச்சஞ்சா
ரன்பாகமுலைப்பாலிலிடவே தீரும்
வேகமாயொருவனுட புத்திகொண்டு
விரணசுக்கிரன் விழியிளரியாதேயோடும்
பாகனையவிழியி லுள்ளநோய்கடீரும்
பகரக்கேள்பொன்னிலங்கை யாளுமன்னு
காகுமவர்முன்னெதிர்ந்தபடைராசாக்கள்
கண்டோடிப்போகும்போல் வெளியாங்கண்ணே ௮௮௭

(சந்தனாதிக்குளிகை வேறு)

சாத்திரவேதிகற்பூரந் தானேபீதரோகணியும்
ஏத்தமானவிருசந்தமிளசையுங்கழஞ்சுரண்டாகுந்
தேத்தான்கொட்டைநாலாகுந்திசையும்பூலாசையூரல்
வார்த்தேயரைத்துக்குளிகைசெய்யில்மதிக்குஞ்சந்தனாதியிதே. ௮௮௮

(கண்ணிலொத்தலிடமருந்து.)

(வேறு.)

எள்ளுநகடுக்காயாமணக்கு வில்லைவேர்முத்துவெடித்துபின்னே
மெள்ளநறுக்கிப்பொட்டணமாய் மிகுந்தயெண்ணெய் காயவைத்து
மெள்ளக்கண்ணிலொத்திடவே விதனந்தீரும் வேந்தர்சிங்கம்
வெள்ளப்படையைவென்றாற்காண் போலேவியாதிவெளியாமே. ௮௮௯

ஆமேகண்ணிற்பிறவிடையு மயினுஞ்சேற்றான்விரைதுத்த
நாமேகழநீர்பீங்கானுநல்லசீனக்காரமுடன்
றாமேதேசிப்பழச்சாற்றிற்சாடியிரும்பிற்கொதிபூசில்
போமேயிலங்கைச்சிங்கமன்னன் பொருந்தும்படைபோல்வெளியாமே

நீருவிழுந்துகண்புகைந்து நீரயமுகத்திலனலாகிற்
சேரும்சகத்தினறுநெய்யைச் சேர்ந்தேதவிட்டதனிலுருட்டி
வாராங்காடியாற்கழுவிவளர்சந்தனத்தைத்தான்றப்பிற்
பாருமிலங்கைசிங்கத்தை கண்டபடைபோற்பறந்திடுமே. ௮௯௧

கள்ளியயிரங்குன்றிமணி கலையின்கொம்புபருத்திவிரை
துள்ளுமானைக்கொம்பிலுப்பைத்தோற்றம்வயிரமுதளைப்பல்
தள்ளாதொன்றுங்குறையாமற் றண்ணீர்தன்னிலரைத்துண்டை
வெள்ளமதினிலுரைத்தானே விழியிலிடவேநோய்போமே. ௮௯௨

(வேறு.)

அதிமதுரம்பொரிகாரமீலந்துத்த
மஞ்சனக்கலிந்துகந்துபளிங்குகாணும்
பதிகடுகுரோகணியுந் தேத்தான்கொட்டை
பருத்திதிரிபலைசெம்புநிறையோரொன்றாய்
மதிமஞ்சல்பூச்சாற்றிலரைத்துவுண்டை
மதுவதனிலரைத்திட்டால்விழிநோய்தீரு
மதிசிலங்கைசிங்கமுன்னேயெதிர்த்தயோடும்
மகாவினிநோய்குணமெல்லாமாறுந்தானே. ௮௯௩

(நாற்கால்மிருகத்துக்குக்கண்ணுக்குமருந்து.)

(வேறு.)

எண்ணுமிலுப்பைவயிரத்தை யிணங்கத்தேனிலுரைத்திடவே
கண்ணிலிடவேநோயதீருங் காணுநாற்கான்மிருகத்து

உண்மையிலங்கைசிங்கமுன்னேயெதிர்த்தமன்னர்பெரும்படைகள்
மண்ணில்விழுந்துபுறங்கவ்விவணங்குபொற்கண்ணேயப்போமே,

சதுரக்கள்ளிமூலமதைத்தயங்கவுலர்த்திப்பொடிசெய்து
அதிகமானசங்கனீரரைத்துக்குளிகையுரைத்திடவே
குதிரைமுதலாய்நாற்காலிகூறுமிருகவிழிநோய்போஞ்
சதிரோனிலங்கைசிங்கத்தைக்கண்டபடைபோல்வெளியாமே.

இணங்கும்பார்வைவிழிகலங்கிலிதமாயானைவணங்கியினீர்
குணங்கள்விழிநோய்வெளியாகுங்கூறாய்கேளுமெதிர்ந்தபடை
கணங்கள்காளிக்கிரைகொடுக்குங்கனகவிலங்கைச்சிங்கமன்னன்
வணங்கிற்றிரைகளேந்தாதேமன்னர்படைபோல்வெளியாமே, ௮௬௭

(பறவைவிழிநோய்க்குமருந்து)

உப்புமுருங்கையிலைச்சாறுமுடனேபிழியிற்பறவைவிழி
செப்புமுடனேவெளியாகுந்திருந்திடநான்சொலக்கேளு
தப்பாதிலங்கைச்சிங்கமுனனேதரணிமன்னனெதிர்த்தாலு
மப்பாற்பிழைத்தோமென்றோடுமதுபோல்வியாதியகன்றிடுமே, ௮௬௮

(வேறு,)

பொரிதாரமெட்டிதான்மூன்றுமாகும்
புகழ்நாபிபன்னிரண்டுசங்குநாலு
துரிசுநிறைநாலுதுத்தமூன்றேயாகுந்
தூய்யவெள்ளைபொனறுசாதிலிங்கமெட்டு
வரிகௌரியிஞ்சிச்சாற்றனிலரைத்து
வகைகடுகுஉண்டைதனைசீனியிற்கொ
ளரியவதாரணியிலங்கைச்சிங்கமுனனே
யரசர்படைபோலோடிவெளியாங்கண்ணே, ௮௬௯

(கபரோகாநவரத்தினச்சூரணம்,)

காயம்வசம்புதிப்பிலியுங்கனத்தசுக்குமோதகமுந்
தேயுங்கடுக்காய்கொடிவேலித்திசமுங்கோட்டஞ்சிவதையுடன்
மாயமானவாமணக்குமகிழ்ந்தேயிடைகள்சொல்லார்க
ளாயுஞ்சரக்கொன்றுக்கொன்றுயதீதங்கொண்டுபொடிசெய்யே.
செய்தேதேனெய்யதனிற்கொள்தீருமிரும சேத்துமமு
மெய்யாமீளகயரோகமிருந்தவக்கினிசயரோகங்
கையால்வாய்வுகக்கலுடன்கருதுஞ்சிரணமூலம்போ
மெய்யேசொன்னேநவரத்தினம்விளங்குஞ்சூரணமிதுவாமே ௯௰

(கபாலஜன்னிகுணம்,

பெருத்தநரய்புபிடரிதனைப்பேரப்பிரியவொட்டாது
வருத்தமிகுந்துதலைகாதுமதிக்கக்குத்திரத்தமுத்தி
திருத்துமுடனேயூடாடித்திரியத்திரியவொட்டாது
கருத்தைக்கெடுத்துத்திமிர்த்தேறுங்காலஜன்னிகுணமிதுவே.

(பெண்களுக்குரத்தசூலைகுணம்.)

திரண்டுபுரண்டுகீழ்வயிற்றிற்றிமமாய்மாதவிடைபோலு
முரண்டுகுருதித்தான்வீழுமுறையுந்துடையின்மூளைந்துவருந்
திரண்டுசிலநாட்சிக்கிநிற்குந்திறமாய்க்கருவையழிப்பிக்கு
முரணடாரத்தசூலையெனவுறுதிகண்டுவுணர்வீரே. ௬௱௨

{ இரத்தரோககுணம்-வாய்வுக்கிராணிகுணம், சூலைக்கிராணிகுணம் }

(வேறு,)

திரண்டுசீழ்வயிற்றைப்பற்றிச்சிக்கினின்றிரத்தம்வீழ்ந்து
புரண்டுதான்வலிக்குமாகிற்பொல்லாதகர்ப்பசூலை
வரண்டிடற்குருதிசோரில்மயங்கிடவெடித்துப்புண்ணு
முரண்டிடாதிரத்தரோகமுறுதியாயுரைக்கலாமே, ௬௱௩

வஞ்சனைகுறைதன்னாலுமருந்திடுதன்னினாலு
முஞ்சிடக்காயந்தானுமுறுதிசெய்தெண்டிப்பாலு
மஞ்சவேபிள்ளையுண்டாமவதரித்திருந்ததாலுங்
கெஞ்சவேகாப்பசூலைகெடுவிக்குமிந்தரோகம். ௬௱௪

(வேறு,)

திரண்டுபுழுக்களுருண்டுவிழுஞ்சீராய்ச்சேலும்பருந்திவிழும்
வரண்டேயுடலும்வற்றிவருமயமுங்கெட்டுத்தகிக்குந்
திரண்டதனத்துமடந்தையரேதீராக்கர்ப்பவிப்புருதி
யுரண்டபுழுக்களுண்மூலமுலையுங்கர்ப்பரோகமிதே. ௬௱௫

இரத்தமொருக்காற்றலிகயாமலெனவேவடுபோல்விழிந்திருக்கு
முரத்தவுடலிலுறுதிகெட்டுவுடலிற்றுயரமிகுந்திருகருஞ்
சிரத்திற்கனப்புமுண்டாகுஞ்சிதமாய்சிக்கிவிழுமிரத்தந்
தாக்கரத்தரோகமெனச்சொல்லுநல்லவல்லோரே. ௬௱௬

பொருமிமிரைச்சற்செறியாமைபுளியேதேப்பமிகவிடுத
லிருவலாகமலம்வீழுமிளகிமலமோடொண்கழிச்சற்
பெருகப்பேசும்பாசமதுபிற்பாடுதிரவலிகாண்கில்
வருதற்குரியவலிக்குறைபால்வாய்வுக்கிராணிவகையாமே, ௬௱௭

பொருமுமிறைச்சல்செறியாமைபோதப்பிரந்தாள்தப்பிக்கு
மருவுமசனஞ்செல்லாதுவரண்டேமேனிவற்றிவரும்
பருகுந்தண்ணீர்நாவுலரும்பலனுய்த்தூங்கிகனவுமிகு
முருகிப்பிழிந்தாப்போல்மேனியுலர்த்துஞ்சூலக்கிராணியிதே.

(வாதசன்னிகுணம்,)

(வெண்பா.)

அம்முமயங்குமறிவையழிவிக்கும்
விம்முஞ்சலம்போல்விரைப்பிக்குஞ்-செம்மை

மயக்கமுந்தீராது வாகடநூல்கூறும்
முயக்குமுன்னோர்பயின்ற மொழி. ௩௱௯

(இதுநேரிசைவெண்பா.

(நடுக்குவாத சன்னி.)

நடுக்குஞ்சுழற்றிசெயு நாவடக்கிப்பேசுங்
கடுக்குமுளையுமிருகைகள்-மடகொடியீர்
நடுக்குவாதசன்னி நம்பியதுமீளா
தடுத்தகணமென்றே யறி. ௩௱௰

(வாதசன்னிக்குணம்.)

(வேறு)

வாதசன்னி முக்கியத்தின் குணத்தைக்கேளு
மந்தமாகுஞ்செவிகால்கைவளையதாகு
மேதமாய் விறைந்திருக்கும் பல்லைக்கட்டு
மிருவிழியுந் தெரியாமலழூதுபேசும்
போதமுடன் காதுடனேகுளிருமூச்சும்
போதமுறைப் படிடுனவேதோன்றிநிற்கும்
போதனேமுறைப்படியே விழித்திருக்குந் தூங்கம்
பொற்கொடியேமாமுனிவர்புகன்றவாறே. ௩௱௰௧

மாரிவரும் ருத்திராங்க சன்னிகேளு
மார்க்கமெல்லாம்புலன்மாறிதிகைசத்தக்காட்டும்
சாறிவரும்ரோகங்கள் கபத்தைப்பற்றிக்
கண்காணு நோயெல்லாம் கடித்தாய்க்காணும்
கூறியதோர்வாதசன்னி கர்ப்பங்கொண்டால்
கொடுத்தகண்ணி ரன்னமெல்லாங்கொப்பளிக்குஞ்
சீறிவருமிருகமெல்லாம் விழிக்குள்தோன்றுஞ்
சோர்ந்தழூதுமெழுந்திருக்கும் பதுமமாதே. ௩௱௰௨

(இதற்கு மருந்து.)

(வேறு.)

பதுமவெளியாய்க்கிடக்கு மெழும்ப வொண்ணப்
பாருமொழிதான்பேசும் பரிகாரங்கேள்
மதுமலர்த்தூதளை யாடாதோடைநொச்சி
மாவிலிங்குவவிரி சிவட்டுக்காடை
முதியசிவனார்வேம்புவெருக்கன்வேரு
முருங்கைநாயுருவி யாமுறிகளின்ன
மதுவுடனேசாரணைவேலிப்பருத்தி
யார குதிர்வாலிவேர்தோடைவேரே. ௩௱௰௩

வேருடனேவெள்ளுள்ளி வன்னிகண்ட
வெட்டுவேனேடரத்தைக்கரியவேர்க்கொம்பு

பார்புகழுஞ்சன்னி நாயகமுங்கூட்டு
பருப்புத்தான்சோறு பூநாகந்தானுந்
தார்சொரியம் வெளுத்த பிசின்னெராகனுடு
தனித்ததொருவாலுழுவை வகைக்குக்காலாம்
சேரியும்வசம்புசதகுப்பையோடு
விளையெல்லாமோர்நிறையாயியல்பாய்க்கூட்டே. சூா ௰௪

கூட்டியே யிடித்துகஞ்சாச் சாறுவார்த்துக்
குணமுடனேயரைத்துக்கொண்டதன்பின்தானே
மீட்டிமதுபாக்களவு வுண்டையாக்கி
விரைவுடனே நிழலுலர்த்தி மெதுவதாக்கி
சேட்டமாயாயுருவாம வேதந்தன்னைத்
திறமதாய்க்கேட்டுமகிழ் தெரிவைமானே
நாட்டமுடனேருண்டை நல்வேப்பெண்ணெய்
நாழிவிட்டுயெரித்துநன்றாய்ப் பூசிப்பாரே. சூா ௰௫

(வேறு.)

புரட்டுகொள் ளுந்தனுக்குமுடல்போதநாற்றங்கண்டாக்கால் .
பிரட்டுமெண்ணெய்தனைக்கேளாய்ப்பேறுநொச்சிக்கரந்தையுட
னரத்தையுத்தந்தாளியுட னுனவெருகுவாதமடக்கி
வருத்துங்கொடியமாவிலிங்குமானே சூரிதிருக்கொன்றை. சூா ௰௬

(சன்னிக்குத்தயிலம்)

வகைசேர்சிவனருடவேம்பு வளமீசன்றிருமூலி
துகைசேர்பிரண்டை யமுக்கிராவுந்துப்பவவுரிமலைதாங்கி
நகைசேரனுரமுரியுட னரியினுருவிவேர்வசம்பு
தகைசேர்வள்ளிக்கண்டமுடன்றக்கவரத்தைச்சதகுப்பை. சூா ௰௭

தக்ககருஞ்சீரகம்உள்ளிகரும் வாலுழுவைவலக்காயு
மிக்கார்போகவரிசியுடன் விளங்குந்திப்பிலியுங்கூட்டி
ஒக்கநீறைகொண்டேயரைத்துவடனேயுகவும்வேப்பினெண்ணெய்
சிக்கதாகவளவிட்டுச்சிறுகநெருப்பிற்காய்ச்சிபெடே. சூா ௰௮

காய்ச்சியேவடித்தெடுத்துக் கையுச்சிகால்கண்மெய்யிற்
பூசியேநயனம்பண்ணி பொருந்தியொத்திடமுஞ்செய்தாற்
றீச்சுடும்வாதத்தாலே திரும்பியசுரத்திற்சன்னி
கூசசமில்லாமற்சன்னி குலைந்துடன்விட்டேபோகுமே. சூா ௰௯

(பித்தசன்னிக்குத்தயிலம்.)

கோபித்தடிக்கும்பற்கடிக்கும் கொமட்டிப்பித்தந்தானெடுக்கும்
மெத்தநரம்புவிழிசிவக்கு மெய்யுங்காலுநிலம்புரண்டு
வுற்றமூச்சுமிகவுண்டா முடனேயிளைப்புவதிகமுண்டா
மற்றக்காலுமுடம்பசையாதறிவும்பேசாதையமிதே - சூா ௨௰

(வேறு)

அரமுறிநன்னாரி பெருங்குதிரைவாலி
யவிரியுத்தந்தாளி முத்தக்காசு
வரமிகுந்த துளசிசெப்பு நெருஞ்சியோடே
வகையாகவேர்கொள்ளுவளர்வேர்க்கொம்பு
வரமிகுந்தவசம்பரத்தைபூரங்கோட்ட
முற்றதொருசிறுமுட்டைநிலவேரோடே
வரமிகுந்ததிப்பிலிவாலுழுவையோடு
யோடுமகிழ்ப்பருப்புநீயிளந்துவகையாய்க்கூட்டே. ௬௱௨௧

(வேப்பெண்ணெய்த்தயிலம்.)

கூட்டுவாயொருநிறைவேப்பெண்ணெய்தானுங்
கொண்டதிலேதான்காய்ச்சிக்கொண்டுபின்னே
மீட்டுமுச்சுடலுள்ளங்கைகள்மட்டு
மேவியதானபொருத்தியேநசியம்பண்ணு
கோட்டுமுலையாளேகேள்லவங்கங்கோட்ட
மிலுப்பைப்பூச்செங்கழுநீர்கிழங்குதானு
நாட்டமுள்ளவிருவேலிமுத்தக்காசு
நல்லவிலாமிச்சம்வேர்நபந்துதேடே. ௬௱௨௨

(வாதசன்னிக்குவேப்பெண்ணெய்த்தயிலம்.)

தேடரிடதேவதாரஞ்செண்பகப்பூ
சிறந்ததோர்முசுறுமுட்டைத்திறமதாக
ஏடவிழுங்குழலாலேமுந்திரிகைதானு
மிதமானபழக்கொன்றைபழமுந்தேடி
பாடியவோதார்பேரீச்சம்பழநன்னாரி
பரிவாகமுலைப்பால்வார்த்தரைத்துச்சேர்த்து
கூடியதோர்முலைப்பாலிற்பித்தசன்னி
கொடுக்கவிதியெனமுனிவர்கூறினாரே. ௬௱௨௩

(வேறு.)

குனிருங்காக்கணைநொச்சி கோவைப்பருத்திசமூலந்தான்
வெளிறும்வேலிப்பருத்தியுடன்மிக்கவாதமடக்கியிலை
யொளிருஞ்சாறொன்றொருநாழியுள்ளேகரைகருமருந்தரத்தை
தெளியுஞ்சிவனார்வேம்புடனே தேவதாரஞ்செவியமுமே. ௬௱௨௪

செவ்விகானநிலக்குமிழ்வோ சிறியமூலமிந்துப்பு
எவ்வமில்லாதிப்பிலியோ டிலவங்கவெப்பாலரிசி
ஔவையுடனேசிதேவி கதித்தபரமீசுரமூலி
சவ்வையொத்தகரைக்கண்டங்காரிசிவதைவேர்க்கொம்பே ௬௱௨௫

கொடியவெளுத்தபிசினசுவங்கூறும்வசம்புவாலுழுவை
துடியசேமாமரஞ்சனுடன் சிற்றுமட்டிகருஞ்சீரம்

படியோரொன்றுகழஞ்சுகொண்டு பையவரைத்துகரைத்ததிலே
நெடியவேம்பினெண்ணெய்விட்டு நிரையாய்க்கூட்டியெரித்திட. ()

எரித்தேவடித்துதலைதனிலுமிட்டேயுள்ளுங்கொடுத்துவிடில்
உரத்தவாதசேத்துமாமுயர் தசுரத்திலுட்புகுந்து
செறித்தவாதசன்னிசுரம் தீர்க்குமெண்ணெயிதுவென்ன
மரித்தேபோகவேண்டாநீர்வல்லோராகிச்செய்வீரே. ௲௨௭

சிறியகுறிஞ்சாதூதுவளை சித்தாமுட்டி பேராமுட்டி
அறியநாலுவகைமூலமதனைத்துவைத்துதெவ்வேறே
குறிபார்கியாழமொன்றாக்கிக் கொதித்துக்காய்ந்துவருநேரம்
விரிவாயுள்ளிகருஞ்சிரமிளகுசுக்குவசம்பாமே. ௲௨௮

வசம்புகடுக்காயதிமதுரமாதிப்பிலியுமோரொன்று
இசைந்தகளச்சிக்கொட்டைபரை யிதுவுங்குழம்புபதமாக்கி
யுசந்தகள்ளுவொருசிரங்கை யுற்றநறுநெய்பரையுழக்கு
விசைந்தகுழம்பிலிதுவிட்டேமேவுங்கோலழைக்கிடுவீரே. ௲௨௯

(வேறு.)

ஆட்டதிக்கனைத்தும்போற்று மழகியவீசர்சொன்ன
குட்டமாம்வியாதிதன்னைக் குணங்கொண்டேகுறித்துப்பேச
கட்டழகானபேர்கள் கருதியமுழுக்குவிட்டு
திட்டமாசனந்தன்னைத் திறமுடன்செய்தக்காலே. ௲௩௰

திறமுடன்மீனைத்தின்று சேர்ந்தபால்வார்த்துண்டாலும்
குறைவிலாவாய்வுமான பதார்த்தங்கள்கொள்கையாலு
மறைவிலாவெயிலைடந்து வந்துநான்வேர்வையோடே
தரையினிற்குளிர்ச்சியுண்டாந்தண்ணீரிற்குளிக்கையிலே. ௲௩௧

நீரினனோந்தசீலை நித்தமுமுடுத்தலாலும்
பாரினிலருவறுப்பாம் பண்புகளுநனுண்டாலுங்
காரியமானவெண்ணெய் கனகவேதேய்க்கையாலுஞ்
சிறியசுத்திதன்னைத் தினமுமேயடக்கினாலும். ௲௩௨

அடைந்திடும்ஸ்திரீகள்தன்னையானதோர்விடியுநேரந்
தொடர்ந்துதான்படுக்கைபாலுந்துளக்கறவிரோசனங்க
ளிடங்கொளச்செய்யானுகி லீராறுமாதத்துள்ளே
சடங்கமேகெட்டுகுட்டந் தையலேபோடுமென்றார். ௲௩௩

(முதலாங்குட்டத்தின்குணம்.)

தையலேமுதலாங்குட்டஞ் சரீரமேசொரியெடுக்கு
மெய்யெலாமயிர்சிலிர்த்து மெத்தவேதிமிர்பிடித்து
பையவேநிறமுமாறும் பத்தியஞ்செய்யத்தானும்
தெய்யவேபுணாசோயென்று தொகுத்தனர்முனிவர்தானே. ௲௩௪

(இரண்டாங்குட்டத்தின்குணம்)

தொகுக்கதுரண்டாங்கண்டாய்தோன்றிடுங்குணத்தைக்கேளாய்
மிகுத்திடுஞ்சரீரங்தானு மேத்தவேகறுப்புமுண்டாம்
பகுததவுடலிசுசொரியாகிப் பன்னீர்பாயுஞ்சலங்கட்டும்
வகுந்தேசரீரமெரியுமென மாதேமறையில்மொழிந்ததுவே. கூருஇ

(மூன்றாங்குட்டத்தின் குணம)

மொழிந்தமூன்றாங்குட்டத்தின் முறைமையதனை மொழியக்கேள்
தெளிந்தசரீரஞ்சிவப்பாகிச் சிறிதுகாலஞ்சென்றாக்கால்
விழிந்தேமேனிவெள்ளையதாப் மெத்தவதுவும்பரந்தேறுங்
குளிர்ந்தமதிசெர்முகத்தாளே குணங்களதனைக்கூறியதே. கூருசு

(நான்காங்குட்டத்தின்குணமும்)

(ஐந்தாங்குட்டத்தின் குணமும்.)

கூறுநாலாங்குட்டத்தின் குணமேகேளுமேலெங்கு
மீறும்பச்சைநிறந்தோன்றிமிகுந்தசொரியுஞ்சலபாயும்
ஆறுதரித்தவன்சொன்ன வைந்தாங்குட்டமுடம்பெங்குஞ்
சிறுஞ்சிவந்துகுறுங்கற்போற் சிவந்துமெய்யிற்பிறப்படுமே. கூருஎ

(ஆறாங்குட்டத்தின் குணம்.)

பிறக்குமாறாங்குட்டமது பேசக்கேளும்பேருலகிற்
சிறக்குமரிசியதுபோலந் தினமுமுண்டாய்ப்புறப்புட்டு
நிரைக்குமேனிசிவப்பேறி நெடுநாட்சென்றால் வெள்ளையற்று
மரைக்குமிந்தநோய்தனக்கு மருந்துசெய்யமாளுமதே. கூருஅ

(ஏழாங்குட்டத்தின் குணம்.)

செய்புமேழாக்குட்டமது சேர்ந்தகழுத்துக்கீழேதான்
வைபயக்கோதும்பையைப்போலப்பறந்துசிவந்துமிகத்தோன்று
மைதான்பொருவுங்குழலாளே மாறுந்திரும்பவருமதுதான்
ஐபமிகுத்துகுற்றமில்லை யாளுருரைத்தவாணையிதே' கூருகூ

(எட்டாங்குட்டத்தின்குணம்.)

இதமாயெட்டாங்குட்டமது வெடிக்குமெய்யிலரிவைபோல்
விதமாய்வந்துபுறப்படுங்காண் மீலாதிதுவுமென்றறிநீ
பதமாய்யுரைத்தார்வடமொழியிற் பகர்ந்தவிபரம்பார்த்தறிந்து
சதமாய்முனிவரிஷிகளுந்தான் றமிழினாலேசாற்றினரே. கூசய

(ஒன்பதாங்குட்டத்தின்குணம்)

சாற்றியமென்பகென்றி தயக்கியகுட்டந்தன்னில்
ஏற்றியகுணமேகேளுவெருமையின்றோலைப்போலாம்
வேர்த்துடல்பட்டுமெய்யும் விரிந்திடுஞ்சிலநாட்சென்றாற்
கார்த்திடமருந்துமில்லைகைகால்விரல்களமுகிடுமே கூசக

(பத்தாங்குட்டதின் குணம்,)

போமேபத்தாங்குட்டமது புகழ்ந்தேகேளும்பூவையரே
நாமேசொன்னேங்கடுகதுபோ னல்லமெய்யில்வெள்ளைபற்றுந்
தாமேபடருந்தாமரைபோற் றக்கசரீரநோவாகு
மாமேயெனவுமாமுனியுமறிவித்தெடுத்ததிதுவாமே. ௯௪௨

(பதினோராங்குட்டத்தின்குணமும)

(பனிரண்டாங்குட்டத்தின்குணமும்.)

அடுத்தபதினோராங்குட்டமதுவானசரீரமெங்கு
மெரிந்தேசெரியுந்தினவுமுண்டா மிதுவேசெய்யுங் குணங்கண்டாய்
தொடுத்தபனிரண்டாங்குட்டந்தோன்றுஞ்சரீரமேலெங்குப்
விடுத்தேயலேந்தேகனிபதுபோல் விரிந்தேபின்னுமாறிடுமே. ௯௪௩

(பதிமூன்றாங்குட்டத்தின் குணம்)

பின்னும்பதிமூன்றாங்குட்டம் பேசக்கேளுமுடம்புதனிற்
தின்னங்காணுஞ்சிவிடந்தான் சிவக்குப்வீங்குஞ்சிறுவுதடு
மூன்னுந்தொண்டை தான்கட்டு முற்றசீழுமுண்டாகு
முன்னேபுழுகும்விழுந்திருக்கு மேவுங்குணங்களிதுவாமே ௯௪௪

(பதினான்காங்குட்டத்தின் குணம்.)

(வேறு.)

மேவும்பதினான்காங்குட்ட மேல்வீங்கிக்கறுக்குங்கண்டாம்
தூவியகண்ணுமூக்குஞ் சுகம்பெறுவெளுப்பதாகுந்
காவியங்கண்ணினுளே கருதியேபிருமலுண்டாம்
தாவியகுணங்கடன்னைத்தமிழினாற்சாற்றினரே, ௯௪௫

(பதினைந்தாங்குட்டத்தின் குணம்.)

சாற்றியபத்துமைந்துந்தயாகியகுட்டந்தன்னிற்
றோற்றியகுணத்தைக்கேளு துடிபகண்சிவப்புமெய்யு
நாற்றமுமெடுத்துப்புண்ணு நல்கியபுழுகுண்டாம்
காற்றுநீருரைக்கவேண்டாங் கால்விரற்கழன்றுபோமே. ௯௪௬

கழன்றுபோங்கழுத்துகோணுங் கருதியவிதற்குமுன்ன
மூழன்றுதான்மருந்துசெய்தா லுண்மையாய்த்திருமென்ன
குளிர்ந்தமாமுகத்தினுள் கூறினேமுண்மைகண்டாய்
செழுந்தமிழ்க்கரசனான திருமுனிமொழிந்ததாமே, ௯௪௭

(வேறு.)

பதினாறாங்குட்டத்ன் குணம்.)

மொழிந்தபதினாறாங்குட்ட முன்னஞ்செய்யுங்குணங்கேளீர்
அழிந்துசரீரங்கீழ்க்கட்டியதனமேற்றினவுமிகுதியுண்டாம்
விழுந்தேகைகாற்றுனகழன்று விழுமேதொண்டைதானகட்டு
மெழுந்தமருந்துசெய்பவல்லா ரிதனையறிந்துகொள்வீரே, ௯௪௮

அறிந்துகொள்ளுமருந்துசெய்யிலானகைகால்விரல்கழன்று
செறிந்ததொணடைதானடக்கிற்றீராவியாதியெ மென்று
குறிந்தகுணங்கள்தானுமுந்திகூறுமருந்துசெய்தாக்காற்
பிரிந்துபோகுஞ்சிவனுனைபெரியோர்பேசியுரைத்ததுவே. ௯௪௯

(பதினேழாவது பதினெட்டாவதுகுட்டத்தின்குணம்,)

உரைத்தார்பதினேழாங்குட்டமுற்றசரீரமுடல்வெளுக்க
விருந்தும்பதினெட்டாங்குட்டமிதமாய்த்தொண்டைத்தான்கட்டும்
பெருந்தசரீரம்வெள்ளைபற்றிப்பெருக்கத்துயரமுண்டாகும்
வருத்தங்காணும்பதினெட்டாமவகையாங்குட்டம்வகைசொன்னோம்

(இதற்குமருந்து.)

சொன்னோமிதற்குமருந்துசெய்யிற்றுலங்கச்சத்தியெடுப்பித்து
மின்னேயுச்சந்தலைமண்டைமேவுங்கெண்டைக்காலதனில்
நன்றாய்நரம்புதான்பா' த்துநலமாய்க்குத்திசோரையெடு
பின்னேவயறுதான்கழியப்பெருகமருந்துதான்கொடுமே. ௯௫௧

(கொடுக்கும்போதுசெய்யும்வகை,)

(இதற்குமருந்து,)

கொடுக்குமருந்துசெங்கோட்டைக்குணமாங்கறுத்தவெள்ளுடனே
எடுக்குமருந்துசரிசரியாயெடுத்தேவறுத்துப்பொடியாக்கித்
தொடுத்தேகார்பகாவரிசிதுய்யபசுவின்கோமியத்தில்
அடுத்தவிருத்தோர்நாளிலழகாய்ப்பிழிந்துநிழலுலர்த்தே. ௯௫௨

உலர்த்துவெள்ளைபீர்க்கம்வேருடர்ந்தவேப்பம்வேருமொன்றாய்
நிலத்தின்மூளைத்தமருந்ததனை நிறுத்திக்கண்டுவொன்றாக்கிப்
பலத்தேயரைத்துக்காசிடைமுன்பேணித்திரட்டி யுண்டைபண்ணி
தலத்தோர்புகழக்கொள்வீராய்த்தக்கவிராகனிடைரெண்டே, ௯௫௩

இரண்டுவிராகனிடைகொள்ளவிதுவேழ்நாழிகைதான்சென்றால்
மருண்டுபோகவேண்டாநீர்வயிறுநிறையவசனஞ்செய்
திரண்டவியாதிவெண்குட்டங்கருங்கரியகுட்டமுடன்
வெருண்டேகிரந்திசெங்குட்டம்விரும்பாதோடுங்கண்டீரே, ௯௫௪

(இதற்குமேற்பூசமருந்து.)

(வேறு.)

ஓடியநொச்சிவேறுமுதலியவெருக்கம்வேருங்
கூடியகொடியவேலிகுணமுடனரைத்துக்கொண்டு
நீடியமெய்களோடுநிறையவேபூசிவீரால்
வாடியேயோடுமென்னமாமுனியுரைத்தவாறே, ௯௫௫

(பெருவியாதிக்கு மருந்து.)

(குட்டத்திற்குமாகும்)

பற்றியேகுட்டநோய்க்குப் பாங்குடன்றயிலஞ்சேரு
முற்றியேபுளிச்சிராவை முன்னமேமரக்காலெட்டு
அத்துடனளந்துகொண்டு வதிலேயோர்பானைதன்னில்
சித்தியாய்நிறையவிட்டுத் தீயினிற்றயிலமாக்கே. ௯௫௬

ஆக்கியதயிலந்தன்னில் வடித்தரிதாரமூன்று
தூக்கிடுகெந்திமூன்று சரிநிறைவெண்காரங்காண்
றூக்கியேபவிதமாய்நீக்கிச் சுருக்காகப்பொடியாய்ப்பண்ணி
நீக்கியேகாரந்தன்னில் நிறையவேபொடியிற்சேரே. ௯௫௭

சேர்த்துமேபொடிகள்தன்னிற் செவித்திநிமருந்தைநீயுங்
கூற்றறிகழஞ்சுகொண்டு குணமுடன்மத்தித்தாக்கால்
தேற்றியேபூசித்தாக்கத் தீராதகுட்டமெல்லா
மாற்றிடமுனிவன்றானும் வாகடநூலிற்சொன்னார். ௯௫௮

(வேறு.)

சொன்னார்மகோதரமல்லாமற் றோன்றுமற்றவியாதியெல்லாம்
நன்றாய்த்தீருபுளிகசப்பு நாலுபத்துநாள்பத்தின்
மின்னேபசும்பால்நெய்கூட்டு வேண்டாமுப்புவேண்டாங்காண்
முன்னோர்மொழிந்தார்மாமறையின் மூதூர்வாகடநூலோரே. ௯௫௯

நீரேவெட்டிவினையாறு நிற்குமப்பலமேபப்படியே
காரேயானகுழலாளே கருக்காயிடித்துப்பொடியாக்கிப்
பாரேயிணங்கும்பொடிவேலி பலமேரெண்டுபகரக்கேள்
வாரேமூன்றுகெந்தகமு விராகனிடையேவல்லீரே. ௯௬௰

வல்லீரேநீரொன்றாக்கி மகிழக்காத்துதண்ணீரில்
செல்லாருநல்லாமணக்கு திருந்துமெணணெய்தானெடுத்து
வல்லமனிதர்க்காசளவு மண்டலந்தான்கொள்வீரால்
நல்லசோறுதண்ணீரி னன்றாய்க்கழுவிக்கொள்வீரோ. ௯௬௧

(வேறு,)

கழுவினசோறுகூடகலந்தேயுண்ணவீறுள்ளி
பழகிபபுளிகசப்பு வானதோருப்புமாகா
தெளிவுடன்மண்டலந்தான் றின்றுதான்வருவீராகிற்
பழகியகுணாநோய்குட்டம் பறந்திடும்பெருவியாதி. ௯௬௨

முற்றிபகேத்சான்வேரு முதிர்ந்தபூவரசன்வேறும்
பற்றிடுங்கருங்குருவை பகர்ந்திடுமரிசிகூட்டி
யொத்ததோர்நிறையொன்றாக யொக்கவேயிடித்துத்தூளாய்
மெத்தெனமருந்துதன்னை விறகுடனறிந்துகொள்ளே, ௯௬௩

அறிந்துகொள்மருந்துதன்னையெட்டுநாளேகொள்ள
சிறந்ததோர்புளிகசப்புத்திருத்தியவுப்புமாகா
குறிக்கதோர்மருந்துதின்னகுணமதுசொல்லக்கேளாய்
வெறிந்தமான்விழியினாளேவெருகடிகொள்ளுவாயே. ௬௬௪

(இதற்குமேற்பூசுமருந்து.)

கொள்ளுவாய்புன்னைப்பட்டைகொத்தியேயிடித்துக்கொண்டு
மெள்ளவேமூடாவிலிட்டுவிரும்பியேபுனலும்விட்டு
துள்ளவேபிழிந்துபோட்டுத்துழவியேயடுப்பில்வைத்து
கள்ளனமொழிநன்மாதேகலந்துடற்சிரசிற்பூசே. ௬௬௫

பூசவேநாழுந்நசொன்னேம்பொருக்கவேமூன்றுநாளில்
வீசியதண்ணீர்விட்டுமெய்தனக்கழுவீராகிற்
கூசியேயிருக்கவேண்டாங்குறைநோயும்பெருவியாதி
ஈசனார்தன்மேலாணையிளகியேயோடுங்காணே. ௬௬௬

(குட்டத்திற்கெல்லாங்கியாழம்.)

(வேறு)

கண்டுதேற்றான்மரந்தன்னைக்கடுகவெட்டிபத்தியமாய்
கொண்டேதண்ணீர்தான்வார்த்துக்குடித்தேசோறுமுண்பீரால்
பண்டேகுட்டம்பதினெட்டும்பாரிற்பெரியவியாதிகளும்
நன்றாய்த்தீருமென்முனிவர்நல்கியுரைத்தாருலகோர்க்கே ௬௬௭

(இதற்குச்சூரணம்.)

உலகினில்மாந்தர்க்கெல்லாமுயர்ந்திடும்பெருவியாதி
நலகியபச்சைநாபிநண்ணியேயெட்டிவித்து
குலமுறுநெறிவிதைநான்கூட்டிடும்வசம்புசுக்கு
இலகியவெள்வெங்காயமெரிக்கிலேதிருகுகள்ளி. ௬௬௮

கள்ளமில்கரந்தைவேறுங்கருதுங்கோரைக்கிழங்கு
விள்ளுவேனரசம்பட்டைவிரும்புங்கோரைகிழங்கு
கொள்ளுவாயல்லிவித்துக்குணமானகிராம்பரத்தை
விள்ளொணாதருகங்கட்டைமேவியகாணுமவாழை, ௬௬௯

காளமுருங்கைச்செம்முள்ளிகனத்ததோர்முருக்கம்வேரு
மானதோர்பச்சமஞ்சளதுவுஞ்சித்திரப்பாலாடை
தானின்றவேர்கள்தாமுஞ்சரிசரியாகக்கொண்டு
ஊனமில்லாமலேதானுகந்துடனிடித்திடாயே. ௬௭௰

(வேறு.)

இடித்திடுந்தூள்தன்னையியல்பாய்மண்டலந்தான்கொள்ள
கொடுத்துடன்பெருவியாதிகுட்டமுங்குறைநோய்போகு
வெடிப்புடன்மருந்துதானும்வெருகடிகொண்டபின்பு
எடுத்திடுமெள்ளுதன்னையிதுவொருபிடிதான்கூட்டே. ௬௭௧

கூட்டியேநின்றபோதுகுடித்திடவென்னீராகும்
நாட்டினில்மேவுமுப்புநலமானபுளிச்சப்பு
திட்டியமாகமூன்றுதிறமதாய்விடவேவேண்டும்
மீட்டியேதீருமென்றுமேன்முனியுரைத்தவாறே, ௬௭௨

(குட்டங்குரைநோய்ப்புண்களுக்குப்பலகரைக்குழம்பு.)

தேசிப்பழத்தின்சாறெடுத்துத்திரும்பக்கலசமதனில்விட்டு
பேசும்பலகரைதானெட்டுப்பேணிக்கலசமதிலிட்டு
வாசகமாமூடிவைத்துமருகால்ரவியில்வைத்ததனைக்
கூசவேண்டாமாறுநாள்கொதித்துவெந்துநீராமே. ௬௭௩

வெந்துகொதித்தநீரதனின்மிகுந்தநல்லெண்ணெய்விட்டு
சிந்தைமகிழக்குழைத்தெடுத்துத்திரும்பப்புண்மேலிடுவீரால்
வந்தகுட்டங்குரைநோயும்வரியபுண்கள்மாறிவிடும்
சிந்தைமிகவேவசினனைத்திருமென்றார்திருமுனியே, ௬௭௪

(குட்டத்துக்குவுண்டை.)

சொன்னகுட்டம்பதினெட்டுந்தோன்றுங்கரப்பன்சொரிசிரங்கு
என்னேரந்தான்றினவெடுக்குமெண்ணெயிதற்குநீகேளாய்
பண்ணுங்கெந்தம்பதினைந்துபலமும்பத்துகருஞ்சீரம்
நண்ணுந்தாரம்பலம்பத்துநல்லவழிஞ்சிவிரைபத்தே. ௬௭௫

அழிஞ்சியுடனேபலம்பத்துவழகாநீர்வெட்டியின்வேறும்
விளைந்ததுத்தியதன்வேரும்விதமாய்ப்பத்துபலங்கொண்டு
விளைந்தமுருக்கினிலைச்சாறுமேவுநாழிவிட்டரைத்து
பொழிந்துநூற்றிருபதுண்டைபோற்றிப்பதனம்பண்ணிவையே. ௬௭௬

(வேறு,)

பண்ணியவுண்டையொன்றுபகாக்கேள்தேனிற்கொண்டு
திண்ணமாய்நீருங்கொள்ளுஸ்திரீபோகஞ்செய்யலாகா
எண்ணியேயொருநாளைக்குயிதேவதுவுண்டையொன்று
மண்ணினின்மாந்தருக்குமாமுனியுரைத்தவாறே. ௬௭௭

(சொரிசிரங்குக்குந்தினவுக்குமெண்ணெய்)

குட்டங்கரப்பன்சொரியதற்குங்கூறுமெண்ணெய்வகைகேளாய்த்
தொட்டுத்துரிசுதுத்தமுடன்றுய்யகெந்திகருஞ்சீர
மட்டில்லாதவதிமதுரம்வகையொன்றுக்குப்பலமிரண்டு
அட்டதிசையுந்தான்போற்றுமானசுழலாவரைவேரே ௬௭௮

வேறேகொள்ளுங்கொடிவேலிவேண்டுங்கருங்குழலரிசின்வேர்
பாரோர்புகழுஞ்செவ்வலரிபகர்ந்தேவகையொன்றொருசரியாய்
சீரார்தேசிக்காயளவுசிறக்குமருந்துவெவ்வேறு
கார்சேர்கடையின்மருந்துவகைகருதிக்கேளுங்காரிழையே, ௬௭௯

(வேறு)

காரணமாய்க்கடை மருந்துவனைத்தெடுத்துக்
கனக்கவேர்மருந்துகலந்தொன்றாக்கி
சிறியதோரொள்ளெண்ணெயுரியதண்ணிற்
சிறப்பாகநீர்கவந்து தீயில்வைத்து
பரியதோர்மெழுகு பதம்பதத்திறக்கிற்
னபயவேமெய்யதனிற்பரிந்துபூசி
சிறியதோர்வெயில்தனிலேநின்றுகொள்ளு
சிறப்புடனேநாள்மூன்றுசெல்லத்தானே. ௬௮௰

சிறப்புடனேநாள்மூன்று சென்றதென்றாற்
சீருடனேவென்னீரைவைத்துக்கொண்டு
உறபபுடனேமெய்யதனி லரைப்புமிட்டு
உற்றதொருகடிகைபதினைந்துக்குள்ளே
நறுப்புனலிற் றான்குளித்துவருவீராகி
னடுங்கியேயோடிவிடுங்குட்டநோய்கள்
மறைக்குறிய மாமறையோர்மொழிந்தாரிந்த
வாகடத்தினால்வழியை வகுத்துப்பாரே, ௬௮௧

(குட்டங்கரப்பன்சொறிக்குஎண்ணெய்,)

திப்பிலிகைப்புக்களிப்பாக்குச்சிறந்தபொன்னினரிதார
மொப்பாம்வெள்ளைக்குக்துருக்க பயர்ந்ததுத்தமனோசிலையு
மொப்பாய்வகைகுத்தாறென்று மிகவாய்க்கழஞ்சுமூன்றாக
வைப்புத்துரிசுகழஞ்சுரண்டுமானேமருந்தைத்தான்கேளே ௬௮௨

மானேநெல்லிகெந்தகந்தான்வழங்குங்கழஞ்சுநாலாகுந்
தேனேயிரதங்கழஞ்சுரண்டு சேருஞ்சாதிக்காய்மூன்று
தானேகிராம்புவிருகழஞ்சு தக்கவபினிகழஞ்சுரண்டு
ஆனேகடுக்காயெட்டாகு மரியவாளங்கழஞ்சுரண்டே, ௬௮௩

(படர்தாமரைகடிவிஷமிதற்கு மருந்து.)

(வேறு.)

கழஞ்சதாகுஞ்சாதிலிங்கங் கனத்தமிளகுவதிமதுரம்
விளைஞ்சசீரங்கருஞ்சீரமிகுக்காரரிசிமகரப்பூ
வளைஞ்சமருந்தையொன்றாக்கி வரைத்துக்கரைத்துக்கியாழமிட்டு
குளிஞ்சயெள்ளினெண்ணெய்தலைகூட்டிக்கொள்ளுநாழியதே. ௬௮௪

(புண்கள்கடிவிஷம்படர்தாமரைக்கு எண்ணெய்.)

சொன்னேன்படர்தாமரைகளுக்குந்துய்யகடியின்விஷந்தனக்கு
மின்னேதான்றுயெட்டியின்வேர்மிகுந்த கொன்றைவேரிவைகள்
நன்னேரிறுத்துச்சரியாகநன்றாய்ச்சிறுகத்தரித்தெடுத்து
பின்னேமுடாவிற்றானடைத்துப்பிலத்ததீயில்வைப்பீரே ௬௮௫

வைத்தேயெரித்ததயிலமதைதவழங்குங்கட்டுப்புண்ணிலிட
வுற்றேயோடுங்கடிவிஷமுமுயர்ந்தபடர்தாமரையும்போம்
கற்றுச்சொன்னமனேசிலையுங்கருந்தாய்ப் பலமூன்றதுதானும்
பற்றுமஞ்சள்பலமிரண்டுபகரக்கேளீர்சுண்ணம்பே. ௧௮௬

சுண்ணம்பதுவும்பலமொன்று துய்யதண்ணீர்விட்டரைத்து
அன்னேரந்தான்பூசுவீரா லடைந்தபடர்தாமரைபோகு
மன்னோர்தமக்குவுரைத்ததிதுமறைவாகடத்தின்விதியிதென
விண்ணோர்புகழுந்திருமுனிவர்விரும்பியுரைத்ததிதுவாமே ௧௮௭

(நீரழிவுகுணம்,)

(வேறு)

அரனடியுமைவணங்கி யம்புவிதனிலுள்ளோர்க்கு
உரமிகநீரழிந்து வுலர்ததிடுங்குணமிதென்ன
தரைபுகழ்மானேகேளு சலத்திலெழும்புந்தோஷம்
நரனெனுஞ்சென்மத்துக்கு நான்சொன்னகுணங்கள்கேளே. ௧௮௮

(வேறு.)

பிடித்தமடிக்குநீராக பெருத்தபுளிப்புகசப்பாகா
படிக்குட்பூசைபச்சிரிசி பாங்காய்பத்தியந்தானுகா
அடிக்குநீராசாரமது அழகாங்கஞ்சிதானுகா
வடிக்குந்தேன்போல் மொழிநல்லீர்மனிதர்க்குண்டாநீரழிவே ௧௮௯

நீரையழிவுநாழிகையினிரம்பக்கலயந்தனிலிட்டுக்
காரேயனையகுழலாலே காய்ச்சிபார்த்தாற்பாணியதா
நேராயதுவுமினித்திருக்கு நிராங்தரையில்விட்டாக்கால்
சீராயெறும்புவீமொய்க்குஞ்செய்யுங்குணங்கள்செப்பக்கேள் ௧௯௰

(வேறு.)

செப்பமாங்கலயந்தன்னிற் சிறப்புடன்சலத்தைவைத்தால்
ஒப்புடன்றயிரும்போல வுறைந்துதான்கீழேநிற்கு
மெய்ப்புடன்சரீரம்வற்றிமிகுந்திடத்தாகமுண்டா
மப்பொழுதுதசனஞ்செல்லாதயன்றிடுங்கையுங்காலே. ௧௯௧

(வேறு)

கைகாலயர்ந்துநெஞ்சுலர்ந்து கனத்தவெரிவுமுண்டாகு
மெய்தான்றிறந்துநடைகொள்ளாமீளுமிதற்குப்பரிகாரஞ்
செய்தாரெண்ணெய்க்குடிநீர்கள் திருந்தும்பற்பம்பலமருந்து
வையமறவேநிசஞ்சொன்னேன் மணலுநீருமடைபடுமே ௧௯௨

டலிருஞ்சிசெங்கிருவை கருவேளுவலரசத்தி
அடர்பேர்முசிட்டைப் பூவரசுவாலுமருந்துவாவரைவேர்
திடமாஞ்சிந்திற்பர்ப்படகஞ சேரும்கைக்குபலம்பத்து
வடிவாந்தான்றியம்பதுவா மகத்தாங்கடுக்காயெண்பதுவே ௧௯௩

கொள்ளுந்தேற்றன்விரை நாறுகுணமாமஞ்சற்பலம்ரண்டு
மெள்ளவிடித்துவொன்றுக்கிமிடாவிற்போட்டுத்தீயெரித்து
தள்ளித்தண்ணீர்நால்மரக்காற்றன்னைக்காச்சியெட்டொன்று
யெள்ளினெண்ணெய்தான்விட்டுவிதுவுமருந்துபத்தியமே. ௬௬௪

பற்றியசலக்கழிச்சற்பருவுநீரழிவுபிரமியமு
முற்றுங்கிரிச்சித்தானகலுமோறுநெய்யிற்சிறுகீரை
அத்திக்காயும்வாழைக்காயறுகுங்கீரையாகுமல்லால்
உற்றதிருக்கைசுறுவாகுமோங்குந்தாழிகிளாவாமே. ௬௬௫

(வேறு.)

விடுஞ்சலம்புட்புரைத்துமிகுந்திருந்தாலும்பின்னை
கடுஞ்சலமிலைத்திருக்கிற்கடுகெனமீளுங்கண்டாய்
கொடுஞ்சலமினிப்பதாகிற்கொள்கையாய்ச்சட்டிதன்னில்
விடுஞ்சலதயிரதாகின்மீளாதாமென்றுசொல்லே. ௬௬௬

(வேறு.)

தென்னம்பாளையிளம்பூவைசேரவைத்துநல்லெண்ணெய்
இன்னமெருமைபாலுடனேயிசையமூன்றுங்குடிப்பீரால்
மின்னுங்கோவைத்தண்டுலர்த்திவிரைவாபிடித்துத்தூளாக்கி
யென்னுமெருமைத்தயிர்தனிலேயிதுவுங்கொடுக்கத்தீர்ந்திடுமே.
மீளுமப்பைக்கிழங்குடனேமிளகுவெள்ளையுள்ளியது
சூழவிதனைத்தூளாக்கிச்சுகமாயருந்துபொடுதலைச்சார்
நாளுமுறியத்தேன்குடிக்கநன்றாய்மீளும்பிணியதுவே
பாழும்வியாதிபோமெனவேபகர்ந்தார்முனிவர்பெரியோரே ௬௬௮

வயிற்றையெரிக்கும்வலியெடுக்கும்வயிறுங்கழியும்வாந்தியுமாம்
நயத்தேதண்ணீர்தாகிக்குநடுக்குமிறைக்குஞ்சுழற்றிவரும்
அயர்த்துமிருக்கவொட்டாதுவக்கரப்படுவான்குணமாமே
சயத்தநோவுதீராதென்றறைந்தார்மாமுனியோர்தாமே. ௬௬௯

ஆடுதின்னாப்பாளையுடனழகாவில்லையதன்வேருங்
கூடும்பொன்னாமுசுட்டையுடன்கொள்ளவிதுவுஞ்சரிசரியாய்ப்
போடுந்தண்ணீர்நாழிவிட்டுப்புனலினாழியொருபங்கு
தேடிவைத்துக்கொடுப்பீராற்றீருமென்றார்த்திருமுனியே. ௭

சேர்ந்துதீண்டாப்பாளையதுஞ்செய்யவேம்பினெண்ணெயுடன்
கூர்த்தவுப்புக்காச்சிடைதான்கொண்டேகாச்சியுட்கொண்டு
தேர்ந்துமெய்யிருன்தடவத்தீராதக்கரப்படுவன்
மாந்தமுடலினில்லாதுமாறியோடுங்கண்டாயே. ௭௧

பாரோர்புகலுஞ்சன்னியெனும்பகரக்கழிந்தார்பலகாலுஞ்
சீராய்க்கழிந்துதிமிர்ந்திருக்குந்தீயிர்காய்சசிபார்த்தாக்கால்
வேரோர்நிறமுந்தானாகும்விதமாந்தினுசுவெவ்வேறும்
நேராமிறச்சிபோலிருக்குநிதமுஞ்சுறுக்காய்நாறிடுமே. ௭௨

ஙிதமுஞ்சிரகாவென்னுநீரின்குணங்கணினவாக
விதமாயெழுந்தநீரதனைமேவிப்பிடித்துவைத்திருந்தால்
மதமாயுப்புகரைத்தெடுத்தமண்போலிருக்குங்காய்ச்சினால்
விதமாயுப்புப்போலிருக்குமென்றார்மலையின்மாமுனியே, தஉ

பெரியோருரைத்தாவிழாவென்னும்மெய்யுஞ்சலத்தின்குணங்கேளுந்
தெரியுஞ்சலமேவழுவழுத்துசெய்யமோவுகரைத்தாப்பாற்
றுரிதமாகநீர்காய்ச்சிற்சுண்ணம்பதுபோலேநாறு
மறியகுணத்தைப்பெரியோர்களறிந்துவுரைத்ததிதுவாமே, தச

உரவாயிருவிநீரழிவுவுப்பக்கரைத்தநீரதுபோல்
நுரையுண்டாகுமுப்புரைக்குநொய்காக்காயச்சிப்பார்த்தாக்கால்
அரியவுவருகரைத்ததுபோலழகாறூரற்றானிருக்கும்
தெரியமுனிவருரைத்தமொழிதெளிந்தேயானுஞ்செப்பியதே. தரு

அத்தியென்னுநீரிழிவுவழகாய்ப்புலால்நாற்றமுண்டாம்
பத்தியதனைநெருப்பிட்டுபாங்காய்க்காய்ச்சிப்பார்த்தாக்கால்
மெத்தக்குறுகிவரும்போதுமிகுந்தவுள்ளிநாற்றமுமாங்
கத்தச்சடையான்றிருவருளாற்கருதியுரைத்தார்காதலித்தே. த௬

(வேறு.)

காதலாய்ச்சொன்னலிந்தக்கருணைசுக்கிலம்பரியாம்
வேதநீரின்குணமதனைவிள்ளக்கேள்வெளுத்திருக்கும்
நீதிலாமஞ்சணிக்குநினைவுடனொருநேரந்தான்
கோதிலாமயிலேமாதேகுணமிதுகூறினேமே. தஎ

கூறினோடடங்தபோதுகொண்டிடுமெரிப்புத்தோன்றுஞ்
சிதலாய்க்கடுகடுத்துத்திர்க்கமாய்கழியுமென்ன
மீறியேகாய்ச்சிப்பார்க்கவிரும்புடக்களிம்புபோல
வாறிதுகுணங்கடன்னைமாமறைவேதஞ்சொல்லும், தஅ

(வேறு.)

அவ்வையென்னுநீரிழுருவழலேநாலிற்குதிரையுட
கௌவைநாற்றம்போனுறுங்காய்ச்சினெய்போற்றானிருக்குஞ்
செவ்வாய்மனிதர்தங்களுக்குச்சிவனுருரைத்தமொழியிதென
மொவ்வுமொவ்வுலகம்புகழுமொழிந்தாரிதனைமுனிவோரே. தகூ

மலரின்மடையன்றிரியேனும்வருந்திநீரின்குணங்கேளும்
பலரின்பலகாற்றான்கழிந்துவையவரைமுகட்டிவிடும்
புலால்நீர்நாறும்வார்கடெநீர்போலேயிருக்குங்காய்ச்சிவிடிற்
செலமுஞ்சிவந்தூரத்தம்போற்றினமுமிருக்குமெனமொழிந்தார்
மூத்திரப்பாளமெனுநீரின்முதியகுணமும்வெகுவாகி
ஆரத்துடனேயெறும்பீகடைாந்தேபதுவுமொய்த்திருக்கு

மாய்த்தேநெருப்பிற்காய்சிவிடில்வளருந்தேன்போலதுகாணு
மோர்த்தேசொன்னேன்கேளுமினியுலகோரறிச்சொன்னேமே. ௩௰௧

உலகோரறியச்சொன்னதிதுவுற்ற சர்க்கரைசுரோவென்னு
நிலைநீர்கடுத்துநீரிறங்குநீதான்காய்சிப்பார்த்தாக்கால்
தலையாமிறச்சித்தான்கழுகுந் தண்ணீர்போலேதானிருக்கு
மலைசேர்முலையாய்நீகேளு மஞ்பனிறமபோன்மஞ்சனிக்கும் ௩௰௨

விபரிநின்றுகுணமிகுந்த விளங்கச்சிவந்துதாணீறறங்கி
சிவரியெரிப்புண்டாகுஞ் சிவக்ககாய்சியதுபார்த்தாற்
றுவரின்பழம்போலேசிவந்துதுய்யசீனிநிறமாகு
முவரிப்புடைசூழுலகோர்க்காயுரைத்தார்பெரியமறையோரே. ௩௰௩

(வேறு.)

மறைமொழிவேதநூலோர் வகுந்தனர்தோஷர்தன்னை
குறைவிலாவாதத்தாலுங் கோதிலாப்பித்தத்தாலும்
நறைகமழ்சேத்துமத்தா னற்குணவிரையத்தாலு
முறைமுறைநீறுபாயு மென்முனியருளிச்செய்தார் ௩௰௪

